# திருக்குறள் கதைகள்

அறத்துப் பால் - 211-300

**மணிமேகலைப் பிரசுரம்**

**கே.வி.குணசேகரம்**

கே.வி.குணசேகரம் நாடறிந்த நல்ல எழுத்தாளர். நாவல், சிறுகதை, சிறுவர்கதை, கவிதை முதலானவற்றிலே ஆழமான தடத்தினைப் பதித்துள்ளார். எழுத்துத் துறையில் பல பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றவர். இவர் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றும் அனுபவங்களில் வெளிபாடும் இக்கதைகளினூடு துள்ளியமாகத் தெரிகின்றது.

மாணவர்களின் மொழிவளத்தை, ஆக்கத்திறனை, சிந்தனை விருத்தியை, ஒழுக்க வாழ்வை மேம்படுத்தத் திருக்குறள் கதைகள் பெரிதும் உதவும் என நம்புகின்றேன். சில காலத்துக்கு முன்னர் இலங்கையிலும் தமிழகத்திலும் திருக்குறள் கதைகள் என்னும் நூல்கள் வெளி வந்தன. எல்லாக் குறள்களுக்கும் அல்லாமல் தெரிவு செய்யப்பட்ட சில குறள்களுக்கே கதைகள் எழுதப்பட்டன. ஆனால் கே.வி.குணசேகரம் எல்லாக் குறள்களுக்கும் கதை எழுதும் உற்சாகத்துடன் இருக்கிறார். ஏற்கனவே 290குறள்களுக்குக் கதைகள் வெளிவந்துள்ளன. தற்பொழுது 170குறள்களுக்கான கதைகள் வெளிவருகின்றது.

ஒவ்வொரு குறளுக்கும் அமைவாக பொருள் நயம் சிந்தாமல் சிதறாமல் கதை எழுதுவதென்பது இலகுவான காரியம் அல்ல. எழுத்தனுபவமும் சிந்தனை வீச்சும் உடைய கே.வி.குணசேகரம் இந்த வகையிலே பெரு வெற்றி பெற்றுள்ளார். கற்பனை வளமும் கருத்துச் செறிவும் மிக்க இவரது கதைகள் மாணவர் சமுதாயத்துக்கு நன்கு வழிகாட்டும் என உறுதியாக நம்பலாம். கே.வி.குணசேகரத்தின் பணிகள் தொடர வாழ்த்துவோமாக.

**பேராசிரியர்.கலாநிதி. எஸ்.சிவலிங்கராசா**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

# கல்வியாளரும் எழுத்தாளருமான
# கே.வி.குணசேகரம் ஒரு பார்வை

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் அதிபராக விளங்கும் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் ஓர் ஆசிரியர், கல்வியாளர், கல்விநிர்வாகி என்ற ஆளுமைக்கு அப்பால் தம்மை இனங் காட்டிக் கொண்டுள்ள ஒரு துறை படைப்பிலக்கியத் துறையாகும். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் மற்றும் சிறுவர் கதை ஆகிய பல்துறைகளிலும் அவர் கால் பதித்தவர். குறிப்பாகச் சிறுகதை, நாவல் என்பவற்றில் பல்வேறு பரிசுகள் பெற்றதன் மூலம் அத்துறைசார் வாசகர்கள் மற்றும் படைப்பாளிகளது கவனத்தை ஈர்ந்தவர்.

படைப்பாக்கம் என்பது வாழ்க்கை பற்றிய விமர்சனமாகவும் சமூகத்தை ''உசுப்பி'' விழிப்புறச் செய்யும் கடப்பாடு உடையதாகவும் அமைவதாகும். இத்தன்மை கே.வி.குணசேகரத்தின் படைப்புக்களில் நிறையக் காணப்படுகின்றது. பிரச்சினைகளை இனம்காட்டி வாசகர்களின் மனச்சாட்சியை விழிப்புறச் செய்யும் ஒரு விமர்சன யதார்தப் படைப்பாளியாகவே கே.வி.குணசேகரம் எமக்குக் காட்சி தருகின்றார்.

கே.வி.குணசேகரம் என்ற படைபாளியின் படைப்பாற்றல் என்ற வகையிலே குறிப்பிட்டுக் கூற வேண்டிய அம்சம், அவர் சமூக மாந்தரை இரத்தமும் சதையுமாக எம்முன் நிறுத்தும் பாங்கு ஆகும். ஒவ்வொரு கதா பாத்திரத்தையும் அதன் உணர்வு நிலைகளை அடையாளம் காட்டக் கூடிய வகையில் பேச்சுவழக்கு, மொழிநடை மற்றும் உடல் சார் வர்ணனைகளுடன் நமது நேரடிப் பார்வைக்கு இட்டு வருகின்றார். அவர்களது ஆசாபாசங்களுடன் எம்மை நெருங்க வைக்கின்றார். இவ்வாறான செயல் முறை காட்சிப்படுத்தும் பண்பு எனப்படும். இதனால் அவரது படைப்புக்கள் பலவும் வாசகனை உடனடியாகத் தம்முடன் ஒன்றவைத்து விடுகின்றன. முக்கியமாக இளம் தலை முறையினரின் உணர்வுகள் குறிப்பாக காதல்சார் மன அவலங்கள், பிரிவுத்துயர்கள், ஏக்கங்கள் சார்ந்தவற்றை அவர் எழுதும் போது நாடகம் மற்றும் திரைப்படக் காட்சிகளுக்குரிய சுவைஉணர்வு அவற்றில் வெளிப்படுகின்றது. ஒரு வகையில் குணசேகரம் அவர்கள் பலராலும் விரும்பி வாசிக்கப்படும் படைப்பாளியாகக் கவனத்தைப் பெற்று வருவதற்கு அவரது இவ்வாறான சித்தரிப்பு முறைமை ஒரு முக்கிய காரணமெனக் கொள்ளப்பட வேண்டியதாகும்.

அறமும் நீதியும் நிறைந்த மரபுகள் நமக்கு வளமாக இருந்தும் அவை பேணப்படாமல் அழிந்து கொண்டு போகின்றனவே என்ற ஒரு மனஆதங்கமே அவரது எழுத்துக்கள் பலவற்றிற்கும் உள்ளீடாக, உணர்வோட்டமாக அமைவதை உணர முடிகின்றது. ஆசிரியப் பணி புரிவோர் அதற்கான பண்பு நலன்களை பேணிக்கொள்ளாமை, குடும்ப உறவுகளில் பாசம் பற்று என்பன விலகி அவற்றின் இடத்தைப் பணம், அந்தஸ்து என்பன பற்றிக் கொண்டமை,

பெண்ணைப் போகப் பொருளாகக் கருதும் ஆண் ஆதிக்கக் கொடுமைகள், காதல் என்ற புனித உணர்வு எதிர்கொள்ளும் அவலங்கள் முதலியவற்றை மையமிட்டே அவர் தம் கதைகளுக்கான உணர்வுக் கூறுகளைக் கட்டமைத்துக் கொள்கின்றார். சில ஆக்கங்களில் அவர் தாம் உணர்ந்து விரும்பிய தீர்வுகளை முன்வைக்க முற்படுகின்றார். ஆயினும் பொதுவாகப் பிரச்சினைகளை இனம் காட்டி வாசகனின் மனச்சாட்சியை விழிப்புறச் செய்யும் ஒரு விமர்சன யதார்தப் படைப்பாளியாக கே.வி.குணசேகரம் நமக்குக் காட்சி தருகின்றார்.

**பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன்**
முன்நாள் தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

# என்னுரை

தமிழர்களின் வாழ்வியல் நூலான திருக்குறளில் உள்ள 1330 பாக்களுக்கும் கதை எழுத விரும்பி ஆரம்பித்தேன். இக் கதைகளைச் சிறந்த முறையில் எழுத வேண்டும் என்பதற்காக ஏராளமான நூல்களைக் கற்றேன். அதற்கமைய 210 குறள்களுக்கான கதையை முதலில் எழுதினேன். அக்கதைகளை நல்ல முறையில் சா்வதேசத் தரத்திற்கு அமைவாக மிகவும் அழகுற லங்கா பதிப்பகத்தினா் வெளியிட்டனா். இலங்கையில் உள்ள பாடசாலைகள், பொது நிறுவனங்கள், சமயஸ்தாபனங்கள், கோயில்கள் என்பன இக்கதைகளைக் கொள் முதல் செய்து பரிசளித்தன; மாணவா்களுக்குக் கொடுத்தன; நூல் நிலையங்கள் யாவும் கொள்வனவு செய்தன.

திருக்குறள் பாக்களுக்கு மிகவும் பொருத்தமான கதைகள்; மிகவும் இனிமையான வசனநடை; நல்ல தத்துவக் கருத்துக்கள். என்று பல கல்விமான்கள் நேரிலும் கடித மூலமும் தெரிவித்தனா்.

அறத்துப்பாலின் மிகுதிக் குறள்களுக்கான கதைகள் இப்பொழுது மணிமேகலைப்பிரசுர நிறுவனத்தினரால் வெளியிடப்படுகிறது. இதற்கு முன்பு திருக்குறள் கதைகள் இன்பத்துப்பால் 80 என்ற எனது நூல் மணிமேகலைப் பிரசுர நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டது. அதன் மிகுதிப் பகுதி விரைவில் வெளி வரும்.

அடுத்து பொருட்பாலுக்குரிய கதைகளை எழுதி வருகிறேன். 1330 குறளுக்கான கதைகளும் மணிமேகலைப் பிரசுர நிறுவனத்தினரால் எதிா் காலத்தில் வெளியிடப்படும்.

திருக்குறளைப் பற்றிப் பேசாத புலவரில்லை; மொழிபெயா்க்கப்படாத மொழிகள் இல்லை. பள்ளிப் பருவத்திலிருந்து வயது சென்றவா் வரை படித்து இன்புறும் இத்திருக்குறளைப் பற்றிப் பல்வேறு நூல்கள் வெளிவந்த போதும், முழுக்குறளுக்கும் இதுவரை யாரும் கதை எழுதியதில்லை. உலக வரலாற்றில் முதன் முதலாக இப்பணியை நான் தொடங்கியுள்ளேன். இதற்கு அனைவரது ஆதரவும் எனக்குத் தேவை. குறிப்பாக தமிழ்நாட்டு அறிஞா்களின் ஆதரவையும் கருத்துக்களையும் எதிா்பாா்க்கிறேன். குறளை அணுஅணுவாக அலசி ஆராயும் தமிழ் நாட்டு அறிஞா்கள் இக்கதைகளையும் ஆராய வேண்டும். இதுவே எனது ஆசை.

திருக்குறள் கதைகளின் கீழ் குறளும் அதற்கான கருத்துக்களையும் எழுதியுள்ளேன். யாழ்ப்பாணத்து அறிஞா் பலா் மிகவும் இலகுவாக மாணவா்கள் விளங்கிக் கொள்ளும் அளவுக்கு எழுதப்பட்ட அவ்வுரையைத் தொகுத்து நூலாக வெளியிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளனா். அடுத்து அந்நூல் வெளிவரும். இக்கதைகளை நல்ல முறையில் அச்சுப்பதிவு செய்து தந்த செல்வி.க.சுகந்தினியின் சேவை அளப்பரியது. அவருக்கும், மிகவும் எளிமையாக என்னுடன் பழகி ஈழத்தவரின் ஆக்கங்களை நூலுருவாக்கி ஈழத்து இலக்கிய மாதாவுக்குப் பெருமை அளித்துக் கௌரவித்துக் கொண்டிருக்கும் மணிமேகலை பிரசுர முகாமைப் பணிப்பாளா்

திரு.ரவிதமிழ்வாணனுக்கும் அணிந்துரைகள் தந்துதவிய பேராசிரியர் நா.சுப்பிரமணியனுக்கும், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

கே.வி.குணசேகரம்
15.06.2005.

அதிபர்
யா.ஃ. நாவலர் தமிழ் வித்தியாலயம்,
கோப்பாய்,
ஸ்ரீலங்கா.

## ஒப்புரவாளன்

நேரம் காலை பத்துமணி. விக்னேஸ்வரமூர்த்தி கா.பொ.த பரீட்சைப் பெறுபேறுகளை மாணவர்களுக்கு வாசித்துக் கொண்டிருந்தார். அம்முறை முதல் வருடத்தை விடக் கூடுதலான பெறுபேறு அப் பாடசாலைக்குக் கிடைத்திருந்தமையால் மிகவும் மகிழ்ச்சியில் இருந்தார் விக்னேஸ்வரமூர்த்தி. விஞ்ஞானப் பிரிவில் பத்து மாணவர்கள் மருத்துவ பீடத்திற்கும் பொறியியல் பிரிவில் பதினெட்டு மாணவர்களும் தெரிவாகியிருந்தனர். இதை விட விஞ்ஞானப் பிரிவில் முப்பத்தாறு மாணவர்களும், வர்த்தகப்பிரிவில் பதினொரு மாணவர்களும், கலைப்பிரிவில் முப்பத்தெட்டு மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியிருந்தனர். அதனால் கா.பொ.த உயர்தரப்பிரிவில் கல்வி கற்பித்த ஆசிரியர்களை அழைத்து தனது பாராட்டுதல்களை தெரிவித்தார். பல பெற்றோர்கள் வந்து விளம்பரப் பலகையில் தமது பிள்ளைகளின் பெறுபேறுகளைப் பார்த்து விட்டு மகிழ்வுடன் அதிபரை வந்து சந்தித்து தமது பாராட்டுக்களைத் தெரிவித்து விட்டுச் சென்று கொண்டிருந்தனர்.

மணிவண்ணனின் மகள் தாரிணி அப்பாடசாலையில் மருத்துவப் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களுள் முதலாம் இடத்தைப் பெற்றிருந்தாள். தனது மகளின் பெறுபேற்றை அறிவதற்காக பாடசாலைக்கு வந்த மணிவண்ணன பிள்ளைகள் பரீடசை எடுக்காவிட்டாலும் அதை பெறுபேறு வந்தால் அறிந்து கொள்ளும் ஆவலில் தணிகாசலம் அன்று எந்த வேலை இருந்தாலும் அதை ஒதுக்கி வைத்து விட்டு பாடசாலைக்கு வந்து விடுவார். சித்தியடைந்த ஒவ்வொரு பிள்ளையையும் அவர் தனது பிள்ளையைப் போலப் பாராட்டி பரிசளிப்பார். இதை அவர் விக்னேஸ்வரமூர்த்தி அதிபராகப் பாடசாலைக்கு வந்த காலம் முதல் ஒவ்வொரு வருடமும் செய்து வருகிறார்.

மணிவண்ணன் பாடசாலைக்கு வந்த போது தணிகாசலம் அதிபரின் அலுவலகத்திற்கு முன்பாக இருந்து மாணவர்களுக்கு இனிப்புப் பொட்டலங்கள் வழங்கிக் கொண்டிருந்தார். மணிவண்ணனைக் கண்டதும் குதூகலத்துடன் அவனின் அருகே வந்தார்; “இந்த மாவட்டத்தில் தாரிணி முதன்மையாகச் சித்தியடைந்திருக்கிறாள்” என்ற தணிகாசலம் இனிப்பு ஒன்றை எடுத்து அதைச் சுற்றியிருந்த கடதாசியை நீக்கி விட்டு மணிவண்ணனது வாய்க்குள் வைத்து விட்டு அவனைக் கட்டித்தழுவினார்; “ஒருவன் பெறத்தக்க செல்வங்களுள் மிகப் பெரிய செல்வம் நன்மக்களைப் பெறுவது. இம்மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பரீட்சை எழுதினர். அவர்களுள் முதலிடம் பெற்ற பிள்ளையைப் பெற்ற உன்னை எவ்வளவு பாராட்டினாலும் தரும்” என்றார் தணிகாசலம் அவரது கண்கள் கலங்கின.

மணிவண்ணன் பூரித்துப் போனான். இனிமையான கீதமொன்று காதுவழியாக உடலெங்கும் சிலிர்த்துப் பாய்வது போலிருந்தது.

‘‘சரி....சரி... வாருங்கோ அதிபரைச் சந்திப்பம்’’ என்று கூறிவிட்டு தணிகாசலம் அதிபரின் காரியாலய அறையை நோக்கி நடந்தார். மகிழ்ச்சிப் பூரிப்பால் எதுவும் பேசத் தோன்றாது சாவி கொடுக்கப்பட்ட பொம்மையைப் போல தணிகாசலத்தின் பின்னால் சென்றான் மணிவண்ணன்.

அதிபர் மகிழ்ச்சிப் பெருக்குடன் அவர்களை வரவேற்றார். நாற்காலியில் அமர்ந்த மணிவண்ணன் சில கணங்கள் விக்னேஸ்வரமூர்த்தியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது விழிக்குள் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி இருப்பதைப் போன்ற பிரமை; ‘‘ஐயா படிக்க வசதி இல்லாத காரணத்தால் தான் நான் பதினைந்து வயதில் வியாபார நிலையமொன்றில் கூலிவேலைக்குச் சேர்ந்தேன். நான் படிக்கா விட்டாலும் எனது பிள்ளைகளையாவது படிப்பிக்க வேண்டும் என்று நினைத்து கஷ்டப்பட்டு உழைத்தேன். இன்று எனது மகள் முதன்மையாகச் சித்தியடைந்ததையிட்டு மகிழ்ச்சியாக இருக்கிறது..’’

விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தார். அந்தச் சிரிப்பில் என்றுமில்லாத ஒரு மகிழ்வு இருப்பதைத் தணிகாசலம் கண்டு கொண்டார்; ‘‘உமது ஒரு பிள்ளை சித்தியடைந்தமைக்காக நீங்கள் மகிழ்கிறீர்கள். எனக் நூறிற்க்கு மேற்பட்ட பிள்ளைகள் சித்தியடைந்தமையால் நான் பெருமகிழ்வுடன் இருக்கிறேன்’’ என்றார்.

மிகவும் கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்த ஒரு மாணவனின் கல்விச் செலவு முழுவதையும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அம் மாணவனைத் தெரிவு செய்து சொன்னீர்களானால் அம்மாணவனுக்கு உதவுகிறேன்’’ என்றான் மணிவண்ணன்.

சிறிது நேரம் பேசாதிருந்த விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; ‘‘இந்த உலகில் கைம்மாறு கருதாது மழையைப் போல் உதவி செய்யக் கூடியவர்கள் மிகச் சிலரே இருக்கின்றனர். தணிகாசலம் வசதியில்லாவிட்டாலும் வருடா வருடம் பரீட்சைகளில் சித்தியடையும் ஒவ்வொரு மாணவனுக்கும் பரிசுகள் வழங்குவார். நான் இப்பாடசாலைக்கு வந்த நாளில் இருந்து அவதானித்துக் கொண்டிருக்கிறேன். கைம்மாறு கருதாமல் வருடா வருடம் உதவிகள் செய்கிறார். அதே போல நீங்களும் உதவி செய்ய முன்வந்ததைப் பாராட்டுகிறேன். காலையில் சின்னத்தம்பி வந்தான். தனது மகன் கலைப்பிரிவில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளமையை அறிந்து துக்கப்பட்டான். சித்தியடையாவிட்டால் ஏதாவது வேலையில் சேர்க்கலாம். இப்ப அவனைப் படிப்பிக்க என்னிடம் பணம் இல்லை’’ என்று கவலைப்பட்டான். நல்ல வேளை நீங்கள் வந்து விட்டீர்கள். அவனுக்கு உதவி செய்யுங்கள்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘அவன் எனது மகளுடன் பிரச்சினைப்பட்டவன்...’’ அவன் கதைக்கும் போது குறுக்கிட்டார் விக்னேஸ்வரமூர்த்தி; ‘‘அதற்காக அவனது வாழ்வு சீரழியக் கூடாது...’’ விக்னேஸ்வரமூர்த்தி கதைத்துக் கொண்டிருக்கும் போது மணிவண்ணன் அவசரமாகச் சொன்னான்; ‘‘நீங்கள் எனது பேச்சை தவறாக

நினைக்கிறீர்கள் போலத் தெரிகிறது. எனது மகளுடன் அவன் பிரச்சினைப்பட்டமையால் நான் உதவி செய்வது அவனுக்கோ அல்லது அவனது குடும்பத்தினருக்கோ தெரியக்கூடாது. தெரிந்தால் நான் சுயநலத்துடன் உதவி செய்வதாக நினைப்பார்கள்'' என்றான்.

விக்னேஸ்வரமூர்த்தி திகைத்துப் போனார்; ''மழையைப் பொழியும் வானம் எம்மிடம் என்ன கைம்மாற்றினை எதிர்பார்க்கிறது? அதே போல ஒப்புரவாளர்களின் உதவிகளும் கைம்மாறு எதனையும் எதிர்பாராதவை'' என்று நினைத்தார்.

211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றும் கொல்லோ உலகு.

கைம்மாறு கருதாது வானம் மழையைப் பொழிகிறது. அதே போல் ஒப்புரவாளர்களும் கைம்மாறு கருதாது உதவிகள் செய்வர்.

## வேளாண்மை

கணபதிமத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவானவள் கலைவாணி. வறிய குடும்பத்தைச் சேர்ந்தவள். தகப்பன் ஏகாம்பரம் தோட்ட வேலை செய்பவர். மிகவும் நேர்மையானவர்; கடின உழைப்பாளி, அதனால் அக்கிராமத்தில் கமம் செய்வோர் ஏகாம்பரத்தையே தமது தோட்டங்களிலும், வயலிலும் வேலை செய்யும்படி கேட்பார்கள். அதனால் அவருக்கு ஒரு நாளும் ஓய்வு இருக்க மாட்டாது. தான் வேலை செய்து தனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். மற்றையோரிடம் இரந்து வாழக்கூடாது என்று நினைப்பவர் ஏகாம்பரம். மூன்று வருடங்களுக்கு முன்பு வெளிநாட்டில் இருந்து வந்த பழைய மாணவனான அமுதன் பாடசாலைக்கு வந்து விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்தித்தான்; ''வாத்தியார் நான் இப்பாடசாலையில் நான் கல்வி கற்றேன். அந்த நேரம் வறுமை காரணமாக என்னால் எட்டாம் வகுப்பு வரை தான் கற்க முடிந்தது. திடீரென்று எனது தந்தையார் நோய்வாய்ப்பட்டதால் எனது படிப்பைத் தொடர எனக்கு யாரும் உதவி செய்யவில்லை. அந்தக் காலத்தில் சிவசுந்தரமூர்த்தி தான் ஊரில் பெரும் பணக்காரன். கெட்டிக்காரனான என்னைக் கற்பிக்க உதவி செய்யும்படி எனது அம்மா அவரை கெஞ்சி மன்றாடினார். ஆனால் அவர் உதவி செய்யவில்லை. அதனால் எனது வீட்டுக் காணியை அவரிடம் ஈடுவைத்து மத்தியகிழக்கு நாடொன்றுக்குச் சென்று வேலை செய்தேன். ஈடுவைத்த காணியை மீழும் போது வட்டியாக அவர் அதிக பணத்தை வாங்கி விட்டார். அதன் பின் இரண்டு வருடங்கள் உழைத்துக் கனடாவுக்குச் சென்றேன். இன்று நான் மிகவும் வசதியாக இருக்கிறேன். நன்றாகக் கல்வி கற்கும் வறிய மாணவன் ஒருவனுக்கு உதவி செய்ய விரும்புகிறேன். தயவு செய்து நீங்கள் அம் மாணவரைத் தெரிவு செய்து தாருங்கள்'' என்றான்.

விக்னேஸ்வரமூர்த்தி ஏகாம்பரத்தை அழைத்து விபரத்தைச் சொன்னார்; ‘‘ஐயா நீங்கள் அறிவில் பெரியவர். நான் சொல்வதை ஆறுதலாகக் கொஞ்சம் கேளுங்கள். நான் உழைத்து வாழவே விரும்புகிறேன். கடவுள் என்னைத் திடகாத்திரமாகப் படைத்துள்ளார். எனது உடலில் வலு உள்ள வரை உழைத்து வாழவே விரும்புகிறேன். எனது வருமானம் எனது பிள்ளைகளைப் பராமரிக்கப் போதும். அத்துடன் எனது பிள்ளைகள் கல்வியில் கெட்டிக்காரர்கள். நான் ஒரு சிறு தொகையை அவர்களின் கல்விக்காகப் பெற்றுக் கொண்டால் அவர்கள் கற்று பெரிய பதவிக்கு வந்ததும் ஊரார் அந்தச் சிறு தொகையைத் தந்தவனால் தான் எனது பிள்ளைகள் படித்ததாகக் கூறுவார்கள். அதை நான் விரும்பவில்லை’’ என்றான்.

‘‘நான் உம்மை வற்புறுத்தவில்லை. வெளிநாட்டால் வந்த ஒருவன் சொன்ன நிபந்தனைகள் உமக்குப் பொருந்தியதால் தான் கேட்டேன். அத்துடன் உமது கொள்கையை நான் மிகவும் விரும்புகிறேன். உம்மைப்போல் ஒவ்வொருவனும் நினைத்தால் நாட்டில் பஞ்சமிராது’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘என்னைத் தயவு செய்து தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். எனக்கு இயலாத நேரம் வந்தால் உங்களைக் கேட்கிறேன்’’ என்று கூறி விடை பெற்றார் ஏகாம்பரம்.

அன்று நகருக்குச் சென்று திரும்பும் போது படையினரின் எறிகணை வீச்சில் ஏகாம்பரம் படுகாயமுற்றார். மூன்று மாதங்கள் கழிந்தும் அவரால் வேலை செய்ய முடியவில்லை அதனால் மெல்ல மெல்ல நடந்து விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தார்; ‘‘ஐயா அன்று நான் திடகாத்திரமாக இருந்த போது நீங்கள் மனமுவந்து அளித்த நிதியுதவியை எற்கவில்லை. என்னால் உழைத்து எனது பிள்ளைகளை வளர்க்க முடியு மென்று நம்பினேன். ஆனால் எறிகணை வீச்சால் படுகாய மடைந்த என்னால் இப்பொழுது என்னால் வேலை செய்ய முடியவில்லை. மருத்துவக் கல்லூரியில் பயிலும் மகளுக்கும் உங்கள் பாடசாலையில் கற்கும் மூன்று பிள்ளைகளுக்கும் மூன்று வேளை உணவு கூடக் கொடுக்க முடியவில்லை’’ விம்மினார் ஏகாம்பரம்.

‘‘சரி.. சரி அழாதைங்கோ... நான் உதவி செய்யிறன். நீங்கள் போங்கோ’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘தணி இன்று காலையில் கடவுள் சுப்பிரமணியம் ஆசிரியையின் மகன் ஸ்கந்ததேவாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. தான் இந்த வாரம் ஊருக்கு வருகிறாராம். தனது தந்தையின் நினைவாகப் பாடசாலைக்கு உதவி செய்ய வேண்டுமாம். பாடசாலைத் தேவைகளைப் பட்டியலிட்டு வைத்திருக்குமாறு எழுதியுள்ளார். அத்துடன் போரினால் பாதிப்படைந்த மாணவர்களுக்கு கற்பதற்கு உதவிகள் பலவும் செய்ய வேண்டும் என்றும் எழுதியுள்ளார். அவர் வந்ததும் கேட்போம்’’ என்றார்.

“கடவுள் வாத்தியாரா.... உண்மையில் அவர் கடவுள் தான் அவர் இங்கு கற்பிக்கும் காலத்தில் இந்த ஊருக்கும் பாடசாலைக்கும் அளப்பரிய சேவைகள் செய்தவா. அவாவைக் கண்டால் நாங்களெல்லாம் ஒளித்து விடுவோம். நான் பாடசாலைக்கு ஒழுங்காகப் போவதில்லை. வீட்டு நிலமை அப்படி. அப்பா உழைக்கிற முழுதையும் குடிச்சிடுவார். ஆச்சி தான் கூலி வேலை செய்து என்னைக் காப்பாற்றினவா. அவான்ரை துன்பத்தைப் பொறுக்கேலாமல் தான் நான் பாடசாலையை விட்டு விட்டுக் கூலி வேலை செய்யத் தொடங்கினனான். நான் பாடசாலையை விட்டாப் பிறகு நாலைந்து தரம் அவா வீட்டை வந்தவா; “தணிகாசலம் உனக்கு இப்ப நாலு காசு கையில் வரேக்கை கல்வியைப் பற்றித் தெரியாது. பிற்காலத்திலை நீ கஷ்டப்படுவாய் உனக்குத் தேவையான புத்தகம் எல்லாம் நான் வாங்கித் தாறன். சாப்பாடும் தாறன். பள்ளிக்கூடத்திற்கு வா” என்றவா. அவா சொன்ன மாதிரி இப்பத் தான் எனக்கு எல்லாம் புரியுது. அவா எனக்கு மட்டும் இப்படிச் சொல்லேல்லை பாடசாலைக்குப் போகாத பிள்ளைகள் எல்லாருக்கும் சொன்னவா. குருமூர்த்தி, ஞானமூர்த்தி, ஞானப்பிரகாசம் எல்லாரும் அவான்ரை உதவியாலை தான் படிச்சவை. இப்ப எல்லாரும் நல்லாயிருக்கினை. அவா அந்தக் காலத்திலேயே உதவி செய்தவா. இப்ப கட்டாயம் உதவி செய்வா” கண்கலங்கினார் தணிகாசலம்.

“அப்பாவும் அடிக்கடி அவாவைப் பற்றிச் சொல்கிறவர். தானும் புரிசனும் தேடின பொருளெல்லாத்தையும் இந்த ஊர்ச் சனத்துக்காகத் தான் செலவு செய்கிறவா” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

212. தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

ஒப்புரவாளன் சிரமம்பட்டுப் பொருட்களைத் தேடுவது தக்கவர்களுக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

## காண்பதரிது

விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்திப்பதற்காக பாடசாலைக்கு வந்த சிவசுந்தர மூர்த்தி விக்னேஸ்வரமூர்த்தி அலுவலகத்தில் இல்லாததால் வெளியே அதிபரைச் சந்திப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஆசனமொன்றில் அமர்ந்திருந்தார். விக்னேஸ்வரமூர்த்தியை வேலை நாட்களில் எவரும் இலகுவாகச் சந்திக்க முடியாது. காலை எட்டு முப்பதிற்கு பாடசாலை ஆரம்பமாகும். காலைப் பிரார்த்தனை முடிந்ததும் மாணவர்களுக்கு அறிவுரை கூறும் கதைகள் கூறப்படும். அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவர்க்கும் நேரசூசி வகுத்து அதன்படி அவர்கள் கதை கூறுதல் வேண்டும். ஒரு ஆசிரியருக்கு வருடத்தில் இரண்டு அல்லது மூன்று முறைதான் மாணவர்களுக்கு அறநெறி ஒழுக்கம் சம்பந்தமாக ஐந்து நிமிடங்கள் பேசச் சந்தர்ப்பம் வரும். அதனால் எல்லா ஆசிரியர்களும் நன்கு

திட்டமிட்டு அருமையான விஷயங்களைப் பேசுவார்கள். அவர்களின் பேச்சை எக்காரணம் கொண்டும் விக்னேஸ்வரமூர்த்தி கேட்கத் தவற மாட்டார். கேட்ட பின்பு வாரத்திற்கு ஒரு முறை மாணவர்களுக்கான நிகழ்வுகள், சட்ட திட்டங்கள், ஒழுக்கக் குறைபாடுகள் பற்றிக் கூறும்போது அவ்வாரம் ஆசிரியர்கள் கூறிய அறிவுரைகளைப் பற்றிப் பேசி சிறந்தவற்றைப் பாராட்டுவார். பாடசாலை ஆரம்பமான பின் முதல் இரு பாட வேளைகளிலும் அலுவலக நிர்வாகத்தைக் கவனிப்பார். அதன் பின் அன்றைய தபால்களைப் பிரித்துப் படித்து அதற்கான பதில் கடிதங்களை எழுதுவார். பத்துமணிக்கு வகுப்புக்களை மேற்பார்வை செய்யப் புறப்படுவார். இரண்டு மணிவரை அவர் அலுவலகத்திற்குத் திரும்ப மாட்டார். முக்கிய விடயமாக வருவோர் மட்டும் பிரதி அதிபரில் ஒருவரான திருமதி திருநாவுக்கரசிடம் தமது முறைப்பாடுகளைத் தெரிவிப்பார்கள். அவற்றுள் முக்கிய மானவற்றை திருமதி திருநாவுகரசு விக்னேஸ்வரமூர்த்தி மேற்பார்வை செய்யும் வகுப்பில் கொண்டு சென்று கொடுப்பார். அதற்கு விக்னேஸ்வரமூர்த்தி விளக்கமளிப்பார். ஆனால் அலுவலகத்திற்கு வரமாட்டார்.

சிவசுந்தர மூர்த்தியிடம் வந்த திருமதி திருநாவுக்கரசு; ‘‘நீங்கள் தாமதிப்பதில் பிரயோசனம் இல்லை. அதிபர் இரண்டு மணிக்குத் தான் அலுவலகத்திற்கு வருவார்’’ என்றார்.

இரண்டு மணிக்கு இன்னமும் இரண்டரை மணித்தியாலங்கள் இருந்தன. உயர் அதிகாரியான தன்னைக் காக்க வைத்தது மட்டுமல்லாது இரண்டரை மணிநேரம் இருந்தால் தான் சந்திக்கலாம் என்று கூறியது அவருக்குச் சற்றுக் கோபத்தை வரவழைத்தாலும் எதுவும் செய்ய முடியாததால் எழுந்து சென்றார்.

பிற்பகல் நான்கு மணிக்கு சிவசுந்தரமூர்த்தி வந்த போது கா.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார் விக்னேஸ்வரமூர்த்தி. ஐந்தரை மணிக்கு அக் கலந்துரையாடல் முடிந்தது. விக்னேஸ்வரமூர்த்தி வெளியே வந்து வீட்டுக்குப் புறப்பட்ட போது காவலாளி வந்து சிவசுந்தரமூர்த்தி வந்திருப்பதாகச் சொன்னான். விக்னேஸ்வரமூர்த்தி சிவசுந்தரமூர்த்தி காத்திருந்த அறைக்கு வந்தார்.

‘‘காலையிலும் வந்தீர்களாம். இன்று உயர்தர வகுப்பிற்கு கனிப்பீட்டுக் குழுவினர் வந்திருந்தனர். அதனால் வெளியே வரமுடியவில்லை. இப்பொழுது ஒரு முக்கியமான கூட்டம்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

சிவசுந்தரமூர்த்தி சிலகணங்கள் எதுவும் பேசாமல் இருந்தார் பின்; ‘‘வெளிநாட்டில் வேலை செய்யும் அமுதன் என்ற பையனின் சாதகம் எனது மகளின் சாதகத்திற்கு நல்ல பொருத்தமாக இருக்கிறது. தரகர் ஒருவர் அதைக் கொண்டு வந்து தந்தார். முன்பு அவன் வெளிநாட்டிற்குச் செல்லும் போது என்னிடம் தான் காணியை ஈடுவைத்தான். அதனால் சில பிரச்சினைகள் வந்தன. ஆகையால் என்னால் அவர்களின் வீட்டுக்குச் சென்று கதைக்க முடியவில்லை...’’ தயங்கினார் சிவசுந்தரமூர்த்தி.

‘‘பரவாயில்லைச் சொல்லுங்கோ...’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘உலக நடையை அறிந்து அதன் வழியிலேயே நீங்கள் நடப்பவர். எனது மகளுக்கு முப்பதுவயதிற்கு மேலாகிறது. எனது தீய ஒப்புரவில்லாத நடவடிக்கைகளால்த் தான் எனது மகளின் திருமணம் தடைப்படுகிறது. எனவே தயவு செய்து அமுதனின் வீட்டுக்குச் சென்று எனது நிலையை எடுத்துக் கூறி இத்திருமணம் நடைபெற ஆவன செய்யுங்கள். பிறருக்கு உதவி செய்து வாழும் ஒப்புரவை விடச் சிறந்தது தேவர் உலகத்திலும் இல்லை என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டுள்ளேன். தயவு செய்து இவ் உதவியைச் செய்யுங்கள்’’ என்றார் சிவசுந்தரமூர்த்தி அவரது குரல் தழுதழுத்தது.

‘‘நான் அமுதனைச் சந்தித்து ஆவன செய்கிறேன்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

விக்னேஸ்வரமூர்த்தி அமுதனின் வீட்டுக்குச் சென்ற போது அமுதனின் தந்தையார் பொன்னம்பலமும் தாயார் கஜலட்சுமியும் திகைத்து விட்டனர். அவரை வரவேற்கக் கூட முடியாது தடுமாறினர். அமுதன் ஓடோடி வந்தான்.

‘‘வாருங்கோ..... வாருங்கோ..’’ பெருமகிழ்வுடன் வரவேற்றான் அமுதன்.

‘‘ஒரு நாளுமில்லாதவாறு வீடு தேடி வந்திருக்கிறியள். ஏதோ பெரியதொரு அதிட்டம் எம்மைத் தேடி வரப்போகுது’’ என்றார் பொன்னம்பலம்.

‘‘தான் வந்த விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னார் விக்னேஸ்வரமூர்த்தி. பொன்னம்பலத்திற்கு தர்ம சங்கடமாக இருந்தது. அவரால் பேசமுடியவில்லை. அதை உணர்ந்த விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; ‘‘ஒரு காலத்தில் சிவசுந்தரமூர்த்தி கெட்டவன் தான். பல அட்டூழியங்களைச் செய்தவன் தான். அதற்கான தண்டணைகளை அனுபவித்து இப்போது திருந்தியரமயால் தான் அவனுக்காக நான் வந்திருக்கிறேன்’’.

பொன்னம்பலத்தால் விக்னேஸ்வரமூர்த்தியின் பேச்சை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும் மறுப்புத் தெரிவிக்கவும் முடியவில்லை.

‘‘சிவசுந்தரமூர்த்தி பாவம். இத் திருமணத்தால் வரக் கூடிய எல்லா விளைவுகளையும் ஏற்க நான் தயாராக இருக்கிறேன். உலக நடையை அறிந்து அதன் வழியில் நடப்பவரே மூவுலகிலும் சிறந்தவர். தயவு செய்து சிவசுந்தரமூர்த்தி திருந்தியதை நம்புங்கள்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘அவர் திருந்தினாரோ இல்லையோ அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஒப்புரவாளனான நீங்கள் சொல்வதை நான் நம்புகிறேன். அப்பா தயவு செய்து அதிபரின் கோரிக்கைக்கு இணங்குங்கள்’’ என்றான் அமுதன்.

பொன்னம்பலம் எதுவும் பேசாமல் தலை அசைத்தார். விக்னேஸ்வரமூர்த்தி மகிழ்வுடன் விடை பெற்றர்.

213. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

பிறருக்கு உதவி செய்து வாழும் ஒப்புரவாகிய உயர்ந்த செயலைப் போன்ற நற்செயலை இவ்வுலகிலும் தேவர் உலகிலும் காணமுடியாது.

## உயிர்வாழ்வோர்

அமுதன் கஜேந்தினியின் திருமணம் வெகுவிமரிசையாக நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. விக்னேஸ்வரமூர்த்தி ஏற்பாடு செய்து முன் நின்று அத்திருமணத்தை நடத்தியமையால் அவ்வூரில் பெரும்பான்மையான மக்கள் திருமணத்திற்கு வந்திருந்தனர். சுகுணா கானும் கைலாய நாதனும் அத்திருமணத்திற்கு வரவில்லை.

கைலாயநாதன் அத்திருமணத்தை குழப்புவதற்காகக் கடைசி நேரம் வரை அடாவடித்தனங்களில் ஈடுபட்டான். திருமணத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு அவன் பொன்னம்பலத்தின் வீட்டுக்குச் சென்றான். பொன்னம்பலம் ஒரு விவசாயி. அதனால் கருணாகரனை அவருக்குத் தெரியும். பொன்னம்பலம் ஒரு போதும் ஊர் வியாபாரிகளுக்குத் தனது விவசாய விளைபொருட்களைக் கொடுப்பதில்லை. பட்டணத்தில் உள்ள சந்தைக்குக் கொண்டு சென்று விற்பார். அதனால் பணமும் கூடக் கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான பொருட்களையும் மலிவு விலையில் வாங்கலாம் என்று நினைப்பார். ஊரில் உள்ள விவசாயிகளிடம் மணிவண்ணன் நியாய விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்யத் தொடங்கிய பின்பு அவனுக்கே தனது விவசாயப் பொருட்களைக் கொடுப்பதுடன் தனக்குத் தேவையான பொருட்களையும் அவனிடமே கொள்வனவு செய்வார்.உலக நடையை உணர்ந்து வாழும் மணிவண்ணனை அவர் மதித்தார். கருணாகரனின் கெட்ட நடவடிக்கைகள் அவருக்குத் தெரியும். அதனால் கருணாகரன் தனக்குக் கேடு செய்யத் தான் வருகிறான் என உணர்ந்து கொண்டார்.

“பொன்னம்பலம் அண்ணை சிவசுந்தரமூர்த்தியைப் பற்றி உங்களுக்குத் தெரியாதே. ஊருக்கு உதவாதவன்; அதோடை ஊராருடன் ஒத்துப் போகாதவன். இவ்வுலகில் உயிரோடு வாழ்பவன் எனக் கூறப்படுபவன் ஊரோடு சேர்ந்து வாழ்பவனே. அவ்வாறு வாழாதவன் செத்தவனாகவே கருதப்படுவான். சிவசுந்தரமூர்த்தி ஊரில் உள்ள யாருடனாவது முரண்படாமல் வாழ்கிறானா...? இதெல்லாம் தெரிந்த நீங்கள் அவனோடு திருமண உறவு வைப்பது தற்கொலை செய்து கொள்வதற்குச் சமமானதாகும். அதோடு அவனது மகள் திமிர்பிடித்தவள். எத்தனை ஆண்களை அவமதித்திருக்கிறாள். தெரியுமா...?” கருணாகரன் பேசிக் கொண்டிருக்கும் போது பொன்னம்பலம் குறுக்கிட்டார்; “எனக்கு சிவசுந்தரமூர்த்தியைப் பற்றி

அக்கறை இல்லை. இப்பூமியில் சகலரோடும் அன்போடு பழகி இன்புற்று வாழ்பவரான விக்னேஸ்வரமூர்த்தி, சிவசுந்தரமூர்த்தி தற்பொழுது திருந்தி ஒப்புரவாளனாக வாழ்வதாகக் கூறுகிறார். அதை நானும் எனது மகனும் ஏற்றுக் கொள்கிறோம். அவரின் வார்த்தைகளில் எனக்கு நம்பிக்கை இருக்கு. எனவே தயவு செய்து பயனில்லாத சொற்களைப் பேசாமல் இவ்விடத்தை விட்டுச் செல்'' என்றார் பொன்னம்பலம்.

திருமணம் முடிந்த பின் மணமக்களை வந்தவர்கள் ஆசீர்வதித்துப் பரிசுப் பொருட்கள் கொடுத்தனர். அவர்களை ஆசீர்வதிக்க விக்னேஸ்வரமூர்த்தி வந்த போது, அவர்கள் எழுந்தனர். மணவறையில் அவர்களை அமர்த்தி வாழ்த்தி அரிசி தூவிய விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; ''கஜேந்திரனி, அமுதன் மிகவும் நல்லவன். பாடசாலைக்கு வந்து அவன் கதைத்த போதே ஒழுக்கமான உயர்ந்த ஒப்புரவாளன் என்பதை நான் அறிந்து கொண்டேன். உலகின் நடைமுறைக்கேற்ப பெரியவர்கள் கூறிய படி வாழ்வது தான் சிறப்பானது. அப்படி வாழாதவர்கள் செத்தவர்களுக்குச் சமமானவர்கள். வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். ஒரு காலத்தில் கஷ்டப்பட்ட அமுதன் இன்று பணக்காரனாக இருக்கிறான். எனினும் இளம் வயதில் தான் பட்ட கஷ்டத்தை உணர்ந்து உலகில் வாழும் மக்கள் அனைவரும் இன்பமாக வாழ வேண்டும் என்று நினைக்கிறான். ஏழை எளியவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்ய வேண்டுமென நினைக்கிறான். அன்போடு பழகுகிறான். அடுத்தவர்கள் செய்த தீமைகளை மறந்து அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டு மென்று நினைக்கிறான். அதை விட நல்ல குணம் என்ன வென்றால் பெரியவர்களின் சொற்களுக்கு மதிப்புக் கொடுப்பது. ஒவ்வொருவனும் தான் சொல்வது தான் சரியென்றும், தனக்கு அடங்கி வாழவேண்டும் என்று நினைக்கும் போது அமுதன் அடுத்தவர் சொல்லைக் கேட்பது எவ்வளவு சிறப்புத் தெரியுமா....?'' சரியோ பிழையோ பெரியவர்களுக்கும் கணவனுக்கும் அடங்கி நடப்பது தான் பெண்களுக்குச் சிறப்பைத் தரும். தவறையும் அன்பாகவும் பண்பாகவும் சுட்டிக் காட்டப் பழகவேண்டுமே தவிர கடின வார்த்தைகளால் சுட்டிக் காட்டக் கூடாது'' என்றார்.

அருகில் இருந்த சிவசுந்தரமூர்த்தி கனிவுடன் சொன்னார்; ''அதிபரின் புத்திமதிகளை பேணிப் பின்பற்றம்மா. நான் தவறான வழியில் உலகின் நடப்பிற்கேற்ப நடக்காததால் பல துன்பங்களுக்குட்பட்டேன். உனக்கு அத் துன்பங்கள் வரக் கூடாது'' என்றார்.

''நான் இனி மேல் எல்லோருடனும் சேர்ந்து வாழ்வேன். கடைசி வரையும் தவறுகள் செய்ய மாட்டேன்'' என்றாள் கஜேந்தினி.

214. ஒத்து அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

உலக நடையை அறிந்து அதன்படி வாழ்பவனே உயிர் வாழ்பவனாகக் கருதப்படுவான். அப்படி வாழாதவன் செத்தவனாகவே;, கருதப்படுவான்.

# ஊருணிநீர்

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி சனசமூக நிலையத்தில் விக்கினேஸ்வரமூர்த்தியின் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. வெளிநாட்டில் இருந்து வந்த அமுதன் அவ்வூரில் வாழும் ஏழை மக்களுக்கும், நோயாளர்களுக்கும் திறமையாகச் சித்தியடையும் வறிய மாணவர்களுக்கும் உதவி செய்வதற்கென நிதியம் ஒன்றை ஆரம்பிக்க விரும்பினான். அதன் விபரத்தை அவன் மக்களுக்கு விரிவான முறையில் கூறினான்; ‘‘அன்பான எனது கிராம மக்களே. பத்து வருடங்களுக்கு முன்பு நான் மிகவும் ஏழையாக இருந்தேன். எனது தந்தையார் நோயாளியாகியமையால் எமது குடும்பத்தின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டது. எனது படிப்பு இடை நிறுத்தப்பட்டது. அதனால் கஷ்டப்பட்டு வெளிநாட்டிற்குச் சென்று கடினமாக உழைத்த நான் இன்று பெரும் செல்வந்தனாக ஊருக்குத் திரும்பியுள்ளேன். நான் கல்வியை இடை நிறுத்தியது போல வறுமை காரணமாக இனி இக் கிராமத்தில் யாரும் கல்வியை இடை நிறுத்தக் கூடாது. எனது தந்தை நோய்வாய்ப்பட்டதும் எமது குடும்பம் பாதிக்கப்பட்டது. அப்பா நோயின் கொடுமை. தாங்க முடியாது அவதிப்படுவதைக் காண என்னால் முடியவில்லை. அந்நாளில் இக்கிராமத்தில் பெரும்பாலானோர் ஏழைகளாகவே இருந்தமையால் அவருக்கு உதவ ஒருவராலும் முடியவில்லை. இருந்தும் சுதேச வைத்தியரான இராசரத்தினம் அவர்கள் அப்பாவுக்கு இலவசமாக மருந்து வகைகள் கொடுத்து உதவினார். அதனால் தான் இன்று எனது தந்தையார் உயிருடன் இருக்கிறார். அதனால் இராசரத்தினத்தின் பெயரில் நிதியம் ஒன்றை ஆரம்பிக்கிறேன். இந்நிதியத்திற்கு பத்து இலட்சரூபா நிரந்தர வைப்பாக நான் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பில் இடுகிறேன். அந்நிதியில் இருந்து வருடா வருடம் கிடைக்கும் வட்டிப் பணத்தில் இருந்து இக்கிராம மக்கள் உதவி பெறுவார்கள். அடுத்த வருடமும் பத்து இலட்ச ரூபாவை வைப்பிலிட உத்தேசித்துள்ளேன். ஐம்பது இலட்ச ரூபாவை வைப்பிலிடுவதே எனது நோக்கம்’’ என்றான் அமுதன்.

அந்நிதியத்தின் தலைவராக விக்னேஸ்வரமூர்த்தியும் செயலாளரான தணிகாசலமும் பொருளாளராக வேலாயுத பிள்ளையும் அமுதனால் நியமிக்கப்பட்டனர்.

அந்நிதியத்தின் தலைவரான விக்னேஸ்வரமூர்த்தி பேசினார்; ‘‘எமது கிராம மக்களுக்கு இன்று பொன்னான ஒரு நாளென்று சொல்லுதல் வேண்டும். எனது மாணவனான அமுதன் அவர்கள் செய்த இவ் உதவி அளப்பரியது. உவர்மண்கிராம மொன்றின் நடுவே நன்னீர்க் கிணறு இருந்தால், அக்கிணற்றின் மூலம் அக்கிராமம் முழுவதும் பயன்படுவது போல அமுதனிடம் உள்ள செல்வம் கிராம மக்களுக்குப் பயன்படப் போகிறது. இந்நிதியம் காலப் போக்கில் வறிய விவசாயிகளுக்கு வட்டியில்லாமல் கடன் வழங்கவும் உத்தேசித்துள்ளது. சுய தொழிலை ஆரம்பிக்க

உள்ளவர்களுக்குத் தேவையான கடனை வழங்க நடவடிக்கை எடுக்கிறது'' என்றார்.

அடுத்துப் பேசிய தணிகாசலம்; ''எல்லோரிடமும் பணம் இருக்கிறது. பொருள் இருக்கிறது; காணி பூமி இருக்கிறது. அப்பணம் பொருள் காணி பூமிகள் யாவும் அவர்களுக்குப் பயன்பட்டால் பிரயோசனமில்லை. அச் செல்வம் ஊருக்குப் பயன்படுதல் வேண்டும். ஊரில் ஒருவனின் பூமியில் நன்நீர்க்கிணறு இருந்தால் அது அவனுக்கு மட்டும் பயன் தராது. ஊரவர் அனைவர்க்கும் பயன் தந்தால் தான் சிறப்பு. அந்த வகையில் அமுதனிடம் உள்ள செல்வம் இன்று ஊர் முழுவதற்கும் பயன் தருவதை நினைக்க மகிழ்ச்சியாக உள்ளது. ஊரவர் யாபேரும் நல்ல முறையில் வாழ வேண்டும் என்று நினைத்தும் செயற்படும் அமுதன் சகல பேறுகளும் பெற்று வாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்'' என்றார்.

திடீரென்று யாரும் எதிர்பாரதவாறு ஸ்ரீனிவாசன் சுவாமிகள் அக் கூட்டத்திற்கு வந்தார்; ''மிகவும் அருமையான உதவி யொன்றை அமுதன் இக் கிராமத்திற்குச் செய்துள்ளார். மக்களில் பெரும்பாண்மையானோர் உபதேசம் செய்வதிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். அடுத்தவர்களுக்கும் நாட்டிற்கும் உதவிகள் செய்வோர் மிகமிகக் குறைந்தளவினரே. இழப்புக்கள் தேடலைக் கொடுக்கும். நன் கொடை புகழையும் வெகுமதியையும் தேடித்தரும். தானியத்தை நாம் விதைக்கிறோம். விதைத்ததை விட பல மடங்கு அறுவடை செய்கிறோம். கிணற்றை இறைத்தால் ஊறுகிறது. உடனே முன்னைய நிலைக்கு நீர் வந்து விடுகிறது. எத்தனை முறை இறைத்தாலும் ஊறாத கிணறுகள் பூமியில் இல்லை, அதே போல் கொடுக்கக் கொடுக்க செல்வம் பெருகுமே தவிர குறைவடையாது. இதை நல்ல முறையில் உணர்ந்தவர்கள் இக்கிராமத்தில் சிலரே வாழ்கிறார்கள். தணிகாசலம் வசதி குறைந்தவன். தன்னால் இயன்றதைத் தினமும் கொடுக்கிறான். ஒரு நாளென்றாலும் அவனுக்கு பணத்திற்கு தட்டுப்பாடேற்பட்டதை நான் அறியவில்லை. அதே போல அமுதன் பெரும் உதவிகள் செய்ய விரும்புகிறார். அவர் செய்வார் அவருக்குப் பணத்திற்குக் குறைவிராது'' என்றார். அமுதன் அவரது பாதங்களைப் பணிந்தான்.

215. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

உலகின் தன்மையை அறிந்து பிறருக்கு மனமுவந்து உதவுவனின் செல்வம், ஊரில் உள்ளவர்கள் அருந்துவதற்கு ஏற்ற நீரை உடைய குளம் நீரால் நிறைந்ததைப் போன்றதாகும்.

## பயன்தருமரம்

அன்று தணிகாசலம் தனது தோட்டத்தில் விளைந்திருந்த வெண்காயத்தை அறுவடை செய்து சாக்கில் நிரப்பிக் கட்டினார். முன்னைய வருடங்களில்

அவர் சாகுபடி செய்த அந்த நிலத்தில் ஐம்பதிற்கும் அறுபதிற்கும் இடையிலான சாக்குகள் தான் நிரம்பும். ஆனால் அன்று இருநூறு சாக்குகள் நிரம்பியும் வெண்காயம் மிகுதியாக இருந்தது. பயிரைப் பார்த்த தணிகாசலம் இம்முறை முன்னைய வருடங்களை விட விளைச்சல் கூடுதலாக இருக்கும் என்று நினைத்தாரே தவிர இப்படி அமோகமாக விளையும் என எதிர் பார்க்கவில்லை. அன்று நாகலிங்கத்தின் தோட்டத்திலும் சிவராசாவின் தோட்டத்திலும் சின்னத்தம்பியின் தோட்டத்திலும் வெண்காயம் அறுவடை செய்யப்பட விருந்தது. அதனால் மணிவண்ணன் இருநூறு சாக்குகள் கொண்டு வந்திருந்தான். அவை பற்றாமையால் கூலியாட்களைச் சாக்குகள் எடுத்து வரும்படி அனுப்பினான். அவன் இப்படியான விளைச்சலை தான் தொழில் செய்த காலத்தில் காணவில்லை. இதை அறிந்த மக்கள் பலர் விளைச்சலைப் பார்ப்பதற்காக தணிகாசலத்தின் தோட்டத்திற்கு வந்தனர்.

''இந்த முறை நல்ல விளைச்சல் ஒருஇலட்சம் ரூபாவுக்கு மேலை மிஞ்சும் மனிசீன்ரை கழுத்திலை தாலிக் கொடியில்லை அஞ்சு பவுணிலை என்றாலும் வாங்கிக் குடு'' என்றார் வேலாயுதபிள்ளை.

''பிள்ளைகள் வளர்ந்திட்டுது இரண்டு குமராயிட்டுது. அதுகளின்ரை பேரிலை வங்கியில் கொஞ்சம் வைப்பிலிடு'' என்றார் தனபாலசிங்கம்.

''தணிகாசலம் அண்ணை பின்னடிக்குக் கொஞ்ச மெண்டாலும் சேமிக்க வேணும். நான் உழைச்சதெல்லாத்தையும் குடிச்சு அழிக்கிற மாதிரி, நீ குடுத்து அழிக்கிறாய். இப்ப என்னட்டைக் காசில்லாதத்தாலை பெருங்கஷ்டப்பர்றன். பாம்பு கடிச்ச போது நான் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமில்லை அதனால் கொஞ்சம் சேமி.'' என்றான் சபாநாயகம்.

''சேமிக்கிறதோ...''? சிரித்தார். சிவசுந்தரமூர்த்தி. மகளுக்குத் திருமணம் முடிந்த பின் அவர் முற்றாகத் திருந்தியமையால் நோய்கள் யாவும் அவரை விட்டுச் சென்று விட்டன தணிகாசலம் கேட்டவைக்கெல்லாம் கொடுத்திடும். நீ தான் பிள்ளை அவதானமாக இருக்க வேண்டும். கொஞ்சக் காசை யெண்டாலும் எடுத்து பிள்ளைகளுக்கு நகை நட்டு வாங்கிப் போடு. தணிகாசலத்தின்ரை கையிலை விட்டியெண்டால் இரண்டொரு நாளிலை பஞ்சாய்ப் பறந்திடும்...'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

தணிகாசலம் தோட்டத்திற்கு வந்த எல்லோருக்கும் வெண்காயம் கொடுத்தார். மணிவண்ணன் ஒன்றரை இலட்ச ரூபா பணத்தை தணிகாசலத்தின் கையில் கட்டாகக் கொடுத்து விட்டு ''எண்ணிப் பாரண்ணை' என்று சொன்னான்.

''இவ்வளவு காலமும் செய்யாத ஒன்றை இப்ப செய்யச் சொல்லுறியள்'' என்ற தணிகாசலம் மணிவண்ணன் கொடுத்த பணத்தில் இருபத்தையாயிரம் ரூபாவை எடுத்து வேலாயுத பிள்ளையிடம் கொடுத்தார்; ''வேலாயுதம் நீ இந்தக் காசைத் தராட்டில் என்னாலை தோட்டம் செய்திருக்க முடியாது'' என்றார்.

வாழ்க்கையில் முதல் முதலாகஅவர் பெருந்தொகையான பணத்தை அன்று பெற்றதால் என்றுமில்லாத மகிழ்ச்சி அவரது மனதில் உண்டானது. மிகுதிப் பணத்தை மனைவியிடம் கொடுத்தார்.

மறு நாள் தணிகாசலம் கணபதி மத்திய மகாவித்தியாலயத்திற்கு கல்வி உபகரணங்களுடன் சென்றார். எல்லாப் பிள்ளைகளுக்கும் அவற்றைக் கொடுக்கும் படி அதிபரிடம் கொடுத்தார். அன்று மாலை நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் பெரிய தொரு பொங்கல் பொங்கினார். அங்கு திரண்டிருந்த அவ்வூர் மக்களுக்கு பொங்கிய பொங்கலையும் பழங்களையும் கொடுத்தார். கோயிலுக்கு வராதவர்களின் வீட்டுக்குப் பிரசாதத்தை அனுப்பினார். என்றுமில்லாத வாறு ஸ்ரீனிவாசன் சுவாமியார் மக்களோடு வந்திருந்து தணிகாசலம் கொடுத்த பிரசாதத்தை வாங்கி உண்டனர். யார் இரந்து கேட்டாலும் உண்ணாத அவர் மக்களுடன் சபையில் இருந்து உணவு உண்டது மக்களுக்கு அதிசயமாக இருந்தது. வீமனும் அவருக்கு அருகில் இருந்து சாப்பிட்டது.

‘‘நல்லவர்களின் கையில் சேரும் செல்வம் நல்ல வழியில் செலவு செய்யப்படும். இது ஊரின் நடுவே உள்ள பயன் நிறைந்த மரம் பழங்கள் பழுத்தாற் போன்றது. கொடை வழங்குவோனின் கையில் சேரும் பணம் அவனுக்கு மட்டும் பயன்படுவதில்லை. ஊருக்கே அது பயன்படும். நோயால் உதவிகள் இன்றி வாடிய பாலசிங்கத்திற்கு தணிகாசலம் மருத்துவச் செலவுக்காகப் பணம் கொடுத்துள்ளான். கணவனை இழந்து கூலி வேலை செய்து தனது பிள்ளைகளைக் கற்பிக்க முடியாது கூலி வேலைகளுக்கு அனுப்பும் இராசலச்சுமிக்குப் பிள்ளைகள் கற்கப் பணம் கொடுத்துள்ளான். வியாபாரத்தால் நட்டமடைந்து தொழிலைக் கைவிட்ட சங்கரலிங்கத்திற்கு தொழில் செய்யப் பணம் கொடுத்துள்ளான். இப்படி உதவ இவ்வூரில் தணிகாசலத்தால் மட்டுமே முடியும். ஒரு காலத்தில் தணிகாசலம் குபேரனாவான்’’ என்றார் சுவாமிகள்.

‘‘எல்லாம் செய்தவன் தனது பிள்ளைகளுக்கு ஒரு நகை வாங்கிக் கொடுத்திருக்கலாம்’’ என்று நினைத்தார் வேலாயுதபிள்ளை.

வேலாயுதபிள்ளை யோசிப்பதைக் கண்ட சுவாமியார் சொன்னார்; ‘‘கவலைப்படாதை வேலாயுதம் அவன்ரை கொடையாலை தான் அவன்ரை பிள்ளைகள் நன்றாக இருக்கின்றன. பட்டணத்தில் நகைக் கடை வைத்திருக்கும் மணிவண்ணன் மனைவிக்குத் தாலிக் கொடியும் பிள்ளைகளுக்கு நகைகளும் கொடுத்துள்ளான். தணிகாசலம் கடனை வைத்திருக்காது கட்டி முடித்து விடும்’’ என்றார்.

வேலாயுதபிள்ளை பூரிப்புடன் சிரித்தார்.

216. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்.

நல்ல பண்புகளை உடைய ஊரோடு ஒத்து நடக்கும் ஒப்புரவாளனிடம் பணம் சேர்ந்தால், அஃது ஊரின் நடுவே உள்ள பயன் மிகுந்த மரம்பழுத்தாற் போன்றது.

## மருந்து மரம்

சிவசுந்தரமூர்த்தி பாலகுமாரனின் மருத்துவ மனைக்குத் துவிச்சக்கர வண்டியில் வந்தார். வெளிநோயாளர் பகுதியின் வெளி விறாந்தையில் நின்ற பாலகுமாரன் சிவசுந்தரமூர்த்தி துவிச்சக்கர வண்டியில் வந்திறங்குவதை அதிசயத்துடன் பார்த்துக் கொண்டு நின்றார்.

“நடக்கக் கூட முடியாது பலவீனப்பட்டிருந்த சிவசுந்தரமூர்த்தி எப்படித் துவிச்சக்கர வண்டியை ஓட்டி வந்தார்?” என்று நினைத்தவாறு நோயாளிகளைப் பரிசோதனை செய்யும் அறைக்கு வந்தார். அவர் அங்கு வர முன்பே சிவசுந்தர மூர்த்தி அவ்வறையில் இருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தார்.

துவிச்சக்கர வண்டியில் வந்திருக்கிறீர்கள். வழியில் ஏதாவது நடந்திருந்தால்...” என்று பாலகுமாரன் பேசிக் கொண்டிருக்கும் போது சிவசுந்தரமூர்த்தி குறுக்கிட்டுச் சொன்னார்; “ நீங்கள் முன்பு என்னைப் பரிசோதனை செய்யும் போதெல்லாம் உங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை. வீணான கற்பனைகளாலும் வேண்டத்தகாத கதைகளாலும் தான் நோய் வாய்ப்பட்டிருக்கிறீர்கள். அவற்றை விலக்கினால் நோய் எல்லாம் மாறி விடும் என்றீர்கள். அதன்படி நடக்க நான் ஆரம்பத்தில் இருந்து எனது நோய்கள் யாவும் மாறிவிட்டன. அதைப் பரிசோதனை செய்யத்தான் நான் இங்கு வந்தேன்” என்றார்.

பாலகுமாரன் சிவசுந்தரமூர்த்தியைப் பரிசோதனை செய்தார். சகல பரசோதனைகளையும் செய்தார். அவரது உடல் நிலை சீராக இருந்தது. எவ்வித குறைகளையும் அவரால் கண்டு கொள்ள முடியவில்லை.

“இப்படியே இருந்தீர்களானால் உங்களுக்கு எந்த விதமான பாதிப்புக்களும் இராது. தினமும் மூன்று வேளை சாப்பிடும் மருந்தை இரண்டு வேளையாகக் குறையுங்கள்” என்றார் பாலகுமாரன்.

“நான் மகளின் திருமணத்திற்குப் பின்பு மருந்து சாப்பிடுவதை நிறுத்தி விட்டேன். கடந்த மூன்று மாதங்களாக நான் மருந்து சாப்பிடவில்லை. முன்பென்றால் மருந்து சாப்பிட்ட பின்பும் உடல் வேதனையைத் தரும். இப்பொழுது ஒன்றும் இல்லை; “தீர்மானிக்கப்பட்டது தான் வாழ்வு. எமது வாழ்வைப் பற்றித் தீர்மானிப்பவன். தீர்மானிப்பதை விட அணுவளவு கூட கூடவோ, குறையவோ நடக்க மாட்டாது. தீர்மானிக்கப் பட்டது தீர்மானிக்கப்பட்டது போலவே நடக்கும். உன்னால் எதையும் செய்ய முடியாது. அதே போல் தீர்மானிக்கப்பட்டதை மாற்றவும் முடியாது. நீ

எதற்காகத் துன்பப்படுகிறாய். துன்பப்படுவதன் மூலம் துன்பத்தின் சுமையை உன்னால் குறைக்க முடியுமா...? நீ எதைச் செய்தாயோ அது உனக்குக் கிடைத்தே தீரும். நீ எதைக் கொடுத்தாயோ அது அப்படியே உன்னை வந்தடையும். செய்யாதது வராது. கொடுக்காதது கிடைக்காது. இரவல் பொருள் உன்னிடம் ஒரு போதும் தங்க மாட்டாது. உனது பொருள் வேறு யாருக்கும் உருத்தாக மாட்டாது. என்று சுவாமிகள் கூறுவது உண்மை என்பதை நான் புரிந்து கொண்ட பின் என்னிடம் உள்ள தீய குணங்கள் யாவும் விலகி விட்டன. அதோடு நோயும் விலகி விட்டது'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

பாலகுமாரன் சிரித்தார்; ''உங்களது தந்தையார் சிங்கப் பூரில் இருந்து வந்து இந்தக் கிராம மக்களுக்கு எவ்வளவு உதவிகளைச் செய்தார். நீங்களும் உங்கள் சகோதரனும் வைத்தியர்கள். உங்கள் தந்தையார் ஆசிரியராகப் பணிபுரியா விட்டாலும் தான் சிங்கப்பூரில் கற்ற ஆங்கிலத்தையும் கணிதத்தையும் இங்குள்ள எத்தனை பேருக்குக் கற்பித்திருப்பார். அதனால் இன்று எத்தனையோ பேர் நன்றாக இருக்கிறார்கள் தான் கமம் செய்து தேடிய பணத்தைக் கிராம மக்களின் நிலை அறிந்து செலவு செய்தமையால் கிராம மக்கள் பலர் பல வழிகளிலும் முன்னேறியுள்ளனர். செல்வமானது நல்லவன் ஒருவனிடம் சேருமானால் எல்லா உறுப்புக்களும் மருந்தாகிப் பயன் தரும் மரத்தைப் போல் பயன் தரும். வேப்ப மரத்தின் இலை, பட்டை, தண்டு, வேர், பூ, காய், பழம், விதை என அதன் எல்லாப் பாகங்களும் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் மருந்தாகப் பயன்படுவதைப் போல உமது தந்தையாரின் சகல செல்வங்களும் மக்களுக்கு பயன்பட்டன'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

பாலகுமாரனுக்கு அதைக் கேட்ன மகிழ்ச்சியாக இருந்தது.

''மனிதனாகப் பிறந்தவன் உயிர்களுக்குச் சேவை செய்தல் வேண்டும். மனித உயிர்கள் மட்டும் தான் உயிர்களல்ல விலங்குகளும் பறவைகளும் உயிர்களே. எமது சமயப்படி ஒரு காலத்தில் அவை யாவும் மனிதர்களாகவும் இருந்திருக்கலாம். எனவே அவற்றையும் வருத்தக்கூடாது'' என்று பாலகுமாரனின் தந்தையார் வழியில் அனாதரவாக நின்ற ஒரு பூனைக் குட்டியை வீட்டுக்குக் கொண்டு வந்த போது கூறிய வார்த்தைகள் பாலகுமாரனின் காதில் ஒலித்தன.

''சரி நான் வரப் போறன். நீங்களும் உங்கள் தந்தையாரைப் போலவே சேவை செய்கிறீர்கள'' என்றவாறு எழுந்து சென்றார் சிவசுந்தரமூர்த்தி.

217. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

பெரும் நற்குணங்களை உடைய ஒப்புரவாளனிடம் செல்வம் சேர்ந்தால், அது எல்லா உறுப்புக்களும் மருந்தாகிப் பயன்படத் தவறாத மரத்தைப் போன்று பயன்படும்.

# தளதாரார்

தணிகாசலம் வெங்காயம் விற்றதன் மூலம் சம்பாதித்த முழுப்பணத்தையும் செலவு செய்து விட்டார். அவரிடம் தற்பொழுது ஒரு கொத்து அரிசி வாங்குவதற்குக் கூடப் பணம் இருக்கவில்லை. தணிகாசலத்தின் கையில் பணமிருந்தால் தங்கமாட்டாது. என உணர்ந்த மணிவண்ணன் அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நகைகள் கொண்டு வந்து கொடுத்து விட்டான். அதனால் மணிவண்ணனுக்கு எழுபத்தையாயிரம் ரூபாவைக் கொடுத்து விட்டார். இன்னும் நகைக்காக முப்பதினாயிரம் ரூபா மணிவண்ணனுக்குக் கொடுத்தல் வேண்டும். அது அவருக்கு ஒரு பெரும் சுமையாக இருந்து மனதை அரித்துக் கொண்டு இருந்தது. அதனால் நகை ஒன்றைத் திருப்பிக் கொண்டு சென்று மணிவண்ணனிடம் கொடுத்தார்; ‘‘அண்ணை என்னால் கொடுக்க மட்டும் தான் முடியும். திருப்பிப் பெற முடியாது. நகையைக் கொண்டு போங்கோ காசு வாற நேரம் தாருங்கோ. எனக்கு அவசரமில்லை’’ என்றான் மணிவண்ணன்.

‘‘கடன்படுவதை நினைக்க இருதயம் வெடித்து விடும் போல் இருக்கிறது. என்னிடம் காசு வாறநேரம் வாறன் நகையைத் தாருங்கோ’’ என்றார் தணிகாசலம்.

‘‘இல்லை இல்லை நான் கொடுத்ததைத் திருப்பி வாங்க மாட்டன் கொண்டு போங்கோ’’ என்றான் மணிவண்ணன். தணிகாசலம் ஏதோ பேச முயன்றார்; ‘‘அண்ணை என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும். இப்ப தந்திட்டுப் போனியள் என்றால் இனிமேல் கடன் என்று கேட்டு என்னிடம் வரக்கூடாது’’ என்றான் மணிவண்ணன். தணிகாசலத்தால் எதுவும் பேசமுடியவில்லை. மனச் சஞ்சலத்துடன் வீட்டுக்கு வந்தார். அவர் வீட்டுக்கு வந்த போது மருத்துவக் கல்லூரியால் வந்திருந்த அவரின் மகன் சொன்னான்; ‘‘அப்பா புத்தகம் ஒன்று வாங்க வேண்டும். பத்தாயிரம் ரூபா அந்தப் புத்தகத்தின் விலை’’.

தணிகாசலம் அதை அந்த நேரம் எதிர்பார்க்கவில்லை; ‘‘எப்ப வாங்கப் போறாய்?’’ என்று கேட்டார்.

‘‘காசைத் தந்தால் நாளைக்கே வாங்கலாம்’’.

‘‘சரி நாளைக்குத் தாறன்’’ என்ற தணிகாசலம் என்ன செய்யலாம் என்று யோசித்தார். அப்பொழுது சபாநாயகத்தின் தந்தை தர்மரட்ணம் அங்கு வந்தார்; ‘‘தணி, பேர்த்திக்கு கலியாணம் முற்றாய்ப் போய்ச்சு, நல்ல இடம்; மாப்பிளை கமம் தான் செய்கிறார்; நல்ல பையன்; குடிவெறியில்லை; நல்ல உழைப்பாளி. இதைத் தவற விட எனக்கு விருப்பமில்லை. சபாநாயகம் இவ்வளவு நாளும் குடிச்சுப் போட்டு ஊரவையோடை சண்டை பிடிச்சுக் கொண்டு திரிந்தவனே தவிர உருப்படியாய் ஒன்றும் செய்யேல்லை.

வோலாயுதம் தான் பேசினது; சீதனமாய் இரண்டு இலட்ச ரூபா காசும், போதியளவு நகையும் குடுக்கிறதாய் வோலாயுதத்தின்ரை மகன் சொல்கிறான். கைச் செலவுக்கு ஒன்றுமில்லை. அதை எப்படி வேலாயுதத்திட்டைக் கேட்கிறது. அது தான் உங்களிட்டை வந்தனான். பதினையாயிரம் ரூபா தந்தியளென்றால் ஆடீலை தாக்கிற வெண்காயத்தைக் கிழப்பி வித்துப் போட்டுத் தந்திடுவன். அதைச் சாட்டி மணிவண்ணனைக் கேட்கலாம். ஆனால் மணிவண்ணனிட்டை முந்திப்பட்ட கடன் கொஞ்சம் இருக்கு. அதோடை எங்களை நம்பி ஊரிலை ஆரும் கடன் தரமாட்டினை'' என்றார் தர்மரட்ணம்.

தணிகாசலம் எதுவும் பேசமுடியாது சில கணங்கள் சிலையாக நின்றார். யாரிடமும் போய்க் கடன் கேட்க முடியாதளவிற்கு வெண்காயம் விற்றாயிற்று. வேலாயுதத்திடமோ அல்லது தனபாலசிங்கத்திடமோ கடனுக்குச் சென்றால் வெண்காயம் விற்ற கணக்குக் கேட்பார்கள். சிவசுந்தரமூர்த்தியிடம் கேட்கலாம். அவன் திருந்தி விட்டதாக நடிக்கிறானோ தெரியாது. என்று யோசித்த தணிகாசலம் கணேசமூர்த்தியிடம் கேட்டுப் பார்க்கலாமென நினைத்தார்.

''என்ன யோசிக்கிறியள்''

''ஒன்றுமில்லை'' பின்நேரம் வாருங்கோ'' என்றார் தணிகாசலம்.

தணிகாசலம் கணேசமூர்த்தியிடம் சென்று நிலைமையைக் கூறி இருபத்தையாயிரம் ரூபா வாங்கி வந்து தர்மரட்ணத்திற்கும் மகனிற்கும் கொடுத்தார்.

''வெண்காயம் வித்தால் மற்றவை காணி பூமி வாங்குவினை, நகை நட்டு வாங்குவினை. இல்லாட்டில் வட்டிக்குக் குடுப்பினை. நீங்கள் வெண்காயத்தை வித்துப் போட்டு பள்ளிக்கூடப் பொடியளுக்கு உபகரணம் வாங்கிக் கொடுக்கிறியள். மகா கணபதிக்குப் பொங்கினியள். இல்லாதவைக்குக் குடுக்கிறியள், உங்களைப் போல மனிசர் நாலு பேர் வாழ்ந்தால் பூமி சொர்க்கமாயிடும்'' என்று கூறி விட்டு நடந்தார் தர்மரட்ணம்.

218. இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடன்அறி காட்சி யவர்.

பிறருக்கு உதவி செய்வதையே நோக்காகக் கொண்ட அறிவு படைத்தோர், தம்மிடம் செல்வம் இல்லாத போதும் உதவி செய்யத் தவற மாட்டார்கள்.

## வறுமை

நாராயணமூர்த்தி தணிகாசலத்தைத் தேடி வந்தான். நாராணயமூர்த்தி மிகவும் ஏழ்மையானவர். ஐந்து பிள்ளைகளின் தந்தை. காணி பூமி

இல்லாதவர், பெரும் நிலச் சுலாந்தனான கணேசமூர்த்தியின் காணியை குத்தகைக்கு எடுத்து அதில் வீடு கட்டி வசிப்பவன்.

நாராயணமூர்த்தி ஏழை யென்றாலும் நேர்மையானவன். பிறரிடம் இரந்து வாழப் பிரியமில்லாதவன். அயலவர்கள், நண்பர்களிடம் கடன் வாங்கினாலும் குறித்த தவணையில் கொடுத்து விடும் இயல்புடையவன். அவனது மூத்த மகன் கஜேந்திரகுமாரன் கா.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்பவன் திடீரென்று அவனை செங்கமாரி நோய் தாக்கி விட்டது. அந்நோய்க்குக் கிராமத்தில் உள்ள மக்கள் சுதேச வைத்தியமே செய்வார்கள். அவ்வூரில் வாழும் சாரதாதேவி என்பவள் செங்கமாரி நோய்க்கு வைத்தியம் செய்வதில் கெட்டிக்காரி. அத்துடன் அவள் இலவசமாகவே வைத்தியம் செய்து வந்தாள். ஊரவர்கள் எல்லோரும் அவனிடமே வைத்தியம் செய்து வந்தனர்.

நாராயணமூர்த்தி கஜேந்திரகுமாரை சாரதாதேவியிடம் கொண்டு சென்றார். கண்கள் உட்பட உடலெங்கும் மஞ்சள் நிறமாகக் காணப்பட்ட போதும் கஜேந்திர குமாரை செங்கண்மாரி நோய் தாக்கவில்லை என்பதை சாரதாதேவி கண்டு கொண்டாள். அதனால் அவள் கஜேந்திர குமாரை நகரில் உள்ள பெரியஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுமாறு கூறினாள்.

நாராயணமூர்த்தி, கஜேந்திரகுமார் நோயாளியானதும் அவனைக் கவனிப்பதில் அக்கறையாக இருந்தமையால் அவரால் வேலைக்கு ஒழுங்காகச் செல்ல முடியவில்லை. அதனால் அன்றாட உணவுக்கே கஷ்டப்பட்டார். இந்நிலையில் பட்டணத்து ஆஸ்பத்திரிக்கு மகனைக் கொண்டு செல்லச் சொன்னதும் அவர் தனது மகனுக்கு ஏதோ பெரியதொரு வருத்தம் வந்து விட்டதென்று கலங்கினார். வறுமையாக இருந்த போதும் இரப்பதை அவர் விரும்புவதில்லை. உதவி செய்வோர் பலர் அவ்வுதவியைச் சாட்டாக வைத்து வேலை வாங்க முயற்சிப்பதுண்டு. நேரமில்லாவிட்டாலும் அவர்கள் கூறும் வேலைகளைச் செய்யாமல் விட்டால் அவர்கள் ஏதாவது நினைத்து விடுவார்களோ என்ற பயம் நெடுநாட்களுக்கு அவரின் மனதை விட்டு அகலாது மனதை அரித்துக் கொண்டிருக்கும். அதனால் அவர் யாரிடமும் காரணமின்றி உதவி கோருவதில்லை.

தணிகாசலம் மிகவும் நல்லவர் அத்துடன் நாராயணமூர்த்தியின் நண்பர். நாராயணமூர்த்தியின் குடும்ப நிலையை அறிந்தவர். நாராயணமூர்த்தி கேளாமலே நிலைமை அறிந்து உதவி செய்பவர். கஜேந்திரகுமார் நோயாளியான பின்பு பலமுறை பொருட்களாகவும் உதவி செய்தவர். அதனால் நாராயணமூர்த்தி தணிகாசலத்திடம் வந்தார்; ‘‘அண்ணை எனது மகனின் நோயை நினைக்க எனக்குப் பயமாக உள்ளது. மூத்த பிள்ளை. அத்துடன் படிப்பில் கெட்டிக் காரன். அவன் தலை நிமிர்ந்தால் எனது குடும்பம் தலைநிமிரும் என்று நினைத்திருந்தேன்..’’ அழுதார் நாராயணமூர்த்தி.

‘‘துன்பமான வேளைகளில் தான் மனிதன் துணிவுடன் இருத்தல் வேண்டும். மனம் சோர்ந்தால் உடலும் சோர்ந்து விடும். நேற்று மகா கணபதிக்கு நான் கஜேந்திரனின் பெயரில் அர்ச்சனை செய்தனான். குருக்கள் சாதகம் பார்த்ததாகச் சொன்னார். பயப்படும் படியாக ஒன்றும் நடக்காது. அட்டமத்து

சனி என்பதால் உலைக்கும் என்றார். குருக்கள் சொன்னால் பயப்படத் தேவை இல்லை. துணிவோடை இரு'' என்றார் தணிகாசலம்.

''அந்தத் துணிவிலை தான் அண்ணை நான் உயிர் வாழுறன். இப்ப அவசரமாக எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்.... சாரதாதேவி தம்பிக்கு செங்கமாரி இல்லையாம் பெரியாஸ்பத்திரிக்கு அவனை உடனை கொண்டு போகட்டாம் என்னட்டை ஒரு சதமும் இல்லை அதுதான் வந்தனான்..''

தணிகாசலம் ஆடிப் போனார். அவரிடம் தற்பொழுது ஒரு சதம் கூட இல்லை. சென்ற வாரம் ஒன்றரை இலட்ச ரூபாவுக்கு வெண்காயம் விற்றனான். யாரிடமாவது கடன் கேட்டால் பரிகசிப்பார்கள். என்ன செய்யலாமென்று யோசித்தார்.

''எனக்கு யாரிடமும் உதவி கேட்க விருப்பமில்லை. என்னைப் பற்றி நீங்கள் தெரிந்தனீங்கள் அதாலை தான் வந்தனான்''

அடிக்கடி விக்னேஸ்வரமூர்த்தி தணிகாசலத்திற்குக் கூறும் வார்த்தைகள் அவரது காதில் ஒலித்தன; ''தானதர்மம் செய்யும் ஒப்புரவாளன் வறுமை அடைதல் என்பது, அவன் முக்கியமான வேளைகளில் கொடுக்கப் பணம் இல்லாமல் போவதுதான். அதனால் எவ்வேளையிலும் சேமிப்பாக கொஞ்சப் பணத்தை வைத்திருத்தல் வேண்டும்''.

'நீங்கள் கஜேந்திரகுமாரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கோ நான் பணத்துடன் ஆஸ்பத்திரிக்கு வாறன்.''

நாராயணமூர்த்தி சிலகணங்கள் தாமதித்தார். பின்பு தணிகாசலத்தின் முகத்தைப் பார்த்தார். தணிகாசலத்திற்கு அவரின் செயல் கவலையை அளித்தது. ஆபத்தான வேளையில் கேட்ட உதவியைச் செய்ய முடியவில்லையே என வருந்தினார்.

''நீ வீட்டை போ. நான் வாறன்'' என்று கூறிவிட்டு அவரின் பதிலை எதிர்பாராமல் நடந்தார்.

தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்தித்துப் பணம் கேட்பதற்காகப் பாடசாலைக்குச் சென்றார். விக்னேஸ்வரமூர்த்தி கல்வித் திணைக்களத்திற்குச் சென்று விட்டதாக ரவீந்திரன் கூறினான். அதனால் அவர் வேலாயுதபிள்ளையைத் தேடிச் சென்றார். வேலாயுதபிள்ளையும் தனபாலசிங்கமும் பட்டணத்திற்குச் சென்று விட்டதாக வேலாயுதபிள்ளையின் மனைவி கூறினாள். அதனால் அவர் கணேசமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றார். கணேசமூர்த்தியும் அங்கு இருக்கவில்லை.

தணிகாசலம் பணத்திற்கு அன்று போல் ஒரு நாளும் கஷ்டப்படவில்லை. தனது விதியை நொந்தவாறு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி

ஆலயத்திற்குச் சென்றார். என்றுமில்லாதவாறு அரசமரநிழலில் ஸ்ரீனிவாசன் சுவாமிகள் இருந்தார். அவரின் அருகே தணிகாசலம் சென்றார்.

“என்றுமில்லாதவாறு உனது முகம் வாடிச் சோர்ந்திருக்கிறது. வெண்காயம் விற்ற பணம் முழுவதும் செலவாகி விடடதையும், நீ பலரிடமும் கடன் வாங்கி உதவி செய்தமையும் யாரும் அறிந்திருக்க நியாயமில்லை. தற்பொழுது யாரோ உதவி கோரி வந்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப் பணம் இல்லை யென்று தானே கவலைப்படுகிறாய். இந்தா இதைக் கொண்டு சென்று கொடு” எனக் கை நீட்டினார் சுவாமியார்.

தணிகாசலம் எதுவும் பேசாது இரு கைகளையும் நீட்டினார். ஸ்ரீனிவாசன் சுவாமியார் ஒரு பொட்டலத்தைக் கொடுத்தார். அதைப் பிரித்துப் பார்க்காது நாராயணமூர்த்தியின் வீட்டுக்குச் சென்ற தணிகாசலம், தனது நிலையைப் பற்றிக் கூறி சுவாமியார் கொடுத்த பொட்டலத்தைக் கொடுத்தான். அதற்குள் பெரும் தொகையான பணமும் திருநீறும் இருந்தது. வாழ்க்கையில் தன்னால் அவசியமான ஒரு காரியத்திற்கு உதவ முடியவில்லையே என்ற கவலை தணிகாசலத்திற்கு ஏற்பட்டது.

219. நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு.

பிறரின் தேவையை அறிந்து உதவும் நற்பண்பாளன், உரிய நேரத்தில் உதவ முடியாத நிலை ஏற்பட்டால் அது தான் அவனது வறுமை ஆகும்.

## விற்று வாங்கு

தணிகாசலமும் வேலாயுத பிள்ளையும் மணிவண்ணன் நிறுத்து வைத்திருந்த சங்கரப்பிள்ளையின் வெண்காய மூட்டைகளை நிறுத்துப் பார்க்கவென தராசுடன் சங்கரப்பிள்ளையின் தோட்டத்திற்கு வந்தனர்.

அன்று காலை தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்த இராமநாதன் சொன்னான்; “தணியண்ணை இப்ப கொஞ்ச நாட்களாக மணிவண்ணன் பிழை விடுகிறான் போலத் தெரிகிறது. போன கிழமை நான் அறுபது சாக்குகளில் உருளைக்கிழங்கை நிரப்பி வைத்திருந்தனான். தொண்ணூறு அந்தருக்கு மேலை வரவேண்டும் ஆனால் எண்பத்தெட்டு அந்தர் தான் வந்தது. என்றாலும் நான் பெரிதாக எடுக்கவில்லை. நேற்று நான் சிவராசாவின்ரை தோட்டத்திலை நிரப்பி வைத்திருந்த பயறை நிறுத்துப் பார்த்தனான். நாலரை அந்தரும் பத்து இறாத்தலும் வந்தது. ஆனால் மணிவண்ணன் நிறுத்த போது நாலே கால் அந்தரும் எட்டு இறாத்தலும் வந்ததாம். இரண்டு தராசுக்கு மிடையிலை முப்பது இறாத்தல் வேறுபடுகிறது. தராசு பிழை என்றாலும் இவ்வளவு வித்தியாசமிராது” என்றான் இராமநாதன்.

மணிவண்ணன் நேர்மையானவன். என்றாலும் இராமநாதன் கூறுவதை அலட்சியம் செய்யக் கூடாது என்று நினைத்து வேலாயுதபிள்ளையையும் அழைத்துக் கொண்டு சங்கரப்பிள்ளையின் தோட்டத்திற்கு வந்தார் தணிகாசலம். வேலாயுதபிள்ளைக்கு மணிவண்ணனின் மேல் நம்பிக்கை இருந்தமையால் அவர் இராமநாதன் சொன்னதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதை தணிகாசலத்திடம் சொன்னார்.

‘‘வேலாயுதம் ஒரு குற்றச் சாட்டு வந்தால் அது சரியோ பிழையோ என்று அறிந்து கொள்வது நல்லவர்களுடைய கடமை. மணிவண்ணன் மீது பொய்யாக குற்றம் கூறுபவர்களை நம்ப வைத்தல் வேண்டும். அத்துடன் நாம் நடவடிக்கை எடுக்காமல் விட்டால் குற்றம் சாட்டியவன் நாமும் மணிவண்ணனுடன் சேர்ந்து குற்றம் செய்வதாக நினைப்பான். இல்லாவிட்டால் மணிவண்ணனுக்கு உதவுவதாக நினைப்பான். எனக்கும் மணிவண்ணன் மீது நம்பிக்கை இருக்கிறது. நாம் மணிவண்ணன் குற்றமற்றவன் என்று நிரூபிப்பதற்காக நிறுத்துப் பார்ப்போம்’’ என்றார். வேலாயுதபிள்ளை மனமின்றி தணிகாசலத்துடன் வந்தார்.

சங்கரப்பிள்ளையின் வெண்காயத்தை நிறுத்துக் குறித்துக் கொண்ட தணிகாசலம் வீட்டுக்குச் சென்று விட்டார். இரவு தணிகாலத்தின் வீட்டுக்கு வந்த சங்கரப்பிள்ளை மணிவண்ணன் நிறுத்த நிறையின் அளவைச் சொன்னான். தணிகாசலத்தின் நிறைக்கும் மணிவண்ணனது நிறைக்கும் இடையில் ஐம்பது இறாத்தல் வித்தியாசமிருந்தது. தணிகாசலம் திகைத்துப் போனார். அவரால் அதை நம்ப முடியவில்லை அதனால் வேலாயுதபிள்ளையின் வீட்டுக்குச் சென்றார்.

வேலாயுதபிள்ளையின் வீட்டில் கணேசமூர்த்தி இருந்தான். மூவரும் மணிவண்ணனது வீட்டுக்குச் சென்றனர்.

மணிவண்ணன் அவர்களை மகிழ்வுடன் வரவேற்றான். கலகலப்பாகக் சிரித்துக் கதைக்கும் தணிகாசலம் அன்று கவலையுடன் இருந்தது மணிவண்ணனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

‘‘ஒரு கவலைக்குரிய பிரச்சினையோடு வந்திருக்கிறம். நாங்கள் மட்டுமில்லை ஊரவர்கள் கூட சந்தேகப்படுகிறார்கள்’’ என்று கூறிய தணிகாசலம் நடந்த சம்பவம் முழுவதையும் விபரமாகக் கூறினார்.

மணிவண்ணன் திகைத்துப் போனான். அவனால் துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. விளை பொருட்களை நிறுக்கும் தராசை எடுத்து வந்து பரிசோதித்துப் பார்த்தான். அது சரியாக வேலை செய்தது.

‘‘அண்ணை நீங்கள் சொல்வதைக் கேட்க எனக்கு அவமானமாக இருக்கிறது. ஐம்பது இறாத்தல் குறைவடைவதென்பது மன்னிக்க முடியாதது. என்ன நடைபெற்றது எனத் தெரியவில்லை. எனக்கு இருக்கிற பணம் போதும் விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்பதற்காகத்தான் நான் தொழில் செய்கிறேன். அதனால் துன்பம் வந்ததை என்னால் பொறுத்துக் கொள்ள

முடியவில்லை. எனினும் நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க வேண்டும்'' என்று அழுதான் மணிவண்ணன்.

''விவசாயிகளுக்கு உதவுவதற்காகத் தொழில் செய்து அவமானப்பட்ட நீங்கள் அந்த அவமானத்தை நீக்குவதோடு, தொடர்ந்தும் பிறருக்கு உதவும் பேராண்மையைக் கைவிடக் கூடாது. எனக்கு உங்களின் மைத்துனனின் மேல் சந்தேகமாக உள்ளது. அவன் சில சமயம் உங்களது தொழிலாளிகளில் முக்கியமானவனை விலைக்கு வாங்கியும் இருப்பான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''எனக்கு மிகவும் விசுவாசமான இரத்தினசிங்கத்தைத் தான் நான் தராசில் நிறுத்து ஏற்றுவதற்கு பொறுப்பாக வைத்துள்ளேன். அவனில் எனக்கு நம்பிக்கை இருக்கு'' என்றான் மணிவண்ணன்.

''நம்பிக்கை வைக்காமல் வாழ முடியாது. அதீத நம்பிக்கையும் கேட்டைத் தரும். எனவே விசாரித்துப் பாருங்கள்'' என்று கூறி விட்டு மூவரும் சென்று விட்டனர்.

மணிவண்ணன் மறு நாட்காலை வெண்காயம் நிறுத்துப் பாரவண்டியில் ஏற்றும் தொழிலாளர் அனைவரையும் அழைத்துச் சொன்னான்; ''சில நாட்களாக நாவலடிக் கிராம மக்களின் தோட்டங்களில் விளையும் பொருட்களை நிறுத்து வாங்குவதில் சில ஒழுங்கீனங்கள் நடைபெற்றுள்ளதாக தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் கணேசமூர்த்தியும் வந்து சொல்லி விட்டுச் செல்கின்றனர். நான் நேர்மையாக வாழவே விரும்புகிறேன். கள்ள வேலைகள் செய்து சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை. விவசாயிகளுக்கும் எனது தொழிலாளர்களுக்கும் உதவி செய்வதற்காகவே நான் தொழில் செய்கிறேன். உதவி செய்வதன் மூலம் அவமானம் வருமென்று கண்டால் அத்தொழிலைக் கைவிட வேண்டியது தான். இனிமேல் நான் விவசாயிகளிடமிருந்து விளை பொருட்களைக் கொள்வனவு செய்வதில்லை என முடிவு எடுத்து விட்டேன். மூன்று மாதங்களுக்கான வேதனத்தை உங்களுக்குத் தருகிறேன். நீங்கள் வேறு தொழில் பாருங்கள்'' என்றான் மணிவண்ணன்.

தொழிலாளர்கள் கவலையுடன் கூடி இருந்தனர்; ''இரத்தினசிங்கத்தில் முதலாளி அளவுக்கதிகமாக நம்பிக்கை வைத்திருக்கிறார். அவன் முதலாளியின் மைத்துனனோடு சேர்ந்து செய்த களவிற்காக நாம் ஏன் பாதிக்கப்பட வேண்டும். தொழிலைத் தேடலாம். களவு செய்தோம். என்ற அவமானத்தை நீக்க முடியாது அதனால் நான் முதலாளிக்கு யாவற்றையும் கூறப் போகிறேன்'' என்ற பரமலிங்கம் மணிவண்ணனுக்கு எல்லாவற்றையும் கூறினான்.

மறுநாள் மணிவண்ணன் தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்று சொன்னான்; ''நான் நம்பியிருந்த இரத்தினசிங்கம் தான் எனது பெயரைக் கொடுத்தவன்.

அதனால் இனியாரையும் நான் நம்ப மாட்டேன். இனிமேல் நான் தொழில் செய்ய விரும்பவில்லை''.

''ஒருவருக்கொருவர் உதவுவதால் துன்பம் வரும் என்றால் அத்துன்பத்தைத் தன்னை விற்றாவது நீக்க வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அத்துடன் தன்னை இழந்தாலும் பிறருக்கு உதவும் தன்மையை இழக்கக் கூடாது. எனவே பிறருக்கு உதவுவதற்காக நீங்கள் செய்யும் தொழிலைக் கைவிட்டால் அதனால் எவ்வளவு மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே தயவு செய்து தொழிலைக் கைவிடாதீர்கள். நீங்கள் தொழிலைக் கைவிட்டால் அது எதிரிகளுக்கு வாய்ப்பாகி விடும்'' என்றார் தணிகாசலம். மணிவண்ணன் தொடர்ந்து தொழில் செய்ய ஒப்புக் கொண்டான்.

220. ஒப்புரவி னால்வரும் கேடுஎனின் அ∴தொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து.

பிறருக்கு உதவும் ஒப்புரவாகிய நற்பண்பால் ஒருவனுக்குக் கேடுவரு மென்றால், அக்கேட்டை ஒருவன் தன்னை விற்றாவது வாங்கிக் கொள்ளும் தகுதி உடையதாகும்.

## ஈகை

பங்குனி மாதம் இருபத்தைந்தாம் திகதி அன்று விக்னேஸ்வரமூர்த்தியின் ஐம்பத்தியாறாவது பிறந்த நாள். என்றுமில்லாதவாறு அம்மாதச் சதுர்த்தியும் அன்றைய தினம் வந்து விட்டது. அதனாலும் தனது ஓய்வு பெறும் வயதெல்லையின் தொடக்கத்தில் இருப்பதாலும் அன்றைய தினத்தை நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் கொண்டாட விரும்பினார். விக்னேஸ்வரமூர்த்தி.

அன்று நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் விசேட பூசைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அன்னதான மடத்தில் மதிய உணவிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதுவரை காலமும் விக்னேஸ்வரமூர்த்தி கோயிலுக்கும் தனக்கும் செய்த சேவைகளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று இராஜசங்கரக் குருக்கள் நினைத்திருந்தார். அதனால் மகா கணபதியை என்றுமில்லாதவாறு அலங்கரித்திருந்தார். அத்துடன் அன்னதான மடத்தில் நடைபெற்ற சமையலை தானே முன் நின்று கவனித்தார்.

அன்று கோயிலுக்கு வந்திருந்த அனைவர்க்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. எல்லோரும் உணவு உண்ட பின்பு விக்னேஸ்வரமூர்த்தி அன்னதான மடவாசலில் வந்து அமர்ந்தார். அவரின் அருகே மணிவண்ணன் கொண்டு வந்து வைத்த பெட்டிகள் பல இருந்தன. அன்று அடியவர்களுடன் இருந்து உணவு அருந்திய ஸ்ரீனிவாசன் சுவாமிகள் விக்னேஸ்வரமூர்த்தியின் அருகே வந்து அமர்ந்தார். பெட்டியைத் திறந்து வேட்டியையும் சால்வையையும் எடுத்த விக்னேஸ்வரமூர்த்தி சுவாமிகளின் பாதங்களில்

வீழ்ந்து வணங்கி விட்டு அவரது மடியில் வேட்டியையும் சால்வையையும் வைத்தார்.

சுவாமிகள் புன்முறுவல் செய்தார். அவர் இது நாள் வரையும் யாரிடமும் அங்க வஸ்திரங்களைப் பெற்றதில்லை. பலர் வற்புறுத்திக் கொடுத்தாலும் அவர் அவற்றை வாங்க மாட்டார்.

சுவாமியார், தனக்கு விக்னேஸ்வரமூர்த்தி கொடுத்த வேட்டியையும் சால்வையையும் எடுத்துக் கொண்டு உள்ளே சென்று, அதை அணிந்து கொண்டு வெளியே வந்து மீண்டும் விக்னேஸ்வரமூர்த்தியின் அருகில் அமர்ந்து கொண்டார். அவரை மக்கள் அதிசயத்துடன் பார்த்தனர்.

மக்கள் எல்லோரும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய அன்னதானமட மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். விக்னேஸ்வரமூர்த்தி அங்கிருந்த ஏழை மக்களில் ஆண்களுக்கு வேட்டியும் சால்வையும் கொடுத்தார். பெண்களுக்கு சேலையும் சட்டையும் கொடுத்தார்.

‘‘இன்று எனது பிறந்த தினம். இது நாள் வரை நான் எனது பிறந்த தினத்தைக் கொண்டாடியதில்லை. இன்று நான் பிறந்த தினத்தைக் கொண்டாட வேண்டு மென எனது குடும்பத்தினர் விரும்பியமையால் கோயிலில் இன்று கொண்டாடுகிறேன். எந்தவொரு விழாவை நாம் கொண்டாடினாலும் அதைப் பிரயோசனமுள்ளதாகக் கொண்டாட வேண்டுமென்று நினைப்பவன் நான். அதனால் இன்று ஏழை மக்களுக்கு என்னால் இயன்ற அன்பளிப்புப் பொருட்களைக் கொடுத்தேன். எனது நண்பர்கள் உறவினர்கள் எவருக்கும் நான் சொல்லவில்லை’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

ஸ்ரீனிவாசன் சுவாமிகள் விக்னேஸ்வர மூர்த்தியை ஆசீர்வதித்தார்; ‘‘வறியவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படும். மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது. இன்று அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி யாரும் அறியாதவாறு தனது பிறந்த தினத்தை தனது குடும்பத்தினரின் விருப்பத்திற்கிணங்க வித்தியா மகா கணபதி ஆலயத்தில் கொண்டாடினார். நாம் எமது வீட்டில் நடைபெறும் விழாக்களின் போது அன்பளிப்புப் பொருட்களை கொடுத்து வாழ்த்துகிறோம். அன்பளிப்புப் பொருட்களைக் கொடுக்கும் போது மீளவும் அதை நாம் எதிர்பார்க்கக் கூடாது. இப்படி எதிர்பாராதோர் இங்கு யார் இருக்கிறார்கள்? திவசம், மாளயம், வீடுகுடிபுகுதல் போன்ற விழாக்களிலும், கோயில்களில் அன்ன தானங்கள் செய்யும் போதும் நாம் வறிய மக்களுக்குத் தான் உணவு அளித்தல் வேண்டும். அதை விட்டு விட்டுப் பெரும் பெரும் பணக்காரர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் உறவினர்களுக்குமே நாம் உணவு அளித்துக் கௌரவிக்கிறோம். இந்த நிலை மாறவேண்டும். ஈகை என்று சொல்லப்படுவது பயனை எதிர்பார்த்துக் கொடுக்காமையே’’ என்றார்.

விக்னேஸ்வரமூர்த்தி கோயிலால் நேரே பாடசாலைக்குச் சென்று விட்டார். அன்று அவரின் பிறந்ததினம் என அறிந்த அவ்வூர்ப் பிரமுகர்கள் பரிசுப் பொருட்களுடன் அவரது வீட்டுக்குச் சென்றனர். அவர் அங்கு இல்லாததால் அவர்கள் பாடசாலைக்குச் சென்றனர். அவர்கள் கொண்டு வந்த பரிசுப் பொருட்களை விக்னேஸ்வரமூர்த்தி வாங்க மறுத்தார்.

‘‘நான் யாருக்கும் தெரியாது எனது பிறந்ததினத்தைக் கொண்டாடியதன் நோக்கமே பரிசுப் பொருட்களுடன் பலர் வந்து விடுவார்கள். என்ற பயம் தான். கொடையைப் பயன் கருதாமல் செய்தல் வேண்டும். அத்துடன் இல்லாதவனுக்குத் தான் கொடுக்க வேண்டும். மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் பயன் கருதித்தான் கொடுப்பதாகப் பெரியவர்கள் கூறுகிறார்கள். இன்று நான் அன்பளிப்பாகப் பொருட்களை வாங்கினால் என்னால் நல்ல முறையில் பாடசாலையை நடத்த முடியாது. அதனால் பெரும் பிரச்சினைகள் வரும்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

வேலாயுதபிள்ளையும் தனபாலசிங்கமும் தணிகாசலமும் பரிசுப்பொருட்களோடு பாடசாலைக்கு வந்தனர்.

‘‘எங்களுக்கு கூட நீங்கள் சொல்லவில்லை’’ என்றார் வேலாயுதபிள்ளை.

‘‘நான் எல்லோரையும் சமமாகத்தான் மதிக்கிறேன். சிலருடன் பாடசாலை நிர்வாக விடயமாக பழக வேண்டியிருக்கு. அதற்காக அவர்கள் மீது விசேட அன்பு செலுத்தியுள்ளேன். என்பது பொருள் அல்ல. நான் எவரிடமும் அன்பளிப்புப் பொருட்களை வாங்க மாட்டேன். அது உங்கள் மூவருக்கும் பொருந்தும்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் அவர் அப்படிக் கூறுவார் என்று எதிர்பார்க்காததால் கவலைப் பட்டனர்.

221. வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

வறியவர்களுக்குப் பொருட்களைக் கொடுப்பதே ஈகை. மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும்.

## கொளல் தீது

விக்னேஸ்வர மூர்த்தியைச் சந்திப்பதற்காக ஒரு வாரத்திற்கு முன்பே தரம் ஐந்தில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர் கடித மூலம் அனுமதி பெற்றிருந்தனர். அதற்காக அவர்கள் பாடசாலைக்கு வந்து பெற்றோர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமைக்கப்பட்டிருந்த மண்டபத்தில் அமர்ந்திருந்தனர்.

விக்னேஸ்வரமூர்த்தி எல்லா விடயங்களிலும் கண்டிப்பானவர். நேர விடயத்தில் மிகவும் கண்டிப்பானவர். குறித்த நேரத்திற்கு கூட்டம் நடைபெறும் மண்டபத்திற்கு தரம் ஐந்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களுடனும் உபஅதிபருடனும் வந்தார்.

‘‘உங்கள் பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கப் பிரச்சினைகளைப் பற்றிய இக்கலந்துரையாடலை நீங்கள் எழுத்து மூலம் கோரியமைக்காக ஏற்பாடு செய்துள்ளேன். உங்களது பிரச்சினைகளை நீங்கள் சொல்லலாம்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

கூட்டத்திற்கு நூற்றுக்கு மேற்பட்ட பெற்றோர்கள் வந்திருந்தும் சில கணங்கள் எவரும் எதுவும் பேசவில்லை.

தரம் ஐந்து வரையான வகுப்புக்களுக்குப் பொறுப்பான உப அதிபர் திருமதி வேலழகன் எழுந்து சொன்னார்; ‘‘எமது பாடசாலைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் உள்ள குறை நிறைகளைப் பற்றி எம்மை விட பெற்றோராகிய உங்களுக்குத் தான் அதிகம் தெரியும். நீங்கள் பிரச்சினைகளைச் சொன்னீர்களானால் நாம் அதிபருடன் சேர்ந்து தீர்வு காணலாம். உங்களுக்குள்ள பிரச்சினைகளை ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். நாம் அவற்றைத் தீர்த்து வைப்பதற்குரிய வழிமுறைகளைத் தெரிவிப்போம்’’.

மிண்டும் சில நிமிட மௌனத்தின் பின் சோமசுந்தரம் என்ற பெரியவர் எழுந்தார். அவர் மாவட்டச் செயலகத்தில் எழுதுவினையராகச் சேர்ந்து அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று கடமையாற்றிப் பின் இளைப்பாறியவர். அமைதியாக இருந்து மக்களுக்குத் தொண்டாற்றி வருபவர். ‘‘நாம் இங்கு வந்தது பாடசாலையின் கல்வியைப் பற்றியோ அல்லது மாணவர்களின் ஒழுக்கத்தைப் பற்றியோ கதைப்பதற்கல்ல. எந்தவிதமான குறையுமில்லாமல் அதிபர் படசாலையை நடத்துகிறார். மாவட்டம் முழுவதும் எமது பாடசாலையைப் பற்றியும் அதிபரைப் பற்றியும் ஆசிரியர்களைப் பற்றியும் புகழ்ந்து கூறுகிறார்கள். அப்படி இருக்கும் போது நாம் கல்வியைப் பற்றிக் கதைக்கவரவில்லை’’ என்று கூறிய சோமசுந்தரம் சிறிது நேரம் எதுவும் பேசாது நின்றார்; ‘‘அன்பான எமது அதிபருக்கு எமது கிராம மக்களின் அன்பான ஒரு வேண்டு கோளைச் சொல்ல வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப் பட்டுள்ளேன். எமது பாடசாலையின் தரம் ஐந்து கா.பொ.த.சாதாரணதரம் , உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மிகவும் சிறப்பானவையாக வருடா வருடம் வெளிவருகின்றன. தரம் ஐந்து புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெற்றோரின் நெடுநாளைய ஆசையை நான் வெளிப்படுத்துகிறேன். பாடசாலைகள் சில மாணவர்களைத் தரம் ஒன்றில் அனுமதிக்கும் போது ஐயாயிரம் ரூபா தொடக்கம் பத்தாயிரம் ரூபா வரை அனுமதிக் கட்டணமாகப் பெற்றுக் கொள்கின்றனர். தரம் ஐந்து மாணவர்களிடம் புலமை பரிசில் பரீட்சைக்கு மேலதிக வகுப்புக்கள் வைப்பதற்காக மாணவன் ஒருவனிடம் ஆயிரம் ரூபா பணம் வசூலிக்கிறார்கள். பின்பு அவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பின்பு விடுகைப்பத்திரம் எடுக்கும் போது இரண்டாயிரம்ரூபா வாங்குகிறார்கள்.

இடையில் வேறு எத்தனையோ நிதி வசூலிப்புகள் நடைபெறுகின்றன. எமது பாடசாலையில் அதிபர் வசதிக்கட்டணம் கூடப் பெற்றுக் கொள்வதில்லை. அதனால் தரம் ஐந்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மேலதிக வகுப்புகள் எடுப்பதற்காக சம்பளமாக இல்லாது சன்மானமாக ஏதாவது கொடுக்க விரும்புகிறோம். தயவு செய்து அதற்கு அதிபர் அனுமதி தரல் வேண்டும்'' என்று கூறி விட்டு அமர்ந்தார் சோமசுந்தரம்.

''எமது பெற்றாரின் நல்ல பண்பை நான் வரவேற்கிறேன். கல்விக்கு எதிரியானவை தண்டனையும் பணமும் என்று கல்வியாளர்கள் கூறியிருக்கிறார்கள். அண்மையில் பத்திரிகை ஒன்றில் வறுமை காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஐயாயிரம் மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகிச் சென்று தொழில் புரிகிறார்கள். என ஒரு செய்தியைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். ஓர் அதிபர் பணம் வசூலிப்பதாலும் நண்பர்கள் உறவினர்கள் என்று பாகுபாடு காட்டுவதாலும் அக் கல்லூரியின் முன்னேற்றம் தடைப்படுகிறது. அதை ஓர் அதிகாரி செய்தால் அந்த மாவட்டமே பாழாகி விடும். வறுமையுற்றுள்ள எமது பிரதேச மக்களுக்கு நல்ல கல்வியைக் கொடுத்து, போரினால் இழந்து விட்ட கல்வியை முன்னிருந்த நிலைக்கு கொண்டு வருதல் வேண்டும். இதற்குப் பணம் தான் எதிரி. வெளிநாட்டில் இருக்கும் சிலரிடம் உள்ள பணம் தான் இன்று எமது மக்களை இந்நிலைக்கு ஆளாக்கியது. வேதனம் பெறும் ஒருவன் மக்களிடம் பல்வேறு காரணங்கள் கூறிப் பணம் வாங்குவது பாவம். அந்தப் பாவம் அவர்களை விட்டு வைக்காது. நான் எமது காலத்தில் கற்றதை நினைத்துப் பார்கிறேன். அப்பொழுது மரங்களின் கீழும், மண்கொட்டில்களிலுமே கற்றோம். கற்ற அனைவரும் பாண்டித்தியம் பெற்றவர்களாகவே இருக்கிறோம். இதற்குக் காரணம் ஆசிரியர்களின் அர்பணிப்பும் அதிபர்களின் நல்ல கொள்கைகளும் தான். பணத்தால் நாம் கல்வியை முன்னேற்றுவோம் என்பது எரியும் வீட்டுக்கு எண்ணெய் ஊற்றி அணைப்பதைப் போன்றது. அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் பெற்றோரும் பழைய மாணவர்களும் நலன்விரும்பிகளும் தேவையான உதவிகளை எமது பாடசாலைக்குச் செய்து கொண்டிருக்கின்றனர். பாடசாலைகளில் அனுமதிக்கென்றும் விசேட வகுப்புக்கள் நடத்துவதற்கென்றும் பணம் அறவிடக்கூடாதென கல்வி அமைச்சு சட்டம் இயற்றியுள்ளது. கற்ற வித்தையை விற்பவனுக்கும் கசாப்புக் கடைக்காரனுக்கும் வேறுபாடில்லை என்று எமது முன்னோர் சொல்லியுள்ளனர். கல்வியில் பின் தங்கிய மாணவர்களுக்குத் தான் விசேட வகுப்புக்கள் வைத்தல் வேண்டும். கற்கின்ற மாணவனுக்கு வழிகாட்டினால் போதும். எமது பாடசாலையில் இருபத்தைந்து ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். இவர்களில் ஒருவர் ஒரு நாளைக்கு மேலதிக வகுப்பு எடுத்தால் போதும். ஒரு ஆசிரியர் பன்னிரு மாதங்கள் விடுமுறை நாட்கள் உட்பட மேலதிக வகுப்புக்கள் எடுத்தால் கூட பத்து நாட்களுக்கு மட்டுமே எடுப்பார். அத்துடன் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சமூக உணர்வையும் பற்றையும் உண்டு பண்ணுதல் வேண்டுமே தவிர கடமையை விற்கும் தன்மையை உருவாக்கக் கூடாது. பழைய மாணவர் சங்கம் மேலதிக வகுப்புக்களை எடுக்கும் ஆசிரியர்களுக்கான நலன்களை நல்லமுறையில் கவனித்து வருகிறது. பயனை எதிர்பாராது கொடுப்பதே ஈகை. ஏனையவெல்லாம் தனக்கு வரும் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பனவே

ஆகும். நாம் நன்மை செய்வதற்காகக் கூடப் பிறரிடமிருந்து பொருள்களைப் பெறக்கூடாது. மேல் உலக நல்வாழ்வு இல்லை என்றால் கூட நாம் எம்மிடம் உள்ளவற்றைக் கொடுப்பதே நல்லது என்று எமது பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. இது கல்விக்கு மிகவும் பொருத்தமானது. அடுத்தவர்கள் செய்கிறார்கள் என்பதற்காகக் கெட்டன வென கற்றறிந்தவர்களால் ஒதுக்கப்பட்டவற்றை நாம் செய்ய மாட்டோம். உங்கள் அக்கறையான அன்புக்கு நன்றி'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

222. நல்ஆறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று.

ஒருவன் நன்மை செய்வதற்காகக் கூட பொருளைப் பிறரிடமிருந்து பெறக்கூடாது. மேலுலக நல்வாழ்வு இல்லா விட்டாலும் பிறருக்குக் கொடுப்பதே நல்லது.

## குடிப்பண்பு

சேனாதிராஜா தீன்பண்டங்கள் செய்து மிதிவண்டியில் ஊர் ஊராகச் சென்று வியாபாரம் செய்பவன். அவனுக்கு ஐந்து பிள்ளைகள். அவனது மனைவி கஜலட்சுமி வியாபாரத்திற்கு வேண்டிய பொருட்களைத் தயாரித்துக் கொடுப்பவள். வடை, பொரித்த கடலைப்பருப்பு, முறுக்கு, சுண்டல், வறுத்த கச்சான் கடலை போன்றவற்றை கஜலட்சுமி தினமும் சுவையாகச் செய்து கொடுக்க சேனாதிராசா ஊர் ஊராகச் சென்று விற்பனை செய்து வருவான். அவனது மூத்த மகள் அபிராமி கா.பொ.த. சாதாரண வகுப்பில் கல்வி கற்ற போதும் பாடசாலை இல்லாத வேளைகளிலும் இரவிலும் தாய்க்கு உதவியாக வேலைகள் பலவற்றைச் செய்வாள்.

திடீரென்று கஜலட்சுமி நோய்வாய்ப்பட்டு பட்டணத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதால் சேனாதிராசாவின் குடும்பத்தின் வருமானம் குறைந்தது. வைத்தியசாலையில் தங்கிச் சிகிட்சை பெறும் மனைவியைச் சேனாதிராஜா அக்கறையுடன் கவனித்ததால் அவனால் வியாபாரத்தைக் கவனிக்க முடியவில்லை. கஜலட்சுமி உடல் நலம் தேறி வீட்டுக்கு வந்த பின்பு அவன் வியாபாரத்தைத் தொடங்க நினைத்தான். ஒரு மாத காலம் வியாபாரம் செய்யாமையால் சேமித்து வைத்திருந்த பணத்திலேயே மனைவியின் மருத்துவச் செலவையும் வீட்டுச் செலவையும் கவனித்தமையால் வியாபாரத்தைத் தொடங்க அவனால் முடியவில்லை. அதனால் தணிகாசலத்திடம் வந்தான்.

``ஒன்றுக்கும் பயப்படாதை சேனாதி. மகா கணபதி எந்த விதமான குறையையும் விட மாட்டார். உனக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டு மானால் சொல்'' என்றார் தணிகாசலம்.

தான் உதவி கோரி வந்த போதும் கேட்காமலே தனது நிலையை உணர்ந்து உதவி செய்வதாகக் கூறும் தணிகாசலத்தின் பண்பை வியந்த சேனாதிராஜா சொன்னான்; ‘‘அண்ணை நான் கேட்காமலே உதவி செய்ய முன்வந்த உங்களைப் பாராட்ட எனக்குத் தெரியேல்லை. நான் மணிவண்ணனின் கடையில் தான் மாதம் பத்தாயிரம் ரூபாவுக்கு பொருட்களைக் கொள்வனவு செய்யிறனான். இவ்வளவு நாளும் காசு கொடுத்துத் தான் பொருட்களை வாங்கி வருகிறேன். தயவு செய்து நீங்கள் சில மாதங்களுக்கு கடனாகப் பொருட்களைக் கொடுக்கும் படி சொன்னீர்களானால் மாதம் முடிய நான் வாங்கிய பொருட்களுக்கான பணத்தைக் கொடுக்கிறேன்’’ என்றான்.

‘‘நீ என்னிடம் ஏதாவது கேட்பதற்காகத்தான் வந்திருக்கிறாய் என நினைத்தேன்’’ என்றவாறு தான் வைத்திருந்த ஆயிரம் ரூபா பணத்தைக் கொடுத்தார் தணிகாசலம்.

‘‘நீங்களும் என்னை மாதிரித்தானே அண்ணை... வைச்சுக் கொள்ளுங்கோ’’ என்றான் சேனாதிராஜா.

‘‘இரண்டு பேரும் ஒரே மாதிரியானவர்கள் தான் என்றாலும் இப்பொழுது நீ கஸ்டப்படுகிறாய். வைத்திரு’’ என்றார் தணிகாசலம்.

சேனாதிராஜா; ‘‘நன்றி’’ என்று சொல்லிப் பெற்றுக் கொண்டான். இருவரும் மணிவண்ணனின் வீட்டுக்குச் சென்றனர். முன்வாசலில் மணிவண்ணனின் சகோதரன் இளங்கோவன் இருந்தான். தணிகாசலத்தைக் கண்டதும் எழுந்து வந்தான்.

‘‘அண்ணையைச் சந்திக்க வென்று வந்தனாங்கள்’’ என்றார் தணிகாசலம்.

‘‘அவர் காலையில் ஏதோ வேலை விடயமாகச் சென்று விட்டார். இரவைக்குத்தான் வருவார்.’’

‘‘அப்ப நான் வரட்டே தம்பி’’

ஏன் அவசரப்படுறியள் உள்ளுக்கு வாங்கோ’’ என்றான் இளங்கோவன்.

உள்ளே சென்று நாற்காலியில் அமர்ந்த தணிகாசலம் பேசுவதற்கு எதுவும் தோன்றாததால் பேசாமல் இருந்தார்.

‘‘அண்ணையோட கதைக்கப் பல விடயங்கள் இருக்கும்..’’ என்று சிரித்த இளங்கோவன்..’’ வியாபர விடயமா...? கோயில் விடயமா..? இல்லை வேறு ஏதாவது விடயமா..?’’ என்று கேட்டான்.

‘‘இவருக்கு ஓர் உதவி கேட்க வேண்டும். மனைவிக்கு சுகமில்லை. அதனால் ஒரு மாதமாய் வேலையில்லாமல் இருக்கிறார். அது பற்றிக் கதைக்கத் தான் வந்தனான் பாவம் நல்ல உழைப்பாளி. நேர்மையானவன் கிரகம் பகைச்சதாலை கஸ்டப்பர்றான்..’’ என்றார் தணிகாசலம்.

‘‘இருந்து கொள்ளுங்கோ வாறன்’’ என்று கூறி விட்டு உள்ளே சென்ற இளங்கோவன் சிறிது நேரத்தில் திரும்பி வந்தான்; ‘‘இதில் கொஞ்சப் பணம் இருக்கு இப்ப கொண்டுபோங்கோ பிறகு வந்து அண்ணாவுடன் கதையுங்கோ’’ என்றான் இளங்கோவன்.

சேனாதிராஜா பதறிப்போனான். தணிகாசலம் அதை எதிர் பார்க்கவில்லை.

‘‘அவருடைய நிலைமையை நீங்கள் கூறும் போது எனக்குக் கவலையாக இருந்தது. அதனால் தான் உதவி செய்தேன். கொண்டு போங்கோ’’ என்றான் இளங்கோவன்.

வெளியே வந்த சேனாதிராஜா பணத்தை எண்ணிப் பார்த்தான். அதில் பத்தாயிரம் ரூபா இருந்தது. ஒருவனது உருவத் தோற்றத்தைப் பார்த்து அவனுக்கு உதவுவது நல்ல குடியில் பிறந்தவனது பண்பாகும். மணிவண்ணனைப் போலவே அவனது சகோதரனும் இருக்கிறான். நீ இந்தப் பணத்தை முதலாக வைத்துக் கொள். மனைவியின் உடல் நலத்தைக் கவனிக்கத் தேவைப்படும். நான் மணிவண்ணனிடம், உனக்குக் கடனாகப் பொருட்களைப் பெற்றுத் தருகிறேன்’’ என்றார் தணிகாசலம்.

சேனாதிராசாவுக்கு எதுவும் பேசத் தோன்றவில்லை. தணிகாசலத்தின் பின்னால் பிரமை பிடித்தவன் போலச் சென்று கொண்டிருந்தான்.

223. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள.

‘நான் வறியவன்’ என்று ஒருவன் கூறுவதற்கு முன் கொடுப்பதே நற்குடியில் பிறந்தவனது பண்பாகும்.

## பெரும் துன்பம்

நாவலடிக் கிராமத்தில் விவசாயம் செய்பவர் நடேசன். அவருக்கு ஐந்து பிள்ளைகள். ஐவரும் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர்.

கமச் செய்கை மூலம் வரும் வருமானம் குடும்பச் செலவுக்குப் போதாமையால் நடேசன் ஊரில் கூலி வேலைகளும் செய்து வந்தார்.

நடேசனின் மனைவி ஈஸ்வரி கணவனுடன் தோட்டத்திற்குச் சென்று தோட்ட வேலைகள் பலவற்றையும் செய்வாள்.

பணத்தட்டுப்பாடு காரணமாக நடேசன் சிறு சிறு பயிர்களையே செய்கை பண்ணி வந்தார். அதனால் வரும் அன்றாட வருமானம் அன்றைக்கே செலவாகிவிடும். அதனால் பணப்பயிரான வெண்காயத்தைச் செய்கை பண்ண விரும்பிய ஈஸ்வரி, தனது விருப்பத்தைக் கணவனிடம் சொன்னாள்.

நடேசன் சிரித்தான். ஐந்து பரப்பில் வெண்காயம் செய்கை பண்ணுவதானால் பதினையாயிரம் ரூபாவாவது தேவைப்படும். பதினைந்து ரூபாவுக்குக் கூட வசதியில்லாமல் நான் இருக்கிறன்''.

''சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தால் காரியம் நடை பெறாது. முயற்சி செய்தால் முன்னேறலாம். எங்கடை கிராமத்திலை விதை காயைத் திருப்பத்தாறதாகச் சொல்லி வாங்கலாம். தணிகாசலம் அண்ணையை நேற்றுக் கேட்டனான். விதை காய் தாறதெண்டவா் உரத்தையும் மருந்தையும் ஊரவை மணிவண்ணனிட்டைக் கடனாகத் தானே வாங்கிறவை. அறுவடை முடிந்தாப் பிறகு குடுக்கிறவை. நாங்களும் கேட்டுப் பார்ப்போம். அதை பற்றியும் நான் தணிகாசலம் அண்ணை யோடை கதைத்தனான்''.

''பெரும் முதலீடு செய்ய வேண்டிய பயிர்ச்செய்கை தற்செயலாக நட்டமேற்பட்டால் பெரும் கஷ்டம் வரும். எனக்கெண்டால் விருப்பமில்லை'' என்றான் நடேசன்.

''பயப்பட்டால் முன்னேற முடியாது. மகா கணபதி மேலை பாரத்தைப் போட்டுட்டுச் செய்வம். காலம் பகைத்தாலும் முயற்சி செய்தால் முன்னேறலாம். என்று பெரியவை சொல்லுறவை. நான் முழுமூச்சாய் வெண்காயச் செய்கையில் ஈடுபடவிரும்புறன். நீங்கள் உதவிசெய்தால் போதும்'' என்றாள் ஈஸ்வரி.

நடேசன் மனைவியின் கரைச்சலுக்காக ஒப்புக் கொண்டான். எனினும் அவனுக்குப் பயமாக இருந்தது.

மறு நாள் நடேசனும் ஈஸ்வரியும் விதை வெண்காயத்தைப் பெற்றுக் கொள்ள தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்றனா். தணிகாசலம் அவா்களை இன்முகத்துடன் வரவேற்றாா்; ''நடேசு மனத்திடத்துடன் எந்தக் காரியத்தையும் செய்தால் நிட்சயமாக வெற்றி கிடைக்கும். நான் உனக்கு எத்தனையோ தரம் விதை வெண்காயம் தருவதாகக் கூறியும் நீ அதில் அக்கறை காட்டவில்லை. சிறு பயிர்கள் அன்றன்று வருமானம் தருமே தவிர பெரும் முதலைத் தராது. பெரும் முதலைப் பெற விரும்புறவன், சிறு பயிர்களோடு பணப்பயிர்களையும் செய்கை பண்ணல் வேண்டும். சிறு பயிர்கள் மூலம் வரும் வருமானம் குடும்பச் செலவுக்கும் பணப்பயிர்களைப் பராமரிக்கவும் காணும். நான் உனக்குக் கொடையாக விதை வெண்காயத்தைத் தருகிறேன்.

அத்துடன் மணிவண்ணனிடம் உரமும் பசளையும் பெற்றுத் தருகிறேன் தைரியத்துடன் இம் முறை பயிரைச் செய்'' என்றார்.

தணிகாசலம் அப்படிக் கூறியும் நடேசனது மனம் அல்லற்பட்டது; ''நீங்கள் செய்த இந்த உதவியை மறக்க மாட்டன் அண்ணை'' உன்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினாள் ஈஸ்வரி.

நடேசன் தோட்டத்தைப் பண்படுத்தி வெண்காயத்தை நட்டான். நட்டபின்பும் அவனின் மனம் பரபரத்துக் கொண்டே இருந்தது; ''தணிகாசலம் பெரிய பணக்காரர் இல்லை. எம்மை மாதிரிக் கஷ்டப்பபடுபவர் அவரிடம் இலவசமாக வாங்கிய வெண்காயத்தைக் கொடுக்காவிட்டாலும் நஷ்டமேற்பட்டால் அவரும் பாதிக்கப்படுவார். அத்துடன் அவருக்குக் காசு கொடுக்காவிட்டாலும் மணிவண்ணனுக்குக் கொடுக்க வேண்டும்''. என்று தினமும் சொல்வான் நடேசன்.

நடேசன் கூறுவதை ஈஸ்வரி காதில் வாங்கிக் கொள்வதில்லை. அவள் முழுமூச்சுடன் வெண்காயச் செய்கையில் ஈடுபட்டாள். அதனால் வெண்காயப் பயிர் நல்ல முறையில் வளர்ந்தது. மூன்று மாதங்களின் பின் வெண்காயத்தை அறுவடை செய்து விற்றாள் ஈஸ்வரி. அவளுக்கு இலாபமாக ஐம்பதினாயிரம் ரூபா கிடைத்தது.

மணிவண்ணன் வெண்காயத்தைக் கொள்வனவு செய்து பணத்தைக் கொடுக்கும் போது தணிகாசலமும் அவ்விடத்தில் நின்றார். இவ்வளவு காலமும் துன்பத்தால் சோர்ந்திருந்த நடேசனின் முகம் அன்று மகிழ்வால் பூரித்திருந்ததைக் காண அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

''நடேசு உன்னைப் போல நானும் இவ்வளவு நாளும் பயப்பட்டுக் கொண்டு தான் இருந்தனான். நான் தந்த வெண்காயம் அழிந்தால் பரவாயில்லை. உன்ரை முயற்சியும் பயிருக்குச் செலவு செய்த பணமும் அழிந்தால் என்ன செய்யலா மென்று நினைத்தேன். மகா கணபதி காப்பாற்றி விட்டார்'' என்றார் தணிகாசலம். ''பொருளை விரும்பிக் கேட்பவர் பெற்றதைக் கொண்டு மனம் மகிழ்ந்து இனிய வார்த்தைகள் பேசும் வரை ஈகையும் கூடப் பெரும் துன்பம் தான்'' என்று நினைத்துப் பெருமூச்சு விட்டார் தணிகாசலம்.

224. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு.

பொருள் தேவை என்று இரந்தவனின் மகிழ்ந்த முகத்தைக் காணும் வரை ஈகையும் பெரும் துன்பத்தைத் தரும்.

## வலிமை

தணிகாசலத்தின் வீட்டுக்கு நடேசனும் ஈஸ்வரியும் வந்தனர்; ‘‘அண்ணை நான் உங்களிட்டைக் கடனாகத்தான் விதை வெண்காயம் கேட்டனான். நீங்கள் கொடையாகத் தந்தனீங்கள். நீங்கள் என்னுடைய இனத்தவர் இல்லாவிட்டாலும் கூட நீங்கள் செய்த உதவியாலை இண்டைக்கு நாங்கள் தலை நிமிர்ந்திட்டம். எனது கணவனின் விருப்பமில்லாமல் தான் வெண்காயச் செய்கையைச் செய்தனான். தற்செயலாக நட்ட மேற்பட்டு விட்டால் காலம் பூராகவும் அவர் ஏசிக் கொண்டே இருப்பார். அத்துடன் எம் வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் கடனைக் கட்ட முடியாமல் போயிருக்கும். மகா கணபதி மாதிரி இந்த ஊரிலை நீங்கள் இருந்து மக்களுக்குச் செய்யும் பணிகள் அளப்பரியன..’’ உணர்ச்சி மேலீட்டால் கண்ணீர் விட்டாள் ஈஸ்வரி.

‘‘எல்லாம் அவரவரின் முயற்சியின் பயன். நீ துணிவோடு திட்டமிட்டு செயலில் இறங்கியதால் இன்று சந்தோசமாக இருக்கிறாய். அதே போலத் தான் நானும் உங்களை உற்சாகப்படுத்தி விதை வெண்காயத்தையும் தந்து, மணிவண்ணனிடம் கடனாகப் பொருட்களையும் வாங்கித் தந்தேன். தற்செயலாக நட்ட மேற்பட்டு விட்டால் அந்த நட்டத்திற்கு நானும் காரணகர்த்தா ஆகி விடுவேனோ எனப் பயந்தேன். எல்லாம் நல்லபடி முடிந்து விட்டது. இனிமேல் நீங்கள் பயப்படாமல் முதலீடு செய்து பெரும் பணம் தரும் பயிர்களைப் பயிரிடலாம்.’’ என்றார்.

‘‘இப்ப அஞ்சாறு நாட்களாகத் தான் அண்ணை என்ரை குடும்பம் வயிறாறச் சாப்பிடுது. முந்தியென்றால் அஞ்சு பிள்ளைகளிலை மூன்று காலமை சாப்பிடாமல் தான் பாடசாலைக்குப் போறதுகள். பத்து வரிசமாய் என்னுடைய மனைவி காலையிலை சாப்பிர்றேல்லை. நான் வேலைக்குச் செல்வதால் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் உணவின் அளவைக் குறைத்து எனக்குத் தருவாள். வேலை செய்யும் போது பதினொருமணிக்கே எனக்குப் பசிக்கும் நான் வேலை செய்யும் வீட்டுக்காரர் தேநீர் தருவார்கள். அவர்கள் தரும் மதிய உணவின் ஒரு பகுதியை நான் வீட்டுக்குக் கொண்டு வருவன். அதை விட என்னுடைய அம்மாவும் அப்பாவும் வெற்றிலை சாப்பிடுவார்கள். நான் போதியளவு உழைக்காததால் அவர்கள் உணவை மட்டுமில்லை வெற்றியை சாப்பிடுவதைக் கூட விட்டு விட்டார்கள்’’ அழுதான் நடேசன்.

‘‘முன்பே யோசிச்சிருக்கலாம். இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு ஈஸ்வரிக்கு இதைப் பற்றி நான் சொன்னனான். அவளும் உன்னை மாதிரிப் பயந்ததாலை பின்வாங்கீட்டாள்’’ என்றார் தணிகாசலம்.

‘‘நேற்றைக்கு மணிவண்ணனின் கடன் காசு முழுவதையும் கொடுத்து விட்டேன். அவர் இனிமேல் கூடுதலான நிலத்தில் வெண்காயம் பயிரிடும்படி சொன்னார். அத்துடன் ஆயிரம் ரூபாவைக் கழித்தும் விட்டார். அப்படியான ஆட்கள் இருக்கிறத்தாலை தான் உலகம் வாழுது’’ என்றான் நடேசன்.

‘‘என்ரை பிள்ளைகள் பசி காரணமாக எத்தனையோ தரம் பாடசாலையில் மயங்கி விழுந்திருக்குதுகள். அந்தப் புண்ணியவான் பாடசாலையிலை அதிபராக இருந்து கொண்டு ஏழைகளுக்கு எவ்வளவு சேவை செய்கிறார்.

அவர் இல்லாவிட்டால் என்ரை பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போயிருக்காதுகள். அப்பியாசப் புத்தகங்கள், எழுது கருவிகள் உணர்வுகள் எல்லாம் கொடுக்கிற கடவுள் அவர்'' என்றாள் ஈஸ்வரி.

''எங்களின்ரை குடும்பத்தின்ரை பசியை நீங்கள் தான் போக்கினனீங்கள். முந்தின காலத்திலை தவஞ் செய்யிற முனிவர்கள் பசியை அடக்கிப் பல நாட்கள் உண்ணாமல் இருந்து தவம் செய்ததாகக் கேள்விப் பட்டிருக்கிறன். அவர்களுக்குப் பசியை அடக்கிற சக்தியை இறைவன் கொடுத்தார். அந்தப் பசியை அடக்கித் தவம் செய்பவர்களை விட மக்களின் பசியைப் போக்கிறவர்கள் மேலானவர்கள் என்று எனது தந்தையார் அடிக்கடி சொல்வார். தவம் செய்து வலிமை பெற்ற முனிவர்களை விட மேலான வலிமையை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்'' என்றான் நடேசன். அவனது கண்களால் நீர் வழிந்தது.

''நான் என்னத்தையடாப்பா செய்தனான். நானும் சோற்றுக்கு வழியில்லாமல் கஷ்டப்படேக்கை இந்தக் கிராமத்திலை வாழுற பல பேர் எனக்கு உதவி செய்தவை. அவைக்கு என்ரை உதவி தேவையில்லை. அதனாலை என்னாலை உதவி செய்யக் கூடியவைக்கு நான் உதவி செய்யிறன். ஒருவருக்கொருவர் உதவி செய்யாமல் நாம் உலகில் வாழ முடியாது. அதோடு ஏழ்மைப் பட்டாலும் மனம் தளரக் கூடாது. அத்துடன் உதவி செய்தவனை மறக்கவும் கூடாது. எம்மால் இயன்ற உதவியை நாம் பிறருக்குச் செய்யப் பின் நிற்கவும் கூடாது. அப்படி வாழ்ந்தால் எதற்கும் குறைவிராது'' என்றார் தணிகாசலம்.

தணிகாசலத்தின் மனைவி மூவருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

225. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

தவ வலிமை உடையவர்களைப் பசியைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் மிக்கவர்கள். இவ் ஆற்றலை விட மேலானது அப்பசியைப் போக்குபவனது வலிமை.

## வைப்பகம்

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய முற்பகுதியைக் கூட்டித் துப்பரவு செய்து விட்டு கால் முகம் கழுவி மகா கணபதியை வணங்கிய கதிரேசன் பஞ்ச புராணங்களைப் பாடினார். ஒரு சங்கீத வித்துவானுக்குரிய குரல்வளம் அவருக்கு இருந்தது.

தினமும் காலைப் பூசைக்கு முன்பு கோயிலின் முற்பகுதியைக் கூட்டித் துப்பரவு செய்து விட்டு கால் முகம் கழுவி மகா கணபதியின் காலைப்

பூசை முடிய பஞ்ச புராணங்களை ஓதுவதை வழக்கமாகக் கொண்டிருப்பவர் கதிரேசன். அவர் பஞ்சபுராணங்களை ஓதி முடித்ததும் கோயில் குருக்கள் வீபூதி சந்தணம் கொடுப்பார். அதன் பின் மகா கணபதிக்குப் படைத்த நைவேத்தியத்தைக் கொடுப்பார். அதை பெற்றுக் கொண்ட கதிரேசன் அன்னதான மடவாசலில் சென்று அமர்ந்து அதை உண்பார். தினமும் காலைப் பூசை முடிந்தவுடன் கதிரேசனுக்கு பிரசாதம் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் குருக்கள்.

ஒரு காலத்தில் கதிரேசன் நல்ல முறையில் சகல வசதிகளோடும் நாவலடிக் கிராமத்தில் வாழ்ந்த புகழ் பெற்ற கமக்காரன் அவரது மனைவி தேவராணி. பெயருக்கேற்ற பதிவிரதை. தனது கணவனின் மனம் அறிந்து செயற்பட்டு வந்தாள். அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை. அதைப்பற்றி அவர்கள் பெரிதாகக் கவலைப்பட்டதும் கிடையாது. கமச் செய்கை மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு பல்வேறு தொண்டுகள் செய்வதும் இரப்பவர்க்கு உதவுவதுமாக வாழ்ந்து வந்தார்.

திடீரென்று அவரது மனைவி நோய்வாய்ப்பட்டாள். ஊரில் உள்ள மருத்துவர்களிடம் சிகிட்சை பெற்றும் பயனளிக்காததால் கொழும்பில் உள்ள பெரிய ஆஸ்பத்திரிக்கு மனைவியை அழைத்துச் சென்றார். அங்கு தான் அவளைப் பீடித்திருந்த புற்று நோயை மருத்துவர்கள் கண்டு பிடித்தனர்.

சில மாதங்களில் அவள் இறந்து போக கதிரேசன் தனிமரமானார். முன்பு போல் அவரால் வேலை செய்ய முடியவில்லை. சேமித்து வைத்திருந்த பெருந்தொகையான பணம் மனைவியின் வைத்தியச் செலவுக்குச் செலவாகி விட்டது. மனைவியை இழந்த துயரத்தினால் விரத்தியுற்ற கதிரேசன் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் தொண்டு செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

காலையில் குருக்கள் கொடுக்கும் பிரசாதத்தை உண்பார். பகலில் சமைப்பார். காலம் செல்லச் செல்ல சமைப்பதற்கு அவரால் முடியவில்லை. அத்துடன் பணமில்லாததால் சமைப்பதற்கான பொருட்களையும் அவரால் வாங்க முடியவில்லை. அதனால் கோயில் அன்னதான மடவாசலில் பகல் வேளைகளில் படுத்திருப்பார். அவரைப் போன்ற யாருமற்ற அனாதை வயோதிபர்கள் நால்வர் அவருடன் தங்கியிருந்தனர். பகல் வேளையில் பொங்குவோர் ஐந்து பேருக்கும் உணவு கொடுப்பார்கள். பொங்கல் நடைபெறாத நாட்களில் சில வேளைகளில் மகா கணபதி ஆலயக் கிணற்று நீரை அள்ளிக் குடித்து விட்டுப் படுப்பார்கள். அப்படியான நாட்களில் தணிகாசலம், தனபாலசிங்கம் வேலாயுதபிள்ளை போன்றோர் உணவு கொண்டு வந்து அவர்களுக்குக் கொடுப்பார்கள். அவர்கள் உணவுக்குக் கஷ்டப்படுவது தணிகாசலத்தின் மனத்தைச் சதா உறுத்திக் கொண்டிருந்தது. அதனால் அவர் மணிவண்ணனுடன் கதைத்தார்.

“பொருள் இல்லாதவர்களின் பசியைப் போக்குவது பொருள் உள்ளவனின் கடமை. அது வங்கியில் வைப்பில் இட்டு வைத்து விட்டுப் பிற்காலத்தில் எடுத்துச் செலவு செய்வதற்கு ஒப்பானது. மடத்தில் கதிரேசுவும் அவருடன்

தங்கியிருக்கும் நால்வரும் உணவுக்குப் பெரும் கஸ்டப்படுகிறார்கள். அவர்களது பசியைப் போக்க ஏதாவது செய்தல் வேண்டும்'' என்றார் தணிகாசலம்.

''பிரச்சினை இல்லை, அவர்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் நான் கொடுக்கிறேன். சமைத்துச் சாப்பிடச் சொல்லுங்கள்'' என்றான் மணிவண்ணன்.

அன்று சமையல் செய்வதற்கான உபகரணங்களுடனும் பொருட்களுடனும் மணிவண்ணனும் தணிகாசலமும் மகா கணபதி ஆலயத்திற்கு வந்தனர்.

''கதிரேசன்னை உங்கள் ஐந்து பேருக்கும் உணவளிக்க மணிவண்ணன் முன்வந்திருக்கிறார். ஒவ்வொரு மாதத்திற்கும் தேவையான பொருட்களை அவர் கொண்டு வந்து தருவார் நீங்கள் சமைத்துச் சாப்பிடுங்கோ'' என்றார் தணிகாசலம்.

கதிரேசன் உருகிப் போனார். நான் மனைவியோடு வாழ்ந்த காலத்தில் பசித்தவர்களைத் தேடிச் சென்று உணவளித்தேன். அந்தப் பயன் என்னை ஒரு போதும் பசித்திருக்க விடவில்லை. பசித்திருப்போர்க்கு உணவளித்தால் உணவளிப்பவனுக்கு ஒரு போதும் உணவுக்குப் பஞ்சமிராது என்று நான் படித்திருக்கிறேன். பசித்தவனின் வயிற்றுக்கிடும் உணவு பிற்காலத்துத் தேவைக்கென சேமித்து வைக்கும் பொருளைப் போன்றது. நீங்களும் உங்கள் சந்ததியினரும் எக்காலத்திலும் குறைவின்றிச் சகலவசதிகளோடும் வாழ்வீர்கள்'' என்றார் கதிரேசன்.

''பயனை எதிர்பாராது நீங்கள் நன்றாக வாழ்ந்த காலத்தில் பசித்தவனின் பசியைப் போக்கினீர்கள். அதன் பயனை இன்று அனுபவிக்கிறீர்கள். கொடுத்தவனுக்கு ஒரு பொழுதும் குறைவிராது ஏழைகளுக்குக் கொடுப்பது இறைவனின் பாதங்களில் சேமிக்கப்பட்டு உரிய நேரத்தில் அவர்களுக்குக் கிடைக்கிறது'' என்றான் மணிவண்ணன்.

226. அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴துஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

வறியவனின் பசியைப் பொருள் உள்ளவன் தீர்க்க வேண்டும்; அதுவே பொருள் உள்ள ஒருவன் அப்பொருள் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் வைப்பகமாகும்.

## நோய் நெருங்காது

மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் கதிரேசன் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தைக் கூட்டித் துப்பரவு செய்து விட்டு கோயில்

கிணற்றில் குளித்து விட்டு வந்து முன் மண்டபத்தில் அமர்ந்து தேவாரம் பாடினார்.

கோயில் பூசை முடிந்து விட்டது. கதிரேசன் முதல் நாள் இரவு உணவு கிடைக்காததால் சாப்பிடவில்லை. அதனால் அன்று காலையில் இருந்தே பசி வயிற்றைக் கிள்ளியது. குருக்கள் வழமையாகத் தரும் பிரசாதத்தைத் தருவார் என எதிர் பார்த்தார். வழமையாக பூசை செய்யும் கோயிற் குருக்களைக் காணவில்லை. கோயில் குருக்கள் இல்லாத சமயத்தில் பூசை செய்யும் அயல் ஊர்க் குருக்கள் அடியவர்களுக்கு திருநீறு கொடுத்துக் கொண்டிருந்தார். அயல் ஊர்க் குருக்கள் மகா கணபதிக்குப் படைக்கும் நைவேத்தியப் பொருட்களை வீட்டில் இருந்தே செய்து கொண்டு வருவார். அதனால் சுவாமிக்குப் படைப்பதற்காகச் சிறிதளவே கொண்டு வருவார். கோயிற் குருக்களானால் மடப்பள்ளியில் சமையல் செய்வதால் கோயிலுக்கு வருவோர்க்கும் கொடுப்பதற்காகச் செய்வார்.

அன்று காலையும் உணவு கிடையாது என்று எண்ணியவாறு குருக்கள் கொடுத்த திருநீற்றை வாங்கி நெற்றியில் பூசினார் கதிரேசன். எனது பசியை மகா கணபதி தீர்த்து வைப்பார். என்று எண்ணியவாறு அன்னதான மடத்திற்குச் சென்றார் கதிரேசன்.கோயிலிலிருந்து வரும் போது ஏதாவது சாப்பிடக் கொண்டு வருவார். என்று எதிர் பார்த்திருந்த அன்னதான மடத்தில் அவருடன் தங்கியிருந்தவர்கள் கதிரேசன் வெறுங்கையுடன் வருவதைக் கண்டு ஏமாற்ற மடைந்தனர்.

''கோயிற் குருக்கள் வெளியூர்க் கோயில் ஒன்றிற்குக் கும்பாபிஷேகம் செய்யப் போய்விட்டார். நாலைந்து நாட்களுக்கு வரமாட்டார். கைதடிக் குருக்கள் தான் பூசை செய்கிறார்'' என்றார் கதிரேசு.

''தேநீர் வைக்கட்டா?'' என்று கேட்டார் மூர்த்தி என்ற வயோதிபர்.

கதிரேசன் வாய்திறந்து எதுவும் பேசாது ''ம்'' என்றார். மூர்த்தி தேநீர் வைப்பதற்காக உள்ளே சென்றார்.

மூலையில் சாத்தி வைக்கப்பட்டிருந்த கைத்தடியை எடுத்துக் கொண்டு தனது சகோதரியான ஈஸ்வரியின் வீட்டுக்குச் சென்றார் கதிரேசன். அப்பொழுது ஈஸ்வரிக்கும் சரியான கஷ்டம். தணிகாசலத்திடம் விதை வெண்காயம் வாங்கி நட்டிருந்தாள். தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு காலை உணவை தயாரித்துக் கொண்டிருந்தாள். கதிரேசன் நன்றாக வாழ்ந்த காலத்தில் ஈஸ்வரிக்கு எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறார். கதிரேசனில் ஈஸ்வரி அளவு கடந்த பாசம் வைத்திருந்தான். அதனால் அவரை தன்னுடன் வந்து இருக்கும் படி பல முறை அழுதழுது கேட்டும் கதிரேசன் சம்மதிக்கவில்லை.

''உனக்குச் சரியான கஷ்டம் உன்னுடைய குடும்பத்தைப் பராமரிக்கவே சிரமப்படுகிறாய். நானும் வந்திருந்தால் நிலமை மோசமாகி விடும். அதனால்

உணவு கிடைக்காத வேளையில் வருகிறேன். ஏதோ கூழோ கஞ்சியோ தா'' என்றார்.

வீட்டுக்குத் திண்ணையில் வந்தமர்ந்த சகோதரனைப் பாசம் பொங்கப் பார்த்தாள் ஈஸ்வரி; ''அண்ணை இருந்து கொள்ளுங்கோ. தோட்டத்திலை வேலை செய்யிறவைக்கு தோசை சுட்டனான் கொண்டாறன்'' என்று கூறி விட்டு உள்ளே சென்றவள், ஒரு தட்டில் மூன்று தோசைகளை வைத்துக் கொண்டு வந்தாள்.

''இதைக் கடதாசியில் சுத்தித்தாம்மா... என்னை நம்பி இன்னும் நாலு சீவன்கள் இருக்கு''.

''தோட்டத்திலை வேலை செய்யிறவைக்குச் சுட்டனான். காணாது என்ரை நிலமை உங்களுக்குத் தெரியுத் தானே'' கலங்கினாள் ஈஸ்வரி.

''அழாதையம்மா நாங்கள் ஐந்து பேரும் ஓர் இடத்திலை இருக்கிறம். கொஞ்சமென்றாலும் கிடைத்ததைப் பங்கிட்டுத் தான் சாப்பிர்றனாங்கள்''.

பெரு மூச்சு விட்டாள் ஈஸ்வரி; ''எங்களோடை இருந்தால் ஏதோ கிடைக்கிறத்தைப் பகிர்ந்து சாப்பிடலாம். நீங்கள் போய் அன்னதான மடத்திலை இருக்கிறியள். அங்கை கொண்டு வந்து தாறதானால் உங்களோடை இருக்கிற எல்லோருக்கு மெல்ல தரவேண்டும். வெண்காயம் நல்லாய் விளைஞ்சுதென்றால் முதல் வேலை உங்களைக் கூட்டியாறது தான்'' என்றாள் ஈஸ்வரி.

கதிரேசன் சிரித்தார். ஈஸ்வரி கட்டிக் கொடுத்த தோசையை வாங்கிக் கொண்டு மகா கணபதி ஆலயத்திற்கு வந்தார்.

''எங்கை கதிரேசண்ணை போனனீங்கள்? தேத்தண்ணீர் வைத்து விட்டு உங்களைக் கோயில் முழுக்கத் தேடினனான். சொல்லிப் போட்டுப் போகக் கூடாதே. குருக்களின்ரை பேரன் பிரசாதம் கொண்டு வந்து தந்தவர்'' என்றார் மூர்த்தி.

''தங்கச்சி வீட்டை போனனான். தோசை தந்தவள் எல்லோருக்கும் பங்கிட்டுக் குடு'' என்றவாறு தான் கொண்டு வந்த தோசைச் சரையை மூர்த்தியிடம் கொடுத்தார் கதிரேசன்.

''வேறு ஒருத்தரென்றால் சாப்பிட்டு விட்டு வந்திருப்பார்கள். நீங்கள் எங்களுக்கும் கொண்டு வந்திருக்கிறியள்'' என்றார் மூர்த்தி.

''தான் பெற்ற உணவை பசித்திருப்போரோடு பகிர்ந்து உண்பவனை ஒரு போதும் பசி என்ற கொடிய பிணி வருத்தாது. கொடுப்பவனுக்குக் கொடுக்க இறைவன் காத்திருக்கிறார். உணவு இல்லாத வேளையில் கூட எனது

தங்கை உங்களுக்கும் சேர்த்துத் தான் தருவாள். அதனால் கஸ்ட மென்றாலும் அன்றன்றைக்கு ஏதோ உணவு அவர்களுக்குக் கிடைக்கிறது'' என்றார் கதிரேசன்.

227. பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

தான் பெற்ற உணவைப் பிறருடன் பகிர்ந்துண்ணும் வழக்கம் உடையவனைப் பசி என்னும் தீய நோய் நெருங்க மாட்டாது.

## இன்பம் அறியாதோர்

நாவலடிக் கிராமத்தில் தங்க ஆபரணங்கள் விற்பனை செய்யும் மயில் வாகனத்தின் வீட்டுக்குச் சென்ற திருடர்கள் ஆயுத முனையில் மயில்வாகனத்தை மிரட்டி அவர் விற்பனைக்காக வைத்திருந்த பல இலட்ச ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்று விட்டனர். மயில்வாகனத்தையும் குடும்பத்தவர்களையும் கட்டி, வாய்க்குள் துணி அடைந்து வைத்திருந்ததால் அவர்களால் கத்தி அயலில் இருந்தவர்களை அழைக்க முடியவில்லை. காலை ஒன்பது மணிக்கு அவரது கடையில் வேலை செய்யும் குலசிங்கம் கடையைத் திறக்கவென வந்த போது, கடை உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப் பட்ட விடயம் ஊரவருக்குத் தெரிந்தது.

அன்று மாலை சேனாதிராஜா மயில்வாகனத்தின் வீட்டுக்குத் துக்கம் விசாரிக்கச் சென்றார். தோட்ட வேலைகள் இல்லாத பெரும்பான்மையான நாட்களில் சேனாதிராசா மயில்வாகனத்தின் வீட்டில் தான் வேலை செய்வார். மற்றைய இடங்களில் கொடுக்கப்படும் கூலியை விட மயில்வாகனம் குறைத்துத்தான் சேனாதிராசாவுக்குக் கூலி கொடுப்பார். வருடத்தில் அனேகமான நாட்கள் அவரின் வீட்டில் வேலை செய்தால் அவர் கொடுக்கும் கூலியை மறுபேச்சின்றி சேனாதிராஜா வாங்கிக் கொள்வார். அத்துடன் கூலி கொடுக்கும் போது சேனாதிராசாவுக்குக் குட்டிப் பிரசங்கம் ஒன்றும் செய்வார். மயில்வாகனம்; ''சேனாதி பணத்தை நாம் மிகவும் கஷ்டப்பட்டுத் தேடுகிறோம். அப்படித் தேடிய பணத்தைக் கண்டபடி செலவு செய்தால் நானும் எதிர்காலத்தில் உன்னைப் போல கூலி வேலை செய்ய வேண்டித்தான் வரும். இறைவன் எல்லோருக்கும் ஒழுங்காகத்தான் கைகால்களைப் படைத்துள்ளான். நான் சம்பாதிப்பதைப் போல் உன்னால் ஏன் சம்பாதிக்க முடியவில்லை. சோம்பியிருப்பதும், வரவுக்குமிஞ்சிச் செலவு செய்வதும், புகழுக்காக தான தர்மங்கள் செய்வதும் தான் உன் போன்றவர்களின் வாழ்வில் சதா துன்பத்தைக் கொடுக்கின்றன. எமது ஊரில் வாழும் தணிகாசலத்தைப் பார். முழுமடையன் கேட்பவர்களுக்கெல்லாம் கொடுத்து விட்டு நல்ல வீடோ அல்லது நல்ல உணவோ இல்லாமல் கஷ்டப்படுகிறான். உழைக்கிறத்தைத் தான தர்மம் செய்தால் அவன் மட்டுமில்லை. அவன்ரை பிள்ளைகளும் பின்னடிக்குக் கஷ்டப்படுங்கள். ஒரு மாப்பிளை எடுப்பதானால் எத்தனை இலட்சங்கள் கொடுக்க வேண்டும். நான் என்னுடைய மகளுக்கு பெரிய

உத்தியோகத்தனாகப் பார்த்துத் திருமணம் செய்து வைப்பேன். தணிகாசலத்தாலை அது முடியுமா...?'' என்பார்.

சேனாதிரஜா அவர் கூறுவதற்கு ஆமாப் போடுவான். வாய் திறந்து எதுவும் கதைக்க மாட்டான்.

ஒரு நாள் அவன் தனது மகனின் கல்வித் தேவைக்காகக் கொஞ்சப் பணம் மயில்வாகனத்திடம் கேட்டான்; ''உழைக்கிற காசு முழுவதையும் செலவு செய்து ஆடம்பரமாக வாழக் கூடாது. சிறிய தொகையென்றாலும் சேர்த்து வைத்தல் வேண்டும். எமக்கு யாரும் உதவுவார்கள். என்று நினைக்கக் கூடாது. அடுத்தவரின் உதவியில்லாமல் வாழப்பழக வேண்டும். இவ்வளவு காலமும் உழைக்கிற நீ உன்னுடைய மகனின் கல்விச் செலவுக்காகத் திட்டமிட்டு சேமிக்க ஏன் தவறினாய். இவ்வளவு காலமும் சேமிக்காத நீ எப்படி இனிச்சேமித்து எனது கடனை அடைப்பாய்'' என்று கேட்டார் மயில்வாகனம்.

சேனாதிராசாவுக்கு அவமானமாக இருந்தது. அதனால் அவன் எதுவும் பேசாது சென்று விட்டான். அவனால் மயில்வாகனத்தின் பேச்சைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பலவருடகாலமாக அவரின் வீட்டில் நம்பிக்கையுடனும் நேர்மையுடனும் வேலை செய்த அவனுக்கு மகனின் கல்வித் தேவைக்காகக் கேட்ட பணத்தை மயில்வாகனம் கொடுக்காமல் விட்டது வேதனையைக் கொடுத்தது. அதனால் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்குச் சென்றார். அங்கே தணிகாசலம் இருந்தார்.

''என்ன சேனாதி ஒரு மாதிரியாக இருக்கிறாய்?''

''ஒண்டுமில்லை ...'' சேனாதிராசாவின் குரல் கரகரத்தது.

''சொல்லு... சொல்லு ஏதோ இருக்கு நான் உதவி செய்யிறன்''

சேனாதிராஜா மயில்வாகனம் கூறியவற்றைக் கூறினார்.

''உண்டவனுக்குத் தான் உணவின் சுவை தெரியும். சேவை செய்பவனுக்குத்தான் அதன் மகிமை புரியும். தான தர்மம் செய்பவனுக்குத் தான் அதனால் ஏற்படுகின்ற உயர்ந்த இன்பத்தைப் பற்றித் தெரியும். சுவையான உணவுகளை உண்ணாதவனிடத்தில் உணவின் சுவையைப் பற்றிப் பேசி என்ன பயன். அதைப் போல் கொடுக்காதவனைப் பற்றிப் பேசிப் பயனில்லை. ஒருவன் பொருளைத் தேடுவது தான் அனுபவிக்கவும் ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கவும் தான்; சேமித்து வைப்பதற்கல்ல. சேமித்து வைத்த பொருட்களைப் பிறருக்கு உதவாதும் வைத்திருந்து, பின் அதை இழந்து வருந்தும் கொடிய நிலமை கொடுப்பதால் ஏற்படும் உயர்ந்த இன்பத்தை அனுபவிப்பவர்களுக்கு ஏற்படாது'' தணிகாசலம் கூறிய வார்த்தைகள் சேனாதிராசாவின் காதில் ஒலித்தன.

“நான் யாருக்குக் கெடுதல் செய்தேன். கூலியைக் கொடுக்காமல் விட்டேனா…? களவெடுத்தேனா…? கலப்படம் செய்தேனா…? இல்லை அநீதியான முறையில் நடந்தேனா…. இரவும் பகலும் கஷ்டப்பட்டு சேமித்த அனைத்தையும் ஓரிரவில் கொள்ளையடித்து விட்டார்களோ..” என்று சேனாதிராஜாவைக் கட்டிப் பிடித்து அழுதார் மயில்வாகனம்.

228. ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்துஇழக்கும் வன்க ணவர்?.

பிறருக்கு உதவாமல் பொருட்களைச் சேர்த்து வைத்திருந்து பின் அதை இழந்து விடும் தீயவர்கள், கொடுத்துதவுவதால் உண்டாகும் பேரின்பத்தை அறியமாட்டார்கள்.

## கொடும் துன்பம்

கதிரேசன் தோட்டம் செய்யும் காலத்தில் மயில்வாகனம் வாடிக்கையாக மரக்கறி வகைகளைக் கதிரேசனிடம் வாங்குபவர். கதிரேசன் தினமும் காலையில், முதல் நாள் மயில்வாகனத்தின் மனைவி கூறிய மரக்கறி வகைகளைக் கொண்டு சென்று கொடுப்பார். வாரத்திற்கு ஒரு முறை கதிரேசன் கொடுத்த காய்கறிகளின் விபரங்களை எழுதித் தினமும் கொடுக்கப்பட வேண்டிய பணத்தையும் குறித்துக் கொடுப்பார். சந்தை விலையிலும் பார்க்க சிறிதளவு விலை குறைவாகவே அவரின் விலை குறிக்கப்பட்டிருக்கும். பணம் கொடுக்கும் போது; “சந்தையில் விலை கொஞ்சம் கூடத்தான். ஆனால் சந்தைக்குப் போனால் தரகு காசு கொடுக்க வேண்டும்” என்பார். கதிரேசன் அவர் சொல்வதற்கு ஒரு நாளும் மறு மொழி கூறியது கிடையாது. மறுநாள் அவர் மரக்கறி வகைகளைக் கொண்டு செல்லும் போது அவரது மனைவி; கதிரேசு அவர் சொல்லுறத்தை நீ காதில் வாங்கிக் கொள்ளாதை. அந்தாள் சகோதரங்களுக்கே எதுவும் கொடுக்க மாட்டாது. கொடுத்தாலும் எழுத்துக்கணக்கோடு தான் கொடுக்கும். பிறகு அவர்கள் கொடுக்காவிட்டால் பலருக்குச் சொல்லும். அதனால் மானத்துக்குப் பயந்து அவர்கள் கொடுத்து விடுவார்கள். நல்ல மரக்கறிகளாகக் கொண்டு வந்து தா. நானுனக்குக் காசு தாறன்” என்று சொல்லிக் காசு கொடுப்பாள். அது சந்தை விலையிலும் பார்க்கக் கூடுதலானதாக இருக்கும். மயில்வாகனத்திற்கு எதிர் மாறானவர் அவரின் மனைவி திலகவதி.

ஒரு முறை கதிரேசனுக்கு மிகவும் அவசரமாகப் பணம் தேவைப்பட்டது. கதிரேசன் ஊரில் உள்ள பெரும்பான்மையானவர்களுடன் கலகலப்பாகப் பேசமாட்டார். தானுண்டு தனது வேலை உண்டு என்று இருந்து விடுவார். அதனால் பணம் தேவைப்பட்ட போது தணிகாசலத்திடம் சென்றார். அந்த நேரம் தணிகாசலம் வீட்டில் இருக்கவில்லை. தணிகாசலத்தின் மனைவி தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்தியுடன் கல்வித் திணைக்களத்திற்குச் சென்று விட்டதாகக் கூறினாள். அதனால் கதிரேசன் மயில்வாகனத்தின் வீட்டுக்குச்

சென்றார். மயில்வாகனம் அப்பொழுது வீட்டில் இருந்தார். கதிரேசனைக் கண்டதும்; என்ன வேண்டும்? என்று கேட்டார்.

‘‘அவசரமாகப் பணம் கொஞ்சம் தேவைப்படுகிறது. தந்தீர்களானால் இரண்டொரு தினங்களில் திருப்பித்தந்து விடுவேன்’’ என்றார்.

‘‘என்னிடம் இப்பொழுது பணம் இல்லைக் கதிரேசு. வேறு யாரிடமாவது கேட்டுப் பார்’’ என்று கூறிவிட்டு எழுந்து சென்று விட்டார் மயில்வாகனம்.

மறுநாள் மரக்கறிவகைகளுடன் வந்த கதிரேசனைப் பார்க்கத் திலகவதிக்கு வெட்கமாக இருந்தது. பல இலட்சரூபா பெறுமதியான தனது கணவன் ஏன் இப்படிக் கஞ்சத்தனமாக நடந்து கொள்கிறார் என மனவருத்தப்பட்டாள்.

‘‘கதிரேசு, நீ நேற்று அவரிடம் பணம் கேட்டு வந்ததாகச் சொன்னார். ஒருவன், தான் சம்பாதிக்கும் பொருளை மற்றவனுக்குக் கொடுத்துதவ வேண்டும். இல்லாவிட்டால் அப்பொருளால் பயன் ஏதும் இல்லை. எனது கணவர் எனது செலவுக்கே பணம் தரமாட்டார். தேவையான பொருட்கள் முழுவதையும் வாங்கி வந்து தருவார். கேட்டால் உனக்கேன் காசு என்பார். எனது தம்பிக்கு அவரின் குணம் தெரியும். அதனால் மாதம் மாதம் எனக்குக் கைச்செலவுக்கு ஏதாவது தருவான். அவனும் குடும்பஸ்தன். அவனுக்குக் கரைச்சல் தான். சொன்னாலும் கேட்க மாட்டான். எனக்கு என்னத்துக்குக் காசு. உனக்கு மரக்கறிக்குத் தரும் காசு போதாது அதனால் தான் அவனிடம் வாங்கி உனக்குத் தருகிறேன்’’. என்றாள் அவளது கண்கள் கலங்கின.

கதிரேசனுக்கு வேதனையாக இருந்தது; ‘‘தன்னிடம் உள்ள பொருட்களை ஈயாமல் தானும் தன்குடும்பமும் அனுபவிக்கும் தன்மை, இல்லை என்று யாசிப்பதை விடக் கேவலமானது என்று அடிக்கடி தணிகாசலம் கூறுவது அவருக்கு நினைவுக்கு வந்தது.

இலட்சக்கணக்கில் பொருட்களை வைத்திருக்கும் மயில்வாகனம் பிறருக்குக் கொடுக்காவிட்டாலும் மனைவியின் தேவைக்காவது கொடுக்காமல் இருப்பது கதிரேசுவிற்கு மனவருத்தத்தைக் கொடுத்தது. அத்துடன் குடும்பஸ்தனான திலகவதியின் சகோதரன் தனக்காக இரங்கிப் பணங் கொடுப்பதையும் அவர் விரும்பவில்லை. அதனால் அவர் அன்றிலிருந்து திலகவதியிடம் பணம் பெறுவதை நிறுத்திக் கொண்டார்.

மயில்வாகனத்தின் கடை கொள்ளையிடப்பட்டதை அறிந்த ஊரவர்கள் சிலர் அவரின் வீட்டுக்குத் துக்கம் விசாரிக்கச் சென்றனர். கதிரேசனுக்கு அங்கு செல்ல விருப்பமில்லை. ஆனால் அடிக்கடி அவரின் மனதில் திலகவதியின் அழுத முகம் தோன்றியது. அதனால் அங்கு சென்றார்.

வாசலில் பிணத்தைப் போல் அசைவற்றிருந்த மயில்வாகனம் கதிரேசனைக் கண்டு கொள்ளவில்லை. அதனால் வீட்டின் பின் பக்கம் சென்றார்.

திலகவதி கதிரேசனைக் கண்டு பெருங்குரலெடுத்து அழுதாள்; ‘‘கதிரேசு பெரும் பணம் படைத்த எனது கணவன் தான தர்மம் செய்யாது தான் தேடிய பொருட்கள் அனைத்தையும் தானே அனுபவிக்கவெனச் சேமித்து வைத்தார். இன்று எல்லாம் போய்விட்டது. அவர் பணம் இருந்த போதும் தான தர்மம் செய்யாததால் வறியவனைப் போலவே வாழ்ந்தார். இன்று பொருட்கள் எல்லாவற்றையும் இழந்து வறியவனாகி விட்டார்’’ என்றாள்.

கதிரேசன் மௌனமாக இருந்து அவள் அழுதழுது சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

229. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

தன்னிடம் குவிந்துள்ள பொருட்களைக் கொடுத்துதவாமல் தான் மட்டுமே அனுபவிக்கும் தன்மை, பிச்சை எடுப்பதை விடத் துன்பமானது.

## சாதல் நன்று

‘‘கதிரேசு இந்தப் பொருளெல்லாம் களவு போனதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைக்கக்கூடாது என்று ஔவையார் சொல்லியிருக்கிறார். என்னுடைய கணவர் பாடுபட்டுத் தேடிய பணத்தை இரப்பவர்களுக்கு ஈயாது சேமித்து வைத்தார். பொருள் உள்ளவன் இல்லாதவனுக்குக் கொடுத்துதவ வேண்டும். கொடுக்காத பொருளால் என்ன பயன்? தான தர்மம் செய்யாவிட்டாலும் கடனாகவாவது கொடுத்துதவி செய்யலாம். ஆனால் இவர் கடனாகக் கூட யாருக்கும் கொடுக்க மாட்டார். இவரது உடன் பிறந்த சகோதரர்கள் மூவர் மிகவும் ஏழ்மையான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கே அவர் உதவி செய்வதில்லை. இவரது மூத்த சகோதரன் பத்து வருடங்களுக்கு முன்பு காலமாகி விட்டார் இரண்டு பொம்பிளைப் பிள்ளைகள் மூத்தவளுக்கு முப்பத்தைந்து வயது. எத்தனையோ சம்பந்தங்கள் பேசி வந்தும் சீதனமின்மையால் குழம்பினது. இந்தாள் நினைத்திருந்தால் எப்பவோ செய்து கொடுத்திருக்கலாம்’’ பெருமூச்சு விட்டாள் திலகவதி.

கதிரேசன் எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தார். அவரது மூத்த சகோதரனை அவருக்குத் தெரியும். அவன் இருதய நோயாளி. வேலை செய்ய முடியாதிருந்த அவனுக்கு கதிரேசன் நன்றாக இருந்த காலத்தில் அடிக்கடி உதவி செய்வார். அப்பொழுது அவன் சொல்வான்; ‘‘ நீங்கள் எனக்குச் சொந்தமில்லை. இருந்தும் எனது நிலையைக் கண்டு பொறுக்க முடியாது அடிக்கடி உதவி செய்கிறீர்கள். எனது கூடப்பிறந்த சகோதரன் நல்லாயிருக்கிறான். என்னைப் பற்றிச் சிந்திக்கிறதே இல்லை. குடும்பத்திற்குத் தான் உதவ வேண்டாம். எனது மருத்துவச் செலவுக்காவது ஏதாவது தந்துதவலாம் தானே. எத்தனையோ முறை கேட்டுப் பார்த்தும் ஒரு சதம் கூட தரமறுக்கிறான்’’.

‘‘கதிரேசு...’’ திலகவதி அழைத்தாள். நினைவுகளில் இருந்து திடுக்கிட்டுத் திரும்பிய கதிரேசன் திலகவதியைப் பார்த்தார்; ‘‘வறுமை தான் உலகில் துன்பமானது. சொந்தச் சகோதரனின் வறுமையைப் போக்காத பொருள் இருந்தென்ன இல்லாமல் போனால் என்ன? இரண்டு வாரங்களுக்கு முன்பு இவரது மூத்த சகோதரனின் மனைவி வந்து என்னுடன் அழுதாள்; ‘‘தனது மகளுக்கு ஒருவரன் பேசி வந்திருக்கலாம். தமது தோட்டக் காணியையும் கொடுத்து நகையும் போட்டு விட்டால் சம்மந்தம் ஒப்பேறுமாம். ஐந்து பவுண் நகை தம்மிடம் இருக்கலாம். இன்னும் ஒரு ஐந்து பவுண் நகை போட்டால் சம்பந்தம் சரிவரும் என்றாள். என்னாலை அவளுக்கு உதவி செய்ய முடியேல்லை. அவள் என்னிடம் வந்ததே நான் ஏதாவது உதவி செய்வேன் என்ற நோக்கத்தில் தான் அவள் வந்து என்னிடம் சொன்னாள். என்னிடம் நூறு பவுண் நகை இருக்கு. அதில் ஐந்து பவுனைக் கொடுப்பது பெரிய காரியமல்ல. இருந்தும் எனக்கு உரிமை இல்லாத பொருளை எப்படி நான் கொடுக்க முடியும்? நான் போட்டிருக்கிற நகை முழுவதும் அவர் வாங்கித் தந்தது. அடிக்கடி எனது நகையை கழுவித் தருகிறேன் என்று கேட்டு வாங்குவார். அப்படி இருக்க எப்படி என்னால் கொடுக்க முடியும்’’ அழுதாள் திலகவதி.

கதிரேசன் யாருடனும் கலகலப்பாகப் பேசிப் பழக்கப்பட்டவரல்லர். அதனால் திலகவதிக்கு ஆறுதல் கூறக்கூடத் தோன்றாது. சிறிது நேரம் எதுவும் பேசாமல் இருந்தார். பின்; ‘‘அழாதை பிள்ளை எல்லாம் அவரவர் தலைவிதி’’ என்றார்.

‘‘தலைவிதி என்று சொல்வதை நாம் நம்ப மாட்டன் கதிரேசு இவரிட்டை ஏராளமான பணம் இருக்கு. கொஞ்சப் பணத்தைக் கொடுத்தால் அவளது திருமணம் நடைபெறும். தணிகாசலம் அண்ணையைப் பாருங்கோ பெரும் வசதியில்லாதவர். யார் கேட்டாலும் உடனை உதவி செய்கிறார். பத்து வருடங்களுக்கு முன்னம் நாங்கள் சாதாரணமாக இருந்தனாங்கள். அப்ப அவருடைய காணியை வாங்கி சிவசுந்தரமூர்த்தியிடம் ஈடுவைத்துத் தான் நாங்கள் நகைக்கடையை ஆரம்பித்தனாங்கள். அப்படிப்பட்ட தணிகாசலம் ஒரு முறை வந்து தனக்குக் கொஞ்சப் பணம் தரும்படி கேட்டும் இவர் கொடுக்கவில்லை. தான் உழைத்துப் பொருட்களைத் தேடி தான் வாழ வேண்டும் என்று நினைக்கிறார். அது தான் எனக்குக் கவலையாக இருக்கிறது’’ என்றாள் திலகவதி.

மனிதவாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தார் கதிரேசன்; ‘‘பொருள் இருந்து என்ன பிரயோசனம். இலட்சக் கணக்கில் சொத்திருந்தும் செலவு செய்ய முடியாத ஏழைகளாகத் தானே பலர் இன்று உலகில் வாழ்கிறார்கள். அதை விட எம்போன்ற ஏழைகள் எவ்வளவோ மேல்’’

‘‘கதிரேசு சாவதை விடத் துன்பமானது உலகில் எதுவும் இல்லை என்று பெரியவர்கள் கூறுவார்கள். அதை விட பொருள் இருந்தும் ஏழைகளுக்கு உதவமுடியாத நிலை வந்தால் வாழ்வதை விட சாவது மேலானது.

ஏழைகளுக்கு உதவாத எனது கணவரோடு இருந்து வாழ்வதை விட செத்துப் போனால் பரவாயில்லை’’ என்றாள் திலகவதி.

“ஐயையோ அப்படிச் சொல்லாதை பிள்ளை. உன்னை நம்பி இரண்டு வயது வராத பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களை வளர்த்து ஆளாக்க வேண்டியது உனது கடமை. அதை எக்காரணம் கொண்டும் மறந்திடாதை. உன்னுடைய கணவனுடன் உன்னுடைய பிள்ளைகள் கடைசி வரையும் வாழமாட்டார்கள்’’ என்றார் கதிரேசன். அவரின் குரல் தழுதழுத்தது.

திலகவதி பாசத்துடன் அவரது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவரது கனிவான சொற்கள் அவளது மனதிற்கு இதமளித்தன.

230. சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக் கடை.

சாவதை விடத்துன்பமானது வேறெதுவும் இல்லை. ஆனால் வறியவர்களுக்கு உதவமுடியாத நிலை வந்தால் இறந்து விடுவது இனிமையானது

## ஊதியம்

மயில்வாகனத்தின் ஆபரணக் கடை கொள்ளையடிக்கப்பட்டு ஒருவாரம் கழிந்தும் கொள்ளையடித்தவர்களைப் பற்றிய தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. மயில்வாகனம் காவல்த்துறை அலுவலகத்திற்குத் தினமும் காலையும் மாலையும் சென்று விசாரித்து வந்தார்.

தகவல்கள் எதுவும் கிடைக்காததால் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையை மயில்வாகனம் இழந்து விட்டார். அதனால் பைத்தியக்காரனைப் போல் வீட்டில் வாய்புலம்பியபடி இருந்தார். அவர் உணவு உண்பதில்லை. அதனால் பயந்த திலகவதி அயல் ஊரில் வாழ்ந்து வரும் தனது தந்தையாரிடம் சென்று தனது கணவனின் நிலையைப்பற்றிச் சொன்னாள். திலகவதியின் தந்தை மிகவும் நல்லவர் தானதர்மம் செய்பவர்; ஊரில் நல்ல முறையில் வாழ்பவர். எனினும் அதிகம் வசதியானவர் அல்லர்.

மகளின் துயரமான வார்த்தைகளினால்த் துன்பப்பட்ட பஞ்சலிங்கம் தனது மருமகனைப் பார்ப்பதற்காகத் திலகவதியின் வீட்டுக்கு வந்தார். மருமகன் வீட்டின் முன் நின்ற வேப்ப மரத்தின் கீழ் விசரனைப் போலப் படுத்திருந்தார்.

பஞ்சலிங்கம் தனது வீட்டில் இருந்து மருமகனைப் பார்ப்பதற்காகப் புறப்பட்ட போது அவரது நண்பர்கள், அயலவர்கள், உறவினர்கள் பலர்

அவருடன் புறப்பட்டனர். பஞ்சலிங்கம் அவர்களைத் தடுத்த போதும் அவர்கள் பஞ்சலிங்கத்துடன் புறப்பட்டு வந்தனர்.

மாமானாருடன் வந்த பலரைக் கண்டதும் மயில்வாகனம் எழுந்தார். இவர்களெல்லாம் எனது நண்பர்கள். நான் எவ்வளவோ தடுத்தும் கேளாது எனது துயரில் பங்கேற்க வென்று நெடுந்தூரத்தில் இருந்து வந்துள்ளார்கள்'' என்றார் பஞ்சலிங்கம்.

மயில்வாகனம் அவர்களைப் பார்த்தார். சுமார் ஐம்பது பேர் நின்றனர்; ''பஞ்சலிங்கத்தின் மகளின் வீட்டில் கொள்ளையடித்து விட்டார்கள் என்பதற்காக அயல் ஊரில் இருந்து பலர் துக்கம் விசாரிக்க வந்திருக்கிறார்கள். இந்த ஊரில் நான் பிறந்து இவ்வளவு காலமும் வாழ்ந்தும் நாலைந்து பேரைத் தவிர வேறு எவரும் எனது வீட்டுக்குத் துக்கம் விசாரிக்க வரவில்லையே..? சேனாதிராசாவும் கதிரேசனும் திலகவதிக்காகத்தான் வந்தவர்கள். தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் தனபாலசிங்கமும் எல்லோருடைய வீட்டிற்கும் நல்லது கெட்டது நடந்தால் செல்பவர்கள். இவர்களைத் தவிர வேறு எவரும் வராதது மயில்வாகனத்திற்குத் துக்கமாக இருந்தது.

''உங்களது மாமா மிகவும் நல்லவர். ஊரில் உள்ளவர்களின் வீடடில் நடைபெறும் கஷ்ட நஷ்டங்களில் பங்கேற்பவர். அனாதைகளுக்கும் ஏழை எளியவர்களுக்கும் தன்னாலான உதவிகளைச் செய்பவர். ஊரில் அவரில்லாமல் எந்தவொரு நல்ல காரியமோ கெட்டகாரியமோ நடைபெறாது. அவரது மகளின் வீட்டில் நடைபெற்ற துயரமான இச் செயலை நாங்கள் எங்கள் வீட்டில் நடந்ததாக எண்ணிக் கவலைப்படுகிறோம். காலம் பகைத்தால் இப்படியெல்லாம் நடைபெறும். கவலைப்படாதைங்கோ'' திரும்பவும் நீங்கள் தொழில் தொடங்குவதற்கு எம்மாலான உதவிகளை நாம் செய்யத் தயாரா உள்ளோம். கைவிட்டுப் போன பொருளை நினைத்துக் கவலைப்பட்டால் துன்பமும் துயரமும் தான் மிஞ்சும். அத்துயரம் உங்கள் உடலை அரித்து அழித்து விடும். தொலைந்த பொருட்கள் கட்டாயம் திரும்பவும் உங்களுக்குக் கிடைக்கு மென்றே நான் எண்ணுகிறேன். பஞ்சலிங்கம் அண்ணை செய்த தான தர்மங்கள் வீண் போகாது'' என்றார் ஒரு பெரியவர்.

''பஞ்சலிங்கண்ணை வறுமைப் பட்டவர்களுக்கு தன்னாலியன்றதை எந்நாளும் கொடுப்பவர். அத்துடன் ஊரவர்களுடன் ஒத்து இசைவாக நடப்பவர். அதனால் தான் நாங்கள் எல்லோரும் கூடி வந்தோம். பஞ்சலிங்கண்ணைக்காக எங்கள் கிராமம் எதையும் செய்யும். அந்தளவில் புகழ் மிக்கவர் அவர். எமது ஊரானால் கொள்ளை அடித்தவர்களை நாமே கண்டு பிடித்திருப்போம். இந்த ஊர் ஒற்றுமை இல்லாதது. இரண்டு வருடங்களுக்கு முன்பு எமது ஊரில் கடை வைத்து நடத்தும் புஸ்பநாதன் என்பவரின் கடை உடைத்துக் கொள்ளையிடப்பட்டது. புஸ்பநாதன் மிகவும் நல்லவர். ஏழைகளுக்குத் தானதர்மம் செய்து புகழ்பெற்றவர். அதனால் ஊரவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து களவெடுத்தவனைத் தேடிப் பிடித்து

விட்டோம். புஸ்பநாதனுடைய சொத்து ஏழைகளின் சொத்து'' என்றார். இன்னொரு பெரியவர்.

''வறுமைப்பட்டவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து அதன் மூலம் புகழ் உண்டாக வாழவேண்டும். அந்தப் புகழைத்தவிர ஒருவருக்கு உயர்ந்தது இவ்வுலகில் வேறெதுவும் இல்லை. பஞ்சலிங்கம் அப்படித்தான் வாழ்ந்தவர். அதனால் அவரது மகளுக்கு எந்தக் கேடும் வராது'' என்றார் இன்னொருவர்.

அவற்றைக் கேட்க மயில்வாகனத்திற்கு வெட்கமாக இருந்தது; நான் ஊரில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல உற்றார் உறவினருக்கே உதவி செய்வதில்லை. அப்படி இருக்க யார் வந்து எனக்கு உதவி செய்வார்கள். எனது மூத்த சகோதரன் இருதயநோயால் கஸ்டப்பட்ட காலத்திலும் நான் அவருக்கு உதவி செய்யவில்லை. பின் அவரது மகளுக்குத் திருமணம் பேசி வந்த போதும் உதவி செய்யவில்லை. ஆனால் மாமா செய்த உதவிகளுக்காக எவ்வளவு பேர் என்னைத் தேடி வந்திருக்கிறார்கள். நானும் உதவி செய்திருந்தால் மக்கள் தேடி வந்திருப்பர். கொள்ளை அடித்தவர்களையும் பிடித்தும் தந்திருப்பர். அத்துடன் பெரும் புகழும் கிடைத்திருக்கும்'' என்று எண்ணினார் மயில்வாகனம்.

231. ஈதல்; இசைபட வாழ்தல்; அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

வறியவர்களுக்கு உதவி செய்து, அதன் மூலம் புகழ் பெற்று வாழ வேண்டும். அந்தப் புகழைத் தவிர உயிர்களுக்கு நன்மை தருவது வேறொன்றும் இல்லை.

## புகழ்

கவலையுடன் நிலத்தில் அமர்ந்திருந்த தனது மருமகனான மயில்வாகனத்தைப் பார்த்துப் பஞ்சலிங்கம் சொன்னார்; ''தம்பி களவு போய் ஒரு கிழமையாச்சுது. உங்கடை ஊரிலை மிகவும் பிரசித்தி பெற்ற கோயில் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி கோயில் அதை விட அங்கு இருக்கிற ஸ்ரீனிவாசன் சுவாமிகளைத் தரிசிப்பதற்காக எல்லா ஊர்களில் இருந்தும் மக்கள் வாறவை. கோயில் குருக்கள் பார்வை பார்த்து நூல் கட்டினால் தீராத நோயெல்லாம் தீர்ந்திடுமென்று எங்களூரிலேயே கதைப்பார்கள். அதை விட சோதிடமும் நல்ல முறையில் பார்ப்பார். கோயிலுக்குப் போனனீங்களே..''

மயில்வாகனம் தலையைக் குனிந்து கொண்டிருந்தார். வெகு நேரமாக அவர் எதுவும் சொல்லாததால் திலகவதி சொன்னாள்; ''அவருக்கு கோயிலும் சாத்திர சம்பரதாயங்களிலும் நம்பிக்கை இல்லை. அதனால் அவர் போறதில்லை''.

அது தெரிந்து தான் அவர் அப்படிக் கேட்டார். எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்ச் சொன்னார்; ‘‘துன்பம் வந்த நேரங்களில் எமக்குக் கடவுள் தான் துணையாக இருப்பார். அவரால் தான் துன்பப்பட்டோருக்கு ஆறுதலளிக்க முடியும். எழும்பிக் குளிச்சிட்டு வாருங்கோ கோயிலுக்குப் போட்டு வருவம்’’.

சிறிது நேரம் அசையாமல் இருந்த மயில்வாகனம் பின் எழுந்து கிணற்றடிக்குச் சென்றார். பஞ்சலிங்கத்துடன் கூட வந்தவர்களும் அவர்களுடன் கோயிலுக்குச் சென்றனர். அரச மரநிழலில் ஸ்ரீனிவாசன் சுவாமிகள் இருந்தார். அவரைச் சுற்றி ஏராளமான மக்கள் இருந்தனர். பஞ்சலிங்கமும் மயில்வாகனமும் திலகவதியும் அவர்களுடன் கூட வந்தவர்களும் சுவாமியாரின் அருகில் சென்று அமர்ந்தனர்.

மயில்வாகனத்தைக் கண்ட தணிகாசலம் எழுந்து வந்து சொன்னார்; :காலைப் பூசை முடிந்து விட்டது. அடுத்த பூசை பன்னிரண்டு மணிக்குத்தான். இதிலை இருந்து சுவாமியாற்ரை உபதேசத்தைக் கேளுங்கோ. உங்களுக்கு அதிஷ்டமிருந்தால் உங்கள் வீட்டில் நடந்த களவைப் பற்றி சுவாமியார் சொல்லுவார்’’ என்றார்.

‘‘நீங்கள் தேடிய பொருட்கள் யாவும் உங்களுக்குச் சொந்தமானதல்ல. சொந்தமான பொருட்கள் உங்களை விட்டு எப்பொழுதும் பிரிய மாட்டாது என்று எண்ணாதீர்கள். உங்களுடன் கூட வராத பொருட்களை நீங்கள் அறியாமை காரணமாக சொந்தமானது என நினைக்கிறீர்கள். நீங்கள் தேடிய எல்லாப் பொருட்களும் கூட வரவிட்டாலும் நீங்கள் கொடுத்த பொருட்கள் இறந்த பின்பு உங்களுடன் கூட வந்து சேர்ந்தும் இருக்கும், சேவை செய்வதன் மூலம் உண்டாகும் புகழ் முழுவதும் கட்டாயம் கூட வரும். அதிலும் பெருமையாக எந்நாளும் பேசப்படுவது என்ன வென்றால் வறுமையால் துன்பப்படுபவர்களுக்குக் கொடுத்துதவுவரின் புகழே.

‘‘சாதரண மனிதன் தெய்வத்திற்குத் தொண்டு செய்வதைத் தனது கடமையாகக் கொண்டுள்ளான். மேலான மனிதன் வறுமைப்பட்டவர்களுக்குத் தொண்டு செய்வதை நோக்காகக் கொண்டுள்ளான். வறியவர்களுக்குச் செய்யப்படும் உதவிகள் இறைவனுக்குச் செய்யப்படுபவை என சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வூரில் வறியவர்களுக்குத் தொண்டு செய்தவர்கள் நூறாண்டு காலமாக மக்களால் போற்றப்படுகின்றனர்; புகழப்படுகின்றனர்’’

இவ்வூரில் வாழ்ந்த வைத்திலிங்கம் என்பவர் ஏழைகளுக்காக இரங்கி, அவர்கள் கற்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகக் கட்டப்பட்ட கணபதி மத்திய மகாவித்தியாலயத்தின் சேவை உங்களுக்குத் தெரியும். இன்று இந்த மாவட்டத்திலேயே சிறந்த பாடசாலையாக அது மிளிர்கிறது. இப்பாடசாலை கட்டப்படா விட்டால் இங்குள்ள ஏழை மக்கள் பலர் கல்வியைப் பெற்றிருக்க முடியாது. எண்ணிப் பாருங்கள் அமரர் வைத்திலிங்கத்தின் சேவையை’’.

சுவாமியார் சிலகணங்கள் அமைதியாக இருந்தார். மெதுவாக வீசிய தென்றல் காற்றில் சலசலத்த இலைகளின் ஓசை இனிமையாகக் கேட்டது;

“ஏழைகளுக்கு உதவுபவனின் சேவையானது இறைவனின் பாதார விந்தங்களில் சேமித்து வைக்கப்படுகின்றது. அதனால் ஏழைகளுக்கு உதவுபவர்களுக்குத் துன்பங்கள் ஏற்படுவதில்லை. ஆசை, பற்று, அவா, பொறாமை காரணமாகவே துன்பங்கள் ஏற்படுகின்றன. தன்னைப் போல பிறரையும் நேசிப்பவனுக்குத் துன்பங்கள் ஏற்பட மாட்டாது. இவ்வூரில் வாழும் தணிகாசலம், வேலாயுதபிள்ளை தனபாலசிங்கம், விக்னேஸ்வரமூர்த்தி போன்றோர் ஏழைகளுக்காகவே வாழ்கிறார்கள். அதனால் அவர்களுக்குப் புகழ் ஏற்படுகிறதே தவிர துன்பம் ஏற்படுவதில்லை.

சுவாமியாரின் அருளுரையை மயில்வாகனம் கேட்டுக் கொண்டிருந்தான். அவனது மனதில் இனம்புரியாத ஓர் உணர்வு சில்லிட்டுப் பரவியது. பூசைக்கான கோயில் கண்டாமணி அடித்தது. சுவாமிகள் கண்களை மூடி மௌனியானார். அடியார்கள் எழுந்து கோயிலை நோக்கிச் சென்றனர். மயில்வாகனம் சுவாமியாரைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

மெதுவாகக் கண் விழித்தார் சுவாமியார்; “துயரப்படுவதால் ஊழின் பயனைக் குறைக்க முடியாது. பத்து வருடங்களுக்கு முன்பு உனக்கு தணிகாசலம் உதவி செய்யாவிட்டால் நீ இந்த நிலைக்கு வந்திருப்பாயா..? உனக்கு உதவி செய்த தணிகாசலம் அன்று போலவே இன்றும் இருக்கிறான். அதனால் மகிழ்வுடன் இருக்கிறான். நீ உன் உழைப்பை தங்கமாகச் சேமித்தாய் பறி போய்விட்டது. சேவையாக சேமித்திருந்தால் புகழுடன் வாழ்ந்திருப்பாய். பொருள் எல்லோரிடத்தும் வரும் போகும், புகழ் எல்லோர்க்கும் வராது. வந்தால் போகாது. இனியாவது நிலையான பொருளைத் தேடு போ” என்றார் சுவாமியார். மயில்வாகனம் கோயிலை நோக்கிச் சென்றார்.

232. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.

வறுமையால் துன்பப்படுபவர்களுக்கெல்லாம் கொடுத்து உதவுபவர்களைப் பற்றியே எல்லோரும் பெருமையாகப் புகழ்ந்து சொல்வார்கள். அப்புகழ் நிலைத்து நிற்கும்.

## அழியாதது

கணபதி மத்திய மகாவித்தியாலயத்தின் பொன்விழா அன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் நிறுவுனரான கந்தர் வைத்திலிங்கத்தின் உருவப்படத்தை அப்பாடசாலை நிறுவிய போது தரம் ஒன்றில் பாடசாலையில் சேர்ந்து உயர்தரவகுப்பு வரை கற்று, அப்பாடசாலையில் ஆசிரியராகச் சேவையாற்றி, அப்பாடசாலையிலேயே ஓய்வு பெற்ற ஸ்ரீனிவாசன் சுவாமிகள் திறந்து வைத்து உரையாற்றினார்; “அன்பான எமது ஊர்மக்களே, இவ்விழாவிற்குத் தலைமை தாங்கும் அதிபர் அவர்களே இப்பாடசாலை

நிறுவப்பட்ட போது நான் தரம் ஒன்றில் சேர்ந்தேன். நான் தரம் எட்டில் படிக்கும்போது இப்பாடசாலையின் அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி அயற்பாடசாலை ஒன்றில் இருந்து வந்து தரம் நான்கில் சேர்ந்தார். இப்பாடசாலையை நிறுவிய கந்தர் வைத்திலிங்கம் அவர்கள் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். சிங்கப்பூரில் சென்று கடுமையாக உழைத்து வந்து ஊரில் ஏராளமான மேட்டு நிலங்களையும் வயல் நிலங்களையும் வாங்கினார். அவரது மகன் கற்பதற்கு ஊரில் பாடசாலை இல்லாததால் ஐந்து மைல்களுக்கு அப்பாற் சென்று தான் கல்வி கற்க வேண்டிய நிலை இருந்தது. அதனால் ஊரில் தனது சொந்தச் செலவில் இப்பாடசாலையைக் கட்டி தானே ஆசிரியராக இருந்து கற்பித்தார். பின் அவருக்கு உதவியாக அவ்வூர் மக்கள் சிலர் சேர்ந்து கொண்டனர். அதன் பின் அரசாங்கத்தில் இப்பாடசாலையைப் பதிவு செய்தார். சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று பெரும் மாடிக் கட்டிடங்களுடன் மாவட்டத்தில் முதற்தரப் பாடசாலையாகத் திகழ்வதற்கு வைத்திலிங்கமே அத்திபாரமிட்டார். இப்பாடசாலையின் வளர்ச்சியைப் பற்றி நாநூறு பக்கங்களைக் கொண்ட ஒரு நூல் இன்னும் சில மணிநேரத்தில் வெளியிடப்பட்டு ஆய்வு செய்யப்பட இருப்பதால் அதைப்பற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை. ஆனால் நான் தந்தையாக, குருவாக , கடவுளாக நினைக்கும் அமரர் வைத்திலிங்கத்தைப் பற்றி நான் கண்ட உண்மைகளைச் சொல்ல விரும்புகிறேன். முதலில் இப்பாடசாலையை நிறுவிய போது நான்கு பிள்ளைகள் மட்டுமே படித்தனர். ஆரம்பத்தில் கிடுகால்வேயப்பட்ட ஒரு சிறு மண்டபத்திலேயே பாடசாலை நடைபெற்றது. அமரர் வைத்திலிங்கம் அவர்கள் வீட்டில் இருந்து வரும் போது சுடுநீர்ப்போத்தலில் தேநீர் கொண்டு வருவார். வாளி ஒன்றினுள் தண்ணீர் கொண்டு வந்து பானை ஒன்றினுள் ஊற்றி வைப்பார். இடைவேளையின் போது தேநீரும் உணவும் எமக்குத் தருவார். இந்த உணவுக்காக வீட்டில் இருந்து கொண்டு வர முடியாமையால் அமரர் வைத்திலிங்கம் அவர்கள் மண்டபத்தின் நடுப்பகுதியில் அடுப்புமூட்டி கடலை, பயறு, இலைக்கஞ்சி போன்றவற்றைத் தாமே தயாரித்துத் தந்தார். வருட இறுதியில் மேலும் பல மாணவர்கள் சேர்ந்ததால் தனது தென்னந்தோப்பில் உள்ள ஓலைகளைக் கொண்டு வந்து பின்னி, கூலியாட்களுடன் தானும் ஒரு கூலியாக நின்று மண்டபத்தை கட்டுவார். கூரையை வேய்வார். நோய் காரணமாக யாராவது ஒரு மாணவன் பாடசாலைக்கு வரா விட்டால், பாடசாலை விட்டதும் அவனது வீட்டுக்குச் சென்று அவனுக்கு வைத்தியஞ் செய்வார். அமரரது தந்தையாரான கந்தர் அவர்கள் சுதேசிய வைத்தியம் கற்றிருந்தார். அதனால் பச்சிலைகளினதும் மரப்பட்டை, மரவேர் ஆகியவற்றினதும் மருத்துவக் குணங்களை அமரரும் அறிந்து வைத்திருந்தார். இந்த ஊருக்கு அவர்தான் பிதா; கடவுள் என்று நான் சொல்வேன்''.

சுவாமிகள் உணர்ச்சி மேலீட்டால் சிலகணங்கள் கண்களை மூடிக் கொண்டார். அவரது கண்களால் கண்ணீர் வழிந்தது. பின்; ''இறைவன் உயிர்களைப் படைத்துள்ளான். அவை ஒரு போதும் அழிவதில்லை. உடல்களே உடல்களை உருவாக்குகின்றன. அதனால் தான் உடல்கள் அழிகின்றன. அறிவுள்ளவன் என்று சொல்லும் மனிதன் எதை அறிந்து வைத்துள்ளான். உன் உயிர் இருக்குமிடத்தைக் கண்டாயா? இல்லை உனது உயிரைக் கண்டாயா..? காண்பவற்றை நம்பும் மனிதன் காணாத உயிரினால்

இருப்பை இன்று வரை கண்டறிய முடியவில்லை. மெய்ஞ்ஞானிகள் உயிரையும் உடலையும் பிரித்தறிவார்கள். உயிருக்கு உருவமும் இல்லை. புகழ் மரியாதை பெயர் எதுவும் இல்லை. உடலுக்குத் தான் உருவமும் பெயரும் மரியாதையும் உள்ளது. உடலால் செய்யப்படும் சேவைகள் அனைத்திற்கும் உயிர் உறுதுணையாக நிற்கும். ஒரு மனித உடல் சேவையால் பெற்ற ஓங்கு புகழைத் தவிர இவ்வுலகில் அழியாமல் இருப்பது வேறு எதுவும் இல்லை. ஒருவன் அடையும் புகழானது மண்ணுலகு நிலைத்திருக்கும் வரை நிலைத்திருக்கும். அமரர் கந்தர் வைத்திலிங்கம் அவர்கள் நிறுவிய இப்பாடசாலையில் கற்ற கற்கப் போகின்ற ஆயிரக்கணக்கான மாணவர்களின் மனதில் அலர் அழியாது வீற்றிருப்பார். நான் தினமும் கணபதியை பிரார்த்தனை செய்யும் போது கந்தர் வைத்திலிங்கம் அவர்களை என்றும் உன்பாத நிழலில் வைத்திரு என்றும், அவரது பரம்பரை தளைத்து ஊருக்குச் சேவை செய்ய வேண்டும் என்றும் பிரார்த்திப்பேன்; அவர் நினைவாக ஒரு நிமிடம் பிரார்த்திப்போம்''.

233. ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல்.

ஒருவன் பெறும் உயர்ந்த புகழைத்தவிர, இவ்வுலகில் ஒப்பற்ற பொருளாக அழியாமல் நிலை நிற்பது வேறொன்றும் இல்லை.

## வானுலகு போற்றும்

கணபதி மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபரின் வேண்டு கோளுக்கிணங்க அதன் பழைய மாணவரான ஞானப்பிரகாசம், அமரர் கந்தர் வைத்திலிங்கம் அவர்களின் செயல்கள் அடக்கிய 'வைத்திலிங்கம்' என்னும் நூலை வெளியிட்டு வைத்தார். முதல் பிரதியை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராசா பெற்றுக் கொண்டார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி எழுந்து சென்று தலைமை உரையாற்றினார்; ''பெருஞ்சேவையாளரான அமரர் கந்தர் வைத்திலிங்கத்தின் உருவப்படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்த எமது கல்லூரியின் முதல் மாணவரான சுவாமி ஸ்ரீனிவாசன் அவர்களே, எனது குருவான கலாநிதி சிவலிங்கராசா அவர்களே, மற்றும் கல்லூரிச் சமூகத்தினரே இன்று எமது கிராமம் வானுலகு போல அலங்கரிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள அறிஞர்கள் அனைவரும் கூடியுள்ளனர். எமது கிராம மக்கள் மட்டுமன்றி அயற்கிராமங்களில் உள்ள அனேகமான மக்களும், பட்டணத்தில் உள்ள பெரும் பெரும் பிரமுகர்களும் கூடியுள்ளனர். வாசலில் கட்டப்பட்ட மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சிகரத்தைப் போன்ற அழகுள்ள எந்தப் பொருளையும் தாம் இதுவரை பார்க்கவில்லையென இங்கு வந்தோர் கூறக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. 'வைத்தியலிங்கம்' என்ற இந்த நூலில் அமரரது சேவைகள்

அனைத்தும் அடங்கியுள்ளன. எமது ஆசிரியர் திரு ரவீந்திரனது பேரனார் முத்துச்சுவாமி அவர்கள் தான் இதன் முதல் அதிபராவார். அமரர் முத்துச்சாமி இப்பாடசாலையை நிறுவிய 'வைத்திலிங்கத்தின்' மைத்துனராவர். அதனால் வைத்திலிங்கம் தனது மைத்துனரான முத்துச்சாமிக்கு தனது வரலாறு முழுவதையும் கூறியுள்ளார். எழுதியும் வைத்துள்ளார். அதனால் இந்நூலின் சகல பொறுப்புக்களையும் இரவீந்திரன் ஆசிரியரிடடேமே கொடுத்தோம். நல்ல முறையில் அச்சிட்டு இன்று வெளியிடப்பட்ட இந்நூலின் வெளியீட்டுரையை முதல் அதிபரான முத்துச்சாமியின் மகன் தனபாலசிங்கம் அவர்களை ஆற்றும்படி வேண்டிக் கொள்கிறேன்.

அனைவர்க்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, இந்நூலின் வெளியீட்டுரையை ஆற்றுவதில் பெருமகிழ்வு கொள்கிறேன். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ள இந்நூலின் மகத்துவத்தைப் பற்றிப் பல பெரியவர்கள் பேச வந்துள்ளனர். அவர்கள் ஒவ்வொரு கட்டுரையைப் பற்றியும் விரிவாகப் பேசுவார்கள். இந்நூல் காலத்தின் தேவையை அறிந்து வெளியிடப்பட்டுள்ளது. சேவை செய்தவர்களைப் பாராட்டுவதன் மூலம் மற்றவர்களையும் சேவை செய்யத் தூண்டலாம். அடுத்து சேவை செய்தவனை மக்கள் அறிந்து கொள்ளல் வேண்டும். அமரர் வைத்திலிங்கத்துடன் சிங்கப்பூருக்குச் சென்று உழைத்தவர்கள் பலர் அத்துடன் இங்கிருந்து சென்ற சிலர் பாடசாலை கட்ட வென்றும், கோயில்கள் புணரமைக்க வென்றும் அங்குள்ள மக்களிடம் சேகரித்த பணத்தைக் கொண்டு வந்து காணிபூமிகளை வாங்கி தமக்கும் தமது பிள்ளைகளுக்கும் வீடு கட்டினார்களே தவிர ஒரு சதம் கூடப் பொதுவிடயங்களுக்குச் செலவு செய்யவில்லை. இந்நிலையில் அமரர் வைத்திலிங்கம் தான் கஷ்டப்பட்டு உழைத்த பணத்திலேயே இப்பாடசாலையும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தையும் அமைத்தார். அவர் தான் வாழும் வரை இப்பாடசாலைக்கென யாரிடமும் நிதியுதவி கோரவில்லை. அப்படிப்பட்ட ஒரு பெருமகனின் நினைவாக வெளிவந்துள்ள இந்நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்துவதில் பெருமகிழ்வடைந்து உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்''.

அடுத்து இந்நூலின் ஆய்வுரையை கலாநிதி சி.சிவலிங்கராசா நிகழ்த்தினார்; ''பேரன்பு மிக்க தலைவர் அவர்களே, பிரமுகர்களே இம்மகாவித்தியாலயச் சமூகத்தினரே உங்கள் அனைவர்க்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, இப்பாடசாலையை நிறுவிய அமரர் கந்தர் வைத்திலிங்கத்தில் சேவை மலராக வெளி வந்திருக்கும்.

''வைத்தியலிங்கம்'' என்னும் நூலின் ஆய்வுரையை நிகழ்த்துகின்றேன். ஒருவர் இவ்வுலகில் நிலையாக என்றும் நிலைத்திருக்கும் புகழைப் பெற்றால் வானுலகம் தேவர்களைப் போற்றாது அவர்களையே மிகவும் உயர்வாகப் போற்றும். உலகில் மிகச் சிறந்த கொடை என்பது ஒருவனுக்குக் கல்வியறிவை வழங்குவதே மற்றய கொடைகள் யாவும் ஒரு காலத்தில் குறைவடையும், அழிந்து போகும். ஆனால் கல்விக் கொடை நாள்ச் செல்லச் செல்லப் பெருகும். அவனது வம்சத்தைக் காக்கும். ஒரு பரம்பரையை

உருவாக்கும். நல்ல சமூகத்தை உருவாக்கும். ஒரு போதும் அழியாது நிலைத்திருக்கும். இது ஒரு மாணவனுக்கு வழங்கிய கல்விக் கொடையால் உருவாவது. அமரர் வைத்திலிங்கம் அவர்கள் ஆயிரக்கணக்கான மக்களுக்குக் கல்விக் கொடையைக் கொடுத்தார். அவரது மாணவர்கள் அக்கொடையை மூலம் இலட்சக்கணக்கான மக்களுக்கு கல்விக் கொடையை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று கிராமத்தில் உள்ள இப்பாடசாலையில் பட்டணத்தில் உள்ள பெரும் பெரும் பிரமுகர்களின் பிள்ளைகள் பலர் படிக்கிறார்கள். நான் இங்கு கற்கவில்லையே என்ற மன ஆதங்கமும், எனது பிள்ளைகள் இங்கு படிக்கவில்லையே என்ற மனவருத்தமும் எனக்குண்டு. எனது பேரப்பிள்ளைகள் இங்கு தான் படிப்பார்கள். எமது மதம் நற்செயல்களைச் செய்வோர் வானுலகில் தேவருடன் இன்புற்று வாழ்வர் என்று கூறுகிறது. ஆசையால் அமரர் வைத்திலிங்கம் தேவரோடு நிட்சயமாக இருப்பர். பூவுலகில் நடைபெறுபவற்றை அறிந்து கொள்ளும் தேவர்கள் இன்று வானுலகில் அமரர் வைத்திலிங்கத்திற்கு பெருவிழா எடுத்திருப்பர். இல்லா விட்டால் வைத்திலிங்கத்தையும் அழைத்துக் கொண்டு சிறப்பாக நடக்கும். இவ்விழாவைப் பார்க்க வந்திருப்பர்'' கலாநிதி சிவலிங்கராசா பேசும் போது மக்கள் வானதிர கரகோசம் செய்தனர்.

234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

ஒருவர் பூவுலகில் நிலைத்து நிற்கவல்ல புகழைப் பெற்றால் ஏழு உலகும் தேவரைப் போற்றாமல் புகழ் பெற்றவரையே போற்றும்.

## அறிவில் சிறந்தவர் நிலை

இப்பாடசாலை ஒரு கிராமத்தில் அமைந்திருப்பதால் பாடசாலைக்கும் ஆசிரியர்களுக்கும் மக்களுக்குமிடையே ஓர் இறுக்கமான அன்பு கலந்த குடும்ப உறவு இருப்பதை என்னால் காணமுடிகிறது. அமரரது இனத்தவர்கள், நண்பர்கள், சுற்றத்தவர்கள் அன்பான உறவைக் கட்டிக் காக்கின்றனர். பழைய மாணவரான ஞானப்பிரகாசம் அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையை எனது மனத்தைப் பிழிந்தது. இப்பொழுது போலல்ல, அந்தக் காலத்தில் வாளிமலகூடங்களே கிராமங்கள் தோறும் இருந்தன. கிராம சபையின் ஊழியர்கள் தினமும் காலையில் வந்து வாளியுடன் இருக்கும் மலத்தை, பெரிய மூடிய வாளிகளில் சேகரித்துச் செல்வர். திடீரென்று ஒரு நாள் மலகூடத்தைத் துப்பரவு செய்யும் தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அந்த வேலை நிறுத்தம் பத்து நாட்கள் தொடர்ந்து நீடித்தது. அமரர் அவர்கள் பெற்றாரை இழந்த பிள்ளைகளையும் நோயாளிகளான பெற்றாரின் பிள்ளைகளையும் விடுதியில் தங்க வைத்துக் கற்பித்தார். அப்படிப் படித்தவர்களில் ஒருவர் தான் திரு. ஞானப்பிரகாசம்.

‘‘வேலை நிறுத்தம் தொடங்கி ஐந்தாவது நாள் பாடசாலைச் சூழல் துர்நாற்றம் வீசியது. அமரர் வைத்திலிங்கம் கிராமசபை அதிகாரிகளிடஞ் சென்று முறையிட்டார். பயனில்லை. தொழிலாளிகளை நேரில் சந்தித்து நிலமையை விளக்கி கெஞ்சினார். தொழிலாளிகள் மறுத்து விட்டனர்.

பாடசாலைக்கு வந்த அமரர் இரு தொழிலாளிகளை அழைத்து வந்து மலகூடங்களுக்கு அருகில் பெரியதொரு குழியை வெட்டு வித்தார். ஆசிரியர்களும் மாணவர்களும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இரவு எட்டு மணிக்கு அமரர் வைத்திலிங்கம் தனது மைத்துணரான அதிபர் முத்துச்சாமியிடம் சென்றார்; ‘‘மச்சான் வா பள்ளிக் கூடத்திற்குப் போட்டு வருவம்.

வைத்திலிங்கம் எதைச் சொன்னாலும் முத்துச்சாமி காரணங் கேட்பதில்லை. இருபத்தி நான்கு மணிநேரமும் தயாரான நிலையிலேயே இருப்பார்.

இருவரும் பாடசாலைக்கு வந்தனர். வைத்திலிங்கத்தின் கையில் மின்கலத்தால் இயங்கும் ஒளிக்கருவி இருந்தது. மலகூடத்தின் அருகே வர முத்துச் சாமிக்கு வயிற்றைப் புரட்டியது. சிரமப்பட்ட போதும் சத்திவரவில்லை.

‘‘மச்சான் நீ வாளியைத் தூக்கியாறியா? இல்லை நான் தூக்கி வரட்டா...?’’ வைத்திலிங்கம் கேட்டார்.

முத்துச்சாமிக்கு அவர் கூறியது விளங்கவில்லை. சிறிது நேரம் தாமதித்தார். அதை உணர்ந்த வைத்திலிங்கம் சொன்னார்; ‘‘முத்து, மலகூட வாளிகள் நிரம்பி விட்டன. இதற்குப் பொறுப்பான அதிகாரிக்குச் சொன்னேன். அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. ஊழியர்களிடஞ் சென்று கெஞ்சிப் பார்த்தேன். அவர்கள் வரமறுக்கிறார்கள். இந்நிலமை நீடித்தால் பாடசாலையை மூட வேண்டிய நிலை ஏற்படும். பாடசாலைச் சூழல் அழுக்கடையும். மாணவர்களுக்கு நோய் உண்டாகும். அதனால் நீ வாளிகளைத் தூக்கி வந்து குழியின் அருகேவை. நான் குழிக்குள் கொட்டுகிறேன். இல்லாவிட்டால் நீ கொட்டு நான் தூக்கி வருகிறேன்’’.

முத்துச்சாமி பதில் எதுவும் சொல்லவில்லை. மலம் நிரம்பிய பத்து வாளிகளையும் தூக்கி வந்து குழியின் அருகே வைத்தார். வைத்திலிங்கம் அதைத் தூக்கிக் கவனமாகக் குழிக்குள் கொட்டினார். கொட்டிய வாளிகளுக்குள் இன்னொருவாளியால் நீர் கொண்டு வந்து முத்துச் சாமி ஊற்ற வைத்திலிங்கத் வாளிகளைக் கழுவி நீரை குழிக்குள் ஊற்றி விட்டு வைக்க, முத்துச்சாமி அவ்வாளிகளைக் கொண்டு சென்று மல கூடங்களுக்குள் வைத்தார்.

மறுநாள் மாணவர்களின் விடுதிக்குப் பொறுப்பான ஆசிரியர் கைலைநாதன் வந்து ஆச்சரியத்துடன் அதிபரிடம் கேட்டார்; ‘‘நேற்றுமாலை வரை

மலகூடங்கள் துப்பரவு செய்யப்படவில்லை. இரவு தான் துப்பரவு செய்யப்பட்டிருக்கு''.

''அப்படியா எனக்குத் தெரியாது ஐயாவைக் கேட்டுப் பார்'' என்றார் முத்துச்சாமி.

''இந்தச் செயலுக்கு எவ்வளவு மனத்திடம் வேண்டும். இதை வைத்திலிங்கத்தையும் முத்துச்சாமியையும் தவிர எவராலும் செய்ய முடியாது'' உணர்ச்சிப் பெருக்கால் சிலகணங்கள் தடுமாறினார் சிவலிங்கராசா.

அதன் பின்பு வாளி மலகூடங்களை நீரடைப்பு மலகூடங்களாக மாற்ற விரும்பினார் வைத்திலிங்கம். அதற்கு ஐயாயிரம் ரூபா தேவைப்பட்டது. அவ்வளவு பணம் அவரிடம் இல்லாமையால் தனது காணி ஒன்றை விற்க விரும்பினார். அந்நாளில் கிராமங்களில் காணி வாங்குவோர் மிக மிக அரிது. அதனால் தனது மனைவியின் தாலிக் கொடியையும் ஏனைய நகைகளையும் குறைந்த விலைக்கு விற்று மலகூடங்களைக் கட்டினார். அதன் பின் அவரது மனைவி இறக்கும் வரை எந்த நகையையும் அணியவில்லை. ஒவ்வொரு முறையும் பணம் வரும்போது மனைவிக்கு தாலிக்கொடியாவது வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று நினைப்பார். ஆனால் அதைவிடக் கூடுதலான செலவு பாடசாலைக்கு வந்து விடும். ஒருவருக்குச் செல்வம் குறையக் குறைப் புகழ்வளரும். அவர் உடம்பு அழிந்த போதும் அப்புகழ் நிலைத்து நிற்கும் இந்நிலை அறிவிற் சிறந்த சேவை செய்பவர்களுக்கு அல்லாமல் மற்றவர்களுக்கு இல்லை என்பார்கள். இது எவ்வளவு உண்மை என்பது அமரரின் வாழ்க்கையில் இருந்து புலனாகிறது''.

235. நத்தம்போல் கேடும் உளதுஆகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது.

ஒருவனது பொருள் குறையக் குறைய புகழ் வளரும். அவரின் உடல் அழிந்த பின்பும் புகழ் நிலைத்து நிற்கும். இந் நிலை அறிவிற் சிறந்தவர்களுக் கல்லலால் மற்றவர்களுக்கு இல்லை.

## தோன்றில்

சேவை செய்பவனின் வாழ்க்கைப் பாதையில் துன்பங்கள் எப்பொழுதும் தொடர்ந்து கொண்டே இருக்கும். துன்பங்களைக் கண்டு அஞ்சுபவனால் செயற்கரிய செயல்களைச் செய்ய முடியாது. எதையும் தாங்கிக் கொள்ளும் மனவுறுதியும், செய்து முடிப்பேன் என்ற நம்பிக்கையும், முடியும் வரை ஓய மாட்டேன் என்ற முயற்சியும் உடையவனைக் கண்டால் துன்பங்கள் ஓடி மறையும். துணிவும் திடகாத்திரமும் செயற்திறனும் அவனைத் தேடி வந்து

சேரும். இறைவனும் விரும்பி வந்து உதவி செய்வார். ஒருவனிடம் நல்ல எண்ணங்கள் தோன்றும் போது அதைச் செய்து முடிக்க வேண்டு மென்ற ஆசை வரும். இவ் ஆசையை இறைவனே அவனுக்குக் கொடுத்து செய்து முடிக்கும்படி உத்தரவிட்டு உதவி செய்கிறார். இதனால் தான் அமரர் வைத்திலிங்கம் அவர்களால் அரிய பெரிய சாதனைகளைச் சாதிக்க முடிந்தது. நற்செயல்கள் செய்பவனை இறைவன் தேடி வந்து உதவி செய்வார். என்பதை நாம் இதிகாச புராணங்களில் கண்டுள்ளோம். அதே போலப் பாடசாலை தொடங்கிய நாளில் இருந்து, பாடசாலையில் ஒவ்வொரு செயல்களைச் செய்யும் போதும் வைத்திலிங்கம் அவர்கள் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியை வணங்கி பூசைகள் செய்த பின்பு தான் தொடங்குவார். தனது செயல்களுக்குப் பிரார்த்தனை மூலம் இறைவனின் உதவியைக் கோருவோனுக்கு இறைவன் செயல்கள் மூலமாக வரும் துன்பங்களை அகற்றி வெற்றிக்கு வழிவகுக்கிறார் என்பதை வைத்திலிங்கத்தின் செயல்கள் எமக்குப் புரிய வைக்கின்றன. பாடசாலையில் நல்ல முறையில் அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்பட்ட போதும் ஆங்கிலப் பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாதிருந்தது. ஓர் ஆங்கில ஆசிரியரைத் தேடி வைத்திலிங்கம் ஊர் ஊராக அலைந்தார். அக்காலத்தில் கிறிஸ்தவபாதிரிமார் பாடசாலைகளை நிறுவி ஆங்கிலக் கல்வியைப் புகட்டியதால் ஆங்கில அறிவுள்ளவர்கள் அப்பாடசாலைகளில் சென்று கற்பித்தனர். அவர்கள் சம்பளம் நிறையக் கொடுத்தமையால் தாய்மொழி மூலப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்க எவரும் விரும்புவதில்லை.

அயலூரில் அரிய பூசணம். என்றொருவர் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தார். அவரைச் சந்திப்பதற்காக வைத்திலிங்கம் புறப்பட்டார். வீட்டில் இருந்து நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியின் ஆலயத்திற்கு வந்த வைத்திலிங்கம் வெளியே நின்று தேங்காயை உடைத்து கற்பூரம் கொழுத்தி வணங்கினார்.

‘‘இறைவன் பக்தர்களின் வேண்டு கோளை நிறைவேற்றுபவன். அன்பே உருவானவன். நாம் அவன் மீது கொள்ளும் நம்பிக்கையைப் பொறுத்தே அவன் காரிய மாற்றுவான். அளவுக்கு அதிகமான அன்பு என்று சொல்லப்படுகின்ற பக்தியால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை’’ என்ற கொள்ளையுடையவர் வைத்திலிங்கம். ஒரு கணம் கண்மூடி மகா கணபதியைத் தொழுதார். மனக்கண் முன்னே நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி அலங்கார ரூபராய் மூசிக வாகனத்தில் தோன்றிச் சிரித்தார். வைத்திலிங்கத்தில் உடலில் உள்ள உரோமங்கள் சிலிர்த்தன. கண்களால் கண்ணீர் வழிந்தது. தலையின் மேல் கரங்களைக் கூப்பியவாறு வெளிவீதியைப் பலமுறை வலம் வந்தார்.

சுவாமியை வணங்கி விட்டு வெளியே வந்த வைத்திலிங்கத்தை முத்துச்சாமி வரவேற்றார். அவருடன் நான்கு ஆசிரியர்களும் ஒரு புதிய வரும் நின்றனர்; ‘‘நாங்கள் உங்களுக்காக ஒரு மணித்தியாலமாகக் காத்திருக்கிறோம். இவர் அரிய பூசணம் அயலூரில் உள்ளவர். ஆங்கில மொழியில் தேர்ச்சி மிக்கவர். காலையில் எனது வீட்டுக்கு வந்தார். நான் அவரையும் அழைத்துக் கொண்டு உங்களது வீட்டுக்குச் சென்றேன். நீங்கள்

அங்கில்லாததால் பாடசாலைக்குச் சென்றோம். அங்கும் நீங்கள் இல்லை. அதனால் இங்கு வந்தோம். நீங்கள் மெய்மறந்து மகா கணபதியை வணங்கியதால் காத்திருந்தோம்'' என்றார் முத்துச்சாமி.

உருகிப் போனார் வைத்திலிங்கம் கண்களால் கண்ணீர் ஒழுக மகாகணபதியை மீண்டும் வணங்கினார்; ''இறைவா, ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் தேவையென்று பிரார்த்தித்தேன். நீ அழைத்து வந்து விட்டாய். நான் இல்லாத காலத்திலும் நீ தான் இப்பொழுது செய்வது போலச் செய்து பாடசாலையைக் கொண்டு நடத்த வேண்டும்'' என்ற வைத்திலிங்கம் அரிய பூசணத்தைப் பார்த்துச் சொன்னார்; ''நீர் மகா கணபதி அனுப்பிய தொண்டர் இப்பொழுதே கடமையை ஏரும்''.

இப்படி உறுதியான மனத்தின் மூலம் செயல்களைச் செய்த பெருவள்ளலின் நினைவுக் குறிப்பொன்றை அரியபூசணம் அவர்கள் எழுதியுள்ளார். ஒரு துறையில் முற்பட்டுச் செயலாற்றுவதானால் புகழோடு செயலாற்ற வேண்டும். செயலாற்ற முடியாதவர்கள் அச் செயலைச் செய்வதை விடச் செய்யாது விடல் நல்லது. ஒரு செயலுக்குத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும் அத்தகைய சிறப்புக்கள் இல்லாதவர் தோன்றுவதை விடத் தோன்றாமல் இருப்பது நல்லது'' என்று சிவலிங்கராசா பேசிக் கொண்டிருக்கும் போது உணர்ச்சி மேலீட்டால் மேடையில் உள்ள பலர் விம்மினர்.

236. தோன்றின் புகழோடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

ஒரு துறையில் தலைமை தாங்கிச் செயற்பட விரும்பினால் புகழ் வந்து அடையும் படி செயற்பட வேண்டும். அல்லாதவர் செயற்படாமல் இருப்பது நல்லது.

## தாமே காரணம்

அழிகின்ற உடலுக்கு அழியாத புகழ் உண்டு, பெயர் உண்டு, அழகுண்டு, ஆனால் அழிவில்லாத உயிருக்கு இவை எதுவும் இல்லை. உடலை விட்டு உயிர் பிரிந்தால் பெயரில்லை அழகில்லை ஆனால் என்னும் மங்காத புகழ் உண்டு. இதற்கு உதாரணமாக வாழ்ந்தவர். அமரர் கந்தர் வைத்திலிங்கம் அவர்கள்.

பாடசாலைக்கு அருகில் பாலசிங்கம் என்றொருவர் கடை நடத்தி வந்தார். கிராமத்தில் அந்த ஒரே ஒரு கடைதான் இருந்தது. வைத்திலிங்கம் தனது விவசாய விளை பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்று விட்டு வீட்டுக்கும் பாடசாலைக்கும் கோயிலுக்கும் தேவையான பொருட்களை வாங்கி வருவார். அதற்கு விவசாய விளை பொருட்களால் வரும் வருமானம்

போதாமல் இருக்கும். அதனால் பாலசிங்கத்தின் கடையில் கடனுக்குப் பொருட்களை வாங்குவார். பாலசிங்கம் நேர்மையான வியாபாரி அல்லன். கலப்படம் செய்வான் நிறையைக் குறைத்துக் கொடுப்பான். எனினும் வேறு வழியின்றி அவர் அவரிடம் கடனாகப் பொருட்களைக் கொள்வனவு செய்து வந்தார்.

பாலசிங்கத்தின் கடையில் கூலியாக வேலை செய்பவன் திரிகரன். மிகவும் நல்லவனான அவனை ஒரு போதும் பாலசிங்கம் நம்புவதில்லை. அவன் நேர்மையாக வேலை செய்தாலும் குறை கூறுவான்; சந்தேகப்படுவான்; ஏசுவான்.

தினமும் பொருட்களை வாங்கும் வைத்திலிங்கம் ஒரு நாள் மாணவர்களுக்கு அவித்துக் கொடுக்க வென வாங்கி வந்த கடலையின் நிறை கூடுதலாக இருப்பதை உணர்ந்தார். எனவே கடலைப் பொதியுடன் கடைக்குச் சென்றார். அப்பொழுது கடையில் பாலசிங்கம் இருக்கவில்லை. வைத்திலிங்கத்தைக் கண்ட திரிகரனுக்குக் கலக்கமாக இருந்தது. ‘‘ஐயா கடலையின் நிறை கூடுதலாக இருப்பதால் பொதியைத் திருப்பிக் கொண்டு வந்திருக்கிறீர்களா...? நான் தான் கூடுதலாக நிறுத்தேன். எனது முதலாளி சரியான கஞ்சன். தேய்ந்த படிகளையே வைத்து கிராமத்தவர்களை ஏமாற்றி வாழ்கிறான். அதை என்னால் பொறுக்க முடியவில்லை. அதனால் பொதுக் காரியங்கள் செய்யவென பொருட்களை வாங்க வருவோருக்கு எனது பாவம் தீர கூடுதலாகப் பொருட்களை நிறுத்துகிறேன்’’ என்று அழுதான்.

‘‘மகனே, ஓர் ஊசியை எடுப்பதும் களவு தான். வங்கியை உடைத்து பெரும் பொருட்களை கொள்ளையிடுவதும் களவு தான். பொருளும் பெறுமதியும் மாறுபாடு அடைந்த போதும் செயல் மாறுதல் அடையவில்லை. ஒரு தீய செயலை நினைப்பது கூட அச்செயலை செய்ததற்குரிய பாவத்தைத் தரும். எனவே நீ அடுத்தவர்களைக் குறை கூறாதே’’ என்றார்.

‘‘எனது முதலாளி எந்நாளும் அடுத்தவர்களைப் பற்றிக் குறை கூறிக் கொண்டே இருக்கிறார். உங்களைப் பற்றி நெடுகக் குறை சொல்வார்; ‘‘இவருக்கு ஏன் பள்ளிக் கூடம் யாராவது படித்தாலென்ன விட்டாலென்ன என்று இருப்பதை விட்டு விட்டு தன்னுடைய காசைச் செலவு செய்து தனது குடும்பத்தை அழித்து விட்டார். எம்மிடம் அளவுக்கதிகமாகக் கடன் வாங்கி விட்டு தராமல் விட்டால் நானும் ஆண்டியாகி வீதியில் தான் நிற்க வேண்டிய நிலை ஏற்படும். அதனால் அளவுக்கதிகமாகக் கடன் குடாதை. அதோடை இதுகளெல்லாத்துக்கும் அரசாங்கம் காசு கொடுக்கும் தானே நிறையைக் குறைத்துக் கொடு’’ என்பார். அத்துடன் சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் பாடசாலைக்கும் கோயிலுக்கும் ஏராளமான பணம் வாங்கி வருகிறீர்களாம்’’ என்றான் திரிகரன்.

‘‘ஏனோ தெரியவில்லை நேர்மையான முறையில் சேவை செய்து வாழ முடியாதவர்கள் தான் மற்றவர்களைக் குறை சொல்கிறார்கள். அவர்கள்

தமது செயலை நினைத்து தாம் செய்வது தவறு என்று புரிந்து கொண்டால் தான் திருந்துவார்கள்'' என்றார் வைத்திலிங்கம்.

''ஐயா நேர்மையில்லாத ஒருவனின் கீழ் வேலை செய்ய எனக்கு விருப்பமில்லை. நீங்கள் மூன்று வேளையும் உணவு தந்தீர்களானால் உங்களது பாடசாலையில் வேலை செய்வேன்'' என்றான். வைத்திலிங்கம் எதுவும் சொல்லாமல் போய்விட்டார்.

திரிகரன் வைத்திலிங்கத்துடன் பேசிக் கொண்டிருக்கும் போது பாலசிங்கம் வந்து விட்டான். இருவரும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று கேட்பதற்காக மறைந்திருந்தான். வைத்திலிங்கம் சென்றதும் கடையுள் வந்து கடுங்கோபத்துடன் திரிகரனை ஏசினான்; ''பெற்றார் இல்லாத அனாதையான உனக்குத் தொழிலும் தந்து சாப்பாடும் தந்ததற்கு இதுவா கைம்மாறு. மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் மக்களை ஏமாற்றி காசு வாங்கி வந்து ஏமாற்றுவதற்காகப் பாடசாலையைக் கட்டிவிட்டு அந்தக் காசிலை வாழுறவன் உனக்கு உயர்ந்தவனாய்ப் போனான். இனிமேல் உனக்கு இங்கு வேலை இல்லைப் போ. வைத்திலிங்கம் ஐநூறு ரூபா தரவேணும். ஒரு வரிசமாய் உனக்கு நான் சம்பளம் தரவில்லை போய் அந்தக் கடன் காசை வாங்கு''.

''ஐயா தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழமுடியாதவர்கள் தான் மற்றவர்களைக் குறை கூறுவார்கள். நான் எந்தப் பிழையும் செய்யவில்லை. நீங்கள் தான் நிறை குறைத்தும், விலையைக் கூட்டியும் விற்பனை செய்கிறீர்கள். அதைத் திருத்தி விட்டு என்மீதும் அடுத்தவர் மீதும் குறை காணுங்கள் உங்களின் தவறுகளை உணர்ந்தால் பிறர் மீது குற்றம் கான மாட்டீர்கள். குற்றச் செயல்களை அஞ்சாமல் செய்கின்ற நீங்கள் நல்லவர்களையும் உங்களைப் போலவே நினைக்கிறீர்கள்'' என்று கூறிவிட்டுச் சென்ற திரிகரன் வைத்திலிங்கத்திடம் சென்று பாடசாலையில் கூலியாக வேலை செய்தான்.

''துன்பமான உலகில் வசிக்கும் மனிதன் பிறருக்குச் சேவை செய்வதன் மூலம் இன்பத்தைப் பெறுவான். இப்படி அடிக்கடி வைத்திலிங்கம் சொல்வார். என்று திரிகரன் இம்மலருக்கு எழுதிய கட்டுரையில் தெரிவித்திருக்கிறார். சிறிய களவு என்றாலும் களவு என்ற சொல் பெரியது என்று உபதேசித்த வைத்திலிங்கம் உண்மையிலேயே ஒரு ஞானி என்பதை நாம் ஒத்துக் கொள்ளல் வேண்டும்'' என்று ஆய்வுரை நிகழ்த்திக் கொண்டிருந்தார் கலாநிதி சிவலிங்கராசா.

237. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்?.

தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழமுடியாதவர்கள் தம்மைத் தாம் நொந்து கொள்ளாமல் தம்மை இகழ்ந்து பேசுபவர்களை நொந்து கொள்வதால் பயன் எதுவும் இல்லை.

# பழி

வைத்திலிங்கம், கணபதி வித்தியாலயத்தை நிறுவி இரண்டு ஆசிரியர்களைக் கற்பிப்பதற்காக ஒழுங்கு செய்தார். நாற்பது பிள்ளைகள் சேர்ந்தால் தான் அப்பாடசாலையை அரசாங்கத்தில் பதிவு செய்து கொள்ளலாம். வைத்திலிங்கம் பிள்ளைகளைக் தனது பாடசாலையில் சேரும்படி வீடு வீடாகச் சென்றார். அவரின் அயல் வீட்டுக்காரனான குமாரசாமி, வைத்திலிங்கம் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று வந்த பின்பு அங்கே சென்று வைத்திலிங்கத்தின் பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டாம் என்று கூறுவார். அவ்வூரில் வாழ்ந்த ஏழையான ஆறுமுகம் தனது மூன்று பிள்ளைகளையும் வைத்திலிங்கம் நிறுவிய கணபதி வித்தியாலயத்தில் சேர்த்திருந்தார். அதனால் அன்று குமாரசாமி ஆறுமுகத்தின் வீட்டுக்குச் சென்றார். ஆறுமுகம் அவருக்குத் தொண்டு துரவுகள் செய்வதால் எழுந்து நின்று மரியாதையாக வரவேற்றார்.

‘‘ஆறுமுகம் உன்னுடைய பிள்ளைகளை கணபதி வித்தியாலயத்தில் சேராதை. நாவலடீலை இருக்கிற அரசாங்கப் பாடசாலையிலை சேர். ஏதோ ஊருக்குத் தாங்கள் சேவை செய்வதாகக் கூறி வீறாப்பிலை பள்ளிக்கூடங்களைத் தொடக்கிறவை. நாளைக்கு மூடிப்போட்டுப் போயிடுவினை. அது அரசாங்கப் பள்ளிக்கூடம் கடைசி வரையும் மூடப்பட மாட்டுது. அங்கை இருந்து விடுகைப்பத்திரத்தை எடுத்தால் பிறகு சேர்க்கேலாது. வைத்திலிங்கம் மலேசியாவிலை போய் நாலு காசு சம்பாதிச்சவுடனை தான் ஊரிலை பெரியாள் என்று நினைச்சிட்டுது..’’

‘‘ஐயா நான் மிகவும் வறியவன். என்ரை பிள்ளைகள் இதுவரை பாடசாலைக்குப் போகவில்லை. நாவலடீலை இருக்கிற பள்ளிக்கூடம் சரியான தூரம் போன மாசம் நாவலடிப் பள்ளிக் கூடத்திற்குப் போன பிள்ளை யொன்றை மலையாளன் காட்டுக்கை பேயடிச்சது. இன்னும் அதுக்குச் சுகமாகவில்லை. அதாலை தான் கனபேர் நாவலடிப் பள்ளிக்கூடத்தாலை விலகி இஞ்சை சேரீனை. வீட்டை சும்மாய் இருக்கிறதுகள் நாலெழுத்தைப் படிக்கட்டும் மூத்தவனுக்கு ஒன்பது வயது இப்பத்தான் முதலாம் வகுப்புப் படிக்கிறான். அதோடை வீட்டிலை இருந்தால் பட்டினி கிடக்குங்கள். பள்ளிக்கூடம் போனால் ஒரு நேரமென்றாலும் வயிறு நனையும்’’.

‘‘சரி…சரி.. ஏதோ யோசித்துச் செய்’’ என்று கூறிவிட்டுச் சென்றார் குமாரசாமி.

அறுபது பிள்ளைகளைச் சேர்த்து விட்டு, அப்பிள்ளைகளின் விபரங்களுடன் பாடசாலையைப் பதியக் கல்விக் கந்தோருக்குச் சென்றார் வைத்திலிங்கம்.

அதிகாரி வைத்திலிங்கத்தை இரு என்று கூடச் சொல்லவில்லை. அவர் கொண்டு சென்ற விபரங்களை வாங்கிப் பார்த்து விட்டுச் சொன்னார்; ''வயது கூடின பிள்ளைகள் பலரைச் சேர்த்திருக்கிறியள் நாவலடிப் பள்ளிக் கூடத்திலை படிக்கிற பிள்ளைகளை விடுகைப்பத்திரம் இல்லாமல் சேர்த்திருக்கிறியள். எல்லாவற்றையும் நாங்கள் விசாரித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும். நீங்கள் போங்கோ நாங்கள் பள்ளிக் கூடத்திற்கு வாறம்'' என்றார்.

நாட்கள் நகர்ந்தனவே தவிர அதிகாரி பாடசாலைக்கு வரவில்லை. அதனால் பல முறை வைத்திலிங்கம் கல்விக் கந்தோருக்குச் சென்றார். அங்கிருந்த அதிகாரி அவரை ஏசிக் கலைத்தார். அதனால் மனம் வருந்திய வைத்திலிங்கம் அரசாங்கத்தில் பதியாது இரண்டு வருடங்கள் பாடசாலையை நடத்தினார்.

ஒரு நாள் சட்டவிரோதமாகப் பாடசாலையை நடத்துவதனால் விசாரனைக்காகக் கல்விக்கந்தோருக்கு வரும்படி அவ்அதிகாரி கடிதம் அனுப்பியிருந்தார். கல்வி அமைச்சில் இருந்து விசாரனைக்காக வந்திருந்த சுந்தரலிங்கம் என்ற அதிகாரி பாடசாலையின் நிலமையைப் பற்றி ஆராய பாடசாலைக்கு வந்தார். பாடசாலை நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

வைத்திலிங்கம், சுந்தரலிங்கத்தை அழைத்துச் சென்று பாடசாலையை சுற்றிக்காட்டினார். சுந்தரலிங்கத்திற்கு அப்பாடசாலையை நன்றாகப் பிடித்து விட்டது; ''நல்ல முறையில் நடைபெறும் இப்பாடசாலையை ஏன் பதிய மறுக்கிறார்கள்''. என்று கேட்ட சுந்தரலிங்கம் உடனடியாக அப்பாடசாலையைப் பதிவு செய்யும் படி கட்டளையிட்டதோடு நான்கு ஆசிரியர்களை நியமிக்கவும் அனுமதி கொடுத்தார். அதன் பின்பு தான் குமாரசாமி தான் அதிகாரியைப் பதியவிடாமல் செய்தார் என்று அறிந்தார். எனினும் அவர் குமாரசாமியின் மீது கோபப்படவில்லை. இச் செய்தியை எப்படியோ அறிந்த மக்கள் குமாரசாமியைப் பழித்தனர். குமாரசாமி தொடர்ந்தும் பாடசாலைக்குப் பல தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். அதனால் முத்துச் சாமி கவலையுடன் வைத்திலிங்கத்திற்கு குமாரசாமியின் நடவடிக்கைகள் பற்றிக் கூறினார். அதைக் கேட்ட வைத்திலிங்கம் சொன்னார்; ''உயிர்களுக்குச் சேவை செய்யும் ஒருவன் துன்பங்களை இன்பங்களாக எண்ணிக் கொள்ளல் வேண்டும். தடைகளை படிகளாக நினைத்தல் வேண்டும். மனச்சோர்வும் நம்பிக்கையீனமும் ஒருவனிடமிருந்தால் அவனால் தான் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க முடியாது. ஒருவன் தனக்குப் பின்பு எஞ்சி நிற்பதாகிய புகழைப் பெறாவிட்டால் உலகத்தார் அவனின் வாழ்க்கையைப் பழிப்பார்கள். எனவே நாம் குமாரசாமியைப் பழிப்பதை விட உலகம் பழித்தால் பெறுமதி இருக்கும். அத்துடன் எம்மைக் கண்டிப்பவர்களுக்கும், புறங்கூறுபவர்களுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் நாம் செய்ய வேண்டியவற்றை செய்ய முடியாது போய்விடும்''.

இத்தகைய மனம் படைத்த அமரர் வைத்திலிங்கத்தின் அறிவுரைகளை இன்றையஇளைய தலை முறையினர் படித்துப் பயன் பெற வேண்டு மென்ற நோக்கத்திற்காகவே இக்கட்டுரையை எழுதியுள்ளேன் என்று ஆறுமுகத்தின் பேரன் ஆரூரன் எழுதியுள்ளார்'' என்று சிவலிங்கராசா ஆரூரன் எழுதிய கட்டுரையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

238. வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின்.

சாவுக்குப் பின்பும் எஞ்சி நிற்பது புகழே ஆகும்., அப்புகழைத் தேடிக் கொள்ளாதவருடைய வாழ்க்கை உலகத்தவரின் கேலிக்கு உள்ளாகும்.

## *சுமை*

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சுந்தரலிங்கம் அவர்கள் கல்வி அமைச்சில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நியமனம் பெற்றார். சுந்தரலிங்கத்தின் காலத்தில் கணபதி வித்தியாலயம் கணபதி மகா வித்தியாலயமாக தரம் உயர்ந்தது. வைத்திலிங்கம் அப்பாடசாலையை நல்ல முறையில் நிர்வாகம் செய்தமையால் மாணவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்தது.

சுந்தரலிங்கம் வைத்திலிங்கத்தின் மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். அதனால் அடிக்கடி அவர் கணபதி மகாவித்தியாலயத்திற்கு வருவார். வைத்திலிங்கத்துடன் நட்புரிமையுடன் உரையாடுவார். பாடசாலையின் தேவைகளை உடனுக்குடன் கவனிப்பார்.

சுந்தரலிங்கத்தின் தகப்பனார் இணுவில் கிராமத்தில் பெரியதொரு விவசாயி சுந்தரலிங்கம், யாழ்ப்பாணத்திற்கு இடம்மாற்றம் பெற்று வந்த பின்பு தகப்பனாரின் விவசாய நிலங்களைத் தானே பொறுப்பேற்றுச் செய்து வந்தார் தான் விவசாயம் செய்யும் தோட்ட நிலத்தை மூன்று பிரிவாகப் பிரித்து வைத்திருந்தார். ஒரு பகுதி நிலத்தில் வரும் வருமானம் முழுவதும் கோயில்களுக்குக் கொடுத்து விடுவார். இரண்டாவது பகுதி நிலத்தில் இருந்து வரும் வருமானம் முழுவதையும் பாடசாலைகளுக்குக் கொடுத்து விடுவார் மூன்றாவது பகுதி நிலத்தில் இருந்து வரும் வருமானத்தைப் பல் வேறு விதமான தானதர்மங்களுக்குப் பயன்படுத்துவர்.

பாடசாலைகள் ஏதாவது விழாவிற்கு அவரைப் பிரதம விருந்தினராக அழைத்தால், அப் பாடசாலைக்கு ஒரு தொகை நிதியை வழங்குவார். இப்படிக் கணபதி மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு பல்லாயிரம் ரூபாவை

வழங்கியுள்ளார். ஒரு முறை பரிசளிப்பு விழாவிற்கு அவர் வந்திருந்த போது சைவத்திற்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றிய ஆறுமுகநாவலரின் சிலையை அமைப்பதற்குரிய பணத்தைக் கொடுத்தார். ஆறு மாத காலத்தின் பின் அவரே ஆறுமுக நாவலரின் சிலையைத் திறந்து வைத்தார்; "பொறாமை தான் பல தீய செயல்களுக்கு காரணம் ஆகிறது. பொறாமை கொள்ளாத ஒரு மனிதனிடம் அனைத்துச் செல்வங்களும் இருக்கும். சிறிதளவு பொறாமை ஒருவனது உள்ளத்தில் இருந்தாலும் அது விருட்சமாக வளரும் இயல்பினை உடையது மிகச் சிறிய ஆலமரத்தின் விதை ஆனது அரசனும் படைகளும் தங்கக்கூடிய அளவிற்கு வளர்ந்து படர்ந்து நிழலைக் கொடுப்பதைப் போல பொறாமையும் பெரும் விருட்சமாக வளர்ந்து நன்மைகளை எல்லாம் அழித்து விடும் பல செயல்களைச் செய்தால் தான் புகழ் வரும் என்று நாம் எண்ணக் கூடாது. ஒரு செயலைச் செயற்படுத்துவது கூட மிகக்கடினமானது இவ் வகையில் வைத்திலிங்கம் செய்த சேவை மிகப் பெரியது. என்று சுந்தரலிங்கம் பேசிய பின் வைத்திலிங்கம் பதிலளித்துப் பேசினார்; " நல்ல செயல்கள் பலவற்றைச் சுந்தரலிங்கம் செய்துள்ளார். தலைமைப் பதவியில் உள்ள ஒருவன் சட்டங்களை செயல்களுக்குத் தடையாக நினைக்கக்கூடாது செயல்கள் சட்டங்களைச் மாற்றும் சக்தி உள்ளவை பெரியவர்களால் விலக்கி வைக்கப்பட்டவைகளையே சட்டமும் விதிகளும் விலக்கி வைத்துள்ளன. திரு சுந்தரலிங்கம் அவர்கள் கல்வி அமைச்சில் இருந்தபோதும் கல்விப் பணிப்பாளராக இருந்த போதும் பல நற் செயல்களையும் சட்டங்களையும் விதிகளையும் மீறாமல் செய்தவர். தனது செயல்களுக்கு ஏற்பச் சட்டங்களையும் விதிகளையும் தளரச் செய்தவர். அதற்கு உதாரணம் எமது பாடசாலையைப் பதிந்தமை சட்டங்களும் விதிகளும் மனிதாபிமானத்தை மீறச் சொல்லவில்லை நற்ச் செயல்களை செய்யாமல் வாழ்பவர்களை பூமா தேவி தனக்கு சுமையானவர்களாகவே நினைப்பாள். எத்தனையோ விவசாயிகள் பெறாத விளைச்சலை உயர் அதிகாரியான சுந்தரலிங்கம் தமது விவசாய நிலங்களில் இருந்து பெற்று வருகிறார். இதற்குக் காரணம் பூமாதேவி தன் கொடையானது நல்ல பல செயல்களுக்குச் செலவாகிறது என்ற பூரிப்பினால் அள்ளிக் கொடுக்கிறாள். அவர் அடிக்கடி சொல்வார் "வேலை இல்லாதவனின் மனதில் தான் தீய குணங்கள் விளைகின்றன. ஓய்வான நேரங்களில் சேவை செய்ய வேண்டும் என்ற நினைவிருந்தால் தீய குணங்கள் உண்டாகாது. சேவையில் ஈடுபடும்போது மனம் திருப்தி அடைகிறது மகிழ்ச்சி அடைகிறது; அத்துடன் பயனும் கிடைக்கிறது ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் அளவற்ற ஆற்றலும் அறிவும் சக்தியும் அவரது பணிவின் மூலம் வெளிப்படும். தோல்வி அடையும் வேளைகளில் வெற்றியைப் பற்றித் தீர்மானிப்பதன் மூலம் தோல்வியைத் தவிர்க்க முடியும் என்று வாழ்ந்து காட்டியவர் சுந்தரலிங்கம்".

வைத்திலிங்கம் அவர்கள் பெரிதாகப் படிக்கா விட்டாலும் பழந் தமிழ் நூல்கள் பலவற்றைக் கற்றுத் தெளிந்ததால் ஓர் அறிவுப் பொக்கிசமாகத் திகழ்ந்தார். ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் கருத்தாளம் மிக்க பல அறிவுரைகளைக் கூறியுள்ளார். சுந்தரலிங்கத்தின் சேவைகளைப் பற்றி அவர் கூறிய வர்த்தைகளில் இருந்து நாம் அவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம் ஒரு நல்ல இலச்சியத்துடன் ஒழுங்கான வழிவகைகளை மேற்கொண்டு ஒரு செயலைச் செய்தால் அதில் வெற்றி அடையாலாம். அச்

செயலின் வெற்றியினால் உண்டாகும் புகழ் நீ வாழ்ந்து மறைந்த பின்பும் ஒரு குறியாக நின்று உனது பெயரைப் பறை சாற்றும் என்று கூறி அதன் படி வாழ்ந்து காட்டிய வைத்திலிங்கத்திற்கு இக் கிராமம் எடுத்த பெரு விழாவில் கலந்து கொண்டு அவரைப் பற்றிய வரலாற்றுத் தகவல்களை எடுத்து ஆய்வுரை செய்வதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் " சிவலிங்கராசா ஆய்வுரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

239. வசை இலா வண் பயன் குன்றும் இசை இல
யாக்கை பொறுத்த நினம்.

புகழ் பெறாமல் வாழ்ந்தவர்களின் உடம்பைச் சுமந்த நிலம் நல்ல பயனைத் தராமல் விளைவு குன்றி விடும்.

## உயிர்வாழ்வோர்

காலை ஏழு மணிக்கு வருவதாகச் சொன்ன தொழிலாளர்கள் எட்டுமணியாகியும் வராமையால் மிகவும் கவலையுடன் இருந்தார் வைத்திலிங்கம். அன்று ஒன்பதரை மணிக்கு உள்ள சுபமுகூர்த்தத்தில் கல்வித்திணைக்களப் பொறியியலாளர் பாடசாலைக் கட்டிடமொன்றிற்கு அத்திபார மிடவருவதாக கூறியிருந்தார். கல்வித்திணைக்களத்தின் பொறியியலாளரான திருமாறன் வைத்திலிங்கத்தில் அன்புள்ளவர். அவர் பாடசாலைக்காக இரவும் பகலும் அயராது உழைப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் அக்கட்டிடத்தை ஒதுக்கியிருந்தார். அதனால் மூன்று நாட்களுக்கு முன்பே கட்டிடம் கட்டும் தொழிலாளர்களைச் சந்தித்து யாவற்றையும் வைத்திலிங்கம் கூறியிருந்தார். எனினும் எட்டரைமணியாகியும் தொழிலாளர்கள் வரவில்லை.

கயிற்றையும் அளவு நாடாவையும் எடுத்து வந்து அளந்து கட்டையை அடித்து விட்டு கயிற்றைக் கட்டினார் வைத்திலிங்கம். ஏற்கனவே அத்திபாரம் வெட்டவென தயாராக வைத்திருந்த மண்வெட்டியொன்றை எடுத்து வெட்டத் தொடங்கினார் வைத்திலிங்கம்.

ஆங்கில ஆசிரியர் அரிய பூசணம் ஓடிவந்து சொன்னார்; "ஐயா உங்களுக்கு ஏறகனவே இரத்த அழுத்தம் இருக்கு. மண்வெட்டியைத் தாருங்கோ நான் வெட்டுறன்".

வேறு இரண்டு ஆசிரியர்களும் முத்துச்சாமியும் ஓடி வந்தனர்; "எனக்கு வருத்தமில்லை. நான் வெட்டுவன். நீங்கள் மற்றக் கரையாலை வெட்டுங்கோ" என்ற வைத்திலிங்கம் மண்ணை வெட்டிக் கடகத்தில் கோலி வெளியே கொட்டினார்.

ஒன்பதரை மணிக்கு அத்திபாரமிட வந்த பொறியியலாளர் அதிபரைத் தேடிச் சென்றார். அதிபரும் வைத்திலிங்கமும் ஆசிரியர்களும் அத்திபாரம் வெட்டிக் கொண்டிருந்ததை அவரால் நம்ப முடியவில்லை.

‘‘தொழிலாளர்களை வரச் சொன்னேன். இது வரை அவர்கள் வரவில்லை. அதனால் தான் நாம் வெட்டினோம். நீங்கள் உள்ளே வாருங்கள் இன்று பத்து நிமிடங்களில் கும்பம் வைத்து விடுவோம்’’ என்றார் வைத்திலிங்கம்.

ஒன்பது நாற்பதிற்கு வைத்திலிங்கம் சாந்தைக் குளைத்துக் கொடுத்தார். முத்துச்சாமி கல்லை எடுத்துக் கொடுக்க பொறியியலாளர் நாள்க் கல்லை வைத்தார்; ‘‘குறித்த நேரத்தில் யாவற்றையும் செய்து முடித்து விட வேண்டு மென்று நினைப்பவன் நான். இந்தக் கட்டிடத்தை எமக்குத் தருவதற்கு நீங்கள் பட்ட கஷ்டம் எமக்குத் தெரியும். அதில் கூட நான் கஷ்டப்படவில்லை’’ என்றார் வைத்திலிங்கம்.

‘‘அடுத்தவர்களை நம்புகிறவனை விடத் தன்னை நம்புகிறவன் தான் வாழ்க்கையில் வெற்றி பெறுவான் என்று நீங்கள் நினைத்ததால் தான் இன்று உங்களுக்கு இந்தக் கட்டிடம் கிடைத்தது. தொழிலாளர்களை நம்பியிருந்தால் அத்திபாரம் வெட்டப்பட்டிராது. நான் வந்து திட்டமிட்டு காரிய மாற்ற முடியாதவர்கள் என்று சொல்லி கட்டிடத்தை இன்னொரு பாடசாலைக்குக் கொடுத்திருப்பேன்’’ என்றார் பொறியியலாளர்.

அப்பொழுது தான் தொழிலாளர்கள் வந்தனர்; ‘‘ முன்னைய கட்டிடம் கட்டியதற்காகக் கொஞ்சப் பணம் நான் தர வேண்டியுள்ளது. அதற்காக நீங்கள் இப்படிச் செய்திருக்கக் கூடாது. நேற்றே சொல்லியிருக்கலாம். இந்தாருங்கோ நான் தரவேண்டிய காசு. நான் வேறு யாரையாவது பிடித்துக்கட்டுகிறேன் நீங்கள் போங்கள்’’ என்றார் வைத்திலிங்கம். அந்தக்கட்டடத்தைக் கட்ட வந்த கொத்தனார் எவ்வளவோ கெஞ்சியும் அவரின் மனம் இழகவில்லை. கொத்தனாரின் மகன் ஆசிரிய கலாசாலையில் சென்று ஆசிரியர் பயிற்சியை முடித்திருந்தான்.

கொத்தனாரும் மகனும் ஆசிரிய நியமனம் கோரி வைத்திலிங்கத்திடம் வந்தனர்; ‘‘பெற்றோரின் குணம் தப்பாமல் பிள்ளைகளுக்கும் இருக்கும். நீ அன்று வேலைக்கு வரவில்லை. நாம் அத்திபாரம் வெட்டாதிருந்தால் எமது பாடசாலைக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கும். அதனால் உமது மகனுக்கு இப்பாடசாலையில் இடம் தரமாட்டேன்’’. தான் வாழும் வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்பவன் தான் உயிர் வாழ்பவன். புகழ் உண்டாகாமல் வாழ்பவர்கள் நடைப்பிணங்கள். புகழ் என்பது சேவையால் மட்டும் வருவதல்ல கடமையாலும் வரும். கடமையைச் செய்யத் தெரியாத உன்னைப் போலவே உனது மகனும் இருப்பான்’’ என்றார் வைத்திலிங்கம்.

அவர் முடிவெடுத்தால் எக்காரணம் கொண்டும் மாற்றமாட்டார் என்பது அனைவர்க்கும் தெரியும். இப்படி ‘வழுவாத முடிவு’ என்னும் கட்டுரையில் அரியபூசணம் என்ற ஆங்கில ஆசிரியர் எழுதியதை இந் நூலில்

சேர்த்திருக்கிறார்கள். அத்துடன் வைத்திலிங்கம் அவர்கள் அடிக்கடி இப்படிக் கூறுவாராம்; “வலிமையோடு இருங்கள். துணிவுடன் முடிவை எடுங்கள். யாருக்கும் அஞ்சாதீர்கள். கடமைக்காக எல்லாவற்றையும் துறக்கத் தயாராக இருங்கள். உடலை மட்டுமல்ல மனதையும் வலிமையுள்ளதாக்கிக் கொள்ளல் வேண்டும். எதற்கும் அடுத்தவனை எதிர்பார்ப்பதால் தான் எம்மால் இலகுவில் வெற்றியடைய முடியாதுள்ளது. உன்னை நம்பு உயர்வாய்” என்பாராம். அவர் தீர்க்க தரிசனத்துடனும் மனவலிமையுடனும் செயலாற்றியமையால் தான் பெரும் புகழுக்குக் காரணமாகி, இறந்தும் இறவாது புகழோடு இருக்கிறார். இங்குள்ள பலர் உயிரோடு இருந்தும் அரிய செயல்களைச் செய்யாமையால் உயிரற்றவர்களாகவே இருக்கிறோம்.” சிவலிங்கராசா உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக் கொண்டிருந்தார்.

240. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்.

தம்முடைய வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவர்களே உயிர் வாழ்கின்றவர்; புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழாதவர்.

## செல்வம்

அன்று நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத் தேர்த்திருவிழா வீதியெங்கும் பக்தர்கள் சூழ்ந்திருந்தனர். மகா கணபதி தேரில் வீற்றிருந்தார். இராஜசங்கரக் குருக்கள் தேரில் அலங்கார ரூபராக வீற்றிருந்த மகா கணபதிக்கு பஞ்சாலாத்தி காட்டிக் கொண்டிருந்தார். ஐந்து கூட்டம் மேளம் அடிக்கப் பக்தர்கள் கற்பூரச் சட்டிகளுடன் நடக்க, அடியார்கள் பஜனை பாடத் தேர் மெல்ல நகரத் தொடங்கியது.

விக்னேஸ்வரமூர்த்தி தோய்த்து உலர்ந்த ஒரு வேட்டி கட்டியிருந்தார். அதில் இரண்டு இடங்களில் கிழிந்திருந்த இடங்கள் தைக்கப்பட்டிருந்தன. அந்த வேட்டிக் கேற்ற ஒரு சால்வையை இடுப்பில் கட்டியிருந்தார். அவரின் அருகில் நின்ற கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் விக்னேஸ்வரமூர்த்தி கட்டியிருந்ததைப் போன்றதொரு வேட்டியையே கட்டியிருந்தார். தணிகாசலம் கட்டியிருந்த வேட்டியில் பல கிழியல்கள் இருந்தன. சில தைக்கப்பட்டிருந்தன. பல தைக்கப்படவில்லை.

பட்டணத்தில் தங்க ஆபரணக் கடை வைத்து நடத்தும் அவ்வூரவனான கனகசபாபதி சுந்தரலிங்கத்தைக் கண்டு விட்டு அவரின் அருகே வந்தான். அவனது எட்டு விரல்களிலும் மோதிரங்கள் அணியப்பட்டிருந்தன. கழுத்தில் இரண்டு பட்டில் மொத்தமான பெரியதொரு சங்கிலி, இருந்தது அது வலதுபக்கத் தோளில் மடித்துப் போடப்பட்டிருந்தது. பல்லாயிரம் ரூபா பெறுமதியான பட்டு வேட்டி அணிந்திருந்தான்.

தேர் வடக்கு வீதிக்கு வந்தது; ‘‘நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி சனசமூக நிலையத்திற்கு அருகே நின்ற வாகை மரத்தின் கீழ் நின்றது. சனசமூக நிலையத்தினர் நெடுங்காலமாக மகா கணபதியின் தேர்த்திருவிழாவன்று அடியவர்களுக்கு உணவளிப்பார்கள். வாகை மரத்தின் கீழ் மேளச்சமா நடைபெறும். இராஜசங்கரக் குருக்கள் சனசமூக நிலையத்தினர் கொடுத்த அர்ச்சனைத் தட்டை வாங்கி அர்ச்சனை செய்து கொண்டிருந்தார்.

சுந்தரலிங்கமும் விக்னேஸ்வரமூர்த்தியும் கனகசபாபதியும் நின்ற இடத்திற்குச் சுப்பிரமணியம் வந்தான், அவனைக் கண்டதும் சுந்தரலிங்கம் கேட்டார்; ‘‘இப்ப மகனுக்கு எப்படி?’’

சுப்பிரமணியம் கண்கலங்கினான். சில நிமிடங்கள் அவனால் பேச முடியவில்லை; ‘‘ முன்பிலும் பார்க்க இப்ப பரவாயில்லை இன்னொரு முறைசத்திர சிகிட்சை செய்ய வேண்டும் என்கிறார்கள்’’. அழுதான் சுப்பிரமணியம்.

‘‘அழாதை, துன்பமான வேளைகளில் தான் தைரியமாக இருத்தல் வேண்டும். கடவுள் எமக்கு எல்லா உதவிகளையும் செய்வார். மகா கணபதி மீது பாரத்தைப் போட்டு விட்டு தைரியமாக இரு’’ என்ற சுந்தரலிங்கம் விக்னேஸ்வரமூர்த்தியைப் பார்த்துச் சொன்னார்; ‘‘இவர் எனக்குத் தெரிந்தவர். மகனுக்கு ஒரு முறை சத்திர சிகிடசை செய்தாயிற்று. இன்னொரு முறை செய்ய வேண்டும் என்று சொல்கிறார். பாவம் ஏழை நாம் ஏதாவது உதவி செய்தல் வேண்டும்’’.

‘‘அப்படியா நான் உதவி செய்கிறேன்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி. அப்பொழுது அவ்விடத்திற்கு மணிவண்ணனும் தணிகாசலமும் வந்தனர்.

மணிவண்ணனுக்கும் தணிகாசலத்திற்கும் சுந்தரலிங்கம் சுப்பிரமணியத்தைப் பற்றிக் கூறினார்.

‘‘நான் சத்திரசிகிட்சைக்கான முழுச் செலவையும் ஏற்றுக் கொள்கிறேன்’’ என்றான் மணிவண்ணன்.

‘‘நானும் என்னால் முடிந்ததைச் செய்கிறேன்’’ என்றார் தணிகாசலம்.

‘‘எமது மக்களில் பெரும்பான்மையானோர் அடுத்தவர்களின் நலத்தையோ, சேவை செய்வதையோ பெரிதாக மதிப்பதில்லை. கோயில்களின் அபிவிருத்தியை மட்டும் செய்வது கடமையாகாது. இல்லாதவனுக்கு உதவுவதும் அவன் மீது கருணை காட்டுவதும் எமது கடமையாகும். பணமுள்ளவர்கள் கோயில்களைப் புரணமைப்பதோடு ஏழைகள் மீது கருணை காட்டவும் வேண்டும். பொருள் என்னும் செல்வம் எல்லோரிடமும் உண்டு. துறவிகளைத் தவிரச் செல்வம் எல்லோரிடமும் வரும் போகும். ஒருவனிடம் உள்ள செல்வமானது எல்லோருக்கும் பயன்படல் வேண்டும். தூய்மையான

மனத்துடன் ஏழைகளுக்கு உதவுதல் வேண்டும். பிறருக்கு தன்னல மற்ற சேவை செய்தல் வேண்டும். இதுவே சமயமாகும். ஒருவனின் சமய வாழ்வு அவனது அனுட்டானங்களில் மட்டும் தங்கியிருப்பதில்லை. நடை முறையில் தான் உள்ளது என்பதை நீங்கள் உணர வேண்டும். நல்லவனாக இருப்பது நல்லதைச் செய்வது உயிர்கள் மேல் கருணை காட்டுவது. இது தான் சமயம். என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளல் வேண்டும். இறைவா இறைவா என்றழைத்து, பூசை செய்விப்பதிலும் கட்டிடங்களைக் கட்டுவதிலும் விரதங்கள் அஸ்டிப்பதிலும் பக்தி இல்லை. சமயம் கூறும் தத்துவங்களைப் புரிந்து உயிர்கள் மீது கருணை காட்டுவதிலும், நொந்த உயிர்களுக்கு சேவை செய்வதிலும் தான் பக்தி இருக்கிறது. இன்று மகா கணபதியின் தேர்த்திருவிழாவைக் காண வந்திருக்கும் நீங்கள் இறைவனின் நாமத்தைச் சொல்லி ஏழைகளுக்கு உதவி செய்யுங்கள். விரதமிருப்போர் அதிதி ஒருவனுக்கு உணவு அளியுங்கள். பணமுள்ளோர் நோயாளிகளுக்கும், ஏழைகளுக்கும் வேண்டியவற்றைச் செய்யுங்கள். மகா கணபதி உங்கள் மீது அன்பு வைப்பார்'' ஸ்ரீனிவாசன் சுவாமிகள் ஒலி பெருக்கியில் அருளுரை வழங்கிக் கொண்டிருந்தார்.

''நான் மகா கணபதியிடம் வரும் போதெல்லாம் சுவாமிகளிடமும் செல்வேன். மனமறிந்து அருள் செய்வார். காலையில் சுவாமியின் பாதங்களைப் பற்றிப் பிடித்துக் கதறினேன். அதற்கான பயன் கிடைத்து விட்டது'' என்றான் சுப்பிரமணியம்.

''நான் பிறகு சந்திக்கிறேன் ஐயா'' என்று கூறிவிட்டு நகர்ந்தான் கனகசபாபதி.

''கனகசபாபதி ஐயா பெரிய பணக்காரன். பலமுறை நான் உதவி கேட்டும் அவர் எதுவும் தரவில்லை. யாராவது கொடுத்தால் வாங்குவார்'' என்றான் சுப்பிரமணியம். அவன் சொன்னது கனகசபாபதியின் காதில் விழுந்த போதும் கேளாதது போலச் சென்று கொண்டிருந்தான் கனகசபாபதி.

241. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

பொருள் என்னும் செல்வம் இழிந்தவர்களிடம் கூட இருக்கிறது. உயர்ந்தவர்களிடம் உள்ள அருளாகிய செல்வமே மிகச் சிறந்த செல்வமாகும்.

## துணையாவது

சுப்பிரமணியத்தின் மகன் பகீரதனுக்கு இருதய சத்திர சிகிட்சை நல்ல முறையில் செய்து முடிந்ததால் அவன் பூரணமாகக் குணமடைந்திருந்தான்.

வைத்தியசாலையில் இருந்து மகனைச் சுப்பிரமணியம் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு அழைத்து வந்தார்.

அவர்கள் கோயிலுக்கு வந்த போது ஸ்ரீனிவாசன் சுவாமிகளுடன் சுந்தரலிங்கமும் விக்னேஸ்வரமூர்த்தியும் தணிகாசலமும் அரசமரநிழலில் இருந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுடன் அடியார்கள் பலரும் குழுமியிருந்தனர்.

பகீரதன் சுவாமியாரின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான்; ‘‘சுகதேகியாக நீ வாழ்வாய். உன் மீது பலர் கருணை காட்டியமையால் தான் நீ இன்று உயிர் வாழ்கிறாய். அதே போல் உன் வாழ்வில் நீயும் கருணை உள்ளவனாக எந்நாளும் வாழ். நல்ல வழிகளை ஆராய்ந்து நாம் கருணை உள்ளவர்களாக வாழவேண்டும். பலவழிகளாலும் ஆராய்ந்து பார்த்தாலும் அருள் நிரம்பிய கருணையே வாழ்க்கைக்குத் துணையாக விளங்குகிறது. ஒருவன் நேர்மையுள்ளவனாக வாழவேண்டும். நேர்மையுள்ளவன் முடிவுகளை எடுப்பதில் தைரியசாலியாக இருப்பான். அவன் நீதிமானாக இருப்பான். தோல்வியைக் கண்டு துவளாதவனாக இருப்பான். சமயக் கொள்கைகளில் நிறைந்த ஈடுபாடுள்ளவனாக இருப்பான். மனதளவில் கூட அவன் தவறு செய்ய மாட்டான். வாழ்வுக்குத் தேவையானது சமயம் அல்ல. ஒழுக்கமும் நேர்மையுமே. நீ நேர்மையுடையவனாக வாழ்ந்தால் மற்றவை யாவும் உன்னைத் தேடி வரும்’’ என்றார் சுவாமியார்.

பகீரதன் கண்களால் கண்ணீர் வடியச் சொன்னான்; ‘‘சுவாமிகள் கூறிய அறிவுரைகளை நான் வழுவாது போற்றி வருவேன். எனது உயிர் போனாலும் சுவாமிகள் சொன்ன அறிவுரைகளை மீற மாட்டேன்.’’

பகீரதன் சுந்தரலிங்கத்தினதும் விக்னேஸ்வரமூர்த்தியினதும் தணிகாசலத்தினதும் கால்களில் விழுந்து பணிந்தான்.

‘‘சுப்பிரமணியம் விக்னேஸ்வரமூர்த்தியின் அருகில் வந்து சொன்னார்; ஐயா எனது மகன் இரண்டு வருடங்களுக்கு முன்பு கா.பொ.த. உயர்தரப் பரீட்சை எடுக்க வேண்டியவன். நோய் காரணமாக எடுக்கவில்லை. நான் ஏழை படிப்பறிவு இல்லாதவன். தயவு செய்து எனது மகன் பரீடசை எழுத உதவி செய்யுங்கள்’’.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசாது கல்விப்பணிப்பாளரான சுந்தரலிங்கத்தைப் பார்த்தார். வயது கூடியவர்கள் பரீட்சை எடுக்க முடியாது. அத்துடன் பகீரதன் வேற்றூரவன். அவரின் பாடசாலையிலும் கற்கவில்லை. அதனால் அவனைப் பற்றிய எந்த விசயமும் அவருக்குத் தெரியாது.

‘‘பகீரதன் பருத்தி மலை மகா வித்தியாலயத்திலா படித்தவர்?’’ சுந்தரலிங்கம் கேட்டார்.

‘‘ஓம் ஐயா...’’ என்றான் சுப்பிரமணியம்.

கல்விப்பணிப்பாளர் சிரித்தார். பின்பு ; ‘‘பருத்திமலை மகாவித்தியாலய அதிபர் தவராசா எதைச் சொன்னாலும் கேட்க மாட்டார். தானாகப் புரிந்து கொள்ளவும் மாட்டார். தான் நினைத்தது தான் சட்டம் என்பார். அத்துடன் நான் இதை ஓர் உதவியாகக் கேட்டால் அதை சாட்டாக வைத்துக் கொண்டு பல தீய செயல்களைச் செய்வார். மனதில் கருணைக்கே இடமில்லை. எனவே நீங்கள் பகீரதனது சான்றிதழ்களை வாங்கிப் பரீட்சித்து விட்டு தேவையான உதவிகளைச் செய்யுங்கோ. நான் பகீரதனைப் பற்றிய விபரங்கள் யாவும் அடங்கிய கடிதம் ஒன்றைப் பரீட்சை ஆணையாளருக்குத் தருகிறேன். கா.பொ.த.பரீட்சை விண்ணப்பப் பத்திரத்தோடு இணைத்து அனுப்புங்கோ என்று விக்னேஸ்வரமூர்த்திக்குச் சொன்ன கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம், சுப்பிரமணியத்தின் பக்கம் திரும்பி; ‘‘ விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவிடம் போனால் எல்லாம் செய்து தருவார்’’ என்றார்.

‘‘ஐயா நீங்கள் நல்லாய் இருக்க வேணும். நீங்கள் ஒரு கருணைக் கடல். பணம் பொருள் தான் வாழ்க்கை இல்லை. அருள் தான் உலகை ஆழ்கிறது’’ என்றான் சுப்பிரமணியம்.

அப்பொழுது அங்கே கனகசபாபதி வந்தான்; ‘‘தேர்த்திருவிழாவின் போது சுவாமிகள் கூறிய அறிவுரைகளைப் பற்றி நான் சிந்தித்துப் பார்த்தேன். ஒவ்வொருவரும் கருணை மிக்கவர்களாக வாழ்ந்தால் இன்புற்று வாழலாம். இரக்கமின்மையே துன்பங்களுக்கெல்லாம்காரண மென்பதை நான் உணர்ந்து கொண்டேன். என்னால் முடிந்த உதவிகளை நான் சுப்பிரமணியத்திற்குச் செய்கிறேன்’’ என்றான் கனகசபாபதி.

242. நல்லாற்றால் நாடி அருளாள்க; பல்லாற்றால்
தேரினும் அ.்.தே துணை.

நல்லவற்றை விரும்பி அருள் உள்ளவர்களாக ஒவ்வொருவரும் வாழ வேண்டும். பல வழிகளால் ஆராய்ந்து பார்த்தாலும் அருள் தான் வாழ்க்கைக்குத் துணையாக உள்ளது.

## இல்லை

கனகசபாபதியின் அயல்வீட்டுக்காரன் அருள்நேசன், கனகசபாபதி பொருள் ஆசை பிடித்தவன். தனது சகோதரர்களுடனும் காணி சம்பந்தமாகத் தகராறுகளில் ஈடுபடுபவன். கோயிற் காணிகள் பலவற்றைத் தனது காணியெனக் கூறி அவற்றைக் கைப்பற்றி வைத்திருப்பவன். சின்னத்தம்பி என்பவன் சிதம்பரத்திற்குச் சொந்தமான காணியில் தோட்டம் செய்து வந்தான். அக்காணியை கனகசபாபதியின் தகப்பனார் பராமரித்து வந்தார். தகப்பனார் உயிரோடு இருக்கும் காலத்தில் தகப்பனாருக்குச் சின்னத்தம்பி குத்தகைக் காசு கொடுத்து வந்தான். ஒரு நாள் யாருக்கும் அறிவிக்காது கனகசபாபதி சின்னத்தம்பி செய்த தோட்டத்துக்குள் கடையொன்றைக் கட்டத் தொடங்கினான்.

சின்னத்தம்பி வறியவன் ஊர்ப்பிரமுகர்கள் பலரிடம் சென்று முறையிட்டான். கனகசபாபதி பணபலம் மிக்கவன்; நீதி நியாயம் இல்லாதவன்; யார் எதைச் சொன்னாலும் கேட்க மாட்டான் என்பதால் யாரும் அவ்விஷயத்தில் தலையிட முன்வரவில்லை. சின்னத்தம்பியால் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய முடியவில்லை. கனகசபாபதி முன்கூட்டியே சின்னத்தம்பிக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்திருந்தான்.

நீதிமன்றுக்குச் சென்ற சின்னத்தம்பியால் வழக்குஞரை நியமிக்க முடியவில்லை. அதனால் கடையைக் கட்டும் போது சண்டைக்குப் போனதற்காகச் சின்னத்தம்பிக்கு ஒரு வார காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கனகசபாபதி அருள்நேசனில் எல்லையில் உள்ள கதிகால்களை கொஞ்சம் கொஞ்சமாக அகட்டினான். கேட்கப் போன அருள்நேசனை அடியாள்கள் வைத்து அடிப்பித்தான். அத்துடன் நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தான். கிராமத்தின் உள்ளே இருந்த கனகசபாபதி சனநடமாட்டம் மிக்க மதிப்பான ஓர் இடத்தில் பெரியதொரு வீடு கட்டிக் குடிபுகுந்தான். அன்று தனது பழைய வீட்டில் இருந்த பொருட்கள் யாவற்றையும் வாகனம் ஒன்றின் மூலம் புதிய வீட்டிற்குக் கொண்டு சென்றான். அப்பொழுது அவனது முக்கிய ஆவணங்கள் அடங்கிய ஒரு பெட்டி வழியில் தவறி விட்டது. தான் தேடிய சொத்துக்களின் முக்கிய ஆவணங்கள் தான் கொடுத்த கடன் பத்திரங்கள், வியாபாரம் சம்பந்தமான கடிதங்கள் கோவைகள், வருமானவரி சம்பந்தமான கோவைகள் பற்றுச் சீட்டுக்கள் யாவும் அப்பெட்டியில் இருந்தன. அதனால் பைத்தியம் பிடித்தவனைப் போலப் பிதற்றிக் கொண்டிருந்தான். அவனும் அவனது குடும்பத்தினரும் கிராமத்தில் உள்ள அத்தனை வீடுகளுக்கும் சென்று இரந்து கேட்ட போதும் யாரும் தாம் எடுத்ததாக ஒப்புக் கொள்ளவில்லை.

பழையவீடடிற்கும் புதிய வீட்டிற்கும் இடைப்பட்ட வழியில் தான் பெட்டி தொலைந்தது. இந்த ஊரில் உள்ள யாரோ ஒருவன்  தன்னில் உள்ள கோபம் காரணமாகவே யாரோ எடுத்து ஒளித்து வைத்திருக்கிறான். என்று கனகசபாபதிக்குப் புரிந்தது. அந்தப் பெட்டியை எடுத்தவர்களுக்கு ஒரு சதமேனும் பிரியோசனமிராது. ஆனால் கனகசபாபதிக்குக் கோடிக் கணக்கில் நட்டமேற்படும். அதை அறிந்தவர்கள் யாரோ தான் பெட்டியை மறைத்து வைத்திருக்கிறார்கள். என்று கனகசபாபதிக்குப் புரிந்தது. அதனால் பெட்டியைத் தருவோருக்கு ஓர் இலட்ச ரூபா சன்மானம் தருவதாக அறிவித்தான். அவன் அப்படி அறிவித்து ஒரு மாதம் கழிந்தும் பெட்டியை யாரும் திருப்பிக் கொடுக்கவில்லை. அதனால் மனமுடைந்து நடைப்பிணமாக உலாவினான் கனகசபாபதி.

அன்று காலை கவலையுடன் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தான் கனகசபாபதி. அங்கே தணிகாசலம் இருந்தார்.

‘‘ஐயா இன்னும் பெட்டி வந்து சேரவில்லை. என்னுடைய முழுச் சொத்தின் ஆவணங்களும் கடன் பத்திரங்களும் அப்பெட்டிக்குள் இருப்பதால் அவ்

ஆவனங்கள் கிடைக்காவிட்டால் என்னுடைய வாழ்க்கை அஸ்தமித்து விடும். கடன் பத்திரங்கள் இல்லாமல் கடன்களை வசூலிக்க முடியாது. கடன்பெற்றோரிடமிருந்து கடனைப் பெறும் போது பத்திரங்கள் கொடுத்தல் வேண்டும். இல்லாவிட்டால் நான் கொடுத்த பணத்தைத் தரமாட்டார்கள்'' அழுதான் கனகசபாபதி.

அவனைப் பார்க்க விக்னேஸ்வரமூர்த்திக்குக் கவலையாக இருந்தது.

''நீர் யாரையாவது சந்தேகிக்கிறீரா?'' என்று கேட்டார்.

''ஐயா நான் பலருடன் இரக்கமில்லாமல் நடந்து கொண்டேன். அறியாமையால் இருள் பொருந்திய துன்ப வாழ்க்கையை வாழ்ந்து விட்டேன். அதனால் என்மீது பலர் இரக்கப்பட மாட்டார்கள்'' அழுதான் கனகசபாபதி.

''நான் விசாரித்துப் பார்க்கிறேன்'' என்ற விக்னேஸ்வரமூர்த்தி மறு நாள் பாடசாலையில் காலை ஆராதனை முடிந்ததும் மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார்; ''என் அன்பார்ந்த மாணவர்களே! நாம் எல்லோருடனும் அன்புடன் வாழ வேண்டும். மற்றவர்களை மதித்து வாழுதல் வேண்டும். எமக்குத் துன்பஞ் செய்தவர்கள் மீதும் கருணை காட்டல் வேண்டும். பழிக்குப் பழி வாங்குவதால் துன்பம் வருமே தவிர செல்வம் வராது. அன்பார்ந்த மாணவர்களே எப்பொழுதும் நல்லவற்றையே எண்ணுங்கள். நல்லவற்றையே சிந்தியுங்கள். அப்படி நடந்து கொண்டால் மானிடன் தெய்வமாவான். பகவனை மன்னிப்பவனை விட உயர்ந்தவன் இவ் உலகில் இல்லை. கொடுமைகளைச் செய்பவனைத் தண்டிப்பதற்கு ஆண்டவன் இருக்கிறான். அவன் உடனடியாகத் தண்டிக்காவிட்டாலும் என்றோ ஒரு நாள்த் தண்டிப்பான். அவனது தண்டனையில் இருந்து தப்ப முடியாது. கனகசபாபதி தனது ஆவணங்கள் அடங்கிய பெட்டியைத் தொலைத்து விட்டார். அது நிட்சயமாக இக்கிராமத்தில் உள்ள ஒருவரிடம் தான் உள்ளது. தயவு செய்து அதை எனக்காகக் கொண்டு வந்து தரச் சொல்லுங்கள். அப்பெட்டியை எனது பெட்டியாக நினைக்கச் சொல்லுங்கள். கெட்டவர்கள் தொடர்ந்து கெட்டவர்களாக வாழ இடங்கொடுக்கக் கூடாது. நல்லவர்கள் கெட்டவர்கள் மீது கருணை காட்டினால் தான் அவர்கள் திருந்துவார்கள்'' என்றார்.

அன்று இரவு பத்துமணிக்கு தில்லை நடராசா விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தான். அப்போது விக்னேஸ்வரமூர்த்தி இரவு உணவை உண்டு விட்டு அன்றைய புதினப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். தில்லை நடராசாவின் மகன் பிரதீபன் கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் வர்த்தகப் பிரிவில் கற்பவன். அத்துடன் பாடசாலையின் மாணவர்த் தலைவன். ஒழுக்கம் மிக்கவன், அதிபரைத் தெய்வமாகப் பூசிப்பவன்.

''வாதில்லை அப்படி என்ன அவசரப் பிரச்சினை'' என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

தில்லைநடராசா கொண்டு வந்த பெட்டியை அவரிடம் கொடுத்து விட்டுச் சொன்னான்; ‘‘ஐயா கனகன் மனிதனல்ல. அவன் ஊரவர்களுக்குச் செய்த அநியாயங்களைச் சொல்லி முடிக்கேலாது. நான் அவனது கடையில் ஐந்து பவுண் நிறையுள்ள சங்கிலி ஒன்றை அடைவு வைத்தேன். திருப்பி எடுக்கும் போது நாலரைப் பவுண் தான் இருந்தது. அதை விட நூறு வருடங்களாகக் கோயில் காணியில் தோட்டம் செய்த சின்னத்தம்பீன்ரை தோட்டத்துக்கை கடை கட்டினவன். சகோதரங்களோடை வழக்கு, அயலவையோடை வழக்கு, அதாலை பெட்டியைக் கொடுக்கக் கூடாதென்று நினைத்தனான். இன்றைக்குப் பாடசாலையாலை மகன் வந்து சொன்ன பிறனு பெட்டியை வைத்திருக்க எனக்கு விருப்பமில்லாமல் போயிட்டுது’’ என்றான் தில்லை நடராசா.

‘‘அறியாமையால் இருள் பொருந்திய துன்ப உலகில் இருந்து வாழும் வாழ்க்கையானது அருள் பொருந்திய நெஞ்சத்தவர்களிடம் இல்லை’’ என்று நினைத்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

அறியாமையாகிய துன்பங்கள் நிறைந்த உலகில் வாழ்கின்ற அவல வாழ்க்கை, அருள் பொருந்திய உள்ளம் உடையவர்களுக்கு இல்லை.

## அஞ்சாதோர்

சின்னத்தம்பியும் அருள்நேசனும் கனகசபாபதியின் வீட்டுக்கு வந்தனர். வீட்டு முற்றத்தில் நின்ற வேப்ப மர நிழலில் கனகசபாபதி விசரனைப் போல இருந்தான்; ‘‘டேய் கனகா, நீ நான் தான் உனது பெட்டியை எடுத்ததாகச் சொன்னாயாம். உன்னைப் போல கள்ளனே நான். ஊர் முழுவதையும் கொள்ளையடிச்சனி. கோயில்காணிகளையெல்லாம் உன்ரை காணிகளென்று கள்ள உறுதி முடித்து வைத்திருக்கிறாய். பவுணிலை கலப்படம் செய்யிறாய். அடைவு நகைகளை வெட்டிக் குறைக்கிறாய், அப்படியான உனக்கு எப்படி நல்ல வாழ்வு கிடைக்கும். அநியாயமாகத் தேடிய சொத்து அநியாயமாயே போயிட்டுது. கஷ்டப்பட்டு உழைத்த சொத்துத் தான் ஒருவனிடம் தங்கி நிற்கும். ஒன்றுமறியாத என்னை உன்னுடைய பெட்டியை எடுத்ததாகச் சொல்லித் திரியுறாய். இப்ப எச்சரித்து விட்டுப் போகத் தான் வந்தனான். இனிமேல் கதைச்சியெண்டால் கொலை செய்வன்’’ என்று கோபமாக ஏசிய சின்னத்தம்பி கனகசபாபதியைத் தள்ளி விழுத்தி இரண்டு முறை அடித்தான்.

‘‘நான் உன்னுடைய பெட்டியை எடுக்கேல்லை எடுத்திருந்தால் சந்தீலை போட்டு எண்ணெய் ஊற்றிக் கொழுத்துவனே தவிர கொண்டு வந்து தரமாட்டன்’’ என்றான் அருள்நேசன்.

அவர்கள் ஏசிவிட்டுச் சென்ற சிறிது நேரத்தின் பின் கனகசிங்கம் என்ற வர்த்தகன் கனகசபாபதியின் வீட்டுக்கு வந்தான். கனகசிங்கம் மகா முரடன். அடிக்கடி அனைவருடனும் முரண்படுபவன். சரியான குடிகாரன்; ''கனகண்ணை உங்களிட்டை வாங்கின காசைக் கொண்டந்திருக்கிறன். உறுதியையும் பத்திரத்தையும் தாருங்கோ'' என்றான்.

'உன்னுடைய உறுதியும் பத்திரமும் என்னுடைய முக்கிய ஆவணங்களும் ஒரு பெட்டிக்கை வைத்தனான். வீடு மாறேக்கை துலைந்து போயிட்டுது. இரண்டு நாள்ப் பொறுத்துக் கொள் தேடி எடுத்துத் தாறன்.''

''கனகு அந்த உறுதி கொழும்பிலை எழுதினது. துலைந்தால் கொழும்புக்குப் போய்த்தான் எடுக்க வேணும். அது பெரிய கரைச்சல் எப்படியெண்டாலும் தேடித்தா. என்னட்டை இருந்தால் காசு தேவையில்லாமல் செலவாகி விடும். காசைத் தந்து விட்டுப் போகலாம் உன்னை நம்பேலாது. இப்ப பத்திரம் தொலைந்து விட்டது என்று அழுவாய். பிறகு பத்திரத்தை எடுத்தால் காசுதரவில்லை என்பாய். அப்படி உருட்டிப் பிரட்டி உழைச்சது தானே தொலைந்தது''.

கனகசிங்கத்தின் வார்த்தைகள் கனகசபாபதிக்கு வேதனையைக் கொடுத்தன. அதற்குப் பதில் சொல்ல முடியாது தடுமாறினான்.

''எமது வாழ் நாள் குறுகியது. நாம் பாடு பட்டுத் தேடும் பொருட்கள் நிலையற்றவை. அதிகாரம், பதவி, செல்வம் போன்றவற்றை உழைத்தும் பெற்றுக் கொள்ளலாம். அவை உங்களிடம் வந்து சேரும் போது பயனுள்ளபடி செயலாற்றுங்கள். தமக்காக வாழாது பிறர்க்காக வாழ்பவர்களே உயிர்வாழ்பவர்கள் ஆவார்கள். மற்றவர்கள் வாழ்ந்தாலும் இறந்தவர்களாகவே கணிக்கப்படுவார்கள். பிற உயிர்கள் மீது கருணை செலுத்தாதவன் மனிதனல்லன். பிறரின் துன்பங்களை உணர்ந்து அவர்கள் மீது கருணை காட்டுபவன் தேவனாக மதிக்கப்படுவான். பிறரின் உழைப்பை கருணையின்றி அபகரித்து வாழ்பவன் என்றோ ஒரு நாள் தான் தேடிய பொருட்கள் முழுவதையும் இழந்து வருந்துவான். அவன் தினமும் தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற இழிவான நிலைக்கு ட்பட்டு வருந்துவான்'' என்று ஸ்ரீனிவாசன் சுவாமிகள் ஒரு நாள் அறிவுரையில் கூறிய வாசகங்கள் கனகசபாபதியின் நினைவுக்கு வந்தன.

''கடன் பத்திரங்களைக் கொடுக்காவிட்டால் என்னைக் கொன்றும் விடுவார்கள்'' என்பதை நினைக்க கனகசபாபதிக்குக் கலக்கமாக இருந்தது.

''கனகு எனது உறுதியோடு சேர்த்து எழுதிய பத்திரத்தைத் தராது விட்டாலும் பரவாயில்லை. உறுதியைத் தராவிட்டால் கரைச்சல் படுவாய். நான் வாறன்'' என்று கூறிவிட்டு நடந்தான் கனகசிங்கம்.

நடந்து செல்லும் கனகசிங்கத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான் கனகசபாபதி. அது உண்மையான உறுதி அல்ல. சிதம்பரக் கோயிலுக்கு எழுதப்பட்ட காணி அதற்குக் கனகசிங்கம் கள்ள உறுதி முடித்து வைத்திருந்தான். அதனால் தான் கனகசபாபதி உறுதியை பிரக்கிராசியாரைக் கொண்டு எழுதாது பத்திரமொன்று எழுதி வாங்கியிருந்தான். அதே போல் காணிகள் பலவற்றிற்குப் பிரக்கிராசியாரைக் கொண்டு கடன்பத்திரம் எழுதாது தான் ஒரு பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டு காசு கொடுத்திருந்தான். பத்திரமில்லாவிட்டால் காணிச் சொந்தக்காரர்கள் உறுதிகளைக் கச்சேரியில் எடுத்து விடுவார்கள். பின்பு அவர்களிட மிருந்து பணத்தைப் பெற முடியாது. அதனால் பல இலட்சரூபா நட்ட மேற்படும். அதனால் மிகவும் வருந்தினான் கனகசபாபதி.

வருமானவரி கட்டாமல் இருப்பதற்காகச் செய்த தில்லு முல்லு வேலைகளால் பல இலட்சரூபாவை இழக்க வேண்டி வந்ததை நினைத்துத் துக்கப்பட்டான் கனகசபாபதி. அதை விடக் கடன் வாங்கிய பலர் தினமும் வந்து அச்சுறுத்திக் கொண்டிருந்தனர். அதனால் மனக்கவலைக்குள்ளான கனகசபாபதி; ‘‘பெட்டி கிடைக்காவிட்டால் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை’’ என்று நினைத்தான்.

244. மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு இல்லென்ப
தன்உயிர் அஞ்சும் வினை.

உலகில் வாழும் உயிர்களைக் காப்பாற்றி வாழும் அருளாளனுக்குத் தன்னுடைய உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற இழிவான நிலை ஏற்படாது.

## துன்பமில்லாதவர்கள்

‘‘ நான் வரப்போறன் வாத்தியார். நீங்கள் பெட்டியை நான் தந்ததாகச் சொல்ல வேண்டாம்’’ என்று கூறிவிட்டு எழுந்தான் தில்லை நடராசா.

‘‘பொறுதில்லை அவசரப்படாதை. இந்தப் பெட்டியை நான் யார் தந்ததென்று சொல்வது’’.

‘‘நான் வேலையால் வரேக்கை வழியிலை இந்தப் பெட்டி கிடந்தது. தூக்கி வந்து வீட்டிலை வைத்திருந்தனான். துலைச்சவை தேடி வந்தால் கொடுப்பமென்று நான் பெட்டியை எடுத்ததாய்ச் சொன்னால் பல பேர் தன்னுடையது என்றும் சொல்லுவினை என்பதற்காக நான் ஒருவருக்கும் சொல்லேல்லை. நான் பெட்டி எடுத்த பத்தாவது நிமிடம் கனகசபாபதியின்ரை ஆட்கள் பலர் தேடி வந்தவை. நான் சொல்லவில்லை. அதோடை எனக்கெண்டால் இந்தப் பெட்டியைத் திருப்பிக் கொடுக்க விருப்பமில்லை. நான் இதுவரை பெட்டியைத் திறந் பார்க்கவில்லை. ஆனால் பெட்டிக்குள்ளை

இருக்கிற பத்திரங்களெல்லாம் கள்ளப்பத்திரங்கள். மற்றவர்களை ஏமாற்றிப் பெற்ற பத்திரங்கள். நீங்கள் இந்த விடயத்தில் தலையிட்டு விட்டீர்கள் என்பதற்காகத் தான் பெட்டியை நான் உங்களிடம் கையளித்தேன். தொலைந்த பெட்டி எனது பெட்டியென்று நினைத்துக் கொண்டு வந்து தாருங்கள். என்று நீங்கள் கூறிய அந்த வார்த்தைகளை மதித்ததனால் தான் பெட்டியைக் கொண்டு வந்து தந்தேன். அதே போல் நீங்களும் எனது விருப்பத்தை மதித்து நடத்தல் வேண்டும்'' என்றான் தில்லை நடராசா.

விக்னேஸ்வரமூர்த்தியால் எதுவும் பேசமுடியவில்லை. சில கணங்கள் யோசித்தார்; ''நான் போயிட்டு வாறன் வாத்தியார்'' என்ற தில்லைநடராசா எழுந்து நடந்தான்.

விக்னேஸ்வரமூர்த்தி சில கணங்கள் முற்றத்தில் உலாவினார். பின் அடுத்த வீட்டிற்குச் சென்று தனது மாணவனான வித்தியாகரனை அழைத்து தணிகாசலத்தை தன்னை வந்து சந்திக்கும் படி கூறுமாறு சொன்னார். பின் மீண்டும் வீட்டுக்குத் திரும்பி வந்து முற்றத்தில் உலாவினார்.

சிறிது நேரத்தில் பரபரப்புடன் வந்த தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்தி முற்றத்தில் உலாவுவதைப் பார்த்துக் கொண்டு சில கணங்கள் நின்றார். அவர் அப்படி உலாவினால் ஏதோ பெரிய தொரு விஷயத்தைப் பற்றித் திட்டமிட்டு யோசிக்கிறார். என்று தணிகாசலத்திற்குத் தெரியும். அத்துடன் அந்த நேரத்தில் முக்கியமான விஷயமில்லாவிட்டால் தன்னை அழைக்க மாட்டார் என்றும் தணிகாசலத்திற்குத் தெரியும்.

''வாத்தியார்''

''வா தணிகாசலம் உள்ளே சென்று கதைப்போம்'' என்ற விக்னேஸ்வரமூர்த்தி வீட்டின் உள்ளே செல்ல தணிகாசலம் அவரைப் பின் தொடர்ந்து சென்று நாற்காலியொன்றில் அமர்ந்து கொண்டார்.

''கனகற்ரை பெட்டியை ஒருவர் கொண்டு வந்து தந்திட்டுப் போகிறார். தான் தந்ததாகச் சொல்ல வேண்டாம் என்று எனக்கு நிபந்தனை இட்டிருக்கிறார். அது தான் பெட்டியைக் கொண்டு சென்று கொடுத்திட்டு வருவமென்று தான் உங்களைக் கூப்பிட்னான்''.

தணிகாசலம் சிலகணங்கள் மௌனமாகச் சிந்தித்தார். பின்; ''காலையில் நீங்கள் மாணவர்களிடம் உரையாற்றிய பின்பு தான் பெட்டியைக் கொண்டு வந்து தந்திருக்கிறார்கள். இது யோசிக்க வேண்டிய விஷயம். என்றாலும் நீங்கள் அங்கு செல்வதை நான் விரும்பவில்லை. அவனைக் கூப்பிட்டுக் கொடுப்பம் சரி யென்று நீங்கள் சொன்னால் நான் போய்க் கூட்டியாறன்.''

''சரி'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

தணிகாசலமும் கனகசபாபதியும் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தனர். தணிகாசலம் கனகசபாபதியை விக்னேஸ்வரமூர்த்தி வரச் சொல்லிச் சொன்னாரே தவிர வேறு எதுவும் சொல்லவில்லை. பரபரப்புடன் வந்த கனகசபாபதி விக்னேஸ்வரமூர்த்தியின் அருகில் தொலைந்த தனது பெட்டி இருப்பதைக் கண்டு அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தான்.

“வாத்தியார் இந்தப் பெட்டி கிடைக்கு மென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. உங்களது கருணையால் தான் இப்பெட்டி எனக்குக் கிடைத்தது. நான் சொன்னபடி பெட்டியைத் தந்தவனுக்கு ஓர் இலட்சம் ரூபா சன்மானமாகக் கொடுக்கிறேன். பெட்டியை யார் கொண்டு வந்து தந்தது”.

“பெட்டியை யார் கொண்டு வந்து தந்தது என்று மட்டும் கேட்காதீர்கள். உங்களது சன்மானத்திற்காகப் பெட்டியைக் கொண்டு வந்து தருவதாக இருந்தால் ஒரு மாதத்திற்கு முன்பு நீங்கள் சன்மானம் தருவதாகச் சொன்ன போது கொண்டு வந்து தந்திருப்பார்கள். இப்பொழுது கருணையால் தான் பெட்டியைக் கொண்டு வந்து தந்திருக்கிறார். அதுவும் தனது பெயரைச் சொல்ல வேண்டாம் என்ற நிபந்தனையுடன் மனிதனால் பணத்தையும் தேட முடியும் பண்பையும் தேட முடியும். நல்ல பண்புகளைத் தேடிக் கொண்டால் எந்த வேளையிலும் அழியாத செல்வம் அவனது காலடியில் வந்து சேரும். அத்தகைய அருள் நிறைந்த நெஞ்சை உடையவர்களுக்குத் துன்பம் என்பது வந்து சேராது. அதற்குச் சாட்சியாகப் பலர் எம் முன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு நிறைய உதாரணங்கள் சொல்லலாம். அருள் நிறைந்த மனம் உள்ளமையால் தான் நீங்கள் பல தீமைகள் செய்த போதும் அதைப் பொருட்படுத்தாது, தன்னையும் வெளிக்காட்டிக் கொள்ளாது சன்மானமும் பெறாது உங்கள் பெட்டியைக் கொண்டு வந்து ஒருவர் தந்திருக்கிறார்”. என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

ஒவ்வொருவரும் அடுத்தவர்களைக் கெடுக்கவே விரும்புகிறாகள். மற்றவர்களின் மீது கருணை காட்டப் பெரும்பான்மையானார் தயாராக இல்லை. உயிர்கள் மீது கருணை கொண்டு வாழ்ந்தால் எல்லாச் செல்வங்களும் உன் காலடியில் வந் குவியும். துன்பங்கள் யாவும் அகன்று போகும்” என்றார் தணிகாசலம்.

நான் இனிமேல் அதர்மமான வழிகளில் செல்ல மாட்டேன்” என்று அழுதான் கனகசபாபதி.

245. அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி.

அருளுடைய வர்களாக வாழ்பவர்களுக்குத் துன்பம் இல்லை; அதற்குக் காற்று இயங்குகின்ற வளம் பொருந்திய இப்பெரிய உலகத்தில் வாழ்வாரே சாட்சியாவர்.

# மறந்தவர்

“ஐயா உங்களால் தான் எனக்கு இந்தப் பெட்டி கிடைத்தது. இந்த உதவியை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். பெட்டி எடுத்துத் தந்தவர் யார் என்று சொல்ல மறுக்கிறீர்கள். அத்துடன் நான் கொடுப்பதாகச் சொன்ன சன்மானத் தொகையையும் பெற மாட்டன் எனக் கூறுகிறீர்கள். அந்தக் கருணை மிக்கவனின் பெயரைக் கூட அறிய முடியாத பாவியாக நான் இருக்கிறன்” அழுதான் கனகசபாபதி.

“முதலில் பெட்டியைத் திறந்து உமது பொருட்கள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா எனப் பாருங்கள்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

பூட்டு திறக்கப்படவில்லை. என்றாலும் பார்க்கிறேன்” என்ற கனகசபாபதி தான் கொண்டு வந்த சாவியை எடுத்து பூட்டைத் திறந்து, பெட்டியைத் திறந்தான். எல்லா பத்திரங்களும் தான் அடுக்கி வைத்தபடி இருப்பது தெரிந்தது; “சரியாக இருக்கிறது. பெட்டியை எடுத்தவன் திறந்து பார்க்கவில்லை” என்றான் கனகசபாபதி.

“இந்த உலகத்தில் உயிர்கள் மீது கருணை காட்டுவோர் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். அவர்கள் நல்ல வழியில் செல்வதால் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் வெற்றி அடைந்திருக்கிறார்கள். ஒருவன் கற்ற கல்வி ஒழுக்கத்தையும் மனவலிமையையும் கருணை பூத்த உள்ளத்தையும் உருவாக்க வேண்டும். உங்களது தகப்பனார் நல்ல கல்வி மான். நீங்களும் கற்றவர். நடந்தவற்றை யெல்லாம் மனதில் இருத்திச் சிந்தித்து இனியாவது கருணை உள்ளவராக வாழ முயற்சியுங்கள். கருணையில்லாது வாழ்வோர் வாழ்வின் குறிக்கோளை மறந்தவர்கள் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்” என்றார் தணிகாசலம்.

“இனி நான் நல்ல முறையில் வாழுவன் அண்ணை” என்று கூறி விடைபெற்றான் கனகசபாபதி. அவனது மனத்தில் என்று மில்லாத குதூகலம் நிறைந்திருந்தது.

இவன் ஒரு நாளும் திருந்த மாட்டான் வாத்தியார். முப்பது வருடத்துக்கு முந்தி இவனது தகப்பன் குருநாதன் நகை அடைவு பிடிக்கும் கடை வைத்திருந்தவர். ஒரு நாள் இரவு தகப்பனும் மகனுமாகச் சேர்ந்து கடையைத் திறந்து விட்டு விட்டு, தகப்பனை மகன் தூணோடு சேர்த்துக் கட்டிப் போட்டான். தான் வீட்டில் படுத்திருந்ததென்றும் தகப்பன் கடையில் காவலுக்குப் படுத்திருந்த போது கூரை ஓட்டைப் பிரித்து இறங்கிய திருடர்கள் தகப்பனை மிரட்டிப் பெட்டகச் சாவியை வாங்கி முழு நகைகளையும் கொள்ளையடித்துச் சென்று விட்டதாகவும் கூறினான்.

சனங்களும் அதை உண்மை என்று நம்பி விட்டார்கள் அதை வேடிக்கை பார்க்கச் சென்ற இரத்தினம் என்பவன் ஓடு கழற்றிய இடத்தில் உள்ள சிலந்தி வலைகளும் தூசிப் படிவுகளும் அப்படியே இருப்பதைக் கண்டு

இவர்கள் நகை கொள்ளையிடப்பட்டதாகக் கூறி அவ்வளவு நகைகளையும் எடுத்து விட்டதாகக் கருதினான். எனது மாமா ஒருவர் சிறைச் சாலைத் திணைக்களத்தில் பாதுகாவலராக வேலை செய்தவர். அவருடைய காக்கிச் சீருடைகளை வாங்கிய இரத்தினமும் அவனது நண்பர்களும் அன்று இரவு அதை அணிந்து கொண்டு குருநாதனின் வீட்டுக்குச் சென்று தம்மை காவல் துறையினர் எனக் கூறி அவர்களை வெருட்டினர்.

முதலில் மறுத்த குருநாதன் பின் அவர்களுக்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்டார். தொடர்ந்து அவர்கள் வெருட்டியமையால் பயந்த குருநாதன் உண்மையை ஒத்துக் கொண்டான். மறு நாள் இரத்தினம் மக்களை அழைத்து உண்மை நிலையைக் கூறி நகைகளை உடனே பணம் கொடுத்து மீழுமாறு சொன்னான்.

“நீ சொல்லத்தான் எனக்கு ஞாபகம் வருகிறது. ஆச்சி இரண்டு பவுண் நகையை அடைவு வைச்சவா. உரிய தவணையிலை மீழ முடியாமல் போயிட்டுது. கொஞ்ச நாள்க் கழித்து ஆச்சி போய்க் கேட்க உரிய தவணையிலை மீழாததால் நகையை விற்று விட்டேன் என்று குருநாதன் சொன்னவராம். ஆச்சி சாகும் வரை சொல்லிக் கவலைப்பட்டவா” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“அருள் இல்லாதவராய் அறமில்லாதசெயல்களைச் செய்து நடப்பவர்களை பெரியவர்கள், வாழ்க்கையின் குறிக்கோள்களை மறந்தவர்கள் என்று சொல்வார்கள். இவர்களுக்கு வெட்கம், ரோசம், மானம் எதுவுமே இல்ை” என்று பெரு மூச்சுவிட்டார் தணிகாசலம்.

246. பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்துஒழுகு வார்.

அருளில்லாமல் அறமல்லாத செயல்களைச் செய்து வாழ்பவர்களை, உறுதியான பொருளான அறத்தில் இருந்து நீங்கிக் குறிக்கோளில்லாது வாழ்பவர் என்று சொல்வர்.

## வாழ்வு

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தின் முன்னால் நின்ற ஒரு வேப்பமரத்தின் கீழ் ஒரு துணியை விரித்து விட்டுப் படுத்திருந்தார் கதிரேசன். சுகமான தென்றல் காற்று அவரின் உடலை மெல்ல வருடிக் கொண்டிருந்தது. அவருக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. அவரின் அருகே படுத்திருந்த ஸ்ரீனிவாசன் சுவாமிகளின் நாய் எழுந்து அரசமரத்தை நோக்கி ஓடியது. கதிரேசன் திரும்பிப் பார்த்தார். சுவாமிகள் நீராடி விட்டு ஈர உடையுடன் சுவாமிகள் நீராடி விட்டு ஈர உடையுடன் அரசமரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

நாலைந்து நாட்களுக்கு முன்பு அவரது தங்கை ஈஸ்வரி கோயில் மடத்திற்கு வந்து சொன்னாள்; அண்ணை இவ்வளவு காலமும் நாங்கள் ஏழைகள். அப்பிடியிருந்தும் நீங்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து சகிக்க முடியாமல் எம்முடன் வந்து இருக்கச் சொல்லிப் பல முறை கேட்டும், நீங்கள் எமது ஏழ்மையைக் காரணங்காட்டி வரவில்லை. இப்பொழுது நாம் தணிகாசலமண்ணையின்ரை கருணையாலை நல்லாய் இருக்கிறம். நீங்களும் வந்து எங்களோடு இருங்கோ. பலரிடம் இரந்து உண்பதை விட உடன் பிறந்த சகோதரியிடம் வாங்கி உண்பது கேவலமானதல்ல. நீங்கள் பலரிடம் இரந்து உண்பதை நாம் முன்பு தவறாக எண்ணவில்லை. ஏனென்றால் நாங்களும் இரந்து தான் உண்டனாங்கள். பணம் இல்லாதவன் பிணம். பணமில்லாதவனின் வாழ்க்கை பயனில்லாதது என்பதையும் பணமில்லாததால் இவ்வுலக இன்பங்கள் எதையும் அனுபவிக்க முடியாதென்பதையும் நாங்கள் அனுபவபூர்வமாக உனர்ந்தனாங்கள். இப்ப எமது முயற்சியால் பணம் வந்து விட்டது. செல்வம் உடையவனின் வாழ்வு தான் இவ்வுலகில் சிறந்தது. பெற்ற தாயும் உடன் பிறப்புக்களும் பிள்ளைகளும் அயலவர்களும் நண்பர்களும் பசியால் வாடும் போது அருள் உள்ள செல்வந்தனால் தான் அவர்களுக்கு உதவ முடியும். அடுத்தவர்களுக்கு உதவி செய்வதற்காகப் பணத்தைத் தேடு என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உடன் பிறந்த உங்களுக்கு உதவாத பணத்தைத் தேடியதால் என்ன பிரயோசனம்''.

தங்கையின் வார்த்தைகள் அவரின் காதில் ஒலித்தன. மெதுவாக எழுந்து ஸ்ரீனிவாசன் சுவாமிகளிடம் சென்றார். ஸ்ரீனிவாசன் சுவாமிகள் அவரின் மீது அன்பும் அக்கறையும் கொண்டவர். அதனால் தங்கை வந்து சொன்னவற்றை அவருக்குச் சொல்லியிருந்தார்.

''இன்னும் முடிவு எடுக்கவில்லையா? வாழ்க்கைக்கு பலமே மிகவும் இன்றியமையாதது. பலம் தான் செயல்களின் வெற்றிக்கு காலாக அமைவது. இறைவனிடம் நம்பிக்கை வைப்பவனிடம் பலம் மிகுந்திருக்கும். ஒரு செயலில் இருந்து விடுபட வேண்டுமானால் அதை எண்ணுவதைத் தவிர்த்தல் வேண்டும். ஒரு சிறிய செயலுக்காகப் பல முறை சிந்தித்து மனதைத் துன்பப்படுத்துவது பலவீனனின் செயல். உனது தங்கை நினைப்பதில் நியாயம் இருக்கிறது. தங்கையின் வீட்டில் இருந்து கொண்டும் மகா கணபதிக்குத் தொண்டு செய்யலாம். தங்கையின் வீட்டில் இருந்து உண்பது பாவமென்றால் இங்கிருந்து உண்பதும் பாவம் தான்'' என்றார் சுவாமிகள்.

மனம் தெரிந்த கதிரேசன் சுவாமிகளிடம் விடை பெற்றுக் கொண்டு தங்கையின் வீட்டை நோக்கிச் சென்றார். வழியில் தனபாலன் வந்தான். அவன் குடிகாரன். ஊரில் உள்ளவர்களோடு காரணமின்றிச் சண்டைக்குப் போபவன். யாராவது மது பானத்தை வாங்கிக் கொடுத்து விட்டு தகாத செயல்கள் எதையும் செய்யச் சொன்னால் தயங்காமல் செய்பவன் களவாக மாடு ஆடுகளை அவிழ்த்து வந்து அவற்றைக் கொன்று, அவற்றின் இறைச்சியை விற்பவன். அவனிடம் கள்ள இறைச்சியை வாங்குவதற்கென்று ஊரில் பலர் இருந்தனர். தனபாலன் இரண்டு கிழமைக்கு இறைச்சி

கொடுக்காவிட்டால் பலர் அவனைத் தேடி வந்து இறைச்சி தரும்படி கேட்பார்கள்.

கோலூன்றியவாறு மெதுவாக நடந்து வந்த கதிரேசனின் அருகில் வந்த தனபாலன்; ‘‘கதிரேசப்பா... எங்கை போறாய?’’ என்றவாறு அவரின் கைத்தடியைத் தட்டி விட்டான். கதிரேசு தடுமாறிய படி விழுந்தார். கைத்தடி வெகு தூரத்தில் போய் விழுந்தது.

தனபாலன் கேலியாகச் சிரித்தான்; ‘‘இப்ப என்ன உங்களுக்கு வயதே போயிட்டுது கலியாணம் கட்டினால் பத்து மாதத்தாலை குழந்தை பிறந்திடும். பிறகேன் கைத்தடி... உசாராக நடந்து பழகுங்கோ..’’ என்றான். அவனுடன் கூட வந்தவர்கள் பலமாகச் சிரித்தனர்.

எழும்ப முடியாது தடுமாறிய கதிரேசனை அந்த வழியால் வந்த தணிகாசலம் தூக்கி விட்டார். தூரத்தில் இருந்த கைத்தடியையும் எடுத்துக் கொடுத்து விட்டு அவருடைய தங்கையின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

‘‘கவலைப்படாதைங்கோ. கடவுள் ஒவ்வொருவரையும் பல விடயங்களிலும் சோதிக்கிறார். உயிர்கள் மீது அருள் உள்ளவன் தான் பூமியிலும் மகிழ்வாக வாழ்வான். சொர்க்கத்திலும் மகிழ்வுடன் வாழ்வான். உயிர்களின் மீது கருணை இல்லாமையே இப்படியான செயல்களுக்குக் காரணமாகும். ஒரு மனிதனின் இறுதிக் காலத்தில் தான் மற்றவர்கள் அவன்மீது கருணை காட்டுதல் வேண்டும். தனபாலன் பல கெட்ட செயல்களைச் செய்கிறான். மனிதனை வருத்துவதும் பாதகமான செயலென அவன் நினைக்காது பொழுது போக்கான மகிழ்வுடைய செயலென நினைக்கிறான். பொருள் இல்லாதவன் இவ்வுலகில் துன்பப்படுவது போல அருளில்லாதவன் அவ்வுலகில் துன்பப்படுவான். என்று எமது பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. எனவே கவலைப்படாதே’’ என்றார் தணிகாசலம்.

247. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகில் இன்பமான வாழ்க்கை இல்லாதது போல, உயிர்களிடத்தில் அருளில்லாதவர்களுக்கு அவ்வுலக வாழ்க்கை இல்லை.

## பொருளற்றோர் பூப்பர்

நகைக் கடை கொள்ளை அடித்த பின்பு மயில்வாகனத்தால் நிம்மதியாக வாழ முடியவில்லை. கடன் காரர்கள் அடிக்கடி வந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தனர். அதை விட அழகிய ஆபரணங்களைச் செய்து கொடுத்த பொற்கொல்லனான ஐயாத்துரை வந்து பணத்தைத் தரும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தான். அதனால் மயில்வாகனத்தால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. சில சமயங்களில் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று கூட எண்ணுவான்.

விடிந்தால் அவனுக்குக் கலக்கமாக இருக்கும். விடியு முன்பே பல கடன் காரர் வந்து வீடடில் இருப்பர். அன்று மயில்வாகனத்தை நித்திரையால் எழுப்பியவன் ஐயாத்துரை; ‘‘மயிலண்ணை குறை நினைச்சுக் கொள்ளாதைங்கோ... உங்களுக்குத் தான் நான் கடனாக ஆபரணங்கள் செய்து கொடுப்பது மற்றவர்கள் பவுணைத் தந்து விட்டுத்தான் ஆபரணங்களைச் செய்து தரும்படி கேட்பார்கள். ஆனால் நான் உங்களில் உள்ள நம்பிக்கையில் நான் வைத்திருந்த பவுணிலும், வேறு கடைக்காரர் தந்த பவுணிலும் நகைகள் செய்து தருவேன். நான் கடைசியாக உங்களுக்குச் செய்து தந்தது லக்ஸ்மி ஆபரணமாளிகை உரிமையாளரான தயாபரன் தந்த பவுணில் தான் தயாபரன் நகையைத் தரும்படி என்னை வற்புறுத்துகிறான். அவன் ஒரு மாதிரியானவன் காவல் துறையிலும் புகாரிட்டு விடுவான். நீங்கள் நாணயமான முறையில் என்னுடன் பழகியமையால் தான் தயாபரன் தந்த பவுணில் உங்களுக்கு ஆபரணங்களைச் செய்து தந்தேன். நீங்கள் தற்பொழுது இருக்கிற நிலைமை எனக்குத் தெரியும். வற்புறுத்துறதாய் நினையாதைங்கோ என்ரை நிலைமை அப்படி தயவு செய்து இரண்டொரு நாளிலை காசைத் தரப் பாருங்கோ’’ என்று கூறி விட்டுச் சென்றான்.

மயில்வாகனம் ஊரில் உள்ள பணக்காரர்கள் சிலரிடம் சென்று தனது நிலமையைக் கூறிக் கடன் கேட்டார். யாரும் அவருக்குக் கொடுக்க முன்வரவில்லை. கடைசியாக அவர் தணிகாசலத்திடம் சென்றார்.

‘‘தணிகாசலம் நகைக்கடை கொள்ளையடிக்கப்பட்ட தால் நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். ஐயாத்துரையிடம் பல இலட்ரூபா பெறுமதியான நகைகளை வாங்கினான். அவன் கரைச்சல் கொடுக்கிறான். அவனுக்குக் கட்டாயம் பணம் கொடுத்தல் வேண்டும். நீ நினைத்தால் எனக்கு உதவி செய்யலாம்’’ என்றார்.

தணிகாசலம் பதறிப் போனான்; அண்ணை ஐந்நூறு ஆயிரம் ரூபாவையே நான் வெண்காயம் அறுவடை செய்யிற நேரங்களில் தான் காணுறனான். என்னட்டை இவ்வளவு காசை எதிர்பார்க்கிறியளே..’’.

நீ பொறுப்பு நின்றால் யாராவது தருவார்கள். ஐயாத்துரையின் பிரச்சினையைத் தீர்த்து விட்டால் பிறகு மற்றதுகளைப் பற்றி யோசிக்கலாம்...’’ தணிகாசலம் எதுகும் பேசவில்லை. சிலகணங்கள் யோசித்தார்.

‘‘என்ன தணிகாசலம் யோசிக்கிறாய். ஐயாத்துரையின்ரை காசு கெதீலை குடுக்காட்டில் நான் தற்கொலை தான் செய்ய வேணும்’’. கலங்கினான் மயில்வாகனம்.

அதற்கு தணிகாசலம் எதுவும் பேசவில்லை. சிறிது நேரம் கழித்துச் சொன்னார்; ‘‘நீங்கள் நல்லாய் இருந்த காலத்திலை நாணயமாக நடந்து கொள்ளவில்லை. உங்களின் வாடிக்கையாளர்களிடமும் கருணை காட்டவில்லை. உங்களிடம் கடனாகத் தமது தேவைகளுக்கு நகைகளை வாங்கலாம். என்று வாங்கிய ஊரவர்களிடமும் நீங்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லை. அதனால் தான் மக்கள் உங்கள் மீது இப்பொழுது கருணை காட்ட மறுக்கிறார்கள். தனது வீட்டுக் காணியின் உறுதியை உங்களிடம் அறுதி ஈடாக எழுதி விட்டு தனது மகளின் திருமணத்திற்காக உங்களிடம் கடனாக நகையை வாங்கிய தில்லையம்பலத்தின் காணியை நீங்கள் விற்ற போது தில்லையம்பலம் இரண்டு மாதம் தவணை தரச் சொல்லிக் கெஞ்சினவன். நான் இரண்டு மாதங்களுக்குப் பொறுப்புச் சொல்லியும் நீங்கள் கேளாமல் விற்றனீங்கள். அந்தக் காணியை வாங்கிய கைலாய நாதன் ஒரு வருடத்திற்குப் பிறகு வட்டி வாங்காமல் தில்லையம்பலத்திற்குக் கொடுத்தவன்; ‘‘தணிகாசலம் பேசிக் கொண்டிருக்கும் போது மயில்வாகனம் குறுக்கிட்டுப் பேசினான்; ‘‘நான் பல பாதகச் செயல்களைச் செய்திட்டன். அவெல்லாத்தையும் மன்னித்து எனக்கு உதவி செய்’’ என்று அழுதான் மயில்வாகனம்.

‘‘செல்வத்தை நாம் தேடுகின்றோமே தவிர எம்மைச் செல்வம் தேடுவதில்லை. தேடிய செல்வத்தை பெரிதாக நினைக்கக்கூடாது. மனிதர்கள் தான் பெரியவர்கள் என்று எண்ணி நடப்பவன் தான் மதிப்புடன் வாழ்வான். பணம் பெரிதென்று நினைப்பவன் எந்த விதமான சிறப்புக்களையும் பெறமாட்டான். பொருள் இல்லாதவன் விரைவாகப் பொருளைத் தேடிக் கொள்ளலாம். அதற்கு உதாரணமாகப் பலரைக் குறிப்பிடலாம். நடேசன் போனமாதம் ஏழையாக இருந்தான். ஒரு முறை வெண்காயம் நல்ல விளைச்சலைக் கொடுத்ததாலை இப்ப இலட்சாதிபதியாகி விட்டான். அதைப் போல நீயும் ஆறேழு வருடங்களுக்கு முன்பு ஏழையாக இருந்தனி. பிறகு பெரும்பணக்காரனாகி விட்டாய். இப்ப பணமெல்லாம் போயிட்டுது கஷ்டப்பட்டவன். ஒரு காலத்தில் நல்ல நிலையை அடைய முடியும். ஆனால் அருளை இழந்தவன் பயனற்றவனாகச் சிறப்பினை இழந்து விடுவான். அவனால் நல்ல முறையில் வாழ முடியாது. என்று பெரியவை சொல்லியிருக்கினை. உங்களுக்கு உதவி செய்ய விரும்புறன். ஆனால் நீங்கள் கேட்ட தொகை என்னிடமில்லை. பெருந்தொகைக்குப் பொறுப்பு நிற்கவும் என்னால் முடியாது. ஒவ்வொருவரும் தமது இயல்பை உணரவேண்டும். சுமக்க முடியாத பாரத்தைத் தூக்க நான் விரும்பவில்லை’’ என்றார் தணிகாசலம்.

மயில்வாகனம் கவலையோடு தணிகாசலத்தைப் பார்த்துக் கொண்டு நின்றார். அவரது கண்களால் கண்ணீர் வழிந்தது.

248. பொருள்அற்றார் பூப்பர் ஒருகால்; அருள்அற்றார்
அற்றார்மற்று ஆதல் அரிது.

பொருளற்றவர்கள் பொருளைத் தேடி வளமாக வாழும் காலம் உண்டாகும். ஆனால் அருளில்லாதவர்கள் ஒரு காலத்திலும் சிறந்து விளங்க மாட்டார்கள்.

## அருளற்றவன்

அன்று சதுர்த்தித் தினம். நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஏராளமான மக்கள் அப்பூசையில் கலந்து கொண்டனர். மங்கல வாத்தியங்கள் இசைக்க கோயில் பக்திமயமாக இருந்தது.

அன்னதான மடத்தில் பத்துக் கிடாரங்களில் சோறு அவிந்து கொண்டிருந்தது. பல கிடாரங்களில் கறிகள் சமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. வழக்கமாகச் சமையல் வேலை செய்பவர்களுடன் தனபாலனின் கையாட்களும் சேர்ந்து சமைத்துக் கொண்டிருந்தனர்.

அன்று தனபாலனின் பிறந்ததினம். அதனால் மகா கணபதி ஆலயத்தில் அன்னதானம் செய்வதற்காகப் பல ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து கொடுத்திருந்தான் தனபாலன்.

பூசை முடிந்து மகா கணபதி மூசிக வாகனத்தில் வீதியுலா வந்து கொண்டிருந்தார். அன்னதான மட வாசலில் நோயாளிகள் சிலரும் வறியவர்கள் சிலரும் வயோதிபர்கள் சிலரும் இருந்தனர். கதிரேசன் பிள்ளையாரை வணங்கி விட்டு அன்னதான மடத்திற்கு வந்தார். அவரைக் கண்ட அவரது நண்பர்கள் அவரின் அருகில் வந்தனர்.

‘‘உங்களை விட்டுப் பிரிந்தது எனக்குச் சரியான கவலை.’’ என்றார் கதிரேசன். அவரது விழிகளில் நீர் நிரம்பியது.

‘‘ஏனப்பா அழுகிறாய். நூறு கட்டைக்கு அப்பாலே இருக்கிறாய். கூப்பிடு தூரத்தில் இருக்கிற நீ தினமும் கோயிலுக்கு வந்து எம்மோடு கதைக்கிறாய் தானே’’ என்றார் ஒரு வயோதிபர்.

அப்பொழுது அங்கேதனபாலன் வந்து அன்னதான மடவாசலில் இருப்போருக்குப் பணம் கொடுத்தான். ஒவ்வொருவனும் அவனை வாழ்த்திப் பணத்தைப் பெற்றுக் கொண்டனர். அடுத்து அவன் கதிரேசுவிடம் வந்து நூறு ரூபாத்தாள் ஒன்றை நீட்டினான். கதிரேசு அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை.

அன்று வீதியில் அவர் ஊன்றிச் சென்ற பொல்லைத் தட்டி விட்டு கூறிய வார்த்தைகள் அவரின் காதில் எதிரொலித்தன; ‘‘இப்ப என்ன உங்களுக்கு வயதே போய்விட்டது. கலியாணம் கட்டினால் பத்தாவது மாதம் குழந்தை பிறக்கும். பிறகென்னத்துக்குத் தடி உசாராய் நடந்து போங்கோ’’.

‘‘பிடியப்பா...’’ தனபாலன் அதட்டினான்.

‘‘நான் இப்ப பிச்சை வாங்குறேல்லை. பணக்காரத் தங்கச்சியோடை இருக்கிறன்’’ என்றார் கதிரேசன்.

தனபாலன் எதுவும் பேசாமல் நடந்து சென்று இன்னொரு வயோதிபருக்கு அந்தப்பணத்தைக் கொடுத்து விட்டு அப்பாற் சென்றான். நாலைந்து சிறுவர்கள்; கடலை வாங்கக் காசு தாருங்கோ’’ என்று கேட்டபடி அவளின் பின்னால் சென்றனர். அவர்களுக்குத் தனபாலன் பணம் கொடுத்தான்.

வெளிவீதியுலா வந்த மகா கணபதி வசந்த மண்டபத்துள்ச் சென்று அமர்ந்து கொண்டார். இராஜசங்கரக் குருக்கள் வசந்த மண்டபத்தில் அமர்ந்திருந்த மகா கணபதிக்கு தீபங் காட்டி விட்டு அர்ச்சனை செய்ய ஆரம்பித்தார். குருக்களின் உதவியாளர்கள் வீபூதி பிரசாதம் கொடுக்கத் தொடங்கினார்.

பூஜைகள் யாவும் முடிந்த பின்பு மக்கள் அன்னதான மடத்திற்குச் செல்வது வழக்கம். ஆனால் அன்று பெரும்பான்மையான மக்கள் வீடடை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். பிரமுகர்கள் பலர் மகா கணபதி வீதியுலா முடித்து வசந்த மண்டபத்துள் சென்றதும் தமது வீடுகளுக்குச் சென்று விட்னர்.

கதிரேசன் மெல்ல எழுந்து ஊன்று கோலை ஊன்றிய படி நடந்து கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் வந்த தில்லை நடராசா கேட்டான்; ‘‘கதிரேசப்பூ சாப்பிடாமல் போறியள்’’.

திரும்பித் தில்லை நடராசாவை ஒரு கணம் பார்த்தார் கதிரேசு; ‘‘தம்பீ என்ரை வாழ்நாளிலை இன்றைக்குத் தான் மடத்திலை சாப்பிடாமல் போறன்’’ என்று நிறுத்தியவர் கண்ணீரைத் துடைத்து விட்டுச் சொன்னார்; ‘‘அருளில்லாதவன் செய்யிற அறச் செயல்கள், அறிவற்றவன் ஒரு நூலின் உண்மைப் பொருளை அறிந்ததாக எண்ணி மற்றவர்களுக்கு உபதேசிப்பதைப் போன்றதாகும். இன்று மடத்தில் நான் உணவு உண்டால் தீராத பழி உண்டாகும். மனிதன் உயிர்கள் மீது கருணையுள்ளவனாக வாழ்வதே அறமாகும். அதை விட்டு அநியாயங்களைச் செய்து விட்டு அன்னதானம் செய்வதால் புண்ணியம் ஏற்பட மாட்டாது. இவன் அநியாயங்கள் செய்வதை விட்டு விட்டு உயிர்கள் மீது கருணை உள்ளவனாக வாழுங் காலத்தில் அன்னதானம் செய்தால் நான் வாங்கிச் சாப்பிடுவேன்’’ என்றார் கதிரேசன்.

“உதை எண்ணித்தான் நானும் சாப்பிடாமல் போறன். மகா கணபதி கோபித்தாலும் பரவாயில்லை அருள் இல்லாதவன் தாற எதையும் நான் பெற மாட்டன்” என்றான் தில்லை நடராசா.

“மற்றய நாட்களில் கோயிலுக்கு வாற எல்லாரும் சாப்பிட்டு விட்டுத் தான் போறவை. இன்றைக்கு முக்காவாசிப் பேர் சாப்பிடேல்லை. வழக்கத்தை விட இரண்டு மூட்டை அரிசி கூட அவிச்சவையாம். ஏராளமாய் மிஞ்சப் போகுது” என்றார் கதிரேசன்.

249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

அருள் இல்லாதவன் செய்கின்ற அறச் செயல்களை ஆராய்ந்து பார்த்தால், அ∴து அறிவற்றவன் ஒரு நூலின் உண்மைப் பொருளை அறிந்து கொண்டதைப் போன்றது.

## அஞ்சல்

தனபாலன் நன்றாகக் குடித்து விட்டு வீதியால் வந்தான். அவனுக்குப் பின்னால் அவனது நண்பர்கள் நாலைந்து பேர் வந்தனர். கதிரேசன் தங்கையின் வீட்டில் மதிய உணவை உண்டு விட்டு நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்குச் சென்று கொண்டிருந்தார். அவரின் கையில் சிறியதொரு உணவுப் பொதி இருந்தது. அவர் கோயில் மடத்தில் இருந்த காலத்தில் நல்ல உணவு ஏதாவது கிடைத்தால் அதைத் தன்னுடன் கோயிலில் தங்கியிருக்கும் அனைவருக்கும் கொடுத்துத்தான் சாப்பிடுவார். அன்று அமாவாசை விரதம் ஈஸ்வரியும் சேனாதிராஜாவும் ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் அமாவாசைத் தினத்தன்றும் விரதம் அனுட்டிப்பார்கள். ஐந்தாறு கறிவகைகளுடனும் வடை பாகாசத்துடனும் உணவு பரிமாறுவாள் ஈஸ்வரி, தன்னுடன் கூட இருந்தவர்களுக்குச் சோறும் வடையையும் பாகாசத்தையும் கொண்டு சென்றார் கதிரேசன். சென்ற மாத பௌர்ணமியன்று அவர் கொண்டு சென்ற சோற்றுப் பொதியை வயோதிபர்கள் அவிழ்த்து உண்ணும் போது சொன்ன வார்த்தைகள் தேனாக இனித்தன; “கதிரேசுவுக் கென்ன அன்பான தங்கை பாசமுள்ள மைத்துணன் இவ்வளவு சுவையான சோற்றை உண்ணக் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். உலகில் சுவையான உணவுகளை உண்பவன் தான் பாக்கியசாலி”.

“நீரும் இப்ப பெரிய மனிதராகி விட்டீர். அன்றைக்கு நான் அன்னதானம் கொடுத்த போது சாப்பிடாமல் போயிட்டாய். எப்ப வந்தது உந்தப் பணம். தணிகாசலத்தை மயக்கி வெண்காயம் வாங்கி நட்டுக் கொஞ்சக் காசைக்

கண்டவுடனை மகா கணபதி ஆலயச் சோறு கசந்திட்டுது. இன்னும் எத்தனை நாட்களுக்கு உன்னை அவை அண்டி வைச்சிருக்கினை எண்டு பார்ப்பம். பிறகு மடத்துக்கு வந்து நிரையிலை உட்கார்ந்திடுவாய்'' என்றவாறு கதிரேசன் கொண்டு வந்த உணவுப் பொதியை தட்டி விட்டான் தனபாலன். கீழே விழுந்தாலும் சிதையாது கிடந்த உணவுப் பொதியைக் குனிந்து எடுத்தார் கதிரேசன். அதைக் கண்ட தனபாலன், அவ் உணவுப் பொதியைக் காலால் உதைத்தான்.

''உயிர்கள் மேல் கருணை உள்ளவன் தான் கோயிலுக்குச் சென்று வணங்குதல் வேண்டும். அன்னதானம் கொடுத்தல் வேண்டும். அநியாயங்களையும் அக்கிரமங்களையும் செய்து விட்டு புனிதர்களைப் போல் கோயிலுக்குச் சென்று வணங்குவதால் எந்த விதமான பயனும் இல்லை. ஒருவன் ஒரு தீய செயலைச் செய்தால், அச்செயல் தனக்குரிய பயனைச் செய்து முடிக்கும் வரை உயிர் வாழும் என்று தர்ம நூல்கள் கூறுகின்றன. செயலானது தனக்குரிய பயனை விளைவிப்பதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. ஒருவன் தீய செயலைச் செய்தால் அதற்குரிய பயனை அனுபவித்தே ஆதல் வேண்டும். தூய்மையாக வாழ்வதும் மற்றய உயிர்கள் மீது கருணை காட்டுவதும் தான் கோயில் வழிபாட்டின் தார்பரியமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் கருணை காட்டுபவன் கடவுளுக்குச் சமமானவன். இவர்களின் பிரார்த்தனைகளையும் செயல்களையும் தான் கடவுள் ஏற்றுக் கொள்வார். அப்படியல்லாதவர்களிடம் உணவு பெற்று உண்பதை விட சாவது நல்லது என்றார் கதிரேசன்.

''கிழட்டு நாயே உபதேசமா செயிகிறாய்?'' என்று கத்தியபடி கதிரேசனை நெருங்கி வந்தான் தனபாலன்.

கதிரேசுவுக்கு எங்கிருந்து தைரியம் வந்ததென்று தெரியவில்லை; ''டேய் நான் கிழவணெண்டு தானே என்னோடை சண்டைக்கு வாறாய். என்ரை பேரன் நவராஜாவுக்கு உன்னைப் பற்றிச் சொன்னணெண்டால் என்ன நடக்கு மென்று யோசித்துப் பார்'' கர்ச்சித்தார் கதிரேசன்.

நவராஜா என்றதும் ஒரு கணம் செயலிழந்து நின்றான் தனபாலன்; ''அண்ணை வீதியாலை போற கிழவனோடை ஏன் வீண் வம்புக்குப் போகிறாய். பாவம் விட்டுட்டு வா'' என்றான் தனபாலனுடன் கூட வந்தவன். பின் நிலத்தில் கிடந்த சோற்றுப் பொதியை எடுத்து கதிரேசுவிடம் கொடுத்து விட்டு; ''அப்பு, அவன் வெறீலை கதைச்சிட்டான். இதைப் போய் நவராசாட்டைச் சொன்னால் வாளோடை வந்திடுவன். பிறகு நீதிமன்றத்துக்குத் தான் போக வேண்டும்'' என்றான்.

தனபாலன், நவராசா தனக்கு ஒரு முறை அடித்ததை நினைத்துப் பார்த்தான். பலசாலியான நவராசா தனபாலனைத் தூக்கி மரத்துடன் மோதினான். பக்கத்தில் இருந்தவர்கள் பிடித்து விடா விட்டால் அன்று தனபாலனை அடித்து முறித்திருப்பான். அவன் அடித்த பின்பு நான்கு மாதங்கள் நோவுக்கு தமிழ் வைத்தியம் செய்தான்.

கதிரேசு சொன்னதை நினைக்க தனபாலனுக்கு வயிற்றைக் கலக்கியது.

“டேய் நான் யாரோடும் பிரச்சினைகளுக்குப் போவதில்லை. என்னால் எந்தக் குறைபாட்டையும் தாங்கிக் கொள்ள முடியாது. எனது தந்தைக்கு நீ எதற்காக அடித்தனீ காரணத்தைச் சொல்லு. அவர் பிழை செய்திருந்தால் அவரைத் திருத்திறன். ஒன்றும் செய்யாமல் பேசாமல் சென்று கொண்டிருந்த அவரோடு ஏன் சண்டைக்குப் போனாய் சொல்லடா” அதட்டினான் நவராசா.

தனபாலன் வாய்திறக்க முன் பலஅடிகள் அவனின் உடலெங்கும் விழுந்தன. பின் அவனைத் தூக்கிச் சுழற்றி விட்டு தூர எறிந்தான் நவராசா. அந்த நிகழ்வு தனபாலனின் விழித்திரைக்குள் நிழலாடியது. திருப்பிப் பார்த்தான். கூட வந்தவர்கள் எவரும் அங்கிருக்கவில்லை; “கதிரேசப்பு உதைப் பெரிசாய் நினைத்து நவராசாவிட்டைச் சொல்லிப் போடாதை. நான் வாறன்” என்று சொல்லி விட்டு நகர்ந்தான் தனபாலன்.

“பலவீனமான கோழைகளுக்கு என்ன சண்டித்தனம்” என்று கதிரேசு சொன்னது தனபாலனுக்குக் கேட்டது. எனினும் கேளாதவன் போல் நடந்தான்.

250. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.

அருளில்லாத ஒருவன் தன்னை விட மெலிந்த வரை துன்புறுத்தும் போது, தன்னை விட வலியவரின் முன் தான் பயந்து நிற்கும் நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

## அருளில்லாதவன்

அடிச் சேரித் தோட்டத்தில் கட்டி நின்ற தில்லைநடராசாவின் நாம்பன் கன்றொன்றைக் காணவில்லை. கள்வனின் கையில் கொடுத்தாலும் நாலாயிரம் ரூபா தருவான்” என்று நினைத்தபடி மாட்டைத் தேடிக் கொண்டு திரிந்தார் தில்லைநடராசா.

இரவு பத்துமணிக்கு மேலாகி விட்டது. எங்கும் தேடிப் பார்த்தும் மாட்டைக் காணாததால் கவலையுடன் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியின் ஆலயத்திற்கு வந்தார் தில்லைநடராசா. கோயில் முன் மண்டபத்தில் தணிகாசலமும் விக்னேஸ்வரமூர்த்தியும் குருக்களுடன் கதைத்துக் கொண்டிருந்தனர்.

“அண்ணை என்ரை நாம்பன் கன்றொன்றைக் காணவில்லை. தோட்டத்துக்கை புல் மேயட்டும் என்று காலமை கொண்டு போய்க் கட்டினனான். பின்நேரம் போய்ப் பார்த்தன் காணேல்லை. கட்டவிழ்த்தால்

வீட்டை வந்திடும். யாரோ பிடிச்சுக் கட்டிப் போட்டினை போலை கிடக்கு'' கவலையோடு சொன்னான் தில்லைநடராசா.

தில்லைநடராசா மிகவும் நேர்மையானவன். அடுத்தவர்களுடன் பிரச்சினைகளுக்குப் போகாதவன் அவன் கவலைப்படுவதைப் பார்க்க தணிகாசலத்திற்குக் கவலையாக இருந்தது; ''நாணயம் குத்திக் கலப்பையிலை பூட்டுவமெண்டு நினைத்தனான் என்றான் தில்லைநடராசா.

''கவலைப்படாதை அவிழ்த்துக் கொண்டு வரேக்கை மாடுகள் வந்திருந்தால் சேர்ந்து போயிருக்கும். செல்லையாண்ணையின்ரை பட்டிக்கை போய்ப் பார்த்தனியே. அந்தாளிட்டை இருநூற்றுக்கு மேற்பட்ட மாடுகள் நிக்குது. சேர்ந்து நின்றால் தெரியாது. ஆறு மாதங்களுக்கு முந்தி என்ரை பசுவொன்று சேர்ந்து போயிட்டுது. நான் தேடித் திரிந்தனான். இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் அங்கை போய்ப் பிடிச்சனான். உன்ரை நாம்பனும் அப்படித்தான் போயிருக்கும் விடிஞ்சாப்பிறகு போய்ப்பார்'' என்றார் தணிகாசலம்.

இப்ப போய்ப் பட்டிக்கை அடையாளம் காணேலாது. காலமை பார்ப்பம்'' என்று கூறிவிட்டுச் சென்றான் தில்லைநடராசா.

மறு நாள்க் காலை ஏழுமணிக்கு தில்லைநடராசா செல்லையாவின் மாட்டுப் பட்டிக்குச் சென்று பார்த்தான். அவனது நாம்பனைக் காணவில்லை. 'கண்ணா' என்று அழைத்தால் அந்த நாம்பன் எங்கு நின்றாலும் கதறி அழும். தில்லைநடராசா ''கண்ணா, கண்ணா'' என்று பல முறை அழைத்தும் பயனில்லை. அதனால் கவலையுடன் வந்தான். வழியில் கதிரேசன் வந்தார்.

''அப்பூ, என்ரை நாம்பன் கன்றொன்றைக் காணவில்லை நீங்கள் கண்டீர்களா...?'' தில்லை நடராசா கேட்டார்.

''கறுவல் மறையனே''

''ஓம் ஓம்'' ஆவலுடன் சொன்னான் தில்லைநடராசா.

''நல்ல கொழுத்த கன்று அது. பல முறை நான் கண்டிருக்கிறேன். நான் சொன்னதெண்டு ஆருக்கும் சொல்லாதை'' என்று கூறிச் சில நிமிடங்கள் மௌனமாக இருந்து விட்டுச் சொன்னார்; ''இண்டைக்கு சனிக்கிழமை தனபாலன் அவிழ்த்துக் கொண்டு போய் வெட்டிப் பங்கு போட்டிருப்பன். நாலைந்து பிரமுகர்கள் காலமை பையளோடை போனதைக் கண்டனான். நீ அவன்ரை வீட்டை போயிடாதை. காவல்துறைக்குப் போய்ச் சொல்லு'' என்றார் கதிரேசு.

''தற்செயலாய் அப்படி நடக்காட்டில் பெரிய பிரச்சினையாய்ப் போயிடும்''.

‘‘விடிய முன்னம் குருமூர்த்தி வடக்கை போனவன். அப்ப அதை நான் பெரிதாக நினைக்கவில்லை. இப்ப நீ சொல்லேக்கை நினைச்சுப் பார்த்தால் மாட்டிறச்சி வாங்கத் தான் போயிருக்கிறான்’’.

தில்லை நடராசாவுக்கு நெஞ்சில் இடிவிழுந்ததைப் போல் இருந்தது. கதிரேசன் அறியாமல் சொல்ல மாட்டார் என்ற நம்பிக்கையோடு காவல் துறைக்குச் சென்று புகாரிட்டான்.

காவல்துறையினர் தனபாலனைப் பிடித்து கடுமையாகத் தாக்கிய போது அவன் மாடு திருடி வெட்டிப் பங்கு போட்டதை ஒப்புக் கொண்டான். அவனிடம் இறைச்சி வாங்கிய அத்தனை பேரையும் காவல் துறையினர் கைது செய்தனர்.

குருமூர்த்தி ,கேசவமூர்த்தி, சின்னத்தம்பி, கனகசபாபதி சபாநாயகம் போன்றோர் காவல் நிலையத்தில் நின்றனர்.

காவல்துறை அதிகாரி அவர்களை கடுமையாக ஏசினார்; ‘‘படித்து ஆசிரியர் தொழில் செய்கின்ற குருமூர்த்திக்கும், கேசவமூர்த்திக்கும் கள்ள மாட்டை தனபாலன் வெட்டிப் பங்கு போட்டுள்ளான் என்று தெரியாதா? பல முறை நீங்கள் தனபாலனிடம் இறைச்சி வாங்கி இருக்கிறீர்கள். மாடு வெட்டுவதே குற்றம். அதிலும் களவெடுத்து மாடு வெட்டுவது பாரதூரமானது’’.

‘‘ எனக்குக் கள்ள மாடு என்று தெரியாது’’ என்றான் குருமூர்த்தி.

‘‘உமக்குக் கள்ள மாடு என்று தெரியாது என்பதை ஒத்துக் கொண்டாலும் ஒரு சைவ சமயத்தவன் ஊண் உண்பது பாவம். என்று தெரியாதா, சைவ சமயம் புலால் உண்பதை ஏற்றுக் கொள்வதில்லை. அத்துடன் மாட்டிறைச்சி உண்பதை மகா பாவமெனக் கருதுகிறது. தன்னுடைய உடம்பைப் பெருக்க வைக்க இன்னொரு உயிரின் உடம்பைத் தின்கின்றவன் சிறிதும் அருள் உள்ளம் இல்லாதவன். இறைவனை அடைய விரும்புகிறவர்களும் ஆன்ம விடுதலையை விரும்புகிறவர்களும் புலால் உண்ணக் கூடாது. புலால் உண்பவன் புனிதன் அல்லன். அவனின் உள்ளத்தில் கருணை இருக்க மாட்டாது. சமய வாழ்க்கையின் உட்பொருள் பூசை வழிபாடுகளில் இல்லை. மற்றய உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்காமையில் தான் உள்ளது. உயிர்களைக் கொல்லாமல் இருப்பது, பிறர் கொன்று தந்த ஊனை உண்ணாமல் இருப்பது இதில் தான் சமயத்தின் தத்துவமே அடங்கியுள்ளது. இறைவா இறைவா என்று கதறி அழைப்பதாலும் தானதர்மங்கள் செய்வதாலும் கடவுளைக் காணமுடியாது. இறைவனின் குழந்தைகளான உயிர்களைப் பாதுகாப்பதன் மூலம் தான் இறைவனைக் காணலாம்’’ என்ற காவல் துறை அதிகாரி சிறிது நேரம் பேசாமல் இருந்தார். பின்; ‘‘கள்ளமாக மாட்டை அவிழ்த்து வெட்டிப் பங்கு போட்ட தனபாலனை என்னால் மன்னிக்க முடியாது. நீதி மன்றில் சமர்ப்பித்து கடுந் தண்டனை வாங்கிக் கொடுப்பேன். உங்களை நான் கடுமையாக எச்சரிக்கிறேன். இன்னொரு முறை நீங்கள்

கள்ள மாட்டிறைச்சி வாங்கியதாக அகப்பட்டால் கடுமையான தண்டணை தருவேன். இப்பொழுது நீங்கள் போகலாம்'' என்றார்.

குருமூர்த்தியும் கேசவமூர்த்தியும் கனகசபாபதியையும் தலையைக் குனிந்த படி காவல் நிலையத்தை விட்டு வெளியே வந்தனர்.

251. தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?.

தனது உடலை வளர்ப்பதற்காக மற்றோர் உயிரின் உடலை உண்கின்றவன் எவ்வாறு அருள் உள்ளவனாக இருக்க முடியும்.

## சிறப்பில்லாதோர்

கதிரேசனோடு கோயில் மடத்தில் இருந்த மணியம் என்பவர் ஒரே ஒரு வேட்டியை வைத்திருந்தார். குளிக்கு முன்பு ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு தான் கட்டிய வேட்டியைத் துவைத்துக் காயப் போடுவார். அது உலர்ந்த பின்பு குளிர்த்து விட்டு கட்டுவார். அதை நினைக்கக் கதிரேசனுக்குக் கவலையாக இருக்கும். எனினும் அவரிடமும் இரண்டு வேட்டிகள் மட்டுமே இருந்தன. அவற்றில் ஒன்றைக் கொடுத்தால் அவருக்கும் அந்த நிலை தான் ஏற்படும். ஒரு நாள் குளிக்கும் போது மணியம் சொன்னார்; ''பணத்தை நாம் மதித்து நடக்க வேண்டும். பணமுள்ள காலத்தில் பிற்காலத்திற்கென சேமித்து வைக்காததால் தான் எனக்கு இந்த நிலைமை ஏற்பட்டது. தோட்டச் செய்கையில் எனக்கு நல்ல வருமானம் வந்தது. ஒரு முறை ஒரு இலட்ச ரூபாவுக்கு வெண்காயம் விற்றனான். விற்றவுடனை மனைவிக்கு சேலை சட்டைகள் வாங்கினேன். உறவினர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வாங்கிக் கொடுத்தேன். சனசமூக நிலையத்திற்கும் கோயிலுக்கும் பணங் கொடுத்தேன். கொடுத்து முடிய என்னிடம் ஒரு சதம் கூட மிஞ்சியிருக்கவில்லை. ஒரு பத்தாயிரம் ரூபா சேமித்து வைத்திருந்தால் இந்த நிலை எனக்கு வந்திராது.''

கதிரேசுவின் காதில் மணியம் சொன்னது எதிரொலித்தது; ''அவனை மாதிரித் தான் நானும் வாழ்ந்ததாலை இன்றைக்கு எதற்கும் பிறரிடம் கையேந்த வேண்டிய நிலையில் இருக்கிறேன்'' என்று யோசித்தார் கதிரேசன்.

தேநீருடன் வந்த ஈஸ்வரி; ''அண்ணா.. அண்ணா'' என்று அழைத்தும் அவரின் நினைவுகள் கலையவில்லை. அதனால் தேநீர் கோப்பையை கீழே வைத்து விட்டு இரண்டு கைகளாலும் கதிரேசனது தோளைப்பற்றிக் குலுக்கினாள்.

''என்ன?'' தடுமாறினார் கதிரேசன்..

“எந்தக் கோட்டையைப் பிடிக்க அண்ணை யோசிக்கிறாய்”.

சிரித்தார் கதிரேசன்; கோட்டையைப் பிடிக்கிற காலத்திலை படிக்கேல்லை” என்று பெருமூச்சு விட்டவர் சிறிது நேரத்தின் பின் சொன்னார்; கடுமையாக உழைத்துச் சேர்த்த பொருளை வைத்துக் காப்பாற்றத் தெரியாதவர்கள் பிற்காலத்தில் கஷ்டப்படுவார்கள். முன்பு இருந்த சிறப்புக்கள் யாவற்றையும் இழந்து அல்லல் படுவார்கள். செல்வத்தைக் கடுமையாக உழைத்துத் தேடுவதை விட அதைக் காப்பாற்றுவதில் தான் சிறப்பு உள்ளது. நான் அதைச் செய்யத் தவறி விட்டேன். அதனால் இப்பொழுது கஷ்டப்படுகிறேன். என்னைப் போல மணியமும் நல்ல விவசாயி. ஒரு காலத்தில் ஓகோ என்று வாழ்ந்தவன். இப்ப மாற்றிக் கட்ட வேட்டி இல்லாமல் கஷ்டப்படுகிறான். அதைத்தான் யோசிச்சன். அந்த நிலை உனக்கு வரக் கூடாது. பிற்காலத்திற்கென்று சேமியம்மா...” என்றார் கதிரேசன்.

உங்களின்ரை வாழ்வு முழுவதும் எனக்குத் தெரியும் தானே. காசைக் கண்டால் உங்களுக்கு நித்திரை வராது. அதாலை தான் நீங்கள் இப்ப கஷ்டப்பருடுறியள். அது தெரிந்து தான் நான் வெங்காயம் விற்ற காசிலை இருபத்தையாயிரம் ரூபாவை வங்கியிலை போட்டு வைத்திருக்கிறன்” என்று சிரித்தாள் ஈஸ்வரி.

“கேட்கச் சந்தோசமாக இருக்கு. பணம் தானம்மா வாழ்க்கை ஆனால் பணத்தை எமது எசமானாகக் கருதக் கூடாது. நாம் தான் பணத்தைத் தேடுகிறோம். அது எம்மைத் தேடி வரவில்லை. எனவே எமது உழைப்பைத்தான் மதித்தல் வேண்டும்” என்றார்.

அப்பொழுது தணிகாசலம் நடேசனைத் தேடி அங்கு வந்தார்.

“வாருங்கோ ... வாருங்கோ...” என்று முகமலர்வுடன் வரவேற்றார் கதிரேசன். கதிரேசனுக்குத் தணிகாசலத்தின் மீது அளவு கடந்த மதிப்பு உண்டு. அதனால் தனது தோளில் இருந்த சால்வையை எடுத்து நிலத்தில் வைத்தார்.

“பிள்ளை.. தணிகாசலம் வந்திருக்கு..” என்று கதிரேசன் கூற உள்ளே சென்ற ஈஸ்வரி திரும்பி வந்தாள்.

“நடேசு எங்கை”

“தோட்டத்துக்குப் போட்டார் வந்தவுடனை சொல்லியனுப்புறன்” என்றாள் ஈஸ்வரி.

“சரி” என்ற தணிகாசலம் கதிரேசண்ணை நான் வாறன்” என்றார்.

“சதுர்த்தியன்று நான் கோயிலிலை சாப்பிடேல்லை என்று தனபாலன் என்னோடை வழியிலை சண்டைக்கு வந்திட்டான்...” கதிரேசனின் குரல் கரகரத்தது.

“அவன் சரியான குடிகாரன். ஈவிரக்கமில்லாமல் ஆடு மாடுகளைக் கொலை செய்து இறைச்சியை விற்பவன். விரத நாட்களென்றும் பாராமல் புலால் உண்பவன். அவனிடம் நாங்கள் கருணையை எதிர் பார்க்கேலாது. சதுர்த்தியன்று நீங்கள் மட்டுமே சாப்பிடவில்லை மடத்திலை சாப்பிர்றவையிலை முக்கால் வாசிப் பேர் சாப்பிடேல்லை. வழக்கமாகப் படையல் சோற்றை உண்ணும் சுவாமியாற்ரை நாய் கூட அன்றைக்கு மடப்பக்கம் வரேல்லை. புலால் உண்பவர்கள் கோயில்களுக்குச் செல்வதால் எந்தப் பிரயோசனமும் இல்லை. புலால் உண்பவர்களிடம் அருள் இல்லை. ஓர் உயிரைக் கொன்று சாப்பிட்டு விட்டு எப்படி கோவிலுக்குள் நுழையலாம்” என்றார் தணிகாசலம்.

கதிரேசனுக்கு அச் சொற்கள் ஆறுதலை அளித்தன; புலால் உண்பவர்களிடம் புலால் உண்ணாதவர்கள் வாங்கிச் சாப்பிடுவது பாவம்” என்று நினைத்தார் கதிரேசன்.

252. பொருள்ஆட்சி போற்றாதார்க்கு இல்லை; அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.

பொருள் உடையவனுக்குரிய சிறப்பு, அப்பொருளை வைத்துக் காப்பாற்றாதவனுக்கு இல்லை. அருளுடையவர்களுக்குரிய சிறப்பு, புலால் உண்பவர்களுக்கு இல்லை.

## அருளில்லாதோர்

தனபாலனும் சின்னத்தம்பியும் கிருஸ்ணனும் நன்றாகக் குடித்து விட்டு வந்து பாலசிங்கத்தின் கடைக்கு முன்னால் நின்ற வேப்ப மரத்தின் கீழ் இருந்த கற்களில் அமர்ந்து கொண்டனர். வேப்பமரத்தின் கீழ் மாலை வேளைகளில் பலர் கூடியிருப்பது வழக்கம். அது பாலசிங்கத்திற்குப் பிடிப்பதில்லை. வேறொருவரின் காணிக்குள் நின்ற பெரிய வேப்ப மரம் வீதியில் கிளை விட்டிருந்தமையால், அப்பகுதி மாலை வேளைகளில் நிழலாக இருந்தது. வேலைகளை முடித்து விட்டு அவ்வூரவர்கள் வந்து அந்நிழலில் இருப்பார்கள். சில சமயங்களில் இரவு பத்துப் பதினொரு மணிவரை அங்கு சிலர் குழுமியிருந்து ஊர்ப்புதினங்களைக் கதைத்துக் கொண்டிருப்பார்கள். அது பாலசிங்கத்திற்கு பெரும் இடைஞ்சலாக இருந்தது. பொதுவாக எந்நேரமும் கடைக்கு முன்னால் ஆட்கள் இருந்து பாலசிங்கத்தை அவதானித்துக் கொண்டே இருந்தனர். பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் போது பாலசிங்கம் பொருட்களை இல்லை என்று கூறி, அவற்றைக் கூடிய விலைக்கு விற்பான். அதை அவதானிப்போர் பல்வேறு விதமாக ஊரில் கதைப்பார்கள்.

காணியின் சொந்தக் காரனிடம் பாலசிங்கம் பல முறை அந்த வேம்பைத் தறித்து விற்கச் சொல்லியும் கூறியும், அக்காணியின் சொந்தக்காரன் அக்கறை காட்டவில்லை.

“பாலசிங்கம் மூன்று சுருட்டுக் கொண்டுவா” என்றான் தனபாலன்.

வேறு வழியின்றி மனதுள் திட்டியவாறு மூன்று சுருட்டுக்களைக் கொண்டு வந்து கொடுத்தான் பாலசிங்கம். அதைப் பெற்றுக் கொண்ட தனபாலன்; “தீப்பெட்டி எங்கை?” என்று கேட்டான்.

“உன்னட்டை இல்லையே? முன்பே சொல்லியிருந்தால் கொண்டந்திருப்பன்” என்ற பாலசிங்கம் கடைக்குள்ச் சென்று தீப்பெட்டியொன்றை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, “ஐந்து ரூபா” என்றான்.

“கணக்கிலை எழுதி வை” என்றான். தனபாலன்.

“முன்பும் கனகாசு நிலுவையிலை நிக்கு” இழுத்தான் பாலசிங்கம்.

தனபாலன் நிமிர்ந்து கோபமாக பாலசிங்கத்தைப் பார்த்தான்;.

“எனக்குக் கடன் இருக்கெண்டு தெரியும். தருவன் தானே.. தாராமல் விட்டுடுவன் என்று நினைக்கிறியோ?”

“அப்பிடி நினைக்கேல்லை. எல்லாருக்கும் அளவுக்கதிகமாகக் கடன் கொடுத்தால் என்னாலை கடையை நடத்த முடியாது”.

“நடத்த முடியாவிட்டால் மூடு..”

“இவங்கள் மனிசரெண்டால் எல்லோ கதைக்கிறத்திற்கு. அவனை வேம்பைத் தறி யென்று சொன்னால் தறிக்கிறானில்லை... எல்லாம் என்ரை தலைவிதி..” என்று வாய்க்குள் முணுமுணுத்தான் பாலசிங்கம்.

“என்னடா சொல்கிறாய்... வாய்க்குள் முணு முணுத்தாலப் போலை எனக்குக் கேட்காதே என்று கூறியபடி எழுந்த தனபாலன் வயோதிபனான பாலசிங்கத்தைத் தள்ளி விழுத்தி அடித்தான். பாலசிங்கம் நிலத்தில் விழுந்தார். அவரால் எழும்ப முடியவில்லை; “என்னோடை ஏதாவது சண்டித்தனக் கதை கதைத்தால் கடையைக் கொழுத்துவன்” என்று கடுங்கோபத்துடன் கத்தி விட்டுச் சென்றான் தனபாலன்.

வீதியால் சென்ற நடேசனும் சேனாதிராசாவும் நிலத்தில் விழுந்து கிடந்து முனிகிக் கொண்டிருந்த பாலசிங்கத்தைத் தூக்கி கடையுள் இருந்த நாற்காலியொன்றில் இருத்தினர். பாலசிங்கத்தால் நாற்காலியில் அமர்ந்திருக்க

முடியவில்லை. அதனால் ஒரு பாயை நிலத்தில் விரித்து அதில் அவரைக் கிடத்தினர்.

“நான் செத்துப் போவன் போலை கிடக்கு. என்னாலை அசைய முடியேல்லை” என்று முனாகினான் பாலசிங்கம்.

“நீ வெறியிலை வந்தவனோடை ஏன் பிரச்சினைக்குப் போனனீ” என்றார் நடேசன்.

“நான் எங்கை தம்பி பிரச்சினைக்குப் போனனான். சுருட்டும் நெருப்புப் பெட்டியும் கேட்டான். கொண்டு போய்க் கொடுத்திட்டு காசைக் கேட்டன். அதுக்குத்தான் என்னைத் தள்ளி விழுத்தி அடிச்சவன்.” முனகியவாறு கூறினான் பாலசிங்கம்.

“உயிர்களிடத்தில் அன்பு செலுத்து பவனிடம் தான் அன்பு கருணை இரக்கம் போன்றன குடியிருக்கும். உயிர்களைக் கொன்று தானும் தின்று, மற்றவர்களுக்கும் விற்பவனிடம் நாம் மனிதாபி மானத்தை எதிர்பார்க்க முடியாது. அவனோடு கதைத்தால் சண்டைக்குத்தான் வருவான். கதைக்காது விட்டாலும் சண்டைக்கு வருவான். போனகிழமை நான் வீதியால் சென்று கொண்டிருந்த போது என்னுடன் சண்டைக்கு வந்திட்டான். எப்படியோ அதை அறிந்த நவராசா அவனுக்கு கடுமையாக அடித்து விட்டான். நான் நவராசாவை ஏசினனான். அவன் போன்றவர்கள் தான் இவனுக்குச் சரி இப்ப என்னை வீதியில் கண்டால் நல்ல மரியாதை” என்றார் நடேசன்.

“கொலைக் கருவியைக் கையில் வைத்துக் கொண்டு எந்நாளும் உயிர்களைக் கொன்று அதன் புலாலை உண்பவனின் உள்ளத்தில் இரக்கமும் அருளும் இராது” என்றார் சேனாதிராசா. அப்பொழுது பாலசிங்கத்தின் மகன் மோட்டார் வண்டி ஒன்று கொண்டு வந்தான். அதில் பாலசிங்கத்தை ஏற்றி வைத்தியசாலைக்குச் சேனாதிராசாவும், நடேசனும் அனுப்பி வைத்தனர்.

253. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்.

கொலை செய்யும் ஆயுதங்களைக் கையில் வைத்திருப்பவனின் உள்ளத்தில் அருள் இல்லாதிருப்பதைப் போல, ஓர் உயிரின் உடம்பை விரும்பி உண்பவனின் உள்ளத்திலும் அருள் இராது.

## அருளல்லாதது

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் நவராத்திரி பூசைக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. வெளி வீதியைப் பெண்கள் கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்தனர். உள்வீதியை ஆண்கள் கழுவித் துப்புரவு செய்து கொண்டிருந்தனர். கோயில் முழுவதையும் கூட்டித் துப்பரவு செய்ய எப்படியும் ஒரு வாரம் தேவைப்படும். கோயிலைத் துப்புரவு செய்து கொண்டிருப்பவர்களுக்கு தணிகாசலம் மடத்தில் தேநீர் வைத்துக் கொண்டு வந்து கொடுத்தார். பெண்கள் கூட்டிய குப்பைகளைக் கதிரேசன் அள்ளிச் சென்று ஓர் இடத்தில் கொட்டி நெருப்பு வைத்தார்.

அப்பொழுது தனபாலன் அங்கே வந்தான். களவுகள் எடுப்பதும், மதுவருந்துவதும், புலால் உண்பதும் அவனது தினசரி வேலை. அவன் அருகில் வந்தால் துர்நாற்றம் வீசும். தணிகாசலத்திற்கு அருகில் வந்த தனபாலன்; ‘‘அண்ணை எனக்கு வெகு நாட்களாய் ஓர் ஆசை இருக்கு..’’ அவன் பேசும் போது வீசிய மதுவின் மணத்தால் தணிகாசலத்திற்கு வயிற்றைப் புரட்டியது. சிரமப்பட்டு சகித்துக் கொண்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தார்.

‘‘மகா கணபதிக்கு ஓர் எலிவாகனம் செய்து கொடுக்க வேண்டும் என்று விரும்புறன். சரியென்று சொன்னீர்களானால் மானம்பூருக்கு முத்துமாரியம்மன் கோயிலுக்கு வேட்டைத் திருவிழாவுக்கு மகா கணபதி என்ரை எலி வாகனத்தில் போகலாம்’’.

இது எல்லாவற்றையும் நான் தீர்மானிக்கிறேல்லை. பரிபாலன சபை தான் தீர்மானிக்கிறது. இரவைக்கு பரிபாலன சபையின் கூட்டம் இருக்கு நான் சொல்லுறன்’’ என்றார் தணிகாசலம்.

‘‘இதுக்கு ஏன் அண்ணை நிர்வாக சபையிலை தீர்மானிக்க வேணும். எனக்கு விருப்பமாக இருக்கு. நான் கொடுக்கிறத்தை வாங்க வேண்டியது தானே. முந்தி நான் அன்னதானம் கொடுக்க விரும்பிய போதும் அனுமதி தர மறுத்தனீங்கள். நான் வலுக்கட்டாயமாகக் கொண்டு வந்து நாலு மூட்டை அரிசியும் காய்பிஞ்சும் தந்தனான். அதை வேண்டா வெறுப்பாய்த்தான் அவித்தனீங்கள். சனமும் முக்கால் வாசி சாப்பிடேல்லை’’ ஆவேசமாகச் சொன்னான் தனபாலன்.

‘‘அது முடிந்த விஷயம். அதைப் பற்றிக் கதையாதை. கோயிலடி என்றாலும் நாங்கள் யாரையும் எதுக்கும் வற்புறுத்த முடியாது. அவரவற்றை விருப்பம் எப்படியோ அப்படித்தான் அவை நடந்து கொள்ளுவினை’’ என்றார் தணிகாசலம்.

‘‘கோயிலடிலை அவித்துக் கொடுப்பதற்கும் தகுதி பார்க்கிறியள். வழக்கமாய் ஆறாம் திருவிழா உபயகாரர் அவித்துக் கொடுத்தால் கனபேர் கை நீட்டி வாங்க மாட்டினை. கோயிலடிலை சாதி பார்க்கிறியள். பணக்காரன் பிச்சைக்காரனெண்டு பார்க்கிறியள். இப்ப நான் வாகனம் செய்து தரலாம் என்று சொன்னால் நிர்வாக சபையைக் கேட்கவேணு மென்கிறியள். ஒரு

பக்தன் தன்ரை நேர்த்திக் கடனை நிறைவேற்றத் தடையாக இருக்கிறியள்'' பலமாகக் கத்தினான் தனபாலன்.

“ எனக்கும் கோயிலுக்கும் தொடர்பு இல்லை. நான் மகா கணபதிக்குத் தொண்டு செய்யிறவன். நீ போய் தலைவரோடை கதை என்னோடை கதைக்க வேண்டாம்'' என்றார் தணிகாசலம்.

இருவரின் தர்க்கத்தையும் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீனிவாசன் சுவாமிகள் வெளிவீதி கூட்டிக் கொண்டிருந்த ஒருவரை அழைத்து இருவரையும் அழைத்து வரும்படி கூறினார்.

தனபாலனுக்கு ஸ்ரீனிவாசன் சுவாமிகளைக் கண்டால் சரியான பயம். தனக்கு ஏதாவது கேடு செய்து விடுவார் என்று நினைப்பான். சுவாமியார் அழைத்ததும் பயத்துடன் அவரின் அருகிற் சென்றான்.

“உயிர்களின் மேல் கருணை இல்லாது அவற்றைக் கொல்பவர்களும், அவற்றின் இறைச்சியை உண்பவர்களும் அருளும் அறமும் அற்றவர்கள் இறைவனைப் பிரார்த்தனை செய்யாவிடினும் புலால் உண்ணாது தூய வாழ்வு வாழ்பவனை இறைவன் நேசிப்பார். புலாலை உண்டு விட்டு திருப்பணிகள் செய்வதாலோ, கிரிகைகள் செய்வதாலோ, விரதம் அனுஸ்டிப்பதாலோ, எந்த விதமான பலனும் இல்லை. புலால் உண்பவர்களின் கோரிக்கைகளை இறைவன் ஏற்க மாட்டான். அவர்கள் செய்யும் தான தர்மங்கள் யாவும் விழலுக்கு இறைத்த நீரைப் போன்றது. புலால் எப்பொழுதும் மனதை மாசுபடுத்தும். உடலைக் கெடுக்கும். அப்படியான புலாலை நீ உண்டு விட்டு மகா கணபதிக்கு வாகனம் ஒன்றைச் செய்து கொடுப்பது விஷம் கலந்த பாலால் மகா கணபதிக்கு அபிஷேகம் செய்வதற்கு சமனான தாகும். ஓர் உயிரைக் கொல்லாமல் இருப்பதே அருளாகும். புலால் உண்ணாதிருப்பதே அறமாகும். எனவே நீ வாகனம் செய்து கொடுப்பதை மகா கணபதி விரும்ப மாட்டார்.

தனபாலனுக்குப் பயமாக இருந்தது. அவன் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தான்.

கோயிலுக்கு வருபவர்கள் பாவஞ் செய்ய விரும்ப மாட்டார்கள். தான தர்மம் செய்பவன் தான் கஷ்டப்பட்டு உழைத்த செல்வத்தைக் கொண்டு தான் தான தருமம் செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் தான் பக்தர்கள் அதை வாங்கி உண்பார்கள் பிறரின் உழைப்பைக் கவர்ந்து செய்யும் எக் காரியமும் உரிய பலனைத் தராது. எனவே நீ புனிதனாக மாறு. மாறிய பின் மகா கணபதிக்குச் சேவை செய். அப்பொழுது தான் அச்சேவை மதிக்கப்படும், போற்றப்படும்'' என்ற சுவாமிகள் கண்களை மூடினார்.

தனபாலனுக்குப் பயமாக இருந்தது; “இனிமேல் நான் கோயிற் பக்கம் வரமாட்டன்'' என்று கூறிவிட்டு எழுந்து நடந்தான்.

254. அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்.

ஓர் உயிரைக் கொல்லாமல் வாழ்வது தான் அறம். ஓர் உயிரைக் கொன்று அதன் ஊனைத் திண்பது அருளுமாகாது; அறமும் ஆகாது.

## உயிர்கள் வாழும்

நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தின் உள்வீதிக்கும் வெளிவிதிக்கும் இடையே மரங்கள் காடாக வளர்ந்திருந்தன. கோயிலின் தெற்குத் திசையில் நின்ற பெரியதொரு அரசமரநிழலிலேயே ஸ்ரீனிவாசன் சுவாமிகள் இருப்பார். அரசமரத்திற்கு அருகில் பெரியதோர் ஆலமரம் நின்றது. அதன் அருகில் பல வேப்ப மரங்கள் நின்றன. பகல் நேரத்திலும் கோயிலின் தெற்குப் பகுதி இருள் சூழ்ந்த பகுதியாகவே இருக்கும்.

காட்டு இவர்களில் வேலை செய்த சிவசுப்பிரமணியம் என்பவர் இரண்டு மான் குட்டிகளையும் இரண்டு மயில் குஞ்சுகளையும் கொண்டு வந்து கோயிலுக்குக் கொடுத்தார். தணிகாசலம் அவற்றிற்குக் கூடு கட்டி அன்புடன் அவற்றைப் பராமரித்தார். அவை வளர்ந்ததும் கோயில் முழுவதும் திரிந்து மேய்ந்து வந்தன. மழை காலத்தில் ஆண் மயில் தோகையை விரித்து ஆடும். இரண்டு மயில்களும் சோடியாக ஆலமரத்தில் இருக்கும். சுவாமியார் ஆண்மயிலுக்கு வேலன் என்றும் பெண் மயிலுக்கு வள்ளி யென்றும் பெயரிட்டிருந்தார். கோயிலுக்கு வருவோர் கையில் தானியங்கள் கொண்டு வந்து ‘‘வேலா, வள்ளி’’ என்று அழைத்தால் அவையிரண்டும் எங்கிருந்தாலும் பறந்து வரும்.

மான்களுக்குச் சுவாமியார் தெய்வானை, முருகன் என்று பெயர் வைத்தார். அவையும் பக்தர்களோடு அன்புடன் விளையாடி மகிழும். அதைவிட நூற்றுக்கணக்காண புறாக்கள் அங்கு வசித்தன. சுவாமியார் புறாக்களுக்கு ஆலமரத்திலும் அரசமரத்திலும் வசதியான இருப்பிடங்களை மரப்பெட்டிகளால் அமைத்திருந்தார். அவற்றுடன் சிவசுப்பிரமணியம் கொண்டு வந்து கொடுத்த குரங்குகள் இரண்டும் நின்றன. பூசை நேரங்களில் குரங்குகள் இரண்டும் உள்ளே சென்று பக்தர்களுடன் மகா கணபதியை வணங்கும். திருவிழாக்காலங்களில் சுவாமியுடன் வலம் வரும் குரங்குகள் இரண்டிற்கும் உமை, சிவன் என்று சுவாமிகள் பெயர் வைத்திருந்தார்.

மாலை நேரங்களில் சுவாமியாரைச் சுற்றி மயில்களும், மான்களும், குரங்குகளும் புறாக்களும் வீமனும் நிற்கும். மான்களும் குரங்குகளும் வீமனுடன் மகிழ்வுடன் ஓடி விளையாடும். அவற்றின் விளையாட்டைப் பார்ப்பதற்காக மாலை நேரங்களில் பல சிறுவர்களும் பெரியவர்களும் வருவார்கள். அயலூரில் உள்ளவர்களும் அவற்றைப் பார்க்க வருவார்கள்.

தணிகாசலம் குரங்குகளுக்குக் காவடி ஆட்டம் பழக்கி இருந்தார். மாலை வேளைகளில் தகரங்களில் தட்டி யாராவது பாடினால் குரங்குகள் இரண்டும் தாம் வைத்திருக்கும் இரு தடிகளை தோளில் வைத்து ஆடும். அத்துடன் குத்துக்கரணம் அடிக்கும். மரத்தில் ஏறித் தாவி விளையாடும். சிறுவர்களுடன் சேர்த்து சுவாமியாரும அவற்றை இரசித்து மகிழ்வார். மாலை நேரங்களில் கோயிலடிகளை கூட்டுவதால் கடலை வியாபாரிகள் இருவர் கோயிலடியில் கடலை விற்பனை செய்தனர்.

கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் பாடசாலைப் பிள்ளைகளை அழைத்துச் சென்று அவற்றைக் காட்டுமாறு கூறியதால் பகல் வேளைகளில் அயல் ஊர்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் வந்து பார்த்து மகிழ்வடைவர்.

மாமரங்கள் பழுக்கும் காலத்தில் குரங்குகள் ஊருக்குள்ச் சென்று மாம்பழங்களைப் பறித்து உண்பது வழக்கம். ஒரு நாளப் பகலில் சென்ற குரங்குகள் இரண்டும் மாலை நேரம் வரை வரவில்லை. விடிந்த பின் வந்து விடும். என்று சுவாமியார் நினைத்தார். நாட்கள் சென்றனவே தவிர குரங்குகள் வரவில்லை. சுவாமியாரும் தணிகாசலமும் கவலைப்பட்டனர். சிறுவர்களும் தணிகாசலமும் ஊர் முழுவதும் குரங்குகளைத் தேடினர். அவற்றை பிடிக்க முடியவில்லை. ஒரு நாள் நன்றாகக் குடித்து விட்டு வீதியால் வந்த சின்னத்தம்பியை வீதியால் வந்த வாகனம் ஒன்று மோதி விட்டு நிற்காமல் வேகமாக சென்று விட்டது. கடுங்காயங்களுடன் வீதியில் கிடந்த சின்னத்தம்பியை தணிகாலமும் வேறு சிலரும் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அப்பொழுது சின்னத்தம்பி அழுதான்; ‘‘அண்ணை நான் பெரியதொரு குற்றத்திற்குத் துணையாய் இருந்திட்டன். கோயில் குரங்குகள் இரண்டையும் தனபாலனோடை சேர்ந்து வெட்டிப் பங்கு போட்டு ஆட்டிறைச்சி என்று சொல்லி வித்துப் போட்டம். அந்தப் பழி தான் இண்டைக்கு என்னைச் சூழ்ந்தது’’.அழுதான் சின்னத்தம்பி.

தணிகாசலம் திகைத்துப் போனார்; ‘‘பழிபாவத்துக்கு அஞ்சாது கோயிலில் விளையாடிக் கொண்டிருந்த சீவன்களைக் கொன்றது மல்லாமல் பங்கு போட்டும் விற்றும் விட்டார்கள்’’ என்பதை நினைக்க தணிகாசலத்திற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அதை அறிந்த சுவாமியாரும் கவலைப்பட்டார். விதைப்புக் காலங்களில் புறாக்கள் வயல்களுக்குச் செல்வது வழக்கம். தினமும் புறாக்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வந்தது. இறுதியாக கோயிலில் நின்ற பத்துப் புறாக்கள் காலையில் சென்றன. மாலையில் அவை திரும்பி வரவில்லை. பல நாட்கள் சென்றும் அவை வரவில்லை. வைத்தியசாலையில் குணமடைந்து வீட்டுக்கு வந்த சின்னத்தம்பியைப் பார்க்க தணிகாசலம் சின்னத்தம்பியின் வீட்டுக்குச் சென்றார். அப்பொழுது தனபாலன் ஐந்தாறு புறாக்களுடன் சின்னத்தம்பியின் வீட்டுக்கு வந்தான். அங்கு தணிகாசலம் இருப்பதைக் கண்டு பயத்துடன் வெளியே சென்றான்.

“தனபாலன் அரிசியை கள்ளச் சாராயத்தில் ஊறப்போட்டு வயலில் புறாக்களுக்குப் போடுவான். புறாக்கள் அவற்றை உண்டு விட்டு மயங்கிப் போம். பின் அதைப் பிடித்து உரித்து விற்பான்” என்றான் சின்னத்தம்பி.

தணிகாசலத்தால் அதற்கு மேல் அங்கே இருக்க முடியவில்லை. எழுந்து கோயிலுக்கு வந்து சுவாமியாருக்குச் சொன்னார்.

“மனிதன் புலால் உண்பதால் அரிய பல உயிர்கள் அநியாயமாக அழிந்து போகின்றன. புலால் உண்ணாதிருந்தால் குரங்குகளும் புறாக்களும் இன்றும் எம்மோடு வாழும். புலால் உண்பவர்களை நரகம் வெளியே விடாது. மயில்களைக் கூட்டில் அடைத்து வையுங்கள்” என்றார் சுவாமியார்.

255. உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

ஊன் உண்ணாதிருந்தால் உயிர்கள் நிலைபெற்று வாழும். ஊன் உண்டால் நரகம் அவனை அங்கிருந்து வெளியேற விடாது.

## வியாபாரிகள் இல்லை

கைலாயபிள்ளை ஆட்டுக்கடா வளர்ப்பதில் சூரன். அவனிடம் எந்த வேளையிலும் ஆறேழு ஆட்டுக் கடாக்கள் நிற்கும். ஊன் விற்பனை செய்வோர் அவனிடத்தில் ஆட்டுக்கடாக்களை வாங்குவார்கள். ஒரு ஆட்டுக் கடாவை விற்றால் எங்கு சென்றாவது இன்னோர் ஆட்டுக்கடாவை வாங்கி வந்து விடுவன். அவனது ஆட்டுக்கடாக்களுக்கு உணவும் நீரும் வைத்துப் பராமரித்து வந்தான் சின்னத்தம்பி.

ஆட்டுக்கடாக்கள் உணவை இலகுவாக உண்ணமாட்டாது. அவற்றிற்குத் தீத்துதல் வேண்டும். தேங்காய்ப் பிண்ணாக்கு, உழுத்தம் கோது, கடலை, பச்சை அரிசி முதலியவற்றை ஊறவிட்டு இடித்து கலந்து முள்முருக்கம் இலையில் சுற்றி சின்னத்தம்பி தீத்துவான். இவற்றின் கரைசலை போத்தலில் விட்டுப் பருக்குவான்.

தில்லை நடராசாவின் மாட்டைத் தனபாலன் களவாக அவிழ்த்து வந்து வெட்டிப் பங்கு போட்டு விற்ற பின்பு சுவாமியார் கோயிலில் பூசைகள் முடிந்த பின்பு புலால் உண்பதைப் பற்றியே அடிக்கடி உரையாற்றி வந்தார்.

“பாவம் செய்வதற்கு அறிவுள்ள பலர் காரணகர்த்தாக்களாக இருக்கிறார்கள். அண்மைக்காலமாகப் பல சமூக விரோத செயல்கள் எமது கிராமத்தில் நடைபெற்று வருகின்றன. அவற்றிற்குக் காரணமானவர்கள் யாரென்று நாம் ஆராய்ந்து பார்த்தோமேயானால் நாம் அதிர்ச்சிக்குள்ளாவோம். கிராமத்தில் அடிக்கடி சிறு சிறு திருட்டுக்கள் நடைபெறுகின்றன. திருடர்கள் கஷ்டப்பட்டு வியர்வை சிந்தி உழைக்காமல் சுலபமாகத் திருடுகிறார்கள்.

அவற்றை அறிவுள்ளவர்களும் பணம் படைத்தவர்களும் மலிவாக வாங்குகின்றனர். இதனால் திருடுபவனுக்குச் சுலபமாகப் பணம் கிடைக்கிறது. அதனால் அவன் மீண்டும் மீண்டும் திருடுகிறான். அண்மையில் மயில்வாகனத்தின் நகைக் கடை கொள்ளையிடப்பட்டது. இன்று வரை கொள்ளையர்களைப் பிடிக்க முடியவில்லை. அதற்குக் காரணம் திட்மிட்டு செயற்பட்டமையும், பணக்காரன் அந் நகை முழுவதையும் குறைந்த விலைக்கு வாங்கியமையுமே ஆகும். எனவே அறிவுள்ளவர்கள் திருந்தினால் தான் நாட்டில் குற்றச் செயல்கள் இல்லாது போய்விடும்.''

இன்னொரு நாள் சுவாமியார் அருளுரை நிகழ்த்தினார்; ''உலகத்தவர்கள் புலாலை உண்ணாதிருந்தால், விலையின் பொருட்டு உயிர்களைக் கொன்று அதன் ஊனை விற்போர் இல்லாமற் போவர். தில்லைநடராசாவின் மாட்டை களவாக அவிழ்த்து வெட்டிப் பங்கு போட்ட இறைச்சியை பல பிரமுகர்கள் வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் காவல்துறை அலுவலகத்தில் எச்சரிக்கப்பட்ட பின்பும் திருந்தவில்லை. அதனால் தான் கோயிலில் நின்று எம்மையெல்லாம் மகிழ்வித்த இரண்டு குரங்குகளையும் வெட்டி அதன் இறைச்சியை ஆட்டிறைச்சி என்று சொல்லி விற்றிருக்கிறார்கள். உயிரைக் கொல்வது பாவம். அத்துடன் சாப்பிடக் கூடாதவற்றை யெல்லாம் விற்பனை செய்வதற்குப் புலால் உண்பவர்களே காரணமாக இருக்கிறார்கள். அத்துடன் கோயிலில் நின்ற நூற்றுக்கணக்கான புறாக்களையும் தந்திரமான முறையில் பிடித்துத் தின்று விட்டார்கள். இதைப் பற்றிப் புலால் உண்பவர்கள் சிந்தித்தல் வேண்டும். புலால் உண்பவர்கள் இல்லாவிட்டால் ஊனை விற்பவர்களும் இருக்க மாட்டார்கள். எனவே கோயிலுக்கு வரும் எல்லோரும் புனிதர்களாக வாருங்கள்.''

இப்படிச் சுவாமியார் கூறிய பின்பு தனபாலனிடம் எவரும் இறைச்சியை வாங்க விரும்பவில்லை. அத்துடன் தனபாலன் காசாசையால் குரங்கு இறைச்சியை ஆட்டிறைச்சி என்று கூறி விற்ற பின் அவனது வாடிக்கையாளர் பலர் புலால் உண்பதில்லை. என்று விட்டு விட்டனர்.

கைலாயபிள்ளையின் பத்தாயிரம் ரூபா பெறுமதியான ஆட்டுக்கடாவுக்கு சின்னத்தம்பி போத்தலில் பிண்ணாக்குத் தண்ணீர் பருக்கும் போது புரையேறி அது செத்து விட்டது.

மறுநாட் காலை தனபாலன் செத்த ஆட்டைப் பங்கு போட்டு எல்லோரிடமும் கொண்டு சென்றான். எவரும் அவனிடம் இறைச்சி வாங்கவில்லை.

கேசவமூர்த்தி ஆசிரியர் சொன்னார்; ''தனபாலு இனிமேல் நான் புலால் உண்பதில்லை என்று விட்டு விட்டேன். அன்றைய நிகழ்வுக்குப் பிறகு வெளியே செல்ல எனக்கு வெட்கமாக இருக்கிறது. குடும்பத்தவர்களும் நண்பர்களும் உறவினர்களும் ஏசுகிறார்கள். இனிமேல் எனது வீட்டுப் பக்கம் வராதை''.

குருமூர்த்தி சொன்னார்; “குரங்கை வெட்டித் தந்த நீ, நாயையும் வெட்டித்தருவாய். இனிமேல் நான் புலால் உண்பதில்லை என்று தீர்மானித்து விட்டேன். அத்துடன் கோயிலில் சுவாமியாரின் அருளுரையைக் கேட்ட பின்பு என்னுடைய குடும்பத்தினர் இனிமேல் புலால் உண்பதில்லை. என்று தீர்மானித்து விட்டார்கள். நான் முன்பு நாஸ்திகனாக இருந்ததால் புலாலை உண்டு வந்தேன். இப்பொழுது மகா கணபதியை வணங்குவதால் புலால் உண்ண விரும்பவில்லை”.

தனபாலன் ஊர் முழுவதும் இறைச்சியைக் கொண்டு திரிந்தான். எவரும் அவனிடம் இறைச்சியை வாங்கவில்லை.

256. தினல்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

புலால் தின்னும் பொருட்டு உலகத்தவர் உயிர்களைக் கொல்லாதிருந்தால், விலையின் பொருட்டு மாமிசத்தை விற்பனை செய்வோர் இல்லாமற் போவர்.

## புண்

நவராத்திரி பூசையின் இரண்டாம் நாள் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தின் வசந்த மண்டபத்தில் இருந்த துர்க்காதேவிக்கு இராசசங்கரக் குருக்கள் பூசை செய்து கொண்டிருந்தார். ஏராளமான மக்கள் அங்கு குழுமியிருந்தனர். பூசை முடிந்ததும் மகா கணபதி மூசிக வாகனத்திலும் துர்க்கா தேவி சிங்க வாகனத்திலும் உள் வீதி உலா வந்து கொண்டிருந்தனர். வழமையாக உற்சவ காலங்களில் பக்தர்களுடன் சேர்ந்து வரும் சிவனும் உமையும் இல்லாதது மக்களுக்குப் பெருங் கவலையை அளித்தது. சிறுவர்கள் தீவர்த்தி பிடித்துக் கொண்டு வருவார்கள். உமைக்கும் சிவனுக்கும் எல்லோரையும் தெரியும். தீவர்த்தி பிடித்துக் கொண்டு வரும் பிள்ளைகள் சிவனிடமும் உமையிடமும் தீவர்த்திகளைக் கொடுப்பார்கள். அவையும் சிறுவர்களைப் போல் அவதானமாகத் தீவர்த்திகளைப் பிடிக்கும். அவை தீவர்த்தி பிடிப்பதை வேடிக்கை பார்ப்பதற்காக மக்கள் அவற்றின் பின்னால் செல்வார்கள்.

குருக்கள் திருநீறு, தீத்தம் , சந்தணம்,பூ முதலியவற்றைக் கொடுத்தால் உமையும் சிவனும் தாமும் வாங்கும், திருநீற்றைப் பூசிப் பொட்டும் வைக்கும். பின் சிறுவர்கள் அவைக்குப் பொட்டு வைப்பார்கள்.

பக்தர்கள் பொங்கிப் படைக்கும் வேளைகளில் படையல் பிரசாதத்தை அவர்களுக்குப் பொங்குவோர் கொடுப்பார்கள். குரங்குகளை நினைத்தால் தணிகாசலத்திற்கு கவலை பொங்கிக் கொண்டு வரும். அவை காணாமல் போன பின்பு தணிகாசலத்தால் உணவு உண்ண முடியவில்லை. சோற்றைக்

கையில் எடுத்தால் உமையும் சிவனுமே நினைவில் வந்தன. இரண்டு குரங்குகளும் தணிகாசலத்தைத் தேடி வீட்டுக்கு வரும். அவர் இல்லா விட்டால் அவருக்காகக் காத்திருக்கும். இரண்டு நாட்கள் வெளியூரில் வேலை காரணமாக தணிகாசலம் சென்று விட்டார். இரண்டு நாட்களும் தணிகாசலத்தை காணாத குரங்குகளும் மான்களும் மயில்களும் பரிதவித்துப் போயின.

குரங்குகள் இரண்டும் ஐந்தாறு தடவைகள் அவரின் வீட்டுக்குச் சென்றன. குரங்குகள் வீட்டுக்கு வந்தால் அவைகள் சாப்பிடுவதற்கு ஏதாவது கொடுக்காமல் விடமாட்டார் தணிகாசலம். சுருக்கமாகச் சொல்லப் போனால் தனது பிள்ளைகளாகவே அவர் அவற்றைக் கருதி வந்தார்.

உமையும் சிவனும் வீதியுலாவில் கலந்து கொள்ளாமையால் கவலையுற்ற தணிகாசலம் அரசமர நிழலில் வந்து சுவாமியாருடன் அமர்ந்து கொண்டார். ஒரு நாளுமில்லாதவாறு சுவாமியுடன் செல்லாது தனக்கருகில் வந்திருந்த தணிகாசலத்தைப் பார்த்தார் சுவாமியார்; ‘‘சுவாமி என்னால் சிவன், உமையுடைய பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கோயில் வீதியில் அவை செய்யும் விளையாட்டுக்கள் இன்மையால், கோயில் வீதிகளையிழந்து விட்டது.’’

சுவாமியார் எதுவும் பேசவில்லை. அப்பொழுது தெய்வானையும் முருகனும் தணிகாசலத்தின் அருகே வந்தன. தணிகாசலம் பாசத்துடன் அவற்றின் முதுகை வருடினார்; ‘‘நீங்கள் அவதானமாக இருங்கள். உங்களையும் பாவிகள் களவாக பிடித்துச் சென்று பங்கு போட்டு விடுவார்கள். கோயிலை விட்டு வேறு இடங்களுக்குச் செல்லாதீர்கள்’’ என்றார்.

சுவாமியார் சிரித்தார்; ‘‘பூசை நேரம் அல்லாத வேளைகளில் மான்களைத் திறந்து விட வேண்டாம் என்று சொல்லுங்கள். மக்களிடம் சொன்னால் தேவையானளவு புற்களையும் குழைகளையும் கொண்டு வந்து தருவார்கள். மயில்களைப் பிடிக்க முடியாது. அவற்றைக் கூட்டிலும் அடைத்து வைத்திருப்பது கஷ்டம். என்றார் சுவாமியார்.

வெளி வீதி உலா முடிந்ததும் பூசைகள் ஆரம்பமாகிச் சிறிது நேரத்தில் முடிவடைந்தன. பக்தர்கள் பிரசாதங்களை வாங்கிக் கொண்டு வந்து அரசமரத்தின் கீழ்ப் பரவி இருந்த மணலில் அமர்ந்து கொண்டனர். தெய்வானையும் முருகனும் சுவாமியாரின் அருகில் வந்து படுத்தன. ஏற்கனவே சுவாமியாரின் அருகில் படுத்திருந்த வீமன், சிவனை மெதுவாகக் கடிக்க, சிவன் தனது கொம்பால் வீமனை இடித்தது.

‘‘பேசாமல் படுத்திருங்கள்’’ என்று அதட்டிய சுவாமியார் மக்களைப் பார்த்துப் புன்னகைத்தார். பின்; ‘‘அருள் மிகுந்தவர்களே நீங்கள் இரண்டு உயிர்களை இழந்த சோகத்தில் இருக்கிறீர்கள். உமையையும் சிவனையும் இழந்தது மிகப் பெரும் இழப்பாகும். இந்த இழப்பிற்குக் காரணம் புலால் உண்பதே. தணிகாசலத்தால் இன்று நிம்மதியாக மகா கணபதியை வணங்க முடியவில்லை. பிள்ளைகளைப் போல் நீங்கள் பேணி வளர்த்த சிவனதும்

உமையதும் இழப்பைப் போன்ற இழப்பொன்று இனிமேல் நிகழக் கூடாது. தெய்வானையையும் முருகனையும் வேலையையும் வள்ளியையும் அவதானித்துக் கொள்ளுங்கள். அவை உங்களின் வீடுகளுக்கு வந்து செல்கின்றன. அவை வந்து செல்வது உங்களுக்குச் சிறப்பைத் தரும். அருள் உள்ளவர்கள் அன்புள்ளவர்கள், அறிவுடையவர்கள் ஆராய்ந்து பார்த்தால் புலாலானது ஓர் உயிரின் புண் என்பது தெரிய வரும். அருள் உடையோர் புலாலாகிய புண்ணை உண்டால் அருள் இல்லாமல் போய்விடும். உயிர்கள் மேல் அன்புடையவன் உயிர்கள் யாவற்றையும் தனது பிள்ளைகளாகவே நேசிப்பான். மிருகங்களை அக்கறையுடன் வளர்த்து விட்டு அவற்றைக் கொன்று அதன் புண்ணை உண்பது மகா பாவம். எனவே மக்கள் அனைவரும் புலாலை உண்ணாது புனிதர்களாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''.

257. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதுஒன்றன்
புண்அது உணர்வார்ப் பெறின்.

புலால் உண்ணக் கூடாது. ஆராய்ந்து பார்த்தால் புலால் என்பது இன்னோர் உயிரின் புண் என்பது தெரிய வரும்.

## அறிவுடையோர்

நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் காலைப் பூசை முடிந்து விட்டது. காலைப் பூசை ஆரம்பமாவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு தணிகாசலம் கோயிலுக்கு வந்து விடுவார். அவர் வருவதற்கு முன்பு பலர் வந்து, ஆலயச் சூழலைத் துப்பரவு செய்வார்கள். சில வேளைகளில் தணிகாசலம் வரும் போது கோயில் முழுவதும் கூட்டித் துப்பரவு செய்து விடுவார்கள். அன்று கண்டாமணி அடிக்கும் போது தான் கோயிலுக்கு வந்தார் தணிகாசலம். அவர் வரும் போது எப்பொழுதும் மான்களுக்கு ஏதாவது தீனி கொண்டு வருவார். அதனால் கோயிலின் வடமேற்கு மூலையில் உள்ள முருகன் கோயில் வாசலில் படுத்திருக்கும் முருகனும் தெய்வானையும் எழுந்து அரச மரத்தடிக்கு வந்து விடும். கண்டாமணி அடிப்பதற்கு முன்பு முருகனும் தெய்வானையும் தணிகாசலம் கொண்டு வரும் தீனியை உண்டு விடும். பின் தணிகாசலம் கோயிலைத் துப்பரவு செய்தால் அவருடன் நிற்கும் துப்பரவு செய்த பின் அவர் கோயிற் கிணற்றில் கால் முகம் கழுவி விட்டு கோயிலுக்குள் சென்று பூசை நடைபெறும் போது வணங்குவார். அவர் வணங்கி முடியும் வரை அவருக்குப் பின்னால் முருகனும் தெய்வானையும் திரியும். பூசை முடிந்த பின்பு குருக்கள் கொடுக்கும் வீபூதி சந்தனத்தை தணிகாசலம் வாங்கித் தானும் பூசி அவற்றிற்கும் பூசுவார். பூசை முடிந்ததும் குருக்கள் கொடுக்கும் பிரசாதத்தை முருகனும் தெய்வானையும் வாங்கி உண்ணும். இது தினமும் நடைபெறும் நிகழ்வு.

பூசை முடிந்த பின்பு தணிகாசலம் முருகனையும் தெய்வானையையும் தேடிப் பார்த்தார். காணவில்லை. குருக்களைக் கேட்டார். குருக்களும் தான் காணவில்லை என்று சொன்னார். தணிகாசலத்திற்கு நெஞ்சு; ''திக்திக்'' என்று வேகமாக அடித்தது. பக்கத்தில் இருபத்தைந்திற்கும் அதிகமான அடியார்கள் நின்றனர்.

பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தால் அவர்கள் முருகனையும் தெய்வானையையும் பற்றிச் சிந்திக்கவில்லை. பூசை முடிந்த பின்பும் அவை வராததால் அவர்கள் கலவரமடைந்தனர்.

தணிகாசலமண்ணை மான்கள் இரண்டையும் காணவில்லை. இண்டைக்குச் சனிக்கிழமை தனபாலன் பிடித்துப் பங்கு போட்டு விட்டானோ தெரியவில்லை'' என்றார் ஒரு பக்தர் ஆவேசமாக.

''இவனை அடித்து முறிக்க வேணும். பிள்ளைகள் மாதிரி கோயிலடிலை துள்ளி விளையாடிய இரண்டு வாயில்லாச் சீவன்களையும் கொன்ற அவனை அப்பவே பிடிச்சிழுத்தந்து கோயில் மரமொன்றிலை கட்டிப் போட்டு அடிச்சிருந்தால் இண்டைக்கு மான்களுக்கு இந்தக் கதி நேர்ந்திராது'' என்றார் கதிரேசன்.

''வாருங்கோ எல்லோருமாய்ச் சேர்ந்து தனபாலன்ரை வீட்டை போவம். அவன் மான்களை வெட்டியிருந்தால் அவனையும் அதிலேயே வெட்டிப் போட்டுட்டு வருவம். அதுக்காக நான் சிறைக்குப் போனாலும் பரவாயில்லை'' என்றான் நடேசன்.

''என்ன தணிகாசலண்ணை யோசிக்கிறியள். வாங்கோ போவம்'' என்றான் சேனாதிராசா.

தணிகாசலம் எதுவும் பேசத் தோன்றாது கோயிலின் வெளிப்பக்கத்திற்கு வந்தார். சுவாமியாரை அரசமரத்தின் கீழ்க் காணவில்லை; ''சேனாதி சுவாமியாரைத் தேடிப் பார். நீங்கள் இரண்டு மூன்று பேர் போய் கோயிற் பக்கம் முழுவதும் தேடுங்கோ'' என்று தணிகாசலம் சொன்னதும் எல்லோரும் பிரிந்து சென்றனர்.

பதினைந்து நிமிடத்துக்குள் ஊர் முழுவதும் மானைக் காணாத விசயம் பரவி விட்டது. ஊரவர் அனைவரும் தத்தமது வேலைகளை விட்டு விட்டு கோயிலடிக்கு வந்து விட்டனர். அன்று பாடசாலை இல்லாததால் மாணவர்களில் அனேகமானோர் கோயிலடிக்கு வந்து விட்டனர். குருமூர்த்தி ஆசிரியர் தனது பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு கோயிலடிக்கு வந்து விட்டார். பிள்ளைகளிற் பலர் ''முருகா... முருகா.. தெய்வானை .. தெய்வானை'' என பெருங்குரலெடுத்து அழைத்தனர். சிலர் விம்மி விம்மி அழுதனர். குருமூர்த்தியின் மகன் விக்கி விக்கி அழுதான்.

‘‘நான் முன்பு அறியாத்தனத்தால் பல தவறுகள் செய்து விட்டேன். இப்பொழுது திருந்திய பின்பு தான் நான் விட்ட தவறுகள் எனக்குப் புரிகின்றன. நல்ல அறிவுடையவர்கள் ஓர் உயிர் பிரிந்து விட்ட உடம்பான புலாலை உண்ண மாட்டார்கள் என்பதையும் அறிந்து கொண்டேன்’’ என்றார் குருமூர்த்தி.

அப்பொழுது மக்கள் தனபாலனைப் பிடித்துக் கொண்டு வந்தனர். சேனாதிராசா, தனபாலனை கோயில் வாசலில் நின்ற வேப்ப மரத்துடன் கட்டினான். நவராசாவும் இளைஞர் பலரும் தனபாலனுக்கு அடித்தனர்.

‘‘ஐயோ .... நான் மானைப் பிடிக்கேல்லை... குரங்கைப் பிடிச்சது உண்மை தான்.... சத்தியமாய் நான் பிடிக்கேல்லை’’ அலறினான் தனபாலன்.

‘‘அப்ப மான்கள் எங்கை போனது’’ அதட்டினான் நவராசா.

‘‘இவன் தான் பிடித்தவன். குத்து அடி...’’ என்று பலர் சத்தமிட்டனர். அப்பொழுது சுவாமியார் அங்கே வந்தார். அவருக்குப் பின்னால் முருகனும் தெய்வானையும் வந்தன. கூட்டத்துள் தணிகாசலத்தைத் தேடிய முருகனும் தெய்வானையும் அவருக்கருகில் வந்து நின்றன. மக்கள் கூட்டத்தைக் கண்டு அதிசயித்தார் சுவாமியார்; ‘‘அதிகாலையில் முருகனும் தெய்வானையும் வீதியில் நின்றார்கள் நான் தான் அழைத்துச் சென்றேன்’’ என்றார் சுவாமியார். அப்பொழுது தான் தணிகாசலத்திற்கு உணர்வு வந்தது. அன்புடன் முருகனையும் தெய்வானையையும் தடவினார்.

‘‘பாடு பட்டு உழைத்து நிலத்தில் விளைந்தவற்றை உண்பவன் தான் உண்மையில் சாப்பிடுகிறான். உன்னைப் போல உள்ள ஓர் உயிரைக் கொன்று அதன் புண்ணை உண்பவன் அரக்கர்களை விடக் கேவலமானவன். தெரியாத் தனமாய்க் கூட மான்களுக்கேதாவது நேர்ந்தால் உன்னைக் கொலை செய்வம்’’ என்று ஆவேசமாகக் கத்தினான் நவராசா. தனபாலன் அடியின் வேதனையைத் தாங்க மாட்டாது முனகினான்.

258. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

நல்லறிவை உடைய குற்றமில்லாதவர்கள் ஓர் உயிரானது பிரிந்து விட்ட உடம்பான புலாலை ஒரு போதும் உண்ண மாட்டார்கள்.

## உயர்ந்தது

வீதியில் விபத்துக்குள்ளான சின்னத்தம்பி ஓரளவு உடல் ரீதியாகக் குணமடைந்த போதும் மனரீதியாகப் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருந்தான்.

குரங்குகள் இரண்டும் தனபாலனது வீட்டில் நின்ற மாமரத்தில் மாங்காய்களைப் பறித்துத் தின்று கொண்டிருந்தன. முதல் நாள் தனபாலனைச் சந்தித்த கேசவமூர்த்தி; ‘‘தனபாலு எனது மனைவியின் சகோதரன் ஒருவன் வெளிநாட்டில் இருந்து வந்து இருக்கிறான். எனக்கு அடிக்கடி பெருந்தொகையான பணம் அனுப்புவான். இங்கு அவன் வந்து நிற்கின்ற போது நல்ல முறையிற் கவனித்தான், அவன் போய் ஏராளமாகப் பணம் அனுப்புவான். அதனால் நல்ல கொழுத்த கிடாயாய்ப் பார்த்து வாங்கி அடித்து பங்கு தா. முற்காசாகவே தாறன். ஊருக்கை பல பேர் ஆடடித்துப் பங்கு போடுகிறார்கள். ஆனால் உன்னை மாதிரி இறைச்சி தர எவராலும் முடியாது. இந்தா முற்காசாகவே தாறன்’’ என்று கூறி ஆயிரம் ரூபாத்தாள் ஒன்றைக் கொடுத்தார் கேசவமூர்த்தி.

காசைப் பெற்றுக் கொண்டு சென்ற தனபாலன் பல இடத்திலும் சென்று ஆட்டுக் கடா வொன்றைத் தேடினான். ஆட்டுக்கடா வளர்ப்போர் கூடுதலான விலை சொன்னார்கள். கைலாய பிள்ளையிடம் ஆறேழு ஆட்டுக்கடாக்கள் நின்றன. ஆனால் விலையை கைலாய பிள்ளை கூடச் சொன்னதால் தனபாலன் கைலாய பிள்ளையிடம் ஆட்டுக்கடாவை வாங்கவில்லை. அன்று மாலை தனபாலன் அளவுக்கதிகமாகக் குடித்தமையால் வீட்டில் வந்து படுத்து விட்டான். அதிகாலை நான்கு மணிக்குச் சின்னத்தம்பி வந்து எழுப்பி கேசவமூர்த்திக்கு இறைச்சி கொடுக்க வேண்டும் என்று கூறிய பின்பு தான் தனபாலனுக்கு தான் கேசவமூர்த்தியிடம் முற்பணம் வாங்கியது நினைவுக்கு வந்தது; ‘‘பரவாயில்லை கைலாயபிள்ளையிடம் ஒருகடாவை வாங்கிப் பங்கு போடு வோம்’’ என்ற தனபாலன் முதல் நாள் கையில் காசிருந்தால் வாங்கி வைத்திருந்த கள்ளச் சாராயத்தை எடுத்து வந்து ஒரு சிரட்டையில் ஊற்றிக் குடித்து விட்டு, சாராயத்தை சிரட்டையில் ஊற்றிச் சின்னத்தம்பிக்குக் கொடுத்தான்.

விடிந்த போது குரங்குகள் இரண்டும் மாமரத்தில் இருந்தன. அவற்றைக் கண்ட தனபாலன் இரண்டு தினங்களுக்கு முன்பு பறித்து வைத்திருந்த இரண்டு மாம்பழங்களைக் கொண்டு வந்து; ‘‘முருகா.... தெய்வானை.... இந்தா மாம்பழம்’’ என்று நீட்டினான்.

பக்தர்களிடம் பயமின்றி பழங்களை வாங்கி உண்டு பழகிய குரங்குகள் இரண்டும் மகிழ்வுடன் மரத்தால் குதித்து தனபாலனின் அருகில் வந்தன. அருகில் குரங்குகள் வந்ததும் மாம்பழத்தைக் கொடுத்து விட்டு தந்திரமாக அவற்றைப் பிடித்துக் கட்டினான் தனபாலன்.

‘‘உதுகளை ஏன் பிடிக்கிறாய். கோயிற் குரங்குகள்’’ பதறினான் சின்னத்தம்பி.

‘‘இதை அறுத்துத்தான் பங்கு போட்டு கேசவமூர்த்திக்குக் கொடுக்கப் போறன்’’.

‘‘ஐயையோ... கோயிற் குரங்கு நான் மாட்டன்’’ எழுந்தான் சின்னத்தம்பி.

குடித்து விட்டு மிகுதியாக வைத்திருந்த சாராயம் முழுவதையும் சிரட்டையில் வார்த்துக் கொண்டு வந்த தனபாலன் முதலில் இதைக் குடி'' என்றான்.

பயத்துடன் அதை வாங்கிய சின்னத்தம்பி குடித்து விட்டு சிரட்டையை நிலத்தில் போட்டான். அன்று காலை அரைப் போத்தலுக்குக் கூடக் குடித்த போதும் அவனுக்கு வெறிக்கவில்லை.

''பயந்தால் நீ பிடி நான் அறுக்கிறன்''.என்றான் தனபாலன்.

சின்னத்தம்பி பயந்த போதும் தனபாலன் சொல்வதை அவனால் தட்ட முடியவில்லை அதனால் அவனுடன் சேர்ந்து கொண்டான். வெறி முறிந்த பின்பு அவனுக்கு அதை நினைக்கப் பயமாக இருந்தது. பகலில் அந்நினைவுகளுடன் போராடினான். இரவில் குரங்குகள் கண்களுக்குள்த் தோன்றின. சுவாமியார் அடிக்கடி அவனது கனவில் தோன்றிப் பயமுறுத்தினார். அதனால் நிம்மதியை இழந்து திரிந்த போது தான் விபத்துக்குள்ளானான் சின்னத்தம்பி.

சின்னத்தம்பி பகலில் தேவையில்லாமல் கதைப்பான். இரவில் நித்திரை கொள்ளாதிருப்பான். அடிக்கடி கத்துவான். அதனால் அவனது மனைவி அவனைச் சுவாமியாரடத்தில் அழைத்து வந்தாள்.

''சுவாமி இவர் தேவையில்லாமல் கதைக்கிறார். இரவில் நித்திரை செய்யாது புலம்புகிறார். மந்திரம் செபித்து நூல் கட்டி விடுங்கோ. குருக்களைக் கொண்டு மகா கணபதிக்குப் பெரிய தொரு பூசை செய்யப் போகிறேன்'' யாராவது செய்வினை செய்தார்களோ தெரியவில்லை'' அழுதாள் சின்னத்தம்பியின் மனைவி.

சுவாமியார் சிரித்தார்; மகளே மந்திரித்து நூல் கட்டுவதோ அல்லது நெய் முதலிய பொருட்களை தீயில் சொரிந்து பூசைகள் செய்வதாலோ எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. ஒரு உயிரைக் கொன்று அதன் புலாலை உண்ணாதிருத்தல் ஆயிரம் யாகங்கள் செய்வதை விடப் பயன் மிக்கது. விரதமென்பது உயிர்களைக் காத்தலாகும். நாம் செய்கின்ற செயல்கள் தான் எம்மைச் சூழ்ந்து வருத்துகின்றனவே தவிர பிறர் செய்யும் பில்லி சூனியங்கள் எம்மை வந்தடைந்து வருத்தாது. உனது கணவன் எத்தனை உயிர்களைக் கொன்றிருப்பான். இனியாவது உயிர்களைக் கொல்வதை நிறுத்தச் சொல்லு. புனிதர்கள் செய்யும் பூசைகள், ஆராதனைகள் தான் கடவுளால் ஏற்றுக் கொள்ளப்படும்'' என்று கூறி விட்டுக் கண்களை மூடினார் சுவாமிகள்.

## 259. அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்

உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

நெய் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதை விட, ஓர் உயிரைக் கொன்று அதன் உடம்பைத் தின்னாமல் இருப்பது நல்லது.

## கைகூப்பித் தொழும்

தணிகாசலத்திற்குக் கடுஞ் சுகவீனம் தீடீரென ஏற்பட்டது. தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தணிகாசலம் திடீரென மயங்கி விழுந்தார். அவருடன் வேலை செய்து கொண்டிருந்த இராமநாதனும் சேனாதிராசாவும் அவரைத் தூக்கி வந்து தோட்டத்துக் கிணற்றடியில் நின்ற பூவரசமர நிழலில் கிடத்தினர். சேனாதிராசா மூக்கின் அருகே கைவைத்துப் பார்த்தான். மூச்சு லேசாக வந்து கொண்டிருந்தது. உடல் அனலாகக் கொதித்தது.

‘‘சரியான காய்ச்சல் காய்கிறது. நாலைந்து நாட்களாக இயலவில்லை. என்று சொல்லிக் கொண்டிருந்தவர். மருந்தும் எடுத்திரார். இரவு பகலாய்ப் பொதுத் தொண்டு செய்து கொண்டிருந்தால் வருத்தம் வராமல் என்ன செய்யும் உடம்பையும் கொஞ்சம் பார்க்கத்தானே வேண்டும்’’ கவலைப்பட்டார் சேனாதிராசா.

‘‘அந்தாளுக்குச் சொன்னாலும் கேளாது. நான் போய் கணேசமூர்த்தீன்ரை மோட்டார் வண்டியைக் கொண்டு வாறன்’’ என்ற இராமநாதன் சேனாதிராசாவின் பதிலை எதிர் பாராதுசென்றான்.

‘‘அருகில் இருந்த தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த நடேசனும் வேறு நான்கு பேரும் ஓடி வந்தனர். தணிகாசலம் ஆட்ட அசைவின்றி நிலத்தில் கிடப்பதைக் கண்ட நடேசன் பெருங்குரலெடுத்து அழுதான்; ஊரார் அனைவரினதும் அன்புக்குப் பாத்திரமாக இருந்து அனைவருக்கும் உதவிகள் ஒத்தாசைகள் புரிகிற உங்களுக்குக் கடவுள் இப்படிச் செய்து விட்டாரே இதை உலகம் தாங்குமே..’’.

தணிகாசலம் மெதுவாகக் கண்விழித்துப் பார்த்தார். சுற்றி வரப் பலர் நிற்பதைக் கண்டு மெல்ல எழுந்தார்.

‘‘படுங்கோ அண்ணை’’ என்றான் சேனாதிராசா. அப்பொழுது கணேசமூர்த்தியின் மோட்டார் வண்டியில் வந்து இறங்கினான் இராமநாதன்.

‘‘மெல்லமாய் எழும்பண்ணை வைத்திய சாலைக்குப் போவம்’’ என்றான் சேனாதிராசா.

‘‘எனக்கொன்றும் இல்லை. மூன்று நான்கு நாட்களாகக் காய்ச்சல் காய்ந்தது. மருந்தெடுத்தனான். இப்பேன் கணேசமூர்த்தியைக் கூட்டியந்தனீங்கள். நான் நடந்து போவன்’’ என்றார் தணிகாசலம்.

‘‘சரி... எழும்புங்கோ’’ என்ற சேனாதிராசா எழுந்த தணிகாசலத்தை; கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு வந்து மோட்டார் வண்டியில் ஏற்றினான்.

‘‘எங்கை போறது?’’ என்று கேட்டான் கணேசமூர்த்தி.

‘‘வைத்தியசாலைக்கு விடு’’ என்றான் சேனாதிராசா.

‘‘இல்லை... இல்லை.... வீட்டை போவம்’’ என்று அவசரமாய்ச் சொன்னார் தணிகாசலம்.

கணேசமூர்த்தி மோட்டார் வண்டியை இயக்கினான். அது வேகமாகப் புறப்பட்டது. மோட்டார் வண்டி வைத்தியசாலைக்குச் செல்லும் பாதையால் சென்று கொண்டிருப்பதைக் கண்ட தணிகாசலம்; ‘‘கணேசு நேற்றுத் தானடாப்பா மருந்து எடுத்தனான். காலமை வயித்தைப் புரட்டியதால் சாப்பிடாமல் வந்திட்டன். அது தான் மயங்கிப் போனன்.. வீட்டை போவம் திருப்புங்கோ’’ என்றான் தணிகாசலம். கணேசமூர்த்தி அவரின் பேச்சைக் கேட்கவில்லை. பாலகுமாரனின் வைத்திய சிகட்சை நிலையத்தை நோக்கி மோட்டார் வண்டியைச் செலுத்தினார்.

பாலகுமாரன் தணிகாசலத்தைப் பரிசோதித்தார்; ‘‘எலலாவிதமான பரிசோதனைகளையும் நான் நேற்றுச் செய்து விட்டேன். கொஞ்ச நாளைக்கு நன்றாக ஓய்வெடுத்தல் வேண்டும். இவரைக் கட்டிலோடு சேர்த்துக் கட்டி வையுங்கோ’’ என்றார் பாலகுமாரன்.

தணிகாசலம் மயங்கிய செய்தியைக் கேட்ட மக்கள் அனைவரும் தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தனர். ஒரு வாரம் தணிகாசலத்தை அவரது மனைவி வெளியே செல்ல விடவில்லை.

தணிகாசலத்தைக் காணாத வீமன் கோயிலடியில் இருந்து ஊழையிட்டது. தெய்வானையும் முருகனும், வள்ளியும் வேலனும் சுவாமியாரின் அருகிற் சென்று கவலையுடன் நின்றன.

‘‘தணிகாசலத்தைப் பாாக்கப் போகிறீர்களா...?’’ சுவாமியார் கேட்டார். வீமன் உழையிட்டது; ‘‘சரி வாருங்கள் போவோம்’’ என்று புறப்பட்டார் சுவாமியார்.

தெய்வானையும் முருகனும் தணிகாசலம் படுத்திருந்த கட்டிலின் அருகே சென்று நின்றன. வள்ளியும் வேலனும் தணிகாசலம் படுத்திருந்த கட்டிலின் சட்டத்தில் ஏறி நின்றன. வீமன் கால்மாட்டில் நின்றது. தணிகாசலம் முருகனினது தலையைத் தடவினார்; ‘‘இவை எல்லோரும் தேடுவினை என்று தான் நான் கோயிலுக்கு வாறனான். இரண்டு நாட்கள் நான் தோட்டத்திற்குச்

செல்லவில்லை. மாடுகள் எல்லாம் அறுத்துக் கொண்டு வீட்டை வந்திட்டுதுகள். இனி நான் தோட்டத்திற்குப் போனால் தான் அவையும் போகும்'' என்றார் தணிகாசலம்.

சுவாமிகள் சிரித்தார்; ''நாம் உயிர்கள் மீது அன்பு காட்டினால் அவையும் எம்மீது அன்பு காட்டும். பகுத்தறிவில்லாத சீவன்களுக்கும் அன்பின் புனிதத் தன்மையை மதிக்கத் தெரியும். உயிர்களைக் கொல்லாமலும் அதன் புலாலை உண்ணாமலும் வாழ்கின்றவர்களை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கை கூப்பித் தொழும் என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன'' என்ற சுவாமியார்; ''நான் வருகிறேன்'' என்று கூறி எழுந்து முருகா, தெய்வானை, வள்ளி வேலா, வீமா... வாருங்கள் போவோம்'' என்றார் பலமுறை சுவாமியார் கேட்டும் அவை செல்லாததால் சுவாமியார் சென்று விட்டார். மூன்று தினங்கள் அவை தணிகாசலத்துடன் அவரது வீட்டில் நின்றன. நான்காம் நாள் தணிகாசலம் கோயிலுக்குச் செல்லும் போது அவையும் அவருடன் கூடச் சென்றன.

### 260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்.

ஓர் உயிரைக் கொல்லாமலும் அதன் புலாலை உண்ணாமலும் வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கை கூப்பித் தொழும்.

## தவம்

சின்னத்தம்பி பலமாகக் கத்தியபடி நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியின் ஆலயத்திற்கு ஓடி வந்தான். அவனது கையில் ஒரு கம்பு இருந்தது. கோவிலில் பூசை முடிந்து குருக்கள் திருநீறு கொடுத்துக் கொண்டிருந்தார். சின்னத்தம்பி கையில் கொண்டு வந்த தடியைப் போட்டு விட்டு குரங்கு தாவுவதைப் போல் நிலத்தில் குந்தியிருந்து துள்ளித் துள்ளி ஓடி வந்து குருக்களிடம் திருநீறு வாங்கிப் பூசினான். பின்பு குனிந்து கொண்டு குரங்கு நடப்பதைப் போல நடந்து சென்று தான் வீசிய தடியை எடுத்துத் தோளில் வைத்துக் கொண்டு காவடி ஆட்டம் ஆடினான்.

தணிகாசலத்திற்கு மனவருத்தமாக இருந்தது. சிறுவர் முதல் வயது சென்ற அனைவரும் தணிகாசலத்தை மதிப்பது வழக்கம். சேனாதிராசாவின் நாம்பன் கன்றைக் களவாக தனபாலனுடன் சேர்ந்து அவிழ்த்துப் பங்கு போட்டமையை அறிந்த தணிகாசலம் மிகவும் மனவருத்தப்பட்டார். சின்னத்தம்பியின் தகப்பன் பொன்னையா மிகவும் நல்லவர். நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியின் தீவிர பக்தர். தனது ஓய்வு நேரம் முழுவதையும் மகா கணபதிக்குத் தொண்டு செய்து கழிப்பவர். அப்படியான ஒரு நல்ல மனிதனுக்குப் பிறந்த சின்னத்தம்பி குடித்து விட்டுக் கீழான செயல்கள் செய்வதைக் கண்டு மனம்

வருந்தினார். சின்னத்தம்பி ஒரு நாள் தணிகாசலத்திடம் உரம் கடனாக மணிவண்ணணிடம் வாங்கித் தருமாறு கேட்டு வந்தான்.

‘‘உரத்தை நான் வாங்கித் தாறன். உனது தந்தை மிகவும் நல்லவர். மகா கணபதியின் தொண்டர். அப்படியிருக்க நீ தகாத செயல்களைச் செய்யலாமா? என்று கேட்டார் தணிகாசலம்.

‘‘அப்பா தேடி வைத்திருந்தால் நான் ஏணண்ணை கேவலமான செயல்களைச் செய்யிறன். சின்னத்தம்பி பேசிக் கொண்டிருக்கும் போது குறுக்கிட்டார். தணிகாசலம்; ‘‘ஒவ்வொருவரும் தன்னால் முடிந்தளவு தான் உழைக்க முடியும். ஆனால் எல்லாரும் நேர்மையானவர்களாக வாழலாம்’’.

‘‘உங்கை களவெடுக்காமல் பொய் சொல்லாமல் ஆரண்ணை வாழீனை. அதிபரோடை சேர்ந்து நீங்களும் பள்ளிக்கூடச் சொத்தைக் களவாடுறியள் என்று தான் சனம் கதைக்குது. இதைப்பற்றி நான் உங்களோடை கதைத்தனானே’’.

பெருமூச்சு விட்டார் தணிகாசலம். அதன் பின் அவரால் எதுவும் சொல்ல முடியவில்லை. சில கணங்கள் பேசாமல் இருந்தார்.

‘‘நானும் ஆறேழுவரிசமாய் மணிவண்ணனுக்கு என்ரை விளை பொருட்களைக் குடுக்கிறன். எனக்குக் கடன் தரத்தானே வேணும்’’.

‘‘அப்ப ஏன் என்னட்டை வந்தனீ... போய் மணிவண்ணனைக் கேளன்’’ என்றார் தணிகாசலம். சின்னத்தம்பி பேசாமல் நின்றான். தணிகாசலம் சொன்னார்; ‘‘இரண்டு வருடங்களுக்கு முன்பு வெண்காயத்தைச் சாட்டி நீ வாங்கின கடன் இன்னும் கொடுக்கேல்லை. பிறகு எப்படி நேரிலை போய்க் கேட்க முடியும்’’.

‘‘இந்த முறை வாங்கித் தாருங்கோ பழைய கடனையும் சேர்த்துக் கொடுக்கிறன்’’ என்றான் சின்னத்தம்பி. தணிகாசலம் எதுவும் பேசாமல் சென்று விட்டார். மறு நாள் சின்னத்தம்பியின் மனைவி தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்து பழிகிடந்தாள். அதனால் தணிகாசலம் மணிவண்ணனிடம் உரம் பெற்றுக் கொடுத்தார்.

வெண்காயத்தை நட்டு விட்டு புலம்பிக் கொண்டு திரிந்தான் சின்னதம்பி. அதனால் சின்னத்தம்பியின் மனைவி தணிகாலத்தின் வீட்டுக்கு வந்து அழுததால் வெண்காயச் செய்கைக்கான பணவுதவியைச் செய்தார் தணிகாசலம்.

தோளில் தடியை வைத்துக் காவடி ஆடிய சின்னத்தம்பி ஓடிச் சென்று அரசமரத்திற்கு அருகில் நின்ற வேப்பமரத்தில் ஏறிக் குரங்கு போல் கொப்பொன்றில் தூங்கினான். அதைப் பார்க்கத் தணிகாலத்திற்கு மனவருத்தமாக இருந்தது.

சுவாமியார் அரசமரத்தின் கீழ் இருந்தார். தணிகாசலம் சுவாமியாரின் அருகிற் சென்றார். சுவாமியார் தணிகாசலத்தைப் பார்த்துச் சிரித்தார்; ‘‘எதிரிக்குத் துன்பம் வந்தாலும் உன்னால் தாங்கிக் கொள்ள முடியாது. என்பது எனக்குத் தெரியும். அன்றொரு நாள் சின்னத்தம்பியின் மனைவி என்னிடம் வந்தாள். இன்று நீ வந்திருக்கிறாய். சின்னத்தம்பியை அழைத்து வா’’ என்றார்.

மரத்தால் இறங்கிய சின்னத்தம்பியின் கையைப் பிடித்து அழைத்து வந்தார் தணிகாசலம். காட்டுக்குச் சென்று உணவை ஒறுத்து உணர்வுகளை அடக்கி இருப்பதல்லத் தவம் தனக்கு பிறரால் வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் வாழ்வதும் தான் தவம்’’ என்றார் சுவாமியார்.

261. உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்குஉரு.

தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும், மற்றய உயிர்களுக்குத் துன்பங்கள் செய்யாதிருத்தலுமே தவத்தின் வடிவமாகும்.

## பொருத்தம்

இடக்கையை வலது தோளிலும், வலக்கையை இடது தோளிலும் வைத்துக் கொண்டு நிலத்தில் குந்தியிருந்த சின்னத்தம்பியைக் கருணையுடன் பார்த்தார் சுவாமியார். வைத்திலிங்கத்தின் போதனைகள் தான் அவரைத் துறவியாக மாற்றியது. திருமணமாகிப் பிள்ளைகளுடன் இருந்த வைத்திலிங்கத்தின் நடத்தையை எண்ணி வியப்பார் இளைஞரான ஸ்ரீனிவாசன்.

‘‘பொறாமை, பற்று, துக்கம், சந்தோசம் ஆகியன மனிதனிடம் இருக்கலாகாது. மனிதன் எப்பொழுதும் பக்கம் சாரக் கூடாது. எல்லா விதமான சூழ்நிலையிலும் மனிதன் ஒரே மாதிரியாக வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும். எம்மால் பிறருக்கு எதெதைச் செய்ய முடியுமோ அததை அவ்வப்போது செய்து முடித்து விடல் வேண்டும். ஒருவன் சொல், செயல் ஆகியவற்றில் உண்மையுள்ளவனாக இருத்தல் வேண்டும். தியானம் செய்வதன் மூலம் இறைவனைக் கண்டு கொள்ளலாம்’’ என்பார் வைத்திலிங்கம். இறக்கும் வரைக்கும் ஸ்ரீனிவாசன் அவருடனேயே இருந்தார். அவரது போதனைகள் தான் ஸ்ரீனிவாசனைத் துறவியாக்கியது. சுவாமிகள் எழுந்து சின்னத்தம்பியின் அருகே வந்தார். சின்னத்தம்பி தோள்களில் இருந்த கைகளை எடுத்து சுவாமிகளின் பாதங்களைப் பிடித்தான். சுவாமியார் கொண்டு வந்த திருநீற்றை அவனிடம் கொடுத்து விட்டுப் பூசச் சொன்னார்; ‘‘மனிதன் ஆசையின் முழு உருவம் ஆசைகள் மனதில் இருக்கும் வரை தான் வாழ்வில் பிடிப்பு இருக்கும். அதனால் தான் மனிதன் தவறுகளைப்

பயமின்றிச் செய்கிறான். அவனால் நன்மை தீமைகளைப் பகுத்துணர முடிவதில்லை. தான் செய்வது யாவும் சரி யென்று நினைக்கின்றான். செய்யக் கூடாதவற்றையும் செய்கின்றான். ஒரு கட்டத்தில் தான் செய்வது பிழை என்று நினைத்துத் திருந்தி விடுவான். ஆனால் திருந்த முயல்பவனின் மனச்சாட்சி சில சமயம் அவனின் கட்டுப்பாட்டை மீறித் தான் செய்தது பெரும் பாவம் என்று உணர்த்தும் போது மனிதன் நிட்சயம் பைத்தியக் காரனாவான். அந்த நிலை தான் இன்று சின்னத்தம்பிக்கு ஏற்பட்டுள்ளது. பல தவறுகளைச் செய்யும் போது விழிப்படையாத மனம் கோயிற் குரங்குகளைக் கொன்ற போது விழிப்படைந்து விட்டது. பலரினது மனச் சாட்சி உறக்கத்தில் இருப்பதால் தான் துன்பங்கள் துயரங்கள் ஏற்படுகின்றன. மனிதனது மனச்சாட்சி எப்பொழுதும் விழித்திருத்தல் வேண்டும். சின்னத்தம்பியின் மனச்சாட்சி விழித்து விட்டது. இனி அதை சாந்தப் படுத்துதல் வேண்டும். அதற்குச் சில கிரிகைகள் செய்தல் வேண்டும் என்றார்.

சுவாமியார் தொட்டுத் தடவியதும் சின்னத்தம்பி எழுந்து நின்றான்; சின்னத்தம்பி பயப்படாதே. உனக்கு உள்ள நோயைக் குணப்படுத்துவது எனது பொறுப்பு இனிமேல் நீ தீயவர்களுடன் சேராதே. வேலை இல்லாத நேரங்களில் மகா கணபதிக்குத் தொண்டு செய் பழைய சம்பவங்களை நினைத்து அல்லற்படாதே. இரவில் நன்றாக நித்திரை செய். பகலில் நன்றாக வேலை செய்'' என்றார். பின்பு தணிகாசலத்தைப் பார்த்துச் சொன்னார்; ''எனது குருவான வைத்திலிங்கம் அவர்கள் எப்பொழுதும் ஒழுக்கத்தைக் கண்களைப் போலப் பேணுபவர். ஓர் ஆசிரியனுக்கு ஒழுக்கம் தான் முக்கியமானது. குற்றம் காணல், குறை சொல்லல் இவற்றை விட்டுவிட்டு குற்றத்தையும் குறையையும் நீக்குபவனே ஆசிரியன். ஆசிரியன் கடமையை எவ்வேளையிலும் செய்யத் தவறக் கூடாது. என்பார். அத்துடன் தவசிகளுக்குரிய கோலமும் குறியும் ஒழுக்க முடையவர்களுக்கே தக்கன. வெறுங்கோலத்தாலும் சிவ சின்னங்களாலும் தம்மைத் தவசி போல் காட்டுவது வீண் முயற்சியே ஆகும் என்பார். அவருடைய வார்த்தை களை நான் வேதமாகப் போற்றி வருகிறேன். இவ்வூரில் இல்வாழ்வு வாழ்ந்து கொண்டு துறவியைப் போல் விருப்பு வெறுப்பில்லாது மக்களுக்கு உதவும் நீ தான் எனக்குப் பிடித்த மானவன். எனவே சின்னத்தம்பிக்கு வேண்டிய உதவிகளைச் செய். பரமநாதனிடம் போதியளவு பணம் இருக்கிறது. அவன் தானாகத் தேடி வந்து வேண்டிய உதவிகள் செய்வான். சின்னத்தம்பி இனித் தவறுகள் செய்ய மாட்டான். அவன் செய்த தவறு மனதில் இருந்து உறுத்துவதால் தான் அவனுக்கு இந்த நிலை ஏற்பட்டது. இதற்கு கிரிகைகளைச் சாட்டாக வைத்து அவனது மனதைச் சீராக்குதல் வேண்டும். உடலில் உண்டான வருத்தத்தை நீக்கத் தான் மருந்து பயன்படும். மனதிற்கு ஓய்வும் அறிவுரைகளும் தான் பயன்படும். சின்னத்தம்பிக்கு இப்போது மருந்தை விட மன அமைதிக்கான அறிவுரைகள் தான் தேவை. அதைச் செய்'' என்றார் சுவாமியார்.

262. தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது.

தவக் கோலம் அதற்குரிய ஒழுக்க முடையவர்களுக்கே பொருந்தும். அக் கோலத்தை ஒழுக்க மில்லாதவர்கள் மேற்கொள்வது வீண் முயற்சியாகும்.

## மறந்தவர்கள்

அன்று தணிகாசலத்தின் பிறந்த தினம். தணிகாசலத்திற்கு தான் எப்பொழுது பிறந்தேன் என்ற விபரம் தெரியாது. அவர் இது நாள் வரை அதைப் பற்றி நினைத்ததில்லை. நினைப்பதற்கு அவருக்கு நேரமும் இல்லை.

இரவு ஏழுமணிக்கு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் பெரிய தொரு பூசை ஏற்பாடு செய்திருந்தார் சுவாமியார். ஊரில் உள்ள அத்தனை பேரும் சுவாமியார் செய்யப் போகும் பூசையைக் காண்பதற்காக வந்திருந்தனர். பூசை நேரங்களிலோ, திருவிழாக் காலங்களிலோ கோயிற் பக்கம் வராத சுவாமியார் பெருந்தொகைப் பணத்தை குருக்களிடம் கொடுத்து அன்று பூசையின் பின் கோயிலுக்கு வரும் அடியவர்களுக்கு போதியளவு மோதகம் கொடுக்கச் சொல்லியிருந்தார். அன்று காலை பலர் அன்னதான மடத்தில் கூடியிருந்து மோதகம் பிடித்துக் கொண்டிருந்தனர். சுவாமியார் என்ன காரணத்திற்காக பெருந்தொகையான மோதகங்களை அவிக்கச் சொல்கிறார். என்று யாருக்கும் புரியவில்லை.

இரவுப் பூசைகள் யாவும் முடிந்த பின்பு சுவாமியார் எல்லோருக்கும் கொடுக்கச் சொன்னதாகக் கூறி குருக்கள் கொடுத்த மோதகத்தை எல்லோருக்கும் தொண்டர்கள் வழங்கிக் கொண்டிருந்தனர்; ‘‘தெய்வானைக்கும் முருகனுக்கும் மோதகத்தை கனக்கக் கொடுக்க வேண்டாம்’’ என்று தணிகாசலம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.

கோயில் நிகழ்வுகள் யாவும் முடிந்த பின்பு எல்லோரும் சென்று அரசமரத்தின் கீழ் அமர்ந்திருந்தனர். சுவாமியாரைக் காணவில்லை. தணிகாசலம் சுவாமியாரைத் தேடினார். வெளிப்பகுதியில் அவரைக் காணவில்லை. அவருடன் கூட இருக்கும் வீமனையும் காணவில்லை. தணிகாலத்திற்குப் பின்னால் தெய்வானையும் முருகனும் சென்றன.

விக்னேஸ்வரமூர்த்தி, கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம், தனபாலசிங்கம், வேலாயுதபிள்ளை, மணிவண்ணன், பாலகுமாரன் போன்ற பல பிரமுகர்கள் அரசமரத்தின் கீழ் இருந்தனர். எல்லோருடனும் முரண்படும் சிவசுந்தரமூர்த்தி அன்பொழுகக் கதைத்துக் கொண்டிருந்தார்.

தணிகாசலத்துடன் கதைத்துக் கொண்டு சுவாமியார் வந்தார். அவரின் கையில் ஒரு வேட்டியும் சால்வையும் இருந்தது. சுவாமியாரைக் கண்டதும் எல்லோரும் எழுந்தனர். சுவாமியார் புன்சிரிப்புடன் சென்று அரசமரத்தின் கீழ் அமர்ந்து கொண்டார். வீமன் அவரின் அருகிற் சென்று அவரது காலடியில் படுத்துக் கொண்டது. தணிகாசலம் சுந்தரலிங்கத்தின் அருகே வந்து அமர்ந்தார். வள்ளியும் தெய்வானையும் சனங்களுக்குள்ளால் சிரமப்பட்டு நடந்து வந்து தணிகாசலத்தின் பக்கத்தில் நின்றன.

‘‘அன்புள்ளங்களே இன்று ஒரு முக்கியமான நாள். என்னால் மதிக்கப்படும் ஒரு பெரும் மனிதனின் பிறந்த தினம் இன்று. அதற்காகத் தான் மகா கணபதிக்குப் பூசை செய்தேன். அத்துடன் அவருக்குக் கொடுப்பதற்காக வேட்டியும் சால்வையும் வாங்கி வந்துள்ளேன். யாரின் பிறந்த தினம் என்று கூறுங்கள் பார்ப்போம்...’’ என்ற சுவாமியார் அமைதியாகப் புன்னகைத்தார்.

மக்கள் மத்தியில் பெரும் சலசலப்புண்டானது; ‘‘யாருடைய பிறந்த நாள்?’’ சுந்தரலிங்கம் கேட்டார்.

‘‘எனக்குத் தெரியாது. யாரோ முக்கிய பிரமுகருடையதாகத் தான் இருக்கும். அதிபற்ரை பிறந்ததினம் முடிந்து விட்டது. சுந்தரலிங்கம் ஐயா எப்ப பிறந்தனீங்கள்’’ தணிகாசலம் கேட்டார்.

சுந்தரலிங்கம் பலமாகச் சிரித்தார்; ‘‘நாங்களெல்லாம் சுவாமியாற்ரை பெருமதிப்பைப் பெற்றனாங்களே? மிகமிகச் சின்ன மனிதர்கள். எம்மால் முடிந்தவரை நீதியாகவும் நியாயமாகவும் தொழிற்பாறம்

ஒவ்வொரு வரும் தமக்கு அருகில் இருந்தவர்களிடம் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறிக் கொண்டிருந்தனர். கணேசமூர்த்தி சொன்னான்; ‘‘இன்று தணிகாசலம் அண்ணையிண்ரை பிறந்த நாள்’’.

தணிகாசலம் அதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனார். அவரின் தடுமாற்றம் தீருமுன் சுவாமியார் கேட்டார்; ‘‘கணேஸ் உனக்கு எப்படித் தெரியும்?’’

‘‘எனக்குத் தெரியாது சும்மாய் சொன்னேன்’’.

‘‘இன்று தணிகாசலத்தின் பிறந்த நாள்த்தான். ஆறு மாதங்களுக்கு முன்பு கோயில் வீதியில் தணிகாசலத்தின் தேசிய ஆள் அடையாள அட்டை விழுந்து கிடந்தது. அதை பக்தர் ஒருவர் எடுத்து வந்து என்னிடம் தந்தார். அதனால் தான் எனக்குத் தணிகாசலத்தின் பிறந்த திகதி தெரிந்தது. அன்று தணிகாசலத்தின் பிறந்த தினத்தை நான் கொண்டாட வேண்டு மென்று தீர்மானித்தேன். உங்களுக்குச் சொன்னால் தணிகாசலத்திற்குக் கரைச்சல் கொடுப்பீர்கள் என்பதற்காகச் சொல்லவில்லை’’ என்று கூறியவாறு எழுந்து வந்த சுவாமியார் தணிகாசலத்தின் அருகில் வந்து சொன்னார்; ‘‘துறந்தவர்களுக்கு உணவு, உடை முதலியன கொடுத்து உதவ வேண்டு மென விரும்பித் தான் தணிகாசலம் போன்றோர் தவம் செய்வதை விடுத்து இல்வாழ்வைத் தவமாகக் கருதுகின்றனர். என்று கூறியவாறு வேட்டியையும் சால்வையையும் கொடுத்தார்.

தணிகாசலத்திற்கு மெய் சிலிர்த்தது. உணர்ச்சிப் பெருக்கால் கண்கள் நிரம்பின. சுவாமியார் கொடுத்த வேட்டியையும் சால்வையையும் வாங்கிக் கொண்டு சுவாமியாரின் கால்களில் விழுந்தார்.

“எனக்குத் தணிகாசலத்தின் வாழ்க்கையை நினைக்கப் பொறாமையாக இருக்கும். நான் பற்றைத் துறந்தேனே தவிர துயரப்படும் மக்களின் துயரைத் தீர்க்கவில்லை. இரந்துண்டேனே தவிர இரப்போர்க்கு உதவவில்லை. ஆனால் தணிகாசலம் குடும்பத்தவனாக இருந்து கொண்டு எவ்வளவு செயல்களைச் செய்கிறான். அவன் நலமுடன் வாழ வேண்டும்” என்று வாழ்த்தினார் சுவாமியார்.

மக்கள் “அரோகரா” எனக்கோசமெழுப்பினர். கோயிலுக்கு வந்தோர் தணிகாசலத்திற்கு வாழ்த்துக்களைக் கூறினர்.

263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்?.

தவம் செய்பவர்களின் தேவைகளைக் கவனிக்க வேண்டும். என்பதற்காக இல்லறத்தின் தவம் செய்தலை மறந்தார்கள் போலும்.

## உயர்வும் தாழ்வும்

சுந்தரலிங்கம் தணிகாசலத்தைக் கட்டித் தழுவினார்; “அன்பனே உன்னைப் போல் ஒரு மனிதனை நானும் காணவில்லை. உனது பிறந்ததினத்தைத் தெரிந்து கொண்ட சுவாமியார் பல காலமாக மறைத்து வைத்திருந்ததோடு, எமக்கும் இறுதி வரை தெரிவிக்காதிருந்தார். அதற்குக் காரணம் நீ மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமே தவிர மற்றவர்கள் உனக்கு உதவி செய்யக் கூடாதென்ற நல்லெண்ணம் தான்”.

சின்னத்தம்பி தணிகாசலத்தின் பாதங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டான்; “சுவாமியாரின் கருணை என் மிது படக் காரணமாக இருந்தது நீங்கள் தான். நான் எத்தனை குற்றச் செயல்களைச் செய்திருப்பன். என்னை ஊரில் யாரும் மதிப்பதில்லை. நீங்கள் என்னை மதித்து எனக்கு ஆலோசனைகள் சொன்ன போதெல்லாம் நான் கேவலமாகப் பேசிய போதும் என்னை மதித்து, சுவாமியாரிடம் என்னை அழைத்து வந்து, எனது நோயைக் குணப்படுத்தியது மல்லாமல் எனது குடும்பச் செலவிற்கும் தோட்டச் செய்கைக்கும் பணம் தந்து உதவிய நீங்கள் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்ந்து எல்லா மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும்.”

தணிகாசலம் உருகிப் போனார். மக்கள் பலர் அவரைச் சூழ்ந்து நின்று வாழ்த்துக்களைக் கூறினர். கேசவமூர்த்தி தணிகாசலத்திற்கு அருகே இருந்த சுவாமியாரை வீழ்ந்து வணங்கினான்; “தணிகாசலம் அண்ணையைப் போல ஓர் உத்தமமான மனிசனை நான் காணேல்லை. பல நூல்களைக் கற்ற எனக்கு விளங்காததெல்லாம் அவருக்கு விளங்கும். அவரால் தான் நான் சுவாமியார் மேல் பற்று வைத்தேன். பொங்கல் பானையை உதைத்த கால்களால் இப்பொழுது நடந்து வந்து மகா கணபதியையும்

சுவாமியாரையும் தரிசிக்கிறேன். நான் எவ்வளவு காலத்தை வீணாக்கி விட்டேன் என்று இப்பொழுது தான் புரிகிறது. சதா வேதனைப் பட்டுக் கொண்டும் ஆத்திரப் பட்டுக் கொண்டும் பரபரத்துக் கொண்டும் இருந்த எனது மனம் இப்பொழுது அமைதியடையக் காரணம் சுவாமியாரும் தணிகாசலமும் தான்'' அழுதான் கேசவமூர்த்தி.

சிவசுந்தரமூர்த்தி தணிகாசலத்தை வாழ்த்தி விட்டு சுவாமியாரின் பாதங்களைப் பணிந்தார்; நான் எல்லோருக்கும் பற்பல துன்பங்களைச் செய்த போதும் சுவாமியாரின் அறிவுரைகளைக் கேட்டு மனப்பக்குவமடைந்த தணிகாசலம் தானும் பொறுத்து, அடுத்தவர்களையும் எனக்கெதிராகத் தூண்டி விடாது சமாதானப் படுத்தினான்; அத்துடன் எனது மகளுக்கும் நல்லதொரு இடத்தில் திருமணஞ் செய்து வைத்த தணிகாசலம் நீடூழி வாழ வேண்டும்.''

சுந்தரலிங்கம் சுவாமியாரின் அருகே வந்து அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார். பின்; ''நான் வீட்டுக்குச் செல்லப் போகிறேன்'' என்றார்.

''மகனே பல ஊர்களில் இருந்தும் மாணவர்கள் விக்னேஸ்வர மூர்த்தியின் பாடசாலைக்குப் படை யெடுக்கிறார்கள். எனது குரு எதை நினைத்தாரோ அதை நிறைவேற்றி, அதற்கும் மேலாகச் செயலாற்றும் விக்னேஸ்வரமூர்த்தி போதிய கட்டடங்கள் இன்றிக் கஷ்டப்படுகிறார். நூலகத்தை கணணிமயப்படுத்த விரும்புகிறார். புன்முறுவல் செய்தார் சுவாமியார்.

''தீமை செய்யும் மனிதர்களை அடக்கி சமூகத்திற்கு ஏற்ற வகையில் திருத்துவதும் ஊருக்கு நன்மை செய்வோரின் மனமறிந்து செயற்படுவதும், அவர்களை உயர்த்தி வைப்பதும் தான் தவவலிமை உடையவர்களின் பணியாகும். அது எனக்குப் புரியாதா? கட்டாயம் உங்களது விருப்பத்தை நிறைவேற்றுவேன்'' என்றார் சுந்தரலிங்கம்.

''மணிவண்ணனைப் பார்த்துச் சுவாமியார் சொன்னார்; '' உன்னிடம் நிறையப் பணம் இருக்கிறது. அதை நல்ல முறையில் பயன்படுத்துகிறாய். சேனாதிராஜா நல்லவன்; குணவான்; அவனது மகளான கௌசல்யாவை உனது தம்பிக்குத் திருமணஞ் செய்து வை'' என்றார் சுவாமியார்.

மணிவண்ணன் திகைத்துப் போனான். அன்று மாலை கோயிலுக்கு வரும் போது மணிவண்ணனது தம்பி இளங்கோவன் மகா கணபதி ஆலயத்தில் சேனாதிராஜாவின் மகளைக் கண்டதாகக் கூறி, அவளைத் தனக்கு விவாகம் செய்து தரும்படி கேட்டான். இது எப்படிச் சுவாமிக்குத் தெரியும்''.

''என்ன மணி யோசிக்கிறாய். உனக்கு விருப்பமில்லையா...?''

''எனக்கு நல்ல விருப்பம் நாளைக்கே நானும் தணிகாசலம் அண்ணையும் சேனாதிராஜாவின் வீட்டுக்குச் சென்று பெண் கேட்கிறோம்'' என்றான் மணிவண்ணன்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த சேனாதிராசா திகைத்துப் போனான்; "மணிவண்ணன் எங்கே..? நான் எங்கே..?" என்று நினைத்தவாறு சுவாமியாரின் பாதங்களைப் பற்றினான். அவனால் பேசமுடியவில்லை. கண்களால் கண்ணீர் வழிந்தது; "சுவாமி... சுவாமி... எனக்கு இப்படியான பெரும் பேறா அழுதான்.

அன்பர்களுக்கு உதவுவதும், எதிரிகளை அடக்குவதுமே தவசிகளின் எண்ணமாகும். ஒருவன் நல்லதைச் செய்து, நல்லபடி வாழ்ந்தால் அவன் கடவுளால் விரும்பப்படுவான். அவன் நினைப்பதெல்லாம் நடக்கும். அவனது வாழ்வு சிறக்க வேண்டு மென்று கடவுள் விரும்புவார்". என்றார் சுவாமியார். சேனாதிராசாவின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவன் தணிகாசலத்தின் அருகே வந்து அவரது கையைப் பிடித்தான். அவனால் பேசமுடியவில்லை.

264. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்.

தீமை செய்வோரை அடக்குதல், நன்மை செய்வோரை உயர்த்துதல் ஆகிய இரண்டையும் தவ வலிமை படைத்தவர்களால் செய்ய முடியும்.

## முயன்று செய்

"தணிகாசலம் இல்லறத்தில் வாழ்ந்து கொண்டே தவம் செய்பவரைப் போலவே வாழ்க்கையை நடத்துகிறான். தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருப்பதுமே தவத்தின் தன்மைகளாகும். தவம் என்பது ஒழுக்கமே தவிர வேடமல்ல. பற்றற்றிருத்தல் இறைவன் கொடுக்கும் நன்மை தீமைகளை மகிழ்வுடன் ஏற்றல். பகைவருக்கும் உதவி செய்தல். தனது கடமைகளை விருப்பு வெறுப்பின்றிச் செய்தல். கடுமையான துன்பங்கள் வந்த போதும் அதை தாங்கிக் கொண்டு முன்னேறிச் சென்று தனது இலக்கை அடைதல் போன்றன தான் தவம் செய்வோரின் இயல்புகளாகும். இது தணிகாசலத்திற்குப் பொருந்தும். விரும்பியதை விரும்பிய படி அடைபவர்கள் யாபேரும் தவம் செய்பவர்களே. அந்த வகையில் தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்தி, சுந்தரலிங்கம் போன்ற பலர் இல்லறத்தில் இணைந்திருந்த போதும் அவர்கள் தபசிகள் தான் அவர்களைப் போல இல்லறத்தில் இணைந்துள்ள அனைவரும் நடந்து கொண்டால் ஒவ்வொருவரும் தாம் விரும்பியதை விரும்பிய படிஅடையலாம்." என்றார் சுவாமியார்.

தணிகாசலம், விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலைக்கு வரச் சொல்லி, சொல்லியனுப்பியதால் அவசரமாகச் சென்று கொண்டிருந்தார்.

பாடசாலைக்கு வந்த தணிகாசலத்தை விக்னேஸ்வரமூர்த்தி வரவேற்றார்; ‘‘பாடசாலை மாணவர்களுக்குக் கணனிப் பயிற்சி அளிக்கத் தீர்மானித்துள்ளேன். மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதானால் குறைந்தது இருபத்தைந்து கணனிகளாவது தேவை. அத்துடன் மணிவண்ணன் தனது தம்பியின் திருமண விடயமாக இரவு எட்டுமணிக்குக் கதைக்க வாறதெண்டவர். நீங்களும் வாருங்கோ’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

விக்னேஸ்வரமூர்த்தியிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தார் தணிகாசலம். அவரது நினைவில் விக்னேஸ்வரமூர்த்தி கூறிய கணனி பற்றிய நினைவே இருந்தது.

‘‘தணிகாசலம் அண்ணை ...’’ என்றவாறு விலை உயர்ந்த மோட்டார் வண்டி யொன்றில் இருந்து மூன்று இளைஞர்கள் இறங்கி வந்தனர்; ‘‘அண்ணை என்னைத் தெரியேல்லையே இந்தப் பாடசாலையில் கற்பித்த சுப்பிரமணியம் ஆசிரியையின் மகன் ஸ்கந்த தேவா...’’

தணிகாசலம் ஸ்கந்ததேவாவை நிமிர்ந்து பார்த்தார். அவருக்கு அவனைத் தெரிந்து கொள்ள முடியவில்லை; ‘‘சுப்பிரமணியம் என்ற பெயரிலை பல ஆசிரியர்கள் இருந்தவை.’’

‘‘ நான் கடவுள் சுப்பிரமணியம் ஆசிரியையின் மகன்’’

‘‘அப்படிச் சொன்னால் தான் விளங்கும். அப்பா கனடாவிலை காலமானதை நாங்கள் நினைவு கூர்ந்தனாங்கள். எப்படி சுகமாய் இருக்கிறியளே’’.

‘‘ஓம்... ஓம்.... நல்ல சுகமாய் இருக்கிறம். அதோடை வசதியாகவும் இருக்கிறம். அப்பா ஒரு முறை இஞ்சை வந்து எல்லோரையும் பார்க்க விரும்பினவர். அதோடு தினமும் உங்களைப் பற்றியும் பாடசாலையைப் பற்றியும் சொல்லுவார். அவருக்கு இப்பாடசாலைக்குப் பெரிய தொரு உதவி செய்ய வேண்டு மென்று ஆசை. இந்தப் பாடசாலையைக் கட்டிய வைத்திலிங்கத்தைக் கடவுளாய்த் தான் அவர் மதிக்கிறார். அம்மா படித்து விட்டு வேலை இல்லாமல் இருந்த போது வைத்திலிங்கம் வீடு தேடி வந்து அவாவுக்கு வேலை கொடுத்தவராம். அதாலை அப்பாவினுடைய நினைவாக நீங்கள்கேட்கிற உதவியை நான் செய்வன்’’.

தணிகாசலத்திற்கு மகிழ்ச்சியாக இருந்தது; ‘‘கேட்கிற உதவியென்றால்...’’ தணிகாசலம் வார்த்தைகளை முடிக்கு முன் ஸ்கந்த தேவா சொன்னான்; ‘‘எத்தனை இலட்சம் செலவானாலும் பரவாயில்லை. சொல்லுங்கோ..’’

‘‘பிள்ளைகளுக்கு கணனிப் பயிற்சியளிக்க வேணும். அதற்கு இருபத்தைந்து கணனிகள் தேவை’’.

“இருபத்தைந்து கணனிகளும் தந்து அது வைப்பதற்கான மண்டபமும் கட்டி மின் இணைப்பும் செய்து தாறன்”.

தணிகாசலம் பூரித்துபட போனார்; “வாருங்கோ பாடசாலைக்குப் போய் அதிபரைச் சந்திப்பம்” என்றவாறு துவிச்சக்கர வண்டியில் ஏறினார்.

தணிகாசலத்தின் பின்னால் வந்த மூன்று வாட்ட சாட்டமான இளைஞர்களையும் மகிழ்வுடன் வரவேற்று நாற்காலியில் அமர்த்தினார் விக்னேஸ்வரமூர்த்தி; “இவர் எங்களுடைய கடவுள் சுப்பிரமணியம் ஆசிரியையின் மகன் ஸ்கந்ததேவா. இருபத்தைந்து கணனிகளும், அதற்கான உபகரணங்களும் மண்டபமும் தளபாடங்களும் தருகிறாராம்”.

விக்னேஸ்வரமூர்த்தி திகைத்துத் திகிலடைந்து போனார்; “விரும்பியதை விரும்பிய படியே தவத்தால் அடையலாம். இல்லறத்தில் உள்ளவர்களும் முயன்று தவஞ் செய்தல் வேண்டும். தவம் என்பது ஒழுக்கம் தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதும் பிறருக்குத் தீங்கு செய்யாதிருப்பதுமே தவம்” என்று சுவாமிகள் கூறிய வார்த்தைகள் விக்னேஸ்வரமூர்த்திக்கு நினைவில் வந்தன.

“மிகவும் நன்றி இவர்கள் யாரென்று சொல்லுங்கள். எனக்குத் தெரியவில்லை” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

இவர்கள் இருவரும் எனது நண்பர்கள். இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் இவர் உருத்திர குமார். கொழும்பில் வேலை செய்கிறார். இவர் விஜயகுமார், கோப்பாய் விஜி என்றால் உலகம் பூராகத் தெரியும். வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்புபவர்” என்றான் ஸ்கந்ததேவா.

உருத்திரகுமார் குமாராசாமி வாத்தியாருடைய மகனெல்லே.... கோப்பாய் விஜி என்று கேள்விப்பட்டனாங்கள். முந்தி எங்கடை பாடசாலைக்கு அறுபதினாயிரம் ரூபா பெறுமதியான கழுத்துப் பட்டிகளை மாணவிகளுக்கென்று அனுப்பினவர்” என்றார் தணிகாசலம்.

“அப்படியா?.. உங்களது அப்பா முன்பு இந்தப் பாடசாலையின்ரை பெற்றார் ஆசிரியர் சங்கச் செயலாளராக இருந்து பல நல்ல செயல்களைச் செய்தவர். முன்பு ஆங்கில ஆசிரியராக வசாவிளானிலை கற்பித்தவர். அதற்குப் பிறகு தான் கூட்டுறவுப் பரிசோதகராகத் தெரிவானவர்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“பெற்றாரின் நல்ல குணங்கள் பிள்ளைகளுக்கு வரும் என்பதற்கு ஸ்கந்ததேவா நல்ல உதாரணம்” என்று நினைத்தார் தணிகாசலம்.

265. வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

விரும்பியதை விரும்பியபடி தவத்தால் அடைய முடியும். அதனால் இல்லறத்தில் உள்ளவர்களும் முயன்று தவம் செய்து நல்ல பயனை அடையலாம்.

## கடமை செய்வோர்

“தணிகாசலம் நாளைக்கு நான் ஒரு பிரமுகரைச் சந்திக்க வேண்டும். நீ என்னுடன் கூட வருகிறாயா?” என்று கேட்டார் சுவாமியார்.

ஒரு போதும் அப்படிக் கேளாத சுவாமியார் அன்று அப்படிக் கேட்டது தணிகாசலத்திற்கு வியப்பைக் கொடுத்தது.

“என்ன யோசிக்கிறாய் ஏதாவது வேலை இருக்கிறதா?”

“இல்லைச் சுவாமி. தாங்கள் சென்று சந்திப்பதாக இருந்தால் யாரோ பெரும் பிரமுகராகத் தான் இருக்கும்” என்றார் தணிகாசலம்.

“ஓம், பெரும் பிரமுகர்தான் நீ எதை வைத்து பெரும் பிரமுகர் எனக் கணிக்கிறாய்? “ சுவாமியார் கேட்டார். தணிகாசலம் அதற்குப் பதில் சொல்லவில்லை. அதனால் அவர் சொன்னார், அவர் எனது பால்ய நண்பர், மிகவும் நல்லவர், ஒழுக்க சீலர், வெளிநாட்டிற்குச் சென்ற பின்பு அடிக்கடி கடிதம் போடுவார். நான் போடுவதில்லை அவர் அண்மையில் காலமாகி விட்டார். அவருடன் பழகிய அந்த இனிமையான நாட்கள் எனது நெஞ்சில் பதிந்துள்ளன”.

சுவாமியார் பேசும் போது தணிகாசலம் கேட்டார்; “நான் நாளைக்கு எந்த நேரம் வரல் வேண்டும்.”

“உனக்கு நேரமுள்ள வேளையில் வா” என்றார் சுவாமியார்.

சுவாமியார் யாரைச் சந்திக்கப் போகிறார் என்று நினைத்தவாறு தணிகாசலம் கோயிலை விட்டு வெளியே வந்த போது ஸ்கந்த தேவா மோட்டார் வண்டியில் வந்து இறங்கினான்.

“மகா கணபதியைத் தரிசிக்க வந்தேன் என்றான் ஸ்கந்ததேவா.

“வா தம்பி” என்று அன்பு பொங்க அழைத்த தணிகாசலம்; காலைப் பூசை முடிந்து விட்டது. பத்துமணிக்குத் தான் அடுத்த பூசை. வாருங்கோ சுவாமியாரைப் பார்ப்போம். அவர் உங்களது குடும்பத்தவரைத் தெரிந்தவர். படித்தவர்”.

‘‘ஸ்கந்த தேவா அரசமரத்தடிக்குச் சென்றான். அரச மர நிழலில் சுவாமியார் அமர்ந்திருந்தார்’’ சுவாமி கடவுள் சுப்பிரமணியம் ஆசிரியையின் மகன் வந்திருக்கிறார்’’ என்றார் தணிகாசலம்.

கண் விழித்த சுவாமியார் ஸ்கந்த தேவாவைப் பார்த்துப் புன்னகைத்தார்; ‘‘அப்பனே உன்னை நான் அவரிடம் அழைத்துச் செல்லச் சொன்னேன். நீ அவரை என்னிடம் அழைத்து வந்து விட்டாய்’’ என்றார் சுவாமிகள்.

தணிகாசலத்திற்கு ஆச்சரியமாக இருந்தது; ‘‘சுவாமிகள் சந்திக்க விரும்பிய பெரும் பிரமுகர் இவர்தானா என்று எண்ணினார்.

‘‘என்ன தணிகாசலம் யோசிக்கிறாய். இச் சிறு பையனா நான் சந்திக்க விரும்பிய பெரும் பிரமுகர் என்று, நினைக்கிறாயா? கடவுள் என்று அவருக்குப் பெயர் ஏன் ஏற்பட்டதென்று உனக்குத் தெரியுமா..? அவர் ஒரு பெரும் மகான். கானகத்தில் தவம் செய்தாலும் ஆசையுள்ளவர்களை அந்த ஆசையே அடிமைப்படுத்துகிறது. வீட்டில் இருந்தாலும், ஐம்புலன்களையும் அடக்குவதே தபசு. சுப்பிரமணியம் ஆசைகளைத் துறந்தவர். பாடசாலையையும், இப்பிரதேச மக்களையும் நேசித்தவர். யார் எதைக் கேட்டாலும் மனமுவந்து கொடுப்பவர். அவர் கடவுளாகத் தான் இங்கு உலாவினார். அதே போல அவரது மகனும் வாழ்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இல்லறத்தில் இருந்து கொண்டு தவம் செய்பவன் தனது கடமைகளையும் செய்து மற்றவர்களும் தமது கடன்களைச் செய்யத் தூண்டுகிறான். மற்றயோர் தாம் காண்பவை யாவற்றிலும் ஆசை வைத்து அதனால் துன்பப்படுகிறார்கள். தவவாழ்விற்கு மனப் பலமே இன்றியமையாதது. பலமே பண்பாகும். பலவானாக இருப்பவர்கள் தங்களுக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்கிறார்கள். ஒருவன் தான் தேடிய சொத்தை நல்ல வழியில் செலவு செய்வதற்குப் பலம் வேண்டும் என்னால் இன்னும் உழைக்க முடியும். எனது எதிர்காலத்தை நல்ல முறையில் அமைக்க முடியும் என்று நினைப்பவனே அறச் செயல்களைச் செய்கிறான். பலவீனன் தன்னால் முடியாதென நினைத்துப் பொருளைச் சேமிக்கின்றான். கடவுள் சுப்பிரமணியம் தனக்குரிய கடமைகள் அனைத்தையும் செய்தவர். அதே போல் தனது கடமைகளைச் சரி வர அவரது மகனும் செய்வதையிட்டு மகிழ்ச்சியடைந்ததால் தான் நான் அவனது வீட்டிற்குச் சென்று சந்திக்க விரும்பினேன்’’. என்றார் சுவாமிகள்.

‘‘சுவாமி அப்பா இறக்கும் பொழுதும் தங்களது நாமத்தையே உச்சரித்தார். அப்பா வாழந்த வாழ்க்கையாற் போலும் நான் ஏராளமாகச் சம்பாதித்துள்ளேன். இன்னும் எவ்வளவோ இவ்வூரவருக்குச் செய்யவுள்ளேன்’’ என்றான் ஸ்கந்த தேவா.

‘‘நீ நல்லாய் இருப்பாய் மகனே. பணத்தைச் சம்பாதிக்கும் போது மனம் திருப்தி அடைய வேண்டும். உனது தந்தை பணத்திற்காகத் தொழிலைச் செய்யவில்லை. உனது தாயார் என்னுடன் கற்பித்தவர். பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராக இருந்தாலும், அவர் ஆங்கிலத்தையும் உடற்கல்வியையும்

கற்பித்தார். தனக்குத் தெரியாதென்று எதையும் ஒதுக்கி வைக்காது, தான் கற்று மாணவர்களுக்குக் கற்பித்தார். இது தான் ஆசிரியர்களுக்குரிய பண்பு. உருவத்தில் உனது தாயை ஒத்திருக்கும் நீ, குணத்திலும் ஒத்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது'' என்றார் சுவாமியார். பாடசாலையில் கற்பிக்கும் பொழுது எந்தப் பொருளிலும் ஆசைப்படவில்லை. அவர் வைத்திருக்கும் பொருட்களை யாராவது பார்த்து விட்டு அழகாக இருக்கிறது என்று சொன்னால் அதை அவர் சொன்னவருக்குக் கொடுத்து விடுவார். ஆசைகள் தான் துன்பங்களுக்குக் காரணம். ஆசைக்கு எல்லையே இல்லை. தினமும் ஆயிரமாயிரம் ஆசைகள் மனதில் முளைவிடும். இதனால் மனிதன் எதையும் செய்ய முடியாதவனாகிறான். அடுத்தவர்களுக்கு உதவி செய்யாதிருக்கிறான். அடுத்தவரைக் குறை கூறுகிறான். நீ பணத்தில் ஆசை இல்லாததனால் தான் கொடுத்தாய். இன்னும் கொடுக்க நினைக்கிறாய். இந்த மனப் பலம் தபசிகளுக்கு மட்டுமே உண்டு. அதனால் தான் நான் உனது வீட்டில் வந்து உன்னைச் சந்திக்க விரும்பினேன்.'' என்றார் சுவாமியார்.

''அது என்னுடைய பாக்கியம்'' என்றான் ஸ்கந்ததேவா.

266. தவஞ்செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவஞ்செய்வார் ஆசையுள் பட்டு.

தவம் செய்கின்றவரே தமக்குரிய கடமைகளைச் செய்கின்றவர்கள் ஆவர். மற்றயோர் ஆசை வலையில் அகப்பட்டு வீண் முயற்சி செய்கின்றவர் ஆவர்.

## சுடச்சுடரும் பொன்

விக்னேஸ்வரமூர்த்தி, சுவாமியாரின் அருகில் இருந்தார். காலையில் கல்விப்பணிப்பாளர் பாடசாலைக்கு வந்து சொன்னார்; ''உங்களில் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. உங்களைப் போல ஓர் உத்தமமான, செயற்திறன் மிக்க அதிபரை நான் காணவில்லை. ஆனால் உங்களுக்கெதிராக வேலாயுதபிள்ளை என்று ஒருவர் கல்வி அமைச்சுக்குப் புகாரிட்டிருக்கிறார். பாடசாலை மாடிக் கட்டிடம், விளையாட்டு மைதானப் புரணமைப்பு, பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியில் நிறைய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் அவற்றை பாகுபாடின்றி விசாரனை செய்யும் படியும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வேலாயுத பிள்ளை என்ற பெயரில் கடிதம் எழுதப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்பாணக் கல்வித் திணைக்களம் உங்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க மாட்டாதென்றும், கல்வி அமைச்சே நேரடியாகக் கணக்கு வழக்குகளைப் பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் எழுதியுள்ளார். அதனால் சகல ஆவணங்களையும் இன்று என்னிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.''

விக்னேஸ்வரமூர்த்திக்கு வியர்த்துக் கொட்டியது. சில கணங்கள் எதுவும் பேசாது இருந்தார்; ‘‘உங்களில் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. எந்தவிதமான தவறும் நீங்கள் செய்திருக்க மாட்டீர்கள். உங்கள் நற்செயல்களை விரும்பாத யாரோ ஒருவர் தான் இந்த இழிந்த செயலைச் செய்துள்ளார். வேலாயுதபிள்ளை என்பவர் யார்?’’ என்று கேட்டார் சுந்தரலிங்கம்.

விக்னேஸ்வரமூர்த்தி உடனடியாக அதற்குப் பதில் சொல்லவில்லை. சில கணங்கள் பேசாது இருந்தார்; ‘‘வேலாயுதபிள்ளை என்று எனக்கொரு நண்பர் இருக்கிறார். அவர் இப்படியான செயலைச் செய்ய மாட்டார்’’.

‘‘தனது பெயர் தெரியக் கூடாது என்று நினைப்பவன் உமது நண்பரின் பெயரிலும் குற்றச் சாட்டுக்களை எழுதியிருக்கலாம். எதற்கும் பயப்படாதையும். உம்மில் எந்தப் பிழையும் இருக்காது என்று எனக்குத் தெரியும்’’ என்ற சுந்தரலிங்கம் அவரிடம் விடை பெற்றுச் சென்றார்.

‘‘மகனே’’ சுவாமியார் அன்புடன் அழைத்தார். விக்னேஸ்வரமூர்த்தி அவரின் கருணை பூத்த கண்களை நிமிர்ந்து பார்த்தார்.

‘‘மகனே துன்பங்கள் தான் மனதைத் தூய்மைப்படுத்துகின்றன. துன்பங்கள் தான் நேர்மையான மனிதனைத் தெய்வமாக்குகிறது. நீ செய்யாத குற்றத்தைச் செய்ததாக உன் மேலதிகாரிக்குக் ஒருவன் தெரியப்படுத்தியுள்ளான், ஆனால் நீ அதைச் செய்யவில்லை. என்று உனது மேலதிகாரியின் ஏவலாட்கள் நிரூபிப்பர். அதன் பின் தூயவனாவாய். அதனால் உன் மேலுள்ள நல்லெண்ணம் உயர்வடையும். சுடச் சுடப் பொன் ஒளி பெறுவதைப் போல துன்பங்கள் உயிர்களுக்குத் தீங்கு செய்யாத தபசிகளுக்கு மெய்யுணர்வைத் தரும். இறைவன் கெட்டவர்கள் மூலம் நல்லவர்களைச் சோதிக்கிறான் என்றார்.

‘‘நான் எந்தத் தவறும் செய்யவில்லை. விக்னேஸ்வரமூர்த்தி பேசிக் கொண்டிருக்கும் போது சுவாமியார் குறுக்கிட்டார்; ‘‘அஞ்சாதே மகனே உனது புகழ் ஓங்கும். துன்பமான வேளைகளில் தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டிருப்பதோ, வேண்டாத கற்பனைகள் செய்து கொண்டிருப்பதோ தீர்வாகாது. துன்பத்தில் இருந்து விடுபட வேண்டுமானால் துன்பத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பது வழியல்ல. நீ குற்றமற்றவன் என்று கருதினால் ஏன் பயப்படுகிறாய். பயப்படுவதால் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா? உறுதியானவன் சஞ்சலப்படக் கூடாது’’.

விக்னேஸ்வரமூர்த்தி மௌனமாக இருந்தார்; ‘‘மகனே எனது வார்த்தைகளில் நம்பிக்கை வை. எனது வாழ்க்கையின் வரலாறு முழுவதும் உனக்குத் தெரியும். நான் பெண்களுடன் தொடர்பு வைத்துள்ளேன் என்றார்கள்; ஏமாற்றுகிறேன் என்றார்கள்; கோயிற் பணத்தைச் சூறையாடுகிறேன் என்றார்கள்; போலிச்சாமி என்றார்கள்; இதற்கெல்லாம் நான் பயந்தேனா; இப்படிச் சொன்னவர்கள் இன்று உண்மையை உணர்ந்து

என்னை வலிமை உள்ளவன். என்று போற்றுகின்றனர். என்னிடம் ஆசி பெறக் காத்திருக்கின்றனர். இதை விட எனது குருவான வைத்திலிங்கத்தைப் பற்றி எவ்வளவு குறைகள் சொன்னார்கள். இக் குறைகள் எவற்றையும் அவர் பொருட்படுத்தாததால் தான் இன்று இப்பாடசாலை உயர்ந்த நிலையை அடைந்தது.'' என்றார் சுவாமியார்.

மறு நாள் கல்வி அமைச்சில் இருந்து வந்த கணக்காய்வுக் குழு பாடசாலையின் கணக்கில் எதுவித மோசடிகளும் இல்லை. விக்னேஸ்வரமூர்த்தி உத்தமமான உயர்ந்த அதிகாரி என்று அறிக்கை சமர்ப்பித்ததோடு உடனடியாக அவருக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று சிபார்சும் செய்தது.

அன்று இரவு விக்னேஸ்வரமூர்த்தியும் தணிகாசலமும் சுவாமியாரிடம் வந்தனர். சுவாமியார் புன்னகைத்தார்; ''மகனே காய்த்த மரம் தான் கல்லெறிப்படும். காயப்படும் காயாத மரத்தை யார் தேடுவார்கள். பணியில் ஈடுபடும் போது துன்பங்கள் நிறைய வரும். அவற்றையெல்லாம் தடைக் கற்களாகக் கருதாது படிக்கற்களாகக் கருதுபவனே வாழ்வில் வெற்றியடைவான். இன்பங்கள் கெடுதியைத் தரும், துன்பங்கள் வாழ்வைச் சீராக்கும், கடுமையாக உழைக்க வைக்கும். நேற்றுக் கவலைப் பட்டாய் இன்று பதவி உயர்வுக்கு சிபார்சு பெற்றாய். நேர்மையாக வாழ்பவன் எதற்கும் அஞ்சலாகாது'' என்றார் சுவாமியார்.

267. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

சுடச் சுட பொன் ஒளிபெறும். அதே போல் தவம் செய்கின்றவர்களைத் துன்பம் வருத்த வருத்த மெய்யுணர்வு மிகுதியாகும்.

## மன்னுயிர் தொழும்

அன்று காலை ஊரில் உள்ள பெரும் பெரும் பிரமுகர்களும் பெருந்திரளான மக்களும் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் கூடியிருந்தனர். விக்னேஸ்வரமூர்த்தி மோசடிகள் பல செய்ததாக வேலாயுத பிள்ளை என்ற நபர் கல்வி அமைச்சுக்குப் புகாரிட்டமையும், அதனால் கல்வி அமைச்சின் கணக்காய்வுக்குழு வந்து கணக்குகளை ஆய்வு செய்து விக்னேஸ்வரமூர்த்தி குற்றமற்றவர் என்று அறிக்கை சமர்ப்பித்தமையும் கேள்விப்பட்டே பிரமுகர்களும் மக்களும் கூடியிருந்தனர்.

விக்னேஸ்வரமூர்த்தி அவர்களுடன் மகிழ்வுடன் உரையாடிக் கொண்டிருந்தார்; ''இந்த ஊரில் நான் தான் வேலாயுதபிள்ளை யாரோ ஒருத்தன் எனது பெயரில் இந்த இழிந்த செயலைச் செய்ததை நினைக்க எனக்கு மனவருத்தமாய் இருக்கு'' என்றார் வேலாயுத பிள்ளை.

“உனக்கென்ன விசரே. யரோ எழுதியதற்காக நீ ஏன் வருத்தப்படுறாய். அதிபருக்குப் பலர் எதிரிகளாயிருக்கினை” என்றார் தணிகாசலம்.

“நீ என்ன புதுக் கதை சொல்கிறாய்” என்றார் வேலாயுதபிள்ளை.

“எல்லாரையும் நல்லவை என்று நாம் நம்பக் கூடாது. எங்கடை கிராமத்திலை பத்துப் பாடசாலைகள் இருக்கு. பக்கத்து ஊர்களிலையும் பல பாடசாலைகள் இருக்கு. அந்தப் பாடசாலைகளுக்குப் பொறுப்பானவை ஒழுங்காகக் கற்பிக்கிறேல்லை. தான், தன்ரை குடும்ப முன்னேற்றம் என்பதைக் கருத்திற் கொண்டு கற்பித்தலோடை பல்வேறு தொழில்களைச் செய்யினை. இவைக்குத் தன்னிலையும் தன்ரை குடும்பத்திலையும் தான் பற்றிருக்கு. அதாலை இவையைப் பற்றி மக்கள் தரக் குறைவாகப் பேசுறத் தோடை குற்றமும் காணீணை. இதை மறைக்கிறத்துக்குத்தான் வேலாயுதபிள்ளை என்ற பெயரிலை கல்வி அமைச்சுக்குப் புகாரிட்டவை” என்றார் தணிகாசலம்.

“நாம் அறியாமல் எதையும் கதைக்கக்கூடாது. அது பாவம்” என்றார் தனபாலசிங்கம்.

தணிகாசலம் எதையும் ஆராயாமல் கதைக்க மாட்டார். இந்த ஊரிலை அதிபரைத் தெய்வமாய்க் கும்பிர்ற சனம் தான் இருக்கு. முந்திச் சிவசுந்தரமூர்த்திக்கு அதிபரைப் பிடிக்காது. ஆட்களோடை கேவலமாகக் கதைத்தவரே தவிர ஒரு நாளும் கடித மூலம் யாருக்கும் அதிபரைப் பற்றி எழுதேல்லை”. என்றார் வேலாயுதபிள்ளை.

தன் உயிர், தான், தனது குடும்பம் என்ற பற்றுக்களை விட்டு விட்டுத் தவ வாழ்வு வாழும் அதிபரையும் சுவாமியாரையும் எல்லாரும் தெய்வமாய்த் தான் நினைக்கினை” என்றார் தனபாலசிங்கம்.

“யாரோ ஒருவன் இழிவாக எழுதியதால் தான் இன்று கல்வித்திணைக்களம் அதிபர்ரை தன்னலமற்ற சேவையையும் உயர்ந்த குணத்தையும் அறிந்து கொள்ள முடிந்தது.” என்றார் தணிகாசலம்.

“எல்லாவற்றிற்கும் மகா கணபதியின் கிருபையும் சுவாமியாரின் கருணையும் தான் காரணம். தன்னுயிர் தான் என்ற பற்றற்று என்றென்றும் எமது நலனுக்காக மகா கணபதியை பிராத்தித்துத் தவவாழ்வு வாழும் சுவாமியார் எமது மக்களுக்கு எவ்வளவு சேவைகளைச் செய்கிறார். எம்மை நோய்பிணி மட்டுமல்ல துன்பங்களும் துயரங்களும் கஷ்டங்களும் கவலைகளும் பீடிக்காமைக்கும் சுவாமிகளே காரணமாவார். அவரது போதனைகளால் மனத்தில் உள்ள அழுக்குகள் நீங்குகின்றன. அவரது செயல்களால் மக்கள் பயனடைகிறார்கள். சுவாமிகளது வார்த்தைகளை யாரும் அசட்டை செய்வதில்லை. அதற்கு உதாரணம் மணிவண்ணனது சகோதரனது திருமணம்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“அவர் எமக்கேற்பட விருக்கும் துன்பங்களை முன் கூட்டியே அறிந்து சொல்வதால் மக்கள் அனைவரும் அவரை வணங்குகிறார்கள்” என்றார் தணிகாசலம்.

268. தன்உயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

தவ வலிமையினால் தன்உயிர் தான் என்ற பற்றுக்களை விட்டவனை மற்றய உயிர்கள் எல்லாம் வணங்கும்.

## காலனை வென்றோர்

அன்று கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் கடவுள் சுப்பிரமணியத்தின் நினைவாக அவரது புதல்வன் ஸ்கந்ததேவா கட்டிக் கொடுத்த கணனிக் கூடம் கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கடவுள் சுப்பிரமணியத்தின் உருவப்படத்தை ஸ்ரீனிவாசன் சுவாமிகள் திரை நீக்கம் செய்து வைத்து உரையாற்றினார்.

“பெருமதிப்புக்குரிய கடவுள் சுப்பிரமணியம் அவர்களின் மைந்தன் ஸ்கந்ததேவா அவர்களே மற்றும் என்மீது அன்பும் பாசமும் கொண்ட பெரு மக்களே. கடவுள் சுப்பிரமணியத்தின் மனைவி கனகம்மா ஆசிரியையுடன் நான் பல காலம் இப்பாடசாலையில் பணி புரிந்தேன். உண்மையில் கடவுள்சுப்பிரமணியம் ஆசிரியர் கடவுள் தான். யார் அவருக்கு இந்த நாமத்தைச் சூட்டினார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் சூட்டியவர் பொருத்தமாகத் தான் அந் நாமத்தைச் சூட்டியுள்ளார். அமரர் வைத்திலிங்கமும் ஆசிரியர்களான நாமும் பொது மக்களும் கடவுள் வாத்தியார் என்றே அவரை அழைப்போம். மாணவர்களும் கடவுள் வாத்தியார் என்றே அழைப்பார்கள். பாடசாலையின் மேற்குப் பக்கமாக இருக்கும் மண்டபத்தில் ஆரம்ப வகுப்புக்கள் நடை பெற்றுக் கொண்டிருந்தன. அம்மண்டபத்தின் கூரை தென்னோலையாலே வேயப்பட்டிருந்தது. இரண்டு வருடங்களுக் கொரு முறை அம்மண்டபத்தை வேய அமரர் வைத்திலிங்கம் மிகவும் சிரமம்படுவார். ஓலைகளெல்லாம் நன்றாக உக்கி மழை நீர் வகுப்புக்களுக்குள் ஒழுகிப் பாடசாலை நடத்த முடியாது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது அமரர் மிகவும் மன முடைந்து போவார். மாணவர்களிடம் கிடுகு கொண்டு வரும்படி கூறுவார். கடவுள் சுப்பிரமணியம் ஆசிரியை வீடு வீடாகச் சென்று ஓலைகள் சேகரித்து அவற்றைக் கிழித்து நீரில் ஊறவிட்டுப் பின்னுவார். பாடசாலை நேரந் தவிர்ந்த வேளைகளில் இப்படியான பல வேலைகளை அமரர் வைத்திலிங்கத்துடன் சேர்ந்து செய்வார். ஒரு முறை பலத்த மழை காரணமாக அயல் வீட்டில் நின்ற தென்னை மரம் ஒன்று பாறி ஆரம்ப வகுப்பு மண்டபத்தின் மேல் விழுந்து விட்டது. அதைச் சீர் செய்ய முடியாது வைத்திலிங்கம் அவர்கள் தடுமாறிக் கொண்டிருந்த வேளையில் கடவுள் சுப்பிரமணியம் அக்கட்டடத்தைத்

திருத்துவதற்கான முழுத் தொகைப் பணத்தையும் கொண்டு வந்து கொடுத்தார். வைத்திலிங்கம் பின் அப்பணத்தைத் திருப்பிக் கொடுத்த போது கடவுள் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை. அவர் எனது நலனில் மிகுந்த அக்கறை உடையவர். அடிக்கடி எனக்குச் சொல்வார்; ஸ்ரீ எமது மதம் இல்லறத்தைத் தான் வற்புறுத்துகிறது. இல்வாழ்வானால் தான் உலகம் வாழ்கிறது. இவ்வுலகம் சமநிலைப்படுகிறது. நல்ல முறையில் இல்லறத்தை மேற் கொள்பவனே உலகில் பெரியவன்; சக்தி உள்ளவன்; வலிமை உள்ளவன். இல்லறமும் தவம் தான். ஒருவன் நல்ல முறையில் வாழ்வதன் மூலம் மக்களுக்குத் தொண்டாற்றப் பல மக்களைப் பெற்றெடுக்கிறான். மக்கள் செய்யும் நற் செயல்கள் மூலம் அவன் உயிர் வாழ்கிறான். எனவே நீ திருமணஞ் செய்து இன்பமாகக் குடும்பத்தவருடன் தவஞ் செய்'' என்பார். அது எவ்வளவு உண்மை என்பதை நான் இப்பொழுது உணர்ந்து கொள்கிறேன். தனக்கு வரும் தீங்குகளைப் பொறுத்துக் கொள்பவனும் அடுத்தவர்களுக்குத் தீங்கு செய்யாமல் வாழ்பவனும் தனது கடமையை ஒழுங்காகச் செய்பவனும் தவஞ் செய்பவனே. ஆற்றல் மிக்க இவனை யமனால் கவரமுடியாது. அவன் மரணத்தை வென்றவன். மனிதர்கள் மரணிக்கிறார்கள். மகான்கள் மரணத்தை வென்று எம்முடன் கூட வாழ்கிறார்கள், என்பதற்கு கடவுள் சுப்பிரமணியத்தின் நினைவாகக் கட்டப்பட்ட இந்நினைவு மண்டபம் சாட்சியாகும்'' என்றார் சுவாமியார்.

அடுத்துப் பேசிய அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி; ''இக்கணனிகள் மூலம் எமது மாணவர்கள் பயனடைவார்கள். எமது ஊரவரான திரு.வாகீசன் ஆசிரியர் அவர்கள் கணனிப் பயிற்சி பெற்றவர். அவருக்கிருக்கும் கணினியறிவு வேறுயாருக்கும் இல்லை. பெரும் நிபுணரான அவர் வேறொரு பாடசாலையில் கடமையாற்றுகிறார். கல்விப்பணிப்பாளர் அவர்கள் அவரை எமது பாடசாலைக்கு இடமாற்றஞ் செய்து தரல் வேண்டும்'' என்றார்.

அடுத்து கல்விப்பணிப்பாளர் உரையாற்றினார்; ''சில நாட்களுக்கு முன்பு சுவாமியார் இப் பாடசாலைக்குத் கணனிகள் வேண்டுமென்று கேட்டார். அவற்றைப் பழைய மாணவர் ஒருவர் கொடுத்துதவியுள்ளார். அடுத்து அதிபர் கேட்ட வாகீசன் ஆசிரியரை நான் இடமாற்றம் செய்கிறேன். வாகீசனது திறமை பற்றி எனக்குத் தெரியும். கற்பித்தலிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மிக்க நிபுணத்துவம் வாய்ந்த அவரின் சேவையை அவரது கிராம மக்கள் பெறவேண்டும். அத்துடன் பல இலட்சரூபா செலவில் உருவாக்கப்பட்ட கணனிப் பயிற்சி நிலையம் பல நிபுணர்களை உருவாக்க வேண்டுமென மனதார விரும்பி வாழ்த்தி விடை பெறுகிறேன்'' என்றார்.

அடுத்து ஸ்கந்ததேவா உரையாற்றினார்; ''இன்று எனது தந்தையாரின் விருப்பங்களில் ஒன்று பூர்த்தியாகியுள்ளது. இப்பாடசாலைக்கு தேவையான நூல்கள் யாவற்றையும் வாங்கிக் கொடுக்க நான் விரும்புகிறேன். இந்த மாவட்டத்தில் சிறந்த நூலகம் ஒன்று இப்பாடசாலையில் இருக்க வேண்டும். நான் விரைவில் வெளிநாட்டிற்குச் செல்லவுள்ளேன். எனது நண்பர் கோப்பாய் விஜி உங்களுடன் இருப்பார். அவரிடம் பாடசாலைத் தேவைகளைச் சொன்னால் அவர் என்னுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வார்'' என்றார் ஸ்கந்ததேவா.

269. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

தவம் செய்து பெறத்தக்க ஆற்றல்களைப் பெற்றவர்களுக்கு காலனாகிய யமனையும் வெற்றி கொள்ளுதல் கைகூடும்.

## சிலர் பலர்

இலங்கையின் அரசின் போர் நடவடிக்கையால் பல்வேறு கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்குச் சிறிது தூரத்தில் இருந்த கோயிற் காணியில் குடிசைகள் கட்டி இருபத்தைந்து குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. அக்குடும்பத்தினரே நாவலடிக் கிராம விவசாயிகளின் தோட்டங்களில் வேலை செய்து வந்தனர். அவர்களைக் குடியமர்த்தும் போது விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; ‘‘இன்று எமது மாவட்டம் முழுவதும் போரால் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறது. உங்களை எமக்குத் தெரியாது; எம்மை உங்களுக்குத் தெரியாது; சொத்துக்கள் யாவற்றையும் இழந்து கோயிலில் வந்து தங்கியுள்ள உங்களை இங்கிருந்து வெளியேற்ற எமக்கு விருப்பமில்லை. அருகில் கோயிலுக்குச் சொந்தமான பெரியதொரு காணி உள்ளது. அதில் நீங்கள் குடிசைகள் கட்டி இருங்கள். குடிசைகள் கட்டுவதற்கு தேவையான பொருட்களை நாம் தருகிறோம். இங்குள்ள கிராம மக்கள் நல்லவர்கள். அவர்களுடன் ஒத்து ஒழுக்கமாக வாழுங்கள்’’ என்று கூறி அவர்களுக்குக் குடிசைகள் அமைக்கப் பொருட்கள் கொடுத்தார். அத்துடன் இரண்டு குழாய்க் கிணறுகளையும் நான்கு மல கூடங்களையும் அமைத்துக் கொடுத்தார். அம்மக்கள் மிகவும் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்ந்து வந்தனர்.

அன்று இரவு தற்செயலாக ஏற்பட்ட தீவிபத்தினால் இருபத்தைந்து குடிசைகளும் எரிந்து நாசமாகி விட்டன. மக்கள் தமது உடமைகளை இழந்த துயருடன் மகா கணபதி ஆலயத்தின் முன்னால் வந்து இருந்தனர்.

விக்னேஸ்வரமூர்த்தி, தணிகாசலம், வேலாயுதபிள்ளை, தனபாலசிங்கம், சிவசுந்தரமூர்த்தி, மணிவண்ணன் ஆகியோருடன் பெருந்தொகையான மக்களும் கோயில் வாசலில் குழுமியிருந்தனர்.

சுவாமியார் அவ்விடத்திற்கு வந்தார். எல்லோரும் எழுந்து நின்று அவரை வணங்கினர்; ‘‘என் அருமை மக்களே எதற்கும் அஞ்சாதீர்கள். கவலைப்படாதீர்கள். மனதில் வலிமையில்லாதவன் உலகில் நல்லபடி வாழமுடியாது. கொடிய போரினால் எமது இனம் அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் இவ் வேளையில் இயற்கையும் உங்களைச் சோதனைக்குள்ளாக்கியுள்ளது. துன்பங்களையும் இழப்புக்களையும் பொருட்படுத்தக்கூடாது. ஆயிரம் முறை தோற்றாலும் தான் கொண்ட எண்ணம் நிறைவேறும் வரை ஓயக்கூடாது. அதிபரும் தணிகாசலமும் மற்றும் இங்குள்ள

பிரமுகர்களும் மக்களும் உங்களுக்குத் துணையாக இருப்பார்கள். தணிகாசலம் இவர்களுக்கு கல்லாலான வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான முயற்சிகளைச் செய். அது வரையும் இவர்கள் கோயில் அன்னதான மடத்தில் தங்கியிருக்கட்டும். பொது மக்களிடம் உடு பிடைவைகள் சேகரித்துக் கொடுங்கள். நாளை முதல் அவர்களது உணவுத் தேவையையும் பூர்த்தி செய்யுங்கள்'' என்றார் சுவாமியார்.

குடிசைகள் எரிந்த மக்கள் மனத்தைரியத்துடன் அன்னதான மடத்திற்குச் சென்றனர். தணிகாசலம் கழஞ்சிய சாலையைத் திறந்து பாய்களை எடுத்துக் கொடுத்தார்.

மறு நாட்காலை தொழிலாளர்களும் இடம் பெயர்ந்த மக்களும் அவ்வூர் மக்களும் வீடு அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். தணிகாசலம் ஸ்கந்த தேவாவின் வீட்டுக்குச் சென்று அவனை அழைத்து வந்தார். அவன் இருபத்தைந்து வீடுகளுக்கும் தேவையான கூரை வேலைகளைச் செய்து கொடுக்கச் சம்மதித்தான். மணிவண்ணனும் சுந்தரலிங்கமும் தணிகாசலமும் தனபாலசிங்கமும் வேலாயுத பிள்ளையும் சிவசுந்தரமூர்த்தியும் இளங்கோவனும் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்தனர். கொத்தனார்கள் ஆசாரிகள் குறைந்த கூலியில் வேலை செய்தனர். ஒரு மாத காலத்தில் இருபத்தைந்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டன.

அன்று அன்னதான மடத்தில் இருந்து இருபத்தைந்து குடும்பத்தினரும் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுக்குச் சென்றனர். நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலய பிரதம குரு இராஜசங்கரக் குருக்கள் சமயக் கிரிகைகளைச் செய்தார். சுவாமிகள் அருளுரை வழங்கினார்; ''தன் நம்பிக்கை கொண்டவர்களே தாம் தொடங்கிய செயலைக் குறித்த தவணையில் செய்து முடிக்கிறார்கள். இன்று சமூகத்தில் உள்ள பலர் தாழ்ந்திருப்பதற்குக் காரணம் அவன் உயர்ந்த இலட்சியங்களை மனதில் கொண்டிராமை தான். தான் எடுத்த செயலை முடிப்பதற்கு விடா முயற்சியும் மனவுறுதியும் வேண்டும். மனவுறுதி கொண்டவன் எடுத்த செயலை முடித்து விடுவான். உலகில் ஆற்றல் இல்லாதவர்கள் பலராகவும் ஆற்றல் உள்ளவர்கள் சிலராகவும் இருப்பதற்குக் காரணம் பலருக்கு மனவுறுதி இன்மையே. ஆற்றலை நாம் அடுத்தவர்களிடமிருந்து பெற முடியாது. எடுத்த செயலைச் செய்து முடிக்க வேண்டு மென்று பதில் உறுதியாக இருத்தல் வேண்டும். அதைப்பற்றியே எந்நேரமும் நினைக்க வேண்டும். கனவுகள் கூட அச் செயலைப் பற்றியதாகவே இருத்தல் வேண்டும். மற்றய விடயங்களை எடுத்த செயல் முடியும் வரை தொடங்குவதைத் தவிர்த்தல் வேண்டும். இப்படி வாழ்பவர் சிலர். அந்தச் சிலராற்தான் உலகம் வாழ்கிறது. எல்லா வீடுகளுக்கும் கூரை வேலை செய்து தருவதாகக் கூறிய ஸ்கந்ததேவா பெருந்தொகையான பணத்தையும் கொடுத்துதவியுள்ளார். முன்பு நான் சொன்னவை யாவும் அவருக்குப் பொருந்தும். அத்துடன் தனது கருமத்தைப் போல எண்ணிச் செயலாற்றுபவர்களிடம் இந்தப் பொறுப்பைக் கொடுத்தேன். எண்ணியதை விட மிக விரைவாக எடுத்த கருமத்தை முடித்து விட்டார்கள்'' என்றார் சுவாமியார்.

270. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

உலகில் ஆற்றல் இல்லாதவர்கள் பலராகவும் ஆற்றல் உள்ளவர்கள் சிலராகவும் இருப்பதற்குக் காரணம், தவம் செய்யாதவர்கள் பலராகவும் தவஞ்செய்வோர் சிலராகவும் இருப்பதே ஆகும்.

## நகைக்கும்

தனபாலன் நன்றாகக் குடித்து விட்டு வீதியால் வந்து கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் கிருஸ்ணனும் புஸ்பநாதனும் வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குத் தனபாலனை விட வெறி கூடுதலாக இருந்தது. தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்த தனபாலன் பாலசிங்கத்தின் கடைக்கு முன்னால் நின்ற வேப்ப மர நிழலில் இருந்த கல்லில் இருந்து கொண்டு திரும்பிப் பார்த்தான். கிருஸ்ணனும் புஸ்பநாதனும் ஆடி ஆடி வீதியின் இரண்டு பக்கங்களுக்கும் செல்வதும் வருவதுமாக இருந்தனர். வீதியாற் சென்ற வாகனங்கள் வேகத்தைக் குறைத்து மெதுவாகச் சென்றன. சாரதி ஒருவன் அவர்களைக் கோபமாக ஏசினான்.

‘‘சரி தம்பி போட்டு வா’’ திரும்பி நின்று கையை அசைத்தான் கிருஸ்ணன்.

‘‘வாடா.. கிருஸ்ணா... புஸ்பா... வீதியிலை என்ன செய்யிறியள். கெதியாய் வந்து இருங்கோ. பாலசிங்கம் கடை திறக்காததாலை சுருட்டு வாங்க முடியாமல் இருக்கு கள்ளுத் தவறணையில் சுருட்டை வாங்க மறந்திட்டன்’’ என்றான் தனபாலன்.

மெதுவாக ஆடி ஆடி வந்த கிருஸ்ணனும் புஸ்பநாதனும் வேப்பமர நிழலில் வந்து படுத்தனர். அவர்களால் எழுந்து நடக்க முடியவில்லை. சின்னத்தம்பிக்குப் பைத்தியம் பிடித்த பின்பு தனபாலனுக்குப் பயமாக இருந்தது. தனக்கும் சின்னத்தம்பியின் நிலை வந்து விடுமோ எனப்பயந்தான். சின்னத்தம்பிக்குத் தணிகாசலத்தைப் பிடிக்காது. சுவாமியார் இருக்கும் பக்கத்தை அவன் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. வெள்ளிக்கிழமையானாலும் சரி, கோயில் திருவிழாக் காலங்களினாயிலுஞ் சரி நன்றாகக் குடித்து விட்டு மாமிசத்தைத் தின்றுவிட்டு கோயிலடியில் வந்து கலாட்டா செய்வான். தற்பொழுது சில நாட்களாக சின்னத்தம்பி தணிகாசலத்தின் பின்னாற் திரிகிறான். சுவாமியாரை அடிக்கடி சென்று விழுந்து வணங்குகிறான். திருநீறு பூசுகிறான். விரதம் அனுட்டிக்கிறான். அதை நினைக்க தனபாலனுக்குப் பயமாக இருந்தது.

வீதியால் வெறியில் வந்த சின்னத்தம்பி விபத்துக்குள்ளானதால் தான் குரங்குகளை வெட்டிப் பங்கு போட்ட விஷயம் ஊர் முழுவதும் தெரியவந்தது. அவனுடன் சேர்ந்து பாலசிங்கத்தின் கடையை உடைத்துக்

களவு எடுத்த விஷயத்தையும் வாய் தடுமாறி யாருக்காவது சொல்லி விடுவானோ.? எனப் பயந்தான் தனபாலன். அதை விடச் சுவாமியார் தனக்கு ஏதாவது கெடுதல் செய்து விடுவாரோ எனவும் பயந்தான்.

குடிக்காத வேளைகளில் தனபாலனுக்குப் பயமாக இருந்தது. அதை மறக்கக் குடித்தால் சுவாமியார் அவனது கண்களுக்குள் வந்து மிரட்டினார்; ‘‘என்னை ஒருவரும் ஒன்றும் செய்யேலாது. செய்யிறத்தைச் செய்து பார்க்கட்டும் என்று புலம்பியவாறு திரும்பினான். எதிரில் ஒரு பெண் நின்று சிரித்தாள். ஓர் அரசகுமாரியைப் போல தலையில் முடி வைத்திருந்தாள்; ‘‘என்ன தனபாலு என்னைத் தெரியவில்லையா நான் தான் பூமாதேவி. உலக மக்களை உருவாக்கும் பொழுது என்னையும் சேர்த்துத் தான் பிரமா உருவாக்குகிறார். உன்னைப் பார்க்க எனக்கு வெட்கமாக இருக்கிறது. எவ்வளவு உணவுகளை நான் உனக்குத் தருகிறேன். நீ கோயில் குரங்குகளை உண்கிறாய் உன்னை நினைக்க எனக்கு வெட்கமாக இருக்கிறது’’.

பூமா தேவியின் அருகில் அரசகுமாரனைப் போல் ஒருவன் நின்று சிரித்தான்; ‘‘நான் தான் வர்ணபகவான். பிரம்மா என்னையும் சேர்த்துத் தான் உன்னைப் படைத்தார். ஒழுக்கம் தான் உயிர். நீ ஒழுக்கத்தை மறந்து மிருகத்திலும் கேவலமாக வாழ்வதை என்னாற் சகிக்க முடியவில்லை..’’ அழுதான் வருண பகவான்.

அருகே தலையில் அக்கினியுடன் ஒருவன் தோன்றினான்; ‘‘பிரமதேவர் என்னையும் சேர்த்துத்தான் உன்னைப் படைத்தார்; ‘‘ஒழுக்கம் தான் கடவுளை அடையும் மார்க்கம். ஒழுக்கமுள்ளவனைப் பார்த்துப் பெருமை அடையும் நான் உன் போன்றவர்களைப் பார்த்து வெட்கப்படுகிறேன். சீ நீயும் ஒரு மனிதனா...?’’

அக்கினி பகவானுக்கு அருகில் வாயுதேவன் நின்றான்; ‘‘புனிதமான என்னை உன் உடலில் சேர்த்த பிரம்மனை நான் வெறுக்கிறேன். உன் போன்ற கேவலமானவர்களைக் கண்டால் எனக்கு வெறுப்பேற்படுகிறது’’.

முகில்கள் யாவும் திரண்டு மனித உருப்பெற்று வந்து தனபாலனின் அருகே நின்றது; ‘‘கேவலம் கெட்டவனே புனிதமான நிலம், நீர், தீ, காற்று போன்றவற்றுடன் வானமான என்னையும் சேர்த்துப் புனிதர்களைப் படைத்த திருமால், உன் போன்ற கேவலமானவர்களையும் படைத்திருக்கிறார். உனக்கு களவு எடுக்க வெட்கமாக இல்லையா.? உயிர்களைக் கொல்ல எப்படி உனக்கு
மனம் வந்தது. தீயவனே புனிதமான உடலால் உழைத்து உண். உயிர்களை மனதாற் கூட வருத்தாதே. கடவுளை வணங்கு. நல்லவர்களின் சொற்களைக் கேள்’’.

பயத்தினால் அலறினான் தனபாலன். வீதியால் சென்ற இருவர் அவனின் அருகில் ஓடி வந்தனர். வீதியாற் சென்ற ஒருவர் சொன்னார்; ‘‘தம்பியவை

அவன் குடித்து விட்டுக் கத்துகிறான். கிட்டப் போகாதைங்கோ. அடித்தாலும் அடிப்பன்''.

அருகில் வந்த இருவரும் விலகிச் சென்றனர். தனபாலனுக்குப் பயமாக இருந்தது; ''சுவாமியார் தான் பேய்களை ஏவி விட்டுள்ளார்'' என்று நினைத்தான்.

அன்று பின்நேரம் சின்னத்தம்பி தணிகாசலத்துக்குச் சொன்னான்; ''அண்ணை தனபாலனுக்குப் பேயடிச்சுப் போட்டுதாம். வாய்க்கிளாலையும் மூக்குக்குள்ளாலையும் இரத்தம் வந்த படி பாலசிங்கண்ணையின்ரை கடைக்கு முன்னாலுள்ள வேம்புக்குக் கீழை கிடந்தவனாம்''.

தணிகாசலம் எதுவும் பேசாதிருந்தார்.

271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

வஞ்ச மனம் உடையவனுடைய பொய் ஒழுக்கத்தைக் கண்டு அவனுடைய உடலில் கலந்து நிற்கும் ஐம்பூதங்களும் தம்முள் சிரிக்கும்.

## பயனில்லாதவன்

சிவசுந்தரமூர்த்தி, தனது மேலதிகாரியான ஞானப்பிரகாசத்தின் முன்னால் இருந்தார். முன்பென்றால் எந்தப் பாவச் செயலுக்கும் அஞ்சாத அவர், தனது மகளின் திருமணத்திற்குப் பின்பு முற்றாக மாறி இருந்தார். விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றியும் தணிகாசலத்தைப் பற்றியும் வேலாயுதபிள்ளையைப் பற்றியும் கேவலமாக விமர்சிப்பார். நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலய அறங்காவலர் குழுவில் உறுப்பினராக இருந்து, ஒவ்வொரு கூட்டத்திலும் ஏதாவதொரு பிரச்சினையை எழுப்பிக் கொண்டே இருப்பார். அத்துடன் அவர் வேலை செய்யும் அலுவலகத்திற்கு ஏதாவது கருமம் நிமிர்த்தம் வருவோரிடம் இலஞ்சமாகப் பணத்தையும் பொருள்களையும் பெறுவார். தனது மகளின் திருமணத்திற்குப் பிறகு தனது கூடாத செயல்களை யெல்லாம் விட்டு விட்டு ஒழுக்கமாக வாழ்ந்து வந்தார். அப்படி வாழ்வது அவருக்கு மிகவும் சிரமமாக இருந்தது. பழைய நண்பர்கள் மாவட்டச் செயலகத்தில் ஏதாவது வேலை செய்வதானால் பணத்துடன் வருவார்கள். அல்லது சாராயப் போத்தலுடன் வருவார்கள். அவர் அதை வாங்கா விட்டால் அவரின் மீது நம்பிக்கை இழந்து விடுவார்கள். தமக்குச் செய்ய வேண்டிய கருமத்தை அவர் செய்ய விரும்புகிறாரில்லை அல்லது அதை விடக் கூடுதலாக எதிர் பார்க்கிறார் என்று நினைத்தார்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு வீதி ஒப்பந்த விடயமாக வந்த இராமநாதன் என்றும் ஒப்பந்தகாரன் அவருடன் ஒப்பந்த விடயமாகக் கதைத்தான்.

சிவசுந்தரமூர்த்தி தன்னால் அவனுக்கு உதவ முடியாது என்றும், மாவட்டச் செயலாக ஒழுங்கு விதிகளுக்கமைய விண்ணப்பிக்கும் படியும் சொன்னார். இராமநாதன் கேட்கவில்லை; ''கட்டாயம் இந்த உதவியை நீங்கள் செய்ய வேண்டும். உங்களாற் செய்ய முடியும். பல வருடங்களாகத் தொடர்நது பல ஒப்பந்த வேலைகளைப் பெற்றுத் தந்த உங்களுக்கு இது கஷ்டமான விடயம் அல்ல'' என்று கூறினான்.

''இராம், நான் இப்பொழுது முன்பு போல் வாழ்வதில்லை. முன்பு ஒழுங்கீனமாக வாழ்ந்ததால் பல பிரச்சினைகளுக்குட்பட்டு கஷ்டப்பட்டு விட்டேன். தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதே'' என்றார்.

''ஐயா, எனக்கு இவ் அலுவலகத்தில் யாரையும் தெரியாது. நீங்கள் தான் இவ்வளவு காலமும் பணத்தைப் பெற்றுக் கொண்டு எனக்கு உதவி செய்தனீங்கள். அதைப் போல இனியும் உதவி செய்தல் வேண்டும். அதற்காக எவ்வளவு பணம் தேவையானாலும் தருகிறேன்'' என்றான்.

சிவசுந்தரமூர்த்தி எதுவும் பேசவில்லை; ''உங்களைத் தான் நான் நம்பியிருக்கிறன். ஏமாற்றி விடாதீர்கள்'' என்று சொல்லி விட்டு இராமநாதன் சென்று விட்டான்.

சிவசுந்தரமூர்த்தி அமைதியின்றித் தவித்தார். எனினும் அவரால் முறை கேடாக நடக்க முடியவில்லை. நாவலர் ஶ்ரீ வித்தியா கணபதி மீது பாரத்தைப் போட்டு விட்டு இருந்தார்.

மறு வாரம் ஒப்பந்த வேலை செய்வதற்கான பொறுப்பை மாவட்டப் பொறியலாளர் இராமநாதனுக்கு வழங்கினார். அதனால் மிகவும் மகிழ்ந்த இராமநாதன் அன்றிரவு சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு அன்பளிப்புப் பொருட்களுடன் சென்றான். அதை சிவசுந்தரமூர்த்தி வாங்க மறுத்தார்; ''இராம் நான் எதுவும் செய்யவில்லை. நீ தான் விண்ணப்பித்த எல்லோரிலும் பார்க்கக் குறைவான தொகையைக் குறிப்பிட்டிருந்தாய். அதனால் தான் உனக்கு வேலை செய்வதற்கான அனுமதி கிடைத்தது'' என்றார்.

இராமநாதன் தான் கொண்டு வந்த பொருட்களை அங்கேயே வைத்து விட்டுச் சென்றான். இராமநாதன் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு அன்பளிப்புப் பொருட்களுடன் சென்றதை ஞானப்பிரகாசத்தின் உதவியாளரான சதாசிவம் கண்டு விட்டார். அதை அவர் ஞானப்பிரகாசத்திடம் சொல்லி விட்டார்.

''நீங்கள் இவ் அலுவலகத்தில் நிர்வாகப் பொறுப்பில் உள்ள உயர் அதிகாரி. நாம் நேர்மையான முறையில் ஒப்பந்தப் பத்திரங்களைப் பிரித்துப் பார்த்து குறைவான தொகையைக் கேட்ட இராமநாதனுக்கு ஒப்பந்த வேலையை வழங்கினோம். ஆனால் நீர் முன்பு போல தில்லு முல்லுகள் செய்து இராமநாதனுக்கு ஒப்பந்த வேலை வாங்கித் தந்ததாகக் கூறிப் பெருந்தொகையான அன்பளிப்புப் பொருட்களையும் பணத்தையும் பெற்றுள்ளீர்.

இதற்காக ஒழுங்கு நடவடிக்கையை நான் எடுக்கப் போகிறேன்'' என்றார் ஞானப்பிரகாசம்.

''ஐயா நான் முன்பு பல கூடாத செயல்களைச் செய்தனான் தான். ஆனால் இப்பொழுது திருந்தி விட்டேன். இராமநாதன் என்னைச் சந்தித்தது உண்மை; அன்பளிப்புப் பொருட்கள் கொண்டு வந்ததும் உண்மை; நான் அதைப் பெறவில்லை; ஆனால் அவன் அவற்றை வீட்டில் வைத்து விட்டுச் சென்று விட்டான்''. துயரத்துடன் சொன்னார் சிவசுந்தரமூர்த்தி.

''நான் நம்ப மாட்டேன். நீர் உயர் பதவியில் உள்ளனீர். குற்றச் செயல்கள் யாவற்றையும் செய்ய மனம் தான் காரணமாகவுள்ளது. நினைப்பதும் செயல் வடிவம் கொடுப்பதும் திட்டமிட்டு செயலாற்றுவதும் மனம் தான். ஒருவன் ஒரு செயலை மனதில் நினைப்பது செய்வதற்குச் சமமானது. தன்மனமறியக் குற்றம் செய்தவன் உயர்ந்த தவக் கோலத்தை உடையவனாய் இருந்தாலும் ஒரு பயனும் இல்லை''.

ஞானப்பிரகாசம் கதைத்துக் கொண்டிருக்கும் போது சிவசுந்தரமூர்த்தி எதையோ சொல்லத் துடித்தார். ஆனால் ஞானப்பிரகாசம் அவர் கதைப்பதை விரும்பவில்லை; ''நீர் எனக்கு எந்தச் சாட்டும் சொல்ல வேண்டாம். தீமையைச் செய்பவன் செய்யும் போது நன்மையைப் பெற்றாலும் காலப் போக்கில் துன்பத்தையே அனுபவிப்பான். தீமையை நினைத்தாலும் கா்ம யோகத்தின் படி அது தனக்கு உரிய பலனை விளைவித்து முடிக்கும் வரைக்கும் அழியாது. செயல்கள் தான் பாவத்துக்குரியன என்பதை மறக்க வேண்டாம்'' என்றார் ஞானப்பிரகாசம். சிவசுந்தரமூர்த்தி சிலையாக அமர்ந்திருந்தார்.

272. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்?.

தனது மனம் அறியக் குற்றம் செய்தவன் உயர்ந்த தவக் கோலத்தை உடையவனாக இருந்தாலும் அதனால் எந்தப் பயனும் வராது.

## பசுத்தோல் போர்த்த புலி

''சுவாமி என்னைத் தெரிகிறதா...?'' ஸ்ரீனிவாசன் சுவாமியார் கேள்வி கேட்ட அப்பெண்ணை நிமிர்ந்து பார்த்தார். பட்டாக நரைத்த தலை முடி. முகமெங்கும் சுருக்கங்கள். கையில் ஓர் ஊன்று கோல். எங்கோ எப்பொழுதோ கண்ட முகம்.. ''யாரது?'' யோசித்தார் சுவாமியார்.

''என்ன சுவாமியார் யோசிக்கிறீர்கள். நான் தான் கீதாஞ்சலி''

''ஓ... கீதாஞ்சலியா...? எப்படிச் சுகமாக இருக்கிறாயா?

“நல்ல சுகமாக இருக்கிறேன். எனக்கு ஆறு பிள்ளைகள். எல்லோரும் நலமாக இருக்கிறார்கள். பேரப்பிள்ளைகளுடனும் பீட்டப் பிள்ளைகளுடனும் விளையாடுவது தான் எனது பொழுது போக்கு. ஐம்பது வருடங்களுக்குப் பிறகு ஊருக்கு வருகிறேன். உங்களையும் மகா கணபதியையும் தரிசித்து விட்டுப் போகலாமென்று வந்தேன்” என்றாள் கீதாஞ்சலி.

புன்னகைத்தார் சுவாமிகள். அவரது மனம் பழைய சம்பவமொன்றை அசை போட்டது. அப்பொழுது அவர் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். கீதாஞ்சலியும் அவருடன் கற்பித்துக் கொண்டிருந்தாள். ஸ்ரீனிவாசன் இளைஞராக இருக்கும் போதே பிரம்மச் சாரியத்தை உறுதியாக அனுஸ்டித்தார். எந்த விதமான சுயநல நோக்கமும் இல்லாமல் பணம், புகழ் வேறு எவற்றிற்கும் அடிமைப்படாது தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் கணபதி வித்தியாலயத்தை ஆரம்பித்து ஏழை மாணவர்களுக்குக் கல்வி புகட்டிக் கொண்டிருந்த வைத்திலிங்கத்திற்கு உதவ வேண்டும் என்ற விருப்போடு வாழ்ந்தவர் ஸ்ரீனிவாசன். வைத்திலிங்கம் அடிக்கடி சொல்வார்; “உன்னால் ஒருவருக்கு எப்பொழுதும் உதவி செய்ய முடியாது. ஆனால் இயலாதவர்களுக்கு எப்பொழுதும் சேவை செய்ய முடியும். கடவுளின் குழந்தைகளான ஏழை மக்களுக்குத் தொண்டு செய்வதை ஒவ்வொருவனும் நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். அப்படித் தொண்டு செய்தலானது தவஞ் செய்வதற்கு ஒப்பானது” அந்த வார்த்தைகள் ஸ்ரீனிவாசனுக்குப் பிடித்திருந்தன. அதனால் அவர் திருமணஞ் செய்யாமல் தன் வாழ்நாள் முழுவதும் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டு மென்று நினைத்தார்.

ஸ்ரீனிவாசனின் பெற்றோர், அவருக்குப் பெண் தேடினர். உறவினர்களும் ஊரவர்களும் நல்லொழுக்கம் மிக்க அவரை மருமகனாக அடைய விரும்பினர். தாயாரின் விருப்பத்தை ஸ்ரீனிவாசன் ஏற்காததால், அவர் வைத்தியலிங்கத்திடஞ் சென்று தனது மனக் குறையை வெளியிட்டார்.

அன்று பாடசாலை முடிந்த பின்பு வைத்திலிங்கம் ஸ்ரீனிவாசனோடு கதைத்தார்; “தம்பி அந்தந்தப் பருவத்தில் அந்தந்தச் செயல்களைச் செய்தல் வேண்டும். இப்பொழுது நீ இளைஞன். உனது தாயாரின் விருப்பப்படி திருமணஞ் செய்து கொள்வது தான் நல்லது”.

“ஐயா, நான் உங்கள் வார்த்தைகளை மதிப்பவன். நீங்கள் தான் எனது கடவுள்; எனது குரு நீங்கள் செய்யும் புனிதமான சேவைக்கு உதவியாளனாகவே நான் இருக்க விரும்புகிறேன். எனது மனதில் ஆசை இல்லை; பாசம் இல்லை; பற்று இல்லை. ஏனோ தெரியவில்லை எனது மனம் ஆத்ம ஞானத்தை நாடுகிறது. தயவு செய்து என்னைத் திருமணஞ் செய்து கொள்ளும்படி வற்புறுத்தாதீர்கள்” என்றார். அதன் பின்பு வைத்திலிங்கம் அவருடன் திருமணத்தைப் பற்றிப் பேசுவதில்லை.

ஸ்ரீனிவாசன், வைத்திலிங்கத்துடன் சேர்த்து சகல வேலைகளையும் செய்வார். மாலை நேரங்களில் பாடசாலையைத் துப்புரவு செய்தல்,

மரங்களுக்கு நீர் பாய்ச்சுதல், கிணறு இறைத்தல் போன்ற வேலைகளைச் செய்வார். இரவில் வெகு நேரம் வரை நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தின் தெற்குப் பக்கமாக நிற்கும் அரசமரத்தின் கீழ் அமர்ந்திருப்பார். சில சமயங்களில் விடியும் வரை நிஸ்டையில் இருப்பார்.

பாடசாலையில் ஓய்வான நேரங்களில் ஸ்ரீனிவாசன் ஏதாவது வாசித்துக் கொண்டிருப்பார். அப்பொழுது கீதாஞ்சலி அவரிடம் வந்து பல்வேறு விதமான கதைகளைக் கதைப்பாள். கீதாஞ்சலிக்கு ஸ்ரீனிவாசன் மேல் தீவிரமான அன்பு இருந்தது. காலப் போக்கில் அவ் அன்பு காதலாகப் பரினமித்தது. ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோரும் இருவரும் காதலிக்கின்றனர். என்று பேசிக் கொண்டனர். ஒரு நாள் காலையில் பாடசாலைக்கு வந்த போது வகுப்பறைக் கட்டிடச் சுவரில்; ‘‘ஸ்ரீனிவாசனுக்கும் கீதாஞ்சலிக்கும் காதல் புரியப் புனிதமானது. எமது பாடசாலையா கிடைத்தது? மாணவர்களின் ஒழுக்கத்தைச் சீரழிக்கும் இருவரையும் பாடசாலையை விட்டு வெளியேற்றுங்கள்’’ என்று எழுதப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த வைத்திலிங்கத்திற்கு கோபங் கோபமாக வந்தது. அப்பொழுது அங்கே ஸ்ரீனிவாசன் வந்தார். அவரைக் கண்டதும் வைத்திலிங்கம்; ‘‘சுவரைப் பாருங்கள், உங்களது பிரமச்சாரியத்தின் புனிதத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். நான் முன்பு உங்களின் பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க உங்களைத் திருமணம் செய்து கொள்ளும்படி கேட்ட போது, பிரம்மச்சாரியாக இருந்து மக்களுக்குச் சேவை செய்யப் போகிறேன் என்றீர்கள். நானும் அதை நம்பி விட்டேன். அப்பொழுதே கீதாஞ்சலியைக் காதலிக்கிறேன். என்று சொல்லியிருந்தால், நான் அவளை உமக்குத் திருமணம் செய்து தந்திருப்பேன். அதை மறைத்ததால் தான் நான் ஒழுக்கத்தை உயிராகப் பேணும் பாடசாலையில் இப்படிக் கேவலமாக எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. தவம் செய்கிறேன் என்றீர். தவம் என்பது மனதை அடக்குதல். மனதில் ஆயிரம் ஆசைகளை வைத்துக் கொண்டு தவஞ் செய்வதாக ஏன் சொன்னீர். மனதை அடக்கும் வல்லமை இல்லாதவனுடைய தவக்கோலம், பசு, புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு தோட்டத்தில் பயிரை மேய்வதைப் போன்றது’’ என்றார்.

‘‘ஐயா, நான் இப்பொழுதும் சொல்கிறேன் எனது மனதில் ஆசைகள் இல்லை. மனதை அடக்கி வைத்துள்ளேன். இது யாரோ ஒரு தீயவனின் செயல்’’.

273. வலிஇல் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

மனதை அடக்க முடியாதவன் மேற் கொண்ட தவக் கோலம், பசு, புலியின்தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்வதைப் போன்றதாகும்.

## புதரில் மறைந்த வேடன்

''யாரோ ஒரு தீயவனின் செயல் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். மிகவும் அழகான எழுத்தில் எழுதிய இவன் கற்றறிந்த ஒருவனாகத் தான் இருத்தல் வேண்டும். ஆனால் கற்றவன் செய்யும் செயலா இது? ஆசிரியர்களும் மாணவர்களும் வரு முன் சுவரில் உள்ளவற்றை அழித்து விடும். மாணவர்களின் மனதில் களங்கம் ஏற்படக் கூடாது. ஒருவன் மனதால் மாசிவனாக வாழ வேண்டுமே தவிர உடையாலோ வார்த்தைகளாலோ தவக் கோலம் பூண்டவனாக மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்ளக் கூடாது. மனதில் ஆசையுள்ள நீ எதற்காக தவக் கோலம் பூண்டிருக்கிறாய். சொல்லும் செயலும் ஒன்றாக இருத்தல் வேண்டும். காதலிப்பதைக் குற்றமாக நான் கருதவில்லை. எமது மதம் இல்லறத்தைத்தான் வற்புறுத்துகிறது. இல்வாழ்வானால் தான் உலகம் வாழ்கிறது. சமநிலைப்படுகிறது. நல்ல முறையில் இல்லறத்தை மேற்கொள்பவனே உலகிற் சிறந்தவன்; சக்தி உள்ளவன்; வலிமை உள்ளவன். இல்லறமும் ஒரு வகையில் தவம் தான். ஒருவன் நல்ல முறையில் வாழ்வதன் மூலம் மக்களுக்குத் தொண்டாற்ற பல மக்களைப் பெற்றெடுக்கிறான். மக்கள் செய்யும் நற் செயல்கள் மூலம் அவன் உயிர் வாழ்கிறான். எனவே நீ திருமணஞ் செய்து குடும்பத்தவருடன் தவஞ் செய்வதையே நான் விரும்புகிறேன்''.

ஸ்ரீனிவாசன் எதுவும் பேசாமல் கிணற்றில் நீர் எடுத்து வந்து சுவரில் எழுதியவற்றை அழித்தார். இரண்டு தினங்களுக்கு முன்பு கீதாஞ்சலி அவரைக் கோயிலிற் சந்தித்தாள்; ''ஸ்ரீ எனக்கு உங்களில் நல்ல விருப்பம். எனது தந்தையார் சிங்கப்பூரில் உள்ள ஒருவருக்கு என்னைத் திருமணம் பேசுகிறார். அவரைச் செய்ய எனக்கு விருப்பமில்லை. எனக்கு உங்களைச் செய்யத்தான் விருப்பம். எனவே தயவு செய்து உங்களது முடிவைச் சொன்னீர்களானால் நல்லது. நாளைக்கு அவரின் வீட்டார் எமது வீட்டுக்கு வருகிறார்கள். திருமணம் முற்றானால் நான் கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்து கொள்வேன்'' என்று கூறியது நினைவுக்கு வந்தது.

அன்று மாலை கீதாஞ்சலியின் தகப்பனார் பாடசாலைக்கு வந்து வைத்திலிங்கத்தைச் சந்தித்து வெகு நேரம் வரை கதைத்தார். ஸ்ரீனிவாசன் வெளியே இருந்தார். கீதாஞ்சலியின் தந்தை சென்ற பின்பு வைத்திலிங்கம் ஸ்ரீனிவாசனை அழைத்தார்.

ஸ்ரீனிவாசன் வைத்திலிங்கத்தோடு சரி சமமாக உட்கார்ந்திருப்பதில்லை. அதனால் அவர் பல முறை உட்காரச் சொன்ன போதும் ஸ்ரீனிவாசன் உட்காரவில்லை.

‘‘கீதாஞ்சலி தனக்கும் உனக்கும் தொடர்பிருப்பதாகக் கூறி சிங்கப்பூர் மாப்பிளையைச் செய்ய மறுக்கிறாளாம். தாங்கள் வசதியானவர்களாம். பெரிய இடத்தில் செய்யத்தானாம் விருப்பம். இனி என்ன செய்வது அவளின் விருப்பப்படி செய்வோம். ஸ்ரீனிவாசனைக் கேட்டு முடிவைச் சொல்லுங்கோ என்று கூறி விட்டுப் போறார். உனது முடிவைச் சொல்லு’’ என்றார் வைத்திலிங்கம்.

‘‘என்னை நீங்கள் சந்தேகிப்பதை மிகப் பெரிய பாவமாக நான் நினைக்கிறேன். தன் நலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடனேயே நான் உங்களுடன் பழகுகிறேன். அப்படியிருக்க தாங்கள் என்மீது சந்தேகப்பட்டால் இன்றுடன் இப்பாடசாலைக்கு வருவதை நிறுத்திக் கொள்கிறேன்’’.

அதைக் கேட்டுக் கோபமாக ஏசினார் வைத்திலிங்கம்; ‘‘ஒருவன் தவக் கோலத்தில் மறைந்து கொண்டு தீய செயல்களைச் செய்வதும், அதை மறைக்கப் பொய்யான வார்த்தைகளைக் கூறுவதும் வேடனொருவன் புதரில் மறைந்திருந்து பறவைகளை வலை வீசிப் பிடிப்பதைப் போன்றது’’.

‘‘ஐயா, நீங்கள் இப்படிப் பேசுவீர்களென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. பொய் பேசுவது மனிதர்களுக்கு அழகல்ல. நான் ஓர் ஆசிரியன். பொய் பேசினால் கடவுள் கூட என்னை மன்னிக்க மாட்டார். கீதாஞ்சலியை விரும்புவதை நான் ஏன் மறைத்தல் வேண்டும். காதலிப்பது என்ன கொலை செய்வதைப் போன்ற குற்றமுடையதா...? எனது மனம் உறவுகளை நாடவில்லை. இரண்டு தினங்களுக்கு முன் என்னைச் சந்தித்த கீதாஞ்சலி தன்னைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்திக் கேட்டாள். நான் மறுத்து விட்டேன். என்மீது எல்லோரும் அன்புள்ளவர்கள். எனவே அவர்கள் இப்படியாகச் சுவரில் எழுதியிருக்க மாட்டார்கள். கீதாஞ்சலி தான் எழுதியிருப்பார்கள். இன்று எனக்குச் சோதனை நாள். நான் வணங்கும் மகா கணபதி இச்சிக்கலைத் தீர்த்து வைப்பார்’’.என்று கூறிவிட்டுச் ஸ்ரீனிவாசன் சென்று விட்டார்.

அன்று மாலை கடவுள் ஆசிரியை ஸ்ரீனிவாசனைத் தேடி வந்தார். அவர், அவரை அன்புடன் ஸ்ரீ ன்றே அழைப்பார். கடவுள் வாத்தியாரில் அளவுக்கதிகமான அன்பு வைத்திருந்த ஸ்ரீனிவாசன் அவரைக் கண்டதும் எழுந்தார். அவரது முகம் அளவுக்கதிகமான கவலையால் வாடி இருந்தது.

ஸ்ரீ, துன்பம் வரும் போது தைரியமாக இருத்தல் வேண்டும். நீங்கள் தவறாக நடக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் பெரியவர் இதை உணரத் தவறி விட்டார். விரைவில் அவர் தனது தவறை உணர்ந்து கொள்வார். கீதாஞ்சலி நல்லவள். காதலிப்பது தவறென்று நான் சொல்ல மாட்டேன். ஏனென்றால் நான் அவரை விரும்பித் தான் திருமணம் செய்தேன். கீதாஞ்சலி உங்களை அளவுக்கதிகமாக நேசிக்கிறாள். பாவம் அவள். உங்கள் மனதை மாற்றிக் கொண்டால் என்ன?

அம்மா, உங்களை நான் கடவுளாகத் தான் நினைக்கிறேன். எனக்கு அந்த ஆசை இல்லை''.

''நான் வற்புறுத்தவில்லை. ஆறுதலாக யோசித்துப் பாருங்கோ'' என்று கூறிவிட்டுச் சென்றார் கடவுள் வாத்தியார்.

வைத்திலிங்கம் கீதாஞ்சலியின் வீட்டுக்குச் சென்று கீதாஞ்சலியிடம் விசயத்தைச் சொன்னார். கீதாஞ்சலி தனது தவறை ஒப்புக் கொண்டாள். வைத்திலிங்கம் மகா கணபதி ஆலயத்திற்கு வந்தார். அரசமரத்தின் கீழ் ஸ்ரீனிவாசன் அமர்ந்திருந்தார். வைத்திலிங்கத்தைக் கண்டதும் அவர் எழுந்து வந்தார்.

''மகனே ஆராயாமல் நான் தான் தவறாக உன்னைப் புரிந்து கொண்டு கடும் வார்த்தைகளைப் பிரயோகித்து விட்டேன். என்னை மன்னித்துக் கொள்'' என்றார் வைத்திலிங்கம்.

''சுவாமியார்'' பலமாக அழைத்தாள் கீதாஞ்சலி.

சுவாமியார் திடுக்கிட்டு யோசனையில் இருந்து மீண்டார்.

''பல வருடங்களுக்குப் பின் சந்திக்கிறோம். என்றும் நீ நன்றாக இருக்க எனது ஆசிகள் உனக்கு உதவும்'' என்று கூறிவிட்டுக் கண்மூடினார் ஸ்ரீனிவாசன்.

274. தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

தவக் கோலத்தில் மறைந்து கொண்டு ஒருவன் தீய செயல்களைச் செய்வது புதரில் மறைந்திருந்து வேடன் வலை வீசிப் பறவைகளைப் பிடித்தலைப் போன்றது.

## எண்ணி வருத்தும்

கீதாஞ்சலி ஸ்ரீனிவாசனைப் பார்த்துக் கொண்டு நின்றாள். பஞ்சு போல நரைத்த தலை முடி. அதே நிறத்தையுடைய நீண்டதாடி. மேலாடை இல்லாத திறந்த நெஞ்சு. அவளுக்குப் பழைய நினைவு வந்தது. தான் கொண்ட ஒரு தலைக் காதலால் அவருக்குண்டான அவமானத்தை நினைத்துப் பார்த்தாள். அவளுக்கு வெட்கமாக இருந்தது. அவளின் வீடு பாடசாலைக்கு மிக அருகாமையிலேயே இருந்தது. பொழுது சாயும் நேரம் மெதுவாக வந்து யாரும் காணாது வேறொருவர் எழுதுவதைப் போல எழுத்தை மாற்றி எழுதினாள். எனினும் அதை ஸ்ரீனிவாசன் கண்டு பிடித்து வைத்திலிங்கத்திடம் சொல்லி விட்டார். வைத்திலிங்கம் அதைக் கீதாஞ்சலியின் தந்தையிடம்

சொன்னார். அதனாற் கோபங் கொண்ட கீதாஞ்சலியின் தந்தை பல முறை வைத்திலிங்கம் தடுக்கத் தடுக்க அடித்து விட்டார்; ‘‘ஐயா, நீங்கள் பொய் சொல்ல மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஒரு பெண் துணிந்து இப்படிச் செய்ததை நினைக்க எனக்கு வெட்கமாகவும் அவமானமாகவும் இருக்கிறது. தயவு செய்து இதைப் பற்றி யாரிடமுஞ் சொல்லி விடாதீர்கள்’’. என்று அவர் கெஞ்சிய வார்த்தைகள் கீதாஞ்சலியின் காதுகளில் ஒலித்தது. அப்பொழுது குழந்தைத் தனத்தாலும், ஸ்ரீனிவாசன் மேலிருந்த காதலாலும் அப்படிச் செய்து விட்டாள். இப்பொழுது அதை நினைக்க அவளுக்கு வெட்கமாக இருந்தது.

தனபாலசிங்கம் அவளது தகப்பனாரின் சகோதரனின் மகன். வருடத்திற்கு ஓரிரு தடவைகள் ஊர்ப்புதினங்களைப் பற்றி அவளுக்குக் கடிதம் எழுதுவார். மகா கணபதி ஆலயத்தின் திருவிழாக் காலங்களில் வீபூதி அனுப்புவார். அத்துடன் புனருத்தாரண வேலைகளுக்கு அவ்வப் போது பணம் கேட்டு கடிதம் எழுதுவார். அவர் எழுதும் கடிதங்களில் ஸ்ரீனிவாசகன் சுவாமிகளது பெருமைகளைப் பற்றியும் எழுதுவார்.

‘‘சுவாமி’ மெதுவாக அழைத்தாள் கீதாஞ்சலி.

‘‘மெதுவாக கண்விழித்தார் சுவாமிகள். அவர் எதுவும் பேசவில்லை. அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார்; ‘‘ஐம்பது வருடங்களுக்குப் பின்பு ஊருக்கு வந்திருக்கிறேன். தங்களின் பக்தையான என்னுடன் நான்கு வார்த்தைகள் கதைக்கக் கூடாதா...?

மீண்டும் புன்னகைத்தார் சுவாமிகள்; ‘‘தனபாலசிங்கம் உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பத்தினரைப் பற்றியும் சொல்வார். அத்துடன் நீங்கள் மகா கணபதிக்கு அனுப்பும் பணத்தில் இருந்து உங்களது வாழ்வின் செழுமையைப் பற்றி நன்கறிவேன். பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் நல்ல நிலையில் இருப்பதாகச் சொன்னீர்கள். இதை விட ஒரு மனிதனுக்கு என்ன தேவை? தன்னுடைய சொந்த சுக வசதிகளை மட்டும் கவனித்துக் கொண்டு நீங்கள் வாழவில்லை. பொது வாழ்வு வாழும் உங்களுடன் எப்பொழுதும் இறைவன் கூட இருப்பான்’’ என்றார் சுவாமிகள்.

‘‘எனக்கொரு ஆசை...’’ என்று கூறி விட்டு நிறுத்தினாள் கீதாஞ்சலி.

‘‘இந்த வயதில் உனக்கு ஆசைகள் வரக்கூடாது. உலக வாழ்வின் இறுதிப் படிகளில் இருக்கின்றவர்கள் மனதில் எழும் ஆசைகளை முற்றாக அடக்குதல் வேண்டும். ஆசைகளால் தான் பிறவி வருகிறது. பிறப்பே துன்பமானது’’.

‘‘உலக ஆசைகள் எவையும் எனக்கு வரவில்லை. சுவாமிக்குக் காணிக்கையாக ஒரு தங்கச் சங்கிலி தர விரும்புகிறேன்’’.

சுவாமியார் பலமாகச் சிரித்தார்; ‘‘நாம் பற்றறுத்தோம் என்று புறத்தே கூறிக் கொண்டு அகத்தே ஆசைகளை வளர்த்துக் கொண்டு வாழும் பொய்

ஒழுக்கமுடையோருக்கு நாம் என்ன செய்தோம், என்று வருந்தக் கூடிய துன்பங்கள் பல உண்டாகும். அதனால் நான் உணவைக் கூட பெற்று உண்ண விரும்புவதில்லை. அவை தான் மனிதனின் ஆசைகளுக்குக் காரணம். உணவின் சுவை, மதுவின் சுவை, பெண்ணின்சுவை இப்படியான சுவைகள் மனிதனில் தவ வாழ்வைக் கெடுத்து விடும்’’.

‘‘தெய்வத்திற்குக் கொடுக்கும் காணிக்கையாகவே நான் நினைக்கிறேன்’’.

‘‘தெய்வத்திற்கு ஏன் காணிக்கை, நாய்க்குப் பொன்னைப் பொருளை பணத்தைக் கொடுத்துப் பாருங்கள். ஒரு கவளம் சோறு கொடுத்தால் தான் அது வாலை அசைக்கும். நான் உடுத்தியிருக்கும் உடைகளையே பாரமாக நினைக்கிறேன். அதை களைந்தெறிய முடியாமையினால் அணிந்திருக்கிறேன்.

அப்பொழுது கீதாஞ்சலி எதையோ சொல்ல வாய்திறந்தாள். சுவாமியார் அவளைப் பேசவிடாது தொடர்ந்து சொன்னார்; நினைவுகளுள் கூடக் களங்கப்படக் கூடாது. உனது தங்கச் சங்கிலியை வைத்துப் பேண வேண்டும். அதைக் காணும் போது உனது ஞாபகம் வரும். இதெல்லாம் ஒரு தவசிக்குத் தேவையில்லாத விடயங்கள். இதைக் கொண்டு போய் யாராவது திருமணமாகாது இருக்கும் பெண்ணுக்குக் கொடு’’ என்றார்.

‘‘இந்த ஊரில் எனக்கு யாரையும் தெரியாது. யாருக்காவது உதவி செய்ய வேண்டுமானாற் செய்கிறேன். யாரென்று கூறுங்கள்’’ என்று கேட்டாள் கீதாஞ்சலி.

‘‘அதைத் தனபாலசிங்கத்திடம் கேள். இந்தரப் பிரபஞ்சத்தில் நன்மை செய்வோரின் தொகை வர வரக் குறைந்து கொண்டே செல்கிறது. பாமரர்களாகிய பல பொது மக்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கி அல்லற்படுகிறார்கள். அவர்களில் ஒரு சிலருக்காவது செய்யும் உதவி இறைவனுக்குச் செலுத்தப்படும் காணிக்கையாகும்’’. என்றார் சுவாமியார். கீதாஞ்சலி சில கணங்கள் சுவாமியாரைப் பார்த்தாள். பின்பு அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

275. பற்றுஅற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றுஎற்றுஎன்று
ஏதம் பலவும் தரும்.

பற்றுக்களை அறுத்து விட்டோம் என்று சொல்கின்றவர்களின் பொய் ஒழுக்கம், என்ன செய்தோம் என்று எண்ணி எண்ணி வருந்தும்படியான துன்பங்கள் பலவற்றைத் தரும்.

## கொடியவர்கள்

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தனபாலன், இரண்டு வாரங்களின் பின் சுகமாகி வீடு திரும்பியிருந்தான். அவனை எக்காரணம் கொண்டும் மது வகைகளைக் குடிக்கக் கூடாதென்றும், கொழுப்புக் கூடிய இறைச்சி வகைகளைச் சாப்பிடக் கூடாதென்றும், வைத்தியர்கள் கூறியிருந்தனர்.

வீட்டுக்கு வந்த தனபாலனால் முன்பு போல எழுந்து நடமாட முடியவில்லை. வேலை செய்யக் கஷ்டமாக இருந்தது. அதனால் மிகவும் வருந்தினான் தனபாலன். அவனைப் பார்ப்பதற்காகக் கிருஸ்ணனும் புஸ்பநாதனும் வந்தனர்.

‘‘என்னாலை எழும்பி நடக்கேலாமற் கிடக்கு. உடலை அசைக்க முடியேல்லை. சாப்பிடவும் முடியாமல் இருக்கு. சின்னத்தம்பி தான் இல்லாதது பொல்லாதுகளைச் சுவாமியாருக்குச் சொல்லி எனக்குச் செய்வினை செய்து போட்டான்’’ என்றான் தனபாலன்.

‘‘அப்பிடித்தான் நானும் நினைக்கிறன். ஒரு நாளைக்கு ஆறேழு போத்தல் கள்ளுக் குடிச்சிட்டு உடும்பும் அணிலும் அடித்துச் சுட்டுத் தின்னுற சின்னத்தம்பி இப்ப வீபூதிப் பூச்சோடை சுவாமியாரின் அருகிலேயே இருக்கிறான். அவன் சொல்லி இருப்பன்’’ என்றான் கிருஸ்ணன்.

‘‘என்ன இருந்தாலும் நீ கோயிற் குரங்குகளைப் பிடித்து வெட்டிப் பங்கு போட்டது எவ்வளவு பிழை’’ சாமியாற்ரை செல்லப் பிள்ளைகள் அவை. முன்பு சாமியாரும் கோயிற் காரரும் குரங்குகள் காட்டுக்கு ஓடீற்றுது. என்று நினைத்து கொண்டிருந்தவை. சின்னத்தம்பி சொன்னாப் பிறகு தான் அவைக்கு விபரம் தெரிந்தது. சுவாமியார் சக்தி மிக்கவர். அவர் சொல்லுறத்தை யாரும் தட்ட மாட்டார்கள். தட்டினால் அவற்றை வாழ்வு அதோ கதி தான். இல்லாட்டில் பெருங்கோடீஸ்வரனான மணிவண்ணன் தனது தம்பியாருக்கு சேனாதிராசாவின் மகளைச் செய்யச் சொன்னவுடனை மறு பேச்சின்றிச் செய்வனே. சேனாதிராசா ஏழை மட்டுமில்லை. ஒழுங்கில்லாத ஒரு குடும்பம்...’’ என்றான் புஸ்பநாதன்.

‘‘சுவாமியாரை பெரியாள் என்று சொல்லிக் கும்பிர்றவங்களெல்லாம் நல்லாயிருக்கிறாங்கள். மணிவண்ணன் தனபாலசிங்கம் அதிபர் தணிகாசலம் போன்றவையைப் பார். ஓகோ வென்றிருக்கினை அதிபர் சுவாமியாரை வளைச்சு வைத்திருக்கிறத்தாலை எவ்வளவு பயனடைகிறார். வெளிநாடுகளிலை இருந்து வாறவங்கள் அள்ளிக் கொடுக்கிறாங்கள்’’ என்றான் கிருஸ்ணன்.

‘‘நாங்கள் தான் பேய்வேலை பார்த்திட்டம். பேசாமல் சின்னத்தம்பியைப் போல சுவாமியாரைக் கும்பிட்டுக் கொண்டு கோயிலைக் கூட்டிக் கொண்டிருக்கலாம். இனி என்னென்ன நடக்கப் போகுதோ தெரியாது’’ என்றான் புஸ்பநாதன்.

தனபாலனுக்குப் பயமாக இருந்தது. சுவாமியார் தன்னைக் கொல்லப் போகிறார் எனப் பயந்தான்.

‘‘இனி யோசித்து என்ன பிரயோசனம். உனக்கு வாய்க்கிளாலும் மூக்குக்குள்ளாலும் இரத்தம் வந்தன்றே நான் சுவாமியாற்ரை வேலை தான் என்று தீர்மானிச்சிட்டன் திடலிலை ஞானபண்டிதன் என்றொரு சுவாமியார் இருக்கிறார். செய்வினை சூனியம் எடுப்பதில் மகா கெட்டிக்காரன். அவரிட்டைப் போவம் வா’’ என்றான் கிருஸ்ணன்.

‘‘மூவரும் ஞானபண்டிதன் சுவாமியாரிடஞ் சென்றனர். ஞானபண்டிதன் அவர்களை அன்புடன் வரவேற்றார். அவரின் பின்னால் பெரியதொரு நாய் வாகனத்தின் மேல் வைரவ சுவாமியார் இருந்தார். வைரவ சுவாமியாரின் கீழ் இருந்த வீபூதி மடலை எடுத்து மூவருக்கும் வீபூதி கொடுத்தார் ஞானபண்டிதன். மூவரும் வீபூதியைப் பூசினார்; ‘‘மகனே உங்களுக்கு உதவுவது மிகவும் கஷ்டமானது. எடுக்க முடியாதபடி சூனியம் செய்யப்பட்டுள்ளது. தாடிக்காரன் ஒருவனின் பொருளைக் களவாடியுள்ளீர்கள். மகா கெட்டவனான அவன் தண்ணீரில் செய்திருக்கிறான். அவனது கையாள் உனது பானத்தில் அதைக் கலக்கியுள்ளான்’’.

‘‘நான் அப்பவே சொன்னனான் தானே. சுவாமியார் செய்து சின்னத்தம்பீற்ரைக் கொடுத்திருக்கிறார். அவன் தான் கள்ளிலை கலந்திருக்கிறான்’’ என்றான் புஸ்பநாதன்.

தனபாலனுக்குப் பயமாக இருந்தது; ‘‘சுவாமி மகா கணபதி ஆலயத்தில் இருக்கிற சுவாமி தான் செய்திருக்கிறார். எப்படியாவது எடுத்து விடுங்கள். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை’’ என்றான் தனபாலன்.

சுவாமியார் கண்களை மூடினார். அவரது தலை ஆடியது. முகம் விகாரமடைந்தது. வாய்புலம்பியது. தனது இரு கைகளையும் அசைத்தார். தனது நெஞ்சில் குத்தினார். மூவரும் பயத்துடன் அவரைப் பார்த்துக் கொண்டு நின்றனர். தீடீரென்று அலறியபடி எழுந்து ஓடினார்.

பின் வந்து தனது ஆசனத்தில் அமர்ந்த சுவாமியார்; மகனே உன்மீது கொடியவனை ஏவி விட்டிருக்கிறார். அவரை விரட்ட ஏராளமான பொருட் செலவு ஏற்படும். பதினையாயிரம் ரூபாவுக்கு மேல் செலவாகும்’’ என்றார்.

தனபாலனுக்கு மூச்சு நிற்பதைப் போல் இருந்தது; ‘‘ பரவாயில்லை எப்ப வர்றது என்று சொல்லுங்கோ’’ என்று கேட்டான் கிருஸ்ணன்.

‘‘நாளைக்கு அமாவாசை. நாலு நாள் கழித்து வாருங்கோ. நாலு நாட்களும் பூசைக்கு வரவேண்டும். தொடர்ந்து ஒரு மாதத்திற்குப் பூசை செய்ய வேண்டும்’’ என்றார் ஞானபண்டிதன்.

வெளியே வந்த தனபாலன் கேட்டான்; ‘‘நான் இவ்வளவு பணத்திற்கும் எங்கை போவது’’.

‘‘அப்ப சாகப்போறியே’’ என்று கேட்டான் கிருஸ்ணன்.

வீட்டுக்கு வந்த தனபாலனுக்கு பயமாக இருந்தது. அதனால் தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தான்.

‘‘நான் எல்லாம் கேள்விப்பட்டனான். ஞானபண்டிதன் மக்களை ஏமாற்றுபவன். மக்களிடம் பணம்பறிப்பவன். அவனை நம்பிக் கெடாதே. மனதில் உழைக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு தவசிகளைப் போல் வேடம் தரித்து வாழ்கின்றவர்களைப் போல இரக்கமற்றவர்கள் வேறு எவரும் இல்லை. அவர்கள் தந்திரமாகப் பேசி மக்களை மயக்கி பணம் பறித்து சுகபோகமாக வாழ்கிறார்கள். செய்வினை சூனியம் என்று எதுவும் இல்லை. போலி வேடதாரிகள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் இரக்கமில்லாதவர்கள். அவர்களிடம் நம்பிக்கை வைக்கக்கூடாது. கடவுளிடம் நம்பிக்கை வை. நோய் நொடிகள் யாவும் இருந்த இடம் தெரியாமல் பறந்து விடும்’’ என்றார் தணிகாசலம்.

தனபாலனுக்கு ஏமாற்றமாக இருந்தது; ‘‘அண்ணை எனக்குப் பயமாக இருக்கிறது.’’ என்றான்.

‘‘காரணமில்லாமல் ஏன் பயப்படுகிறாய்? நோய் வருவது இயற்கை. இன்று மாலை மகா கணபதி ஆலயத்திற்கு வா. பில்லி சூனியத்தில் உள்ள நம்பிக்கையை விட்டு விட்டு மகா கணபதி மீது நம்பிக்கை வை. உனது துயரங்கள் யாவும் தீரும்’’ என்றார் தணிகாசலம்.

தனபாலன் சில கணங்கள் பேசாமல் இருந்தான் பின் எழுந்து; ‘‘நான் வாறன் அண்ணை’’ என்று சொல்லி விட்டு நடந்தான்.

276. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

மனதில் உள்ள ஆசைகளைத் துறக்காமல், துறந்தவர்களைப் போல் வஞ்சனைகள் செய்து வாழ்பவனைப் போன்ற கொடியவர்கள் வேறு எவரும் இல்லை.

## உளம் இருண்டோர்

‘‘தணிகாசலம் அண்ணை திடலிலை ஞானசம்பந்தன் என்றொரு சுவாமியார் இருக்கிறாராம். பில்லி, சூனியம், செய்வினை எடுப்பதில் வல்லவராம். தனபாலனுக்கு யாரோ செய்வினை செய்திருக்கிறதாய்ச் சொன்னவராம். அதை எடுக்க ஐம்பதினாயிரம் ரூபா வரை செலவாகுமென்று கதைக்கினை. பாவம் தனபாலன்’’ என்றான் சின்னத்தம்பி.

‘‘கோயிலடிலை இருந்து கொண்டு வீண் கதைகள் கதைக்கக் கூடாது. ஒவ்வொருவனும் செய்யிற பாவங்களை அனுபவிக்கத்தானே வேண்டும். மனிதர்கள் தான் துன்பங்களைத் தேடுகிறார்களே தவிர துன்பங்கள் மனிதரைத் தேடிச் செல்வதில்லை. அடுத்தவனின் பொருள்களுக்கு ஆசைப்படாமலும் அடுத்தவனைக் கெடுக்க வேண்டும் என்றும் நினைக்காமலும் இருந்தால் துன்பங்கள் ஒரு போதும் எம்மை வந்தடையாது’’.

சின்னத்தம்பிக்கு அவர் சொன்னது விளங்கவில்லை; ‘‘பல தீமைகளைச் செய்தாலும் அவனை நினைக்கப் பாவமாக உள்ளது. என்னைப் போல எங்களது சாமியாரை வந்து கும்பிட்டு, மகா கணபதியையும் கும்பிட்டால் துன்பமெல்லாம் போயிடும்’’.

‘‘அதை நீ அவனுக்குச் சொல்லியிருக்கலாம் தானே...’’

‘‘நான் சொன்னனான் ஞானபண்டிதன் சுவாமியார் சொன்னவரதும் எங்கடை சுவாமியார் தான் குரங்குகளைப் பிடித்துக் கொன்றதற்காகச் செய்வினை செய்தவர் என்று’’.

தணிகாசலம் சிலகணங்கள் பேசாமல் இருந்தார் பின் சொன்னார்; ‘‘தனபாலன் என்னட்டையும் வந்தவன். ஞானபண்டிதனைப் பற்றியும் செய்வினை சூனியங்களைப் பற்றியும் சொன்னனான். காவி உடை தரித்து வீபூதி பூசி உருத்திராட்ச மாலை அணிந்தவர்னளெல்லாம் தவசிகள் அல்ல. அவர்கள் தவக் கோலம் பூண்டு மக்களை ஏமாற்றிப் பிழைக்கிறார்கள். அவற்றைச் சம்பந்தப் பட்டவர்கள் உணரும் வரை எம்மால் எதுவும் செய்ய முடியாது. செய்வினை சூனியம் பில்லி என்று சொல்பவற்றை நான் நம்ப மாட்டேன். ஒருவனைக் கெடுக்க வேண்டுமென்று செய்வினை சூனியம் செய்வதானால் உலகில் ஒருவரும் வாழ முடியாத ஒரு நிலை தான் ஏற்படும். பின் உலகில் செய்வினை செய்பவர்களும் செய்விப்பவர்களும் தான் இருப்பார்கள். இவையெல்லாம் மூடக் கொள்கைகள். குன்றிமணியின் ஒரு பகுதியில் காணப்படும் செம்மை நிறம் போல, வேடத்தால் செம்மையானவர்கள் போலத் தம்மைக் காட்டிக் கொண்டாலும், குன்றிமணியின் மறுபக்கத்தில் உள்ள கறுத்த மூக்கினைப் போல மனம் இருண்ட தன்மையுடைய பலர் உலகில் வாழ்கிறார்கள். அவர்கள் கல்வியறிவில்லாதவர்களையும் பகுத்தறிவில்லாதவர்களையும் ஏமாற்றிப் பிழைக்கிறார்கள். தொடர்ந்து ஈவிரக்கமில்லாது உயிர்களை வருத்தி தீய செயல்களில் ஈடுபடும் தனபாலனுக்கு எப்படித் துன்பம் வராமற் போகும். உனக்கு அவனின் மேல் அக்கறை இருந்தால் போய் அவனைக் கோயிலுக்குக் கூட்டிவா’’ சென்றார் தணிகாசலம்.

சின்னத்தம்பி தனபாலனுக்குப் புத்திமதி சொல்வதற்காகத் தனபாலனின் வீட்டுக்குச் சென்றான். தனபாலனும் கிருஸ்ணனும் புஸ்பநாதனும் அங்கே இருந்தனர். தனபாலன் நெற்றி நிறைய வீபூதி பூசியிருந்தான். அவன் சின்னத்தம்பியை கண்டு விட்டு மறுபக்கம் திரும்பினான்.

''தனபாலு செத்துப் போனானோ என்று பார்க்க வந்தனியே...?'' புஸ்பநாதன் கேட்டான்.

சின்னத்தம்பிக்கு அவனது வார்த்தைகள் பிடிக்கவில்லை. இருந்தாலும் அதைப் பொறுத்துக் கொண்டு சொன்னான்; ''உனக்கு ஒரு வருத்தமும் இல்லை. வீனாய்ப் போலிச் சாமியாரிடஞ் சென்று மந்திரித்து நூல்கட்டி செய்வினை எடுப்பதற்கென்று ஆயிரக்கணக்கில் பணம் செலவு செய்வதை விட்டு விட்டு மகா கணபதி ஆலயத்துக்கு வா'' என்றான்.

புஸ்பநாதன் ஆத்திரத்டன் ஏதோ கூற முற்பட்டான். அவனைப் பேச வேண்டாம். என்று கையால் சைகை காட்டிய கிருஸ்னன்; மெதுவாக உனக்கு ஆட்களைப் பற்றி விளங்காது. சின்னத்தம்பி ஏதோ ஓர் உள்நோக்கத்தோடை தான் வந்திருக்கிறான். அவனை எதிர்த்துப் பேசாதை. பிறகு உனக்கும் தனபாலன்ரை நிலை தான் ஏற்படும்'' என்று காதுக்குள் குசுகுசுத்தான்.

அதக் கேட்கப் புஸ்பநாதனுக்குப் பயமாக இருந்தது; ''நீ சொல்வதும் சரி தான் சின்னத்தம்பி எங்கடை ஸ்ரீனிவாசன் சாமியாரை விடக் கெட்டிக்காரன் யார் இருக்கிறார்கள். தனபாலன் ஆசைப்பட்டு விட்டான் என்பதற்காக ஞானபண்டிதனிடம் கூட்டிச் சென்றேன். வாற வெள்ளிக்கிழமை மகா கணபதி ஆலயத்திற்குக் கூட்டி வாறன்'' என்றான் புஸ்பநாதன்.

''கட்டாயம் கூட்டியாருங்கோ சுவாமியார். திருநீறு பூசிவிட்டால் எல்லாம் சுகமாகி விடும்'' நான் வாறன்'' என்று கூறிவிட்டுச் சென்றான் சின்னத்தம்பி.

''உனக்குக் கதைக்கப் பேசத் தெரியாது. தீயவர்கள் சொல்வதற்கு ஆமாப் போட வேண்டும். இப்ப அவன் சொல்லுறபடி தான் சுவாமியார் சொல்வார்''. என்றான் கிருஸ்னன்.

''செய்வினை சூனியம் செய்பவர் தான் நல்லவர். அதை எடுத்துச் சுகமாக்குபவர் கெட்டவர் என்று சின்னத்தம்பி சொல்லி விட்டுப் போறான். தான் செய்ததை ஞானபண்டிதன் சுவாமியார் எடுத்து விடுவார் என்ற பயத்தால் தான் ஸ்ரீனிவாசன் சுவாமிகள் சின்னத்தம்பியை இங்கே அனுப்பியிருக்கிறார். நான் ஏமாற மாட்டன்'' என்றான் தனபாலன்.

277. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கில் கரியார் உடைத்து.

புறத்தில் குன்றிமணிபோல் செம்மையானவராகக் காணப்பட்டாராயினும் மறு புறத்தில் குன்றிமணியின் மூக்குப் போல் அகம் கறுத்திருப்பவர்களும் உலகில் உண்டு.

## போலிகள்

அன்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் தனபாலனை ஞானபண்டிதன் வரச் சொன்னமையால் விடியுமுன் தனபாலனும் புஸ்பநாதனும் கிருஸ்ணனும் ஞானபண்டிதனின் வீட்டுக்கு வந்து விட்டனர். ஞானபண்டிதனின் உதவியாளரான கோபாலன் வைரவர் கோயிலைக் கூட்டிக் கொண்டிருந்தான். அதைக் கண்ட புஸ்பநாதன்; ‘‘விளக்குமாற்றைத் தா தம்பி நான் கூட்டுறன்’’ என்று சொல்லி உதவியாளர் கூட்டிக் கொண்டிருந்த விளக்குமாற்றை வாங்கிக் கூட்டினான்.

அப்பொழுது அங்கே ஞானபண்டிதன் வந்தார். கிருஸ்ணனும் தனபாலனும் எழுந்து நின்றனர்; ‘‘வேட்டி கொண்டு வந்தாயா?’’ என்று ஞானபண்டிதன் கேட்டார்.

‘‘ஓம் சாமி’’ என்றான் தனபாலன்.

‘‘கிணற்றடியில் போய்த் தோய்ந்து விட்டு வா’’ என்றான் ஞானபண்டிதன்.

‘‘விடியத் தோய்ந்து விட்டுத்தான் சுவாமி வந்தனான்’’ என்றான் தனபாலன்.

‘‘அங்கை தோய்ந்தாலும் பரவாயில்லை. கோயிற்கிணற்றில் தோய வேண்டும்’’ என்றார் ஞானபண்டிதன்.

‘‘வீட்டில் தோய்ந்தனி தானே கோயிற் கிணற்றில் நான்கு வாளி அள்ளித் தோய். சுவாமியாரும் தோய வேண்டும்’’ என்றான் கோபாலன்.

கிருஸ்னன் தனபாலனைக் கிணற்றடிக்கு அழைத்துச் சென்று தோய வார்த்தான். அவன் தோய்ந்து விட்டு வந்ததும் கோபாலன் திருநீறும், சந்தணமும் குங்குமமும் கொண்டு வந்து, தனபாலனது உடலெங்கும் திருநீற்றைப் பூசினான். பின் சந்தணத்தையும் குங்குமத்தையும் கொடுத்து விட்டுச் சென்றான்.

‘‘தனபாலனைக் கூட்டிக் கொண்டு போய் மண்டபத்தில் இருத்தி விட்டுக் கும்பத்தை வை’’ என்று கோபாலனுக்குச் சொல்லி விட்டு ஞானபண்டிதன் குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் சென்றார்.

தனபாலன் மண்டபத்தில் சென்று அமர்ந்தான். கோபாலன் மண்டபத்தில் கோலம் போடத் தொடங்கினான். கிணற்றடியில் ஞானபண்டிதன் தேவாரம்

ஓதிய படி குளித்துக் கொண்டிருந்தார். அவர் தேவாரம் ஓதும் சத்தம் பெரிதாகக் கேட்டது. கோலம் போட்ட கோபாலன் தனபாலனையும் அழைத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றான். ஞானபண்டிதன் தலையின் மேல் கைகளைக் குவித்தபடி தேவாரம் பாடிக் கொண்டிருந்தார். ஒருவன் கிணற்றில் இருந்து நீரை அள்ளி அவரது சிரசின் மேல் ஊற்றிக் கொண்டிருந்தான்.

கோபாலன் கிணற்றடியில் இருந்த மஞ்சள் மாவை எடுத்து ஒரு பாத்திரத்தில் கரைத்து ஏதோ வாய்க்குள் முணுமுணுத்தபடி அவரின் தலையில் ஊற்றினான். பின் செம்பில் இருந்த பாலை எடுத்து ஊற்றினான். கிணற்றுக் கட்டில் இருந்த அறுகம் புல்லை எடுத்து ஞானபண்டிதனின் தலையில் வைத்தான். பின் நீரை ஊற்றினான்

ஞானபண்டிதன் குளித்து முடித்ததும் ஈரத்தைத் துவட்டாது வேட்டியைக் கட்டிக் கொண்டு மண்டபத்திற்கு வந்து அங்கிருந்த மான்தோலில் அமர்ந்தார். கோபாலன் தூபத்தட்டை எடுத்து நெருப்புத்தணலை அள்ளிப் போட்டு சாம்பிராணித் தூளைப் போட்டான். அதிலிருந்து வந்த புகை ஞானபண்டிதனைச் சில கணங்கள் மறைத்தது. மண்டபத்தில் எரிந்து கொண்டிருந்த அக்கினிக் குண்டத்திற்குக் கோபாலன் சுள்ளிகளைப் போட்டு விட்டு நெய்யை ஊற்றினான். அது ‘கறகற’ என்ற சத்தத்துடன் பிரகாசமாக எரிந்தது.

ஞானபண்டிதன் திருநீற்றை எடுத்து உடலெங்கும் குறி வைத்தார். பின் நெற்றியில் சந்தணத்தை வைத்து விட்டு குங்குமத்தை வைத்தார். அவரது நீண்ட தாடியாலும் தலையாலும் சொட்டுச் சொட்டாக நீர் நிலத்தில் விழுந்து கொண்டிருந்தது; ‘‘தனபாலனிடம் எப்படியும் ஐம்பதினாயிரம் ரூபா பெற வேண்டும்’’ என்று நினைத்தவாறு பூசையைத் தொடங்கினார் ஞானபண்டிதன்.

278. மனத்தது மாசுஆக மாண்டார் நீராடி
மறைந்துஒழுகு மாந்தர் பலர்.

மனதில் ஆசையை வளர்த்துக் கொண்டு தவக் கோலத்தால் மாண்பு பெற்றவர்களைப் போல் நீராடி வஞ்சனையோடு வாழ்பவர்கள் பலர் உலகில் இருக்கிறார்கள்.

## நேரும் வளைவும்

ஐம்பதினாயிரம் ரூபா வரை செலவு செய்து தனபாலனுக்குச் செய்வினை எடுத்தார் ஞானபண்டிதன். ஆரம்பத்தில் தனபாலனுக்கு வருத்தம் சுகமானது போல இருந்தது. பல வகையான பச்சிலைகளை இடித்துச் சாறு பிழிந்து அதைப் பருகச் சொல்லிக் கொடுத்தார் ஞானபண்டிதன். தனபாலன் அதை வாங்கிக் குடித்தான். அக் கசாயம் சரியான கசப்பாக இருந்தது. அவனால் அதைக் குடிக்க முடியவில்லை. எனினும் ஞானபண்டிதனின்

வற்புறுத்தலுக்காகக் குடித்தான். குடித்த சில நிமிடங்களில் அவனுக்கு வயிற்றைப் புரட்டியது. வயிற்றுக்குள் ஏதோ செய்தது. அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வாந்தியெடுத்தான். அவனுக்கு மயக்கம் வருவது போல இருந்தது. ஞானசம்பந்தன் எழுந்து வந்து ஒரு தடியால் அவனது வாந்தியைக் கிழறினார். அதற்குள் கட்டி போல ஒரு துண்டு இருந்தது. அதன் மேல் முள்ளு முள்ளாக இருந்தது. அதைத் தட்டி வெளியே எடுத்த ஞானசம்பந்தன்; ‘‘இது தான் உனக்குக் கரைச்சல் கொடுத்தது. யாரோ உனக்குச் செய்வினை செய்து உணவுடன் கலந்து தந்திருக்கிறார்கள். அதை வெளியேற்றத்தான் கசாயம் தந்தனான். இனிச் சுகம் வந்திடும் என்றார்.

‘‘இதை ஆர் செய்திருப்பார்கள்’’ என்று கேட்டான் தனபாலன்.

ஞானபண்டிதன் ஒரு வெற்றிலையை எடுத்து அதில் தேங்காய் எண்ணெயை கையாற் தடவினார். பின் தர்ப்பைப் புல்லை எடுத்து கற்பூரத்தைக் கொழுத்தி அதில் தர்பைப் புல்லை எரித்தார். அதன் சாம்பலை வெற்றிலையில் போட்டு வெற்றிலை முழுவதும் அதைப்பூசி விட்டு மேலே தூக்கிப் பிடித்தார். அவரது வாய் மந்திரங்களை முணுமுணுத்தது. சில கணங்களின் பின்; ‘‘கோபாலா இஞ்சை வா... இதைப் பார்’’ என்றார்.

கோபாலன் வந்து வெற்றிலையை உற்று நோக்கினான். பின்; ‘‘மெல்லிய கறுப்பு உருவம் ஒன்று தெரியுதுஇ தலையிலை தலைபடபாகையும் இருக்கு..’’

‘‘வேறை என்ன தெரியுது.....’’ எழுத்தேதாவது தெரியுதா..? என்று கேட்டார் ஞானசம்பந்தன்.

‘‘ம்... சானாத் தெரியுது.. சானா விலை விசிறி வருது..’’ என்றான் கோபாலன்.

‘‘தள்ளு பாப்பம்’’ என்ற ஞானசம்பந்தன்; ‘‘சின்னத்தம்பி தலைப்பாவுடன் வாறான்... எட்ட வீட்டுக்கு வடக்காலை கிணத்து மிதிக்கு பத்தடி தள்ளி ஏதோ தெரியுது... பார் கோபால்’’ என்றார் ஞானசம்பந்தன்.

‘‘எட அங்கையும் வேலை வைச்சிட்டான். அதுகும் எடுக்க வேணும்’’ என்றான் கோபாலன்.

மறு நாள் தனபாலனின் வீட்டுக்கு வந்த ஞானசம்பந்தன் இரவு நடுவீட்டுள் கும்பம் வைத்து கிணற்று மிதிக்கு பத்தடி தூரத்தில் தாட்கப்பட்டிருந்த சங்கை எடுத்தார்.

அதற்குப் பின்பு சிலநாட்கள் சுகமாகியிருந்த தனபாலனுக்கு தீடிரென்று நெஞ்சு வலியேற்பட்டது. செய்வதறியாது தவித்த தனபாலனது மனைவி சாரதா புஸ்பநாதனின் வீட்டுக்குச் சென்று அவனை அழைத்து வந்தாள்.

தனபாலன் துடிதுடிப்பதைக் கண்ட புஸ்பநாதன் சொன்னான்; ‘‘ஞானபண்டிதன் வீட்டை கொண்டு ஆபாவம்’’.

‘‘அங்கை வேண்டாம். ஐம்பதினாயிரத்துக்கு மேலை முடிஞ்சுது.. இனியும் காசு செலவழிக்க முடியாது’’ என்றாள் சாரதா.

‘‘விசர்க் கதை கதையாதை. அவர் கெட்டிக்காரன். வயித்திலை இருந்த செய்வினைக் கட்டியையும், கிணற்றடியில் தாட்ட செய்வினையையும் எடுத்தவர். அங்கை தான் போக வேணும். இந்தக் காலத்திலை காசை செலவு செய்யாமல் எதைச் செய்ய முடியும்’’ என்றான் புஸ்பநாதன்.

‘‘என்ரை காதிலை கழுத்திலையும் ஒன்றுமில்லை’’ அழுதாள் சாரதா.

‘‘இப்ப என்ன செய்யிறது’’ என்று கேட்டான் புஸ்பநாதன்.

‘‘ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவம்..’’ என்றாள் சாரதா. புஸ்பநாதனுக்குக் கோபம் வந்தது. எனினும் அதை வெளிக்காட்டாமல் சொன்னான்; ‘‘அது உங்கடை விருப்பம். செய்வினை எடுத்தாப் பிறகும் ஏவி விட்டிருப்பங்கள்’’.

‘‘கடவுள் தான் எங்களைப் படைச்சவர். அவர் எல்லாருக்கும் நல்லதைத் தான் செய்வார். கடவுள் படைத்த உயிர்களுக்குக் கடவுளால் தான் ஏதாவது செய்ய முடியுமே தவிர மற்றவர்களால் எதுவும் செய்ய முடியாது. கடவுளை நம்பிய எவரும் கைவிடப்பட்டதாக நான் அறியவில்லை. மகா கணபதி மீது பாரத்தைப் போட்டு விட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வோம்’’ என்றாள் சாரதா.

‘‘எதையும் செய்யுங்கோ.. ஆடும் உங்கடை குட்டியும் உங்கடை’’ என்று கூறி விட்டு அவளது பதிலை எதிர்பாராது சென்றான். புஸ்பநாதன் சாரதா மோட்டார் வண்டியில் தனபாலனை ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றாள். அவனைப் பரிசோதித்த வைத்தியர் பாலகுமாரன் சொன்னார்; ‘‘ஏற்கனவே இவர் நோய்வாய்ப்பட்டு இந்த ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர். மருந்து முடிய முடிய வந்து பரிசோதித்து மருந்து எடுக்கச் சொன்னனான். நீங்கள் இரண்டு மாதங்களாகப் பரிசோதனை செய்ய வரவில்லை. இப்ப நோய் அதிகரிச்சிட்டுது.’’

‘‘நான் சொல்லச் சொல்லக் கேட்காமல் செய்வினை சூனியம் என்று கூறிக் கழிப்புக் கழிச்சவை. இப்பவும் நான் வற்புறுத்தித்தான் அழைத்து வந்தனான்’’ என்று அழுதாள் சாரதா.

‘‘கிராம மக்கள் மூடகொள்கைகளில் அதீத நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஒருவன் முன்னேறாமைக்கு மூடநம்பிக்கை தான் பிரதான காரணியாகும். சிலர் மதத்தைக் காட்டி மக்களை ஏமாற்றுகிறார்கள். மதத்தில் குற்றமில்லை. மதத்தை முறையாகப் பின்பற்றினால் எந்தக் கேடும்

வராது. கல்வியறிவில்லாத பலரைப் போலிச் சுவாமிகள் ஏமாற்றித் தமது வயிற்றை வளர்க்கிறார்கள். கடவுளால் இயக்கப்படும் உலகிற்குத் தீமை செய்ய ஒருவராலும் முடியாது. எமது ஊரில் மகா கணபதி ஆலயத்தில் இருக்கின்ற ஸ்ரீனிவாசன் சுவாமிகளிடம் வீபூதி வாங்கிப் பூசினால் எல்லா நோய்களும் தீர்ந்து விடும். அப்படி இருக்க நீங்கள் ஏன் ஞானபண்டிதனிடம் சென்றீர்கள். தோற்றத்தைப் பார்த்தோ உருவ அமைப்பைப் பார்த்தோ, வெளி வேசங்களைப் பார்த்தோ நாம் எவரையும் கணிக்கக் கூடாது. அவரது குணத்தைப் பார்த்தே நாம் அவரைக் கணித்தல் வேண்டும். அழகாக இருக்கும் பல பொருட்கள் ஆபத்தானவைகளாக இருக்கின்றன. வெளித்தோற்றத்திற்கு அவலட்சணமாக இருக்கும் பல பொருட்கள் மனிதனில் முக்கிய தேவைகளுக்கு உதவுகின்றன'' என்றார்.

''இதைத்தான் ஐயா நான் தினமும் சொல்கிறனான். ஆனால் இவரை இவரது நண்பர்கள் கேட்கவிடுவதில்லை'' என்றாள் சாரதா.

''இனிமேல் ஒழுங்காக வந்து உடலைப் பரிசோதனை செய்யுங்கள். காலந்தவறாது மருந்தை உட்கொள்ளுங்கள். மதுபானம் அருந்தாதீர்கள். காலையும் மாலையும் இறைவனைப் பிரார்த்தியுங்கள். இனி நீங்கள் மந்திரங்கள் செய்யப் போனால் உங்களைக் காப்பாற்ற முடியாது'' என்றார் பாலகுமாரன்.

279. கணைகொடிது; யாழ்கோடு செவ்விது; ஆங்கன்ன
வினைபடு பாலால் கொளல்.

நேராக இருந்தாலும் அம்பு கொடியது, வளைவாக இருந்தாலும் யாழ் இனியது. எனவே ஒருவரை, அவரின் குணத்தையும் செயல்களையும் வைத்தே மதிப்பிடல் வேண்டும்.

## வேண்டாதவை

வைத்தியசாலையால் வந்த தனபாலனுக்குப் பயமாக இருந்தது. புஸ்பநாதன், ஞானபண்டிதனிடம் சென்று சாரதா கூறியவற்றைச் சொன்னால். அவர் கோபிப்பார் என்று நினைத்தான். அத்துடன் பாலகுமாரன் பலவிதமான புத்திமதிகளைக் கூறிய பின்பும் அவனது மனம் சஞ்சலப் பட்டுக் கொண்டே இருந்தது. தற்செயலாக ஞானபண்டிதன் தன்மீது கோபங் கொண்டால் அவரிடம் சென்று மந்திரித்து நூல் கட்ட முடியாது. என்று நினைத்தான். அதனால் சாரதா தடுக்கத் தடுக்க அவன் புஸ்பநாதனின் வீட்டுக்குச் சென்று அவனையும் அழைத்துக் கொண்டு ஞானபண்டிதனது வீட்டுக்குச் சென்றான். இரண்டு வாரங்களுக்கு முன்பு சடையும் தாடியும் வளர்த்திருந்த ஞானபண்டிதன் அன்று தலை முடியையும் தாடியையும் மழித்திருந்தார். வருடத்திற்கு ஒரு முறை அவர் தாடியையும் தலை முடியையும் மழிப்பது வழக்கம். என்று அங்கிருந்தோர் தமக்குள்ப் பேசிக் கொண்டனர்.

தனபாலனைக் கண்ட ஞானபண்டிதன் அவனைத் தனக்கருகில் அழைத்து வீபூதி கொடுத்தார். பின்பு அவனது கை நகங்களைப் பார்த்தார்; ''இப்ப உனக்குச் சுகமாக இருக்க வேண்டும். செய்வினை இருந்த போது கை நகங்கள் நீலமாக இருந்தன. இப்பொழுது சரியாகி விட்டது'' என்றார் தனபாலனும் புஸ்பநாதனும் ஞானபண்டிதனை வணங்கி விட்டு வீட்டுக்கு வந்தனர்.

வாரம் ஒன்று கழிந்தது. தனபாலன் பழயபடி தனது வேலைகளுக்குச் செல்லத் தொடங்கினான். அன்று வெள்ளிக்கிழமை சாரதா அவனுக்கு அருகில் வந்து நின்றாள். தனபாலன் வைத்தியர் சொன்னபடி நடந்து வந்தான்.

''இன்றைக்கு வெள்ளிக்கிழமை இவ்வளவு காலமும் நாம் சமய வாழ்க்கை வாழவில்லை. இனி எமக்காக இல்லாவிட்டாலும் எமது பிள்ளைகளுக்காக வாழவேண்டும். தயவு செய்து இனிமேல் வெள்ளிக்கிழமைகளில் மாமிச உணவைத் தவிர்ப்போம். அத்துடன் இன்று மாலை மகா கணபதி ஆலயத்திற்குச் செல்வோம்'' என்றாள்.

தனபாலன் எதுவும் பேசவில்லை. அன்று மத்தியானம் மரக்கறி உணவு வகைகளையே உண்டான். அன்று மாலைப் பூசைக்குத் தனபாலனும் மனைவியும் மகா கணபதி ஆலயத்திற்குச் சென்றனர். பூசை முடிந்ததும் மக்கள் அரசமரத்தின் கீழ்ச் சென்று அமர்ந்தனர். சுவாமியார் அவர்களுடன் உரையாடினார்; ''அன்பானவர்களே எமது கிராமத்தில் ஏழை மக்களே அதிகம் வாழ்கிறார்கள். அவர்கள் அறியாமையிலும் மூட நம்பிக்கையிலும் மூழ்கியிருக்கிறார்கள். அவற்றை நீக்க வேண்டியது உங்களது கடமை. அதை நீக்கி அவர்களுக்கு உதவி செய்யுங்கள். தொண்டு, மனப்பான்மை, கீழ்படிதல், புலனடக்கம் இல்லாதவர்களை இனங்கண்டு அவர்களுக்கு அவற்றைப் புகட்டுதல் வேண்டும். அப்படிச் செய்தால் அவர்களின் அறியாமை நீக்குவதோடு, அவர்களின் அன்பிற்கும் நீங்கள் பாத்திரமாவீர்கள். தாடி வளர்த்தவர்கள் மீதும், மொட்டை அடித்தவர்கள் மீதும் நீங்கள் யாரும் நம்பிக்கை வைக்கக் கூடாது. அவர்கள் மக்களை ஏமாற்றித் தமது வயிற்றை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல குணவானாக வாழுங்கள். கடவுளின் மீது நம்பிக்கை வையுங்கள். துன்பத்தால் வாடுகின்றவர்களுக்கு எப்பொழுதும் கடவுள் உறுதுணையாக இருப்பார். நீ தூய்மை உள்ளவனாக இருந்தால் உனது உள்ளத்தில் இறைவன் குடிபுகுவார்.

சுவாமியாரின் அருளுரை தனபாலனது மனச் சுமையைக் குறைத்தது. சுவாமியாரின் அருளுரை முடிந்ததும் எல்லோரும் சுவாமியாரின் பாதங்களைத் தொட்டு வணங்கினார்கள். தனபாலன் சுவாமியாரின் அருகே சென்று அவரது பாதத்தைத் தொட்டு வணங்கினான். அவரது பாதத்தைத் தொட்ட போது அவனுடலெங்கும் ஒரு புத்துணர்ச்சி ஓடிப் பரவியது.

சாரதா வழியில் வரும் போது சொன்னாள்; ''எத்தனையோ காலமாக நான் நினைத்திருந்தது இன்று தான் நிறைவேறியுள்ளது. இன்றைக்கு நீங்கள்

கோயிலுக்கு வந்து மகா கணபதியை வணங்கி சுவாமியாரின் ஆசியையும் பெற்று விட்டீர்கள். சின்னத்தம்பி அண்ணை பேயடித்த மாதிரித் தானே திரிந்தவர். இன்றைக்குக் கோயிலடீலை கண்டனான். நல்ல சந்தோசமாக இருக்கிறார். தான் தெரியாத் தனமாக பல பிழைகளைச் செய்து விட்டதாகச் சொன்னார். இப்ப தனக்கு நல்ல சந்தோசமாம். குடும்பத்தவர்களுடன் சந்தோசமாக இருக்கிறராம். இன்றைக் கென்றாலும் நீங்கள் கோயிலுக்கு வந்ததையிட்டுத் தான் சந்தோசப்படுகிறாராம். வேட தாரிகளை நம்ப வேண்டாம் என்று தான் சொல்லியும் நீங்கள் கேட்கவில்லையாம். தங்களின் உழைப்புக்காகச் சிலர் சன்னியாசி வேடம் போடுகிறார்களாம். ஞானபண்டிதன் முன்பு சடையும் தாடியும் வளர்த்தவராம், இப்ப அவற்றை மழித்து விட்டாராம். அது சனங்களை ஏமாற்றி பிழைப்பு நடத்துவதற்காம். உண்மையான தவசி உயிர்களின் நலனில் அக்கறையாக இருப்பாராம். முந்தி ஏமாந்தது போல இனியும் ஏமார வேண்டாம்'' என்று சொன்னார்''.

தனபாலன் எதுவும் பேசாமல் நடந்து கொண்டிருந்தான்; ''ஏமாற்றத் தெரிந்த ஒரு சிலர் தமது வேடங்களால் கல்வியறிவில்லாதவர்களை ஏமாற்றுகிறார்கள். இப்படி ஏமாறுபவர்களுக்கு கல்வியறிவுடையவர்கள் சொன்னாலும் விளங்குவதில்லை. இந்நிலை கடவுளை நம்பாததனால் தான் உண்டாகிறது''. சாரதா வாயோயாமல் கதைத்துக் கொண்டு வந்தாள். ''இவளுக்கு இவ்வளவற்றையும் சொல்லிக் கொடுத்தது யார்?'' என்று யோசித்தபடி நடந்து கொண்டிருந்தான் தனபாலன்.

280. மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

உலகம் தீயவையெனப் பழிக்கும் செயல்களை விட்டு விட்டால், மொட்டை அடித்தலும், சடை வளர்த்தலுமான புறக் கோலங்கள் தேவையில்லை.

## நல்ல மனம்

சின்னத்தம்பியின் சகோதரியின் மகன் ஒருவன் வெளிநாட்டில் இருந்தான். சின்னத்தம்பியின் சகோதரி யோகமலர், சின்னத்தம்பியின் நடத்தை சரியில்லாமையால் அடிக்கடி சென்று அவனுக்குப் புத்திமதிகள் கூறி வந்தாள். ஆனால் சின்னத்தம்பி அவள் கூறுவதை ஏற்பதில்லை. அவனது நடத்தையால் அவளால் ஊரில் தலை காட்ட முடியவில்லை. காண்பவர்கள்; ''உன்னால் அவனைத் திருத்த முடியாதா?'' என்று கேட்டனர். எவ்வளவோ கூறியும் திருந்தாத சின்னத்தம்பியின் உறவை யோக மலர் கைவிட்டு விட்டாள். அவன் நோயாளியாகி ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிட்சை பெற்ற போதும் அவள் சென்று அவனைப் பார்க்கவில்லை. அதனால் மனம் வருந்திய சின்னத்தம்பி ஆஸ்பத்திரியால் வந்ததும் தணிகாசலத்தையும் அழைத்துக் கொண்டு சகோதரியின் வீட்டுக்குச் சென்றான்.

தணிகாசலத்தின் மீது அளவுக்கதிகமான அன்பு வைத்திருந்தாள் யோகமலர். அதனால் அவருடன் வந்த சின்னத்தம்பியை அவள் ஏசவில்லை; ‘‘தணிகாசலம் அண்ணை எனக்கு இருப்பது ஒரே ஒரு சகோதரன். இவர் உழைக்கத் தேவையில்லை. எனது பிள்ளைகள் நால்வர் வெளிநாட்டில் இருக்கிறார்கள். நானும் எனது கணவரும் தான் வீட்டில் இருக்கிறோம். எமக்கு உதவி ஒத்தாசையாக இவர் இருக்கலாம். இவர் குடிப்பதற்காகத் தான் எம்முடன் இருக்கத் தயங்குகிறார். நாங்கள் மட்டுமில்லை மானமாய் வாழ விரும்புற யாராவது ஒருவன் இவற்ரை நடத்தையைப் பார்த்தால் சேர்ப்பினையே. எல்லாவற்றையும் விட மகா கணபதி ஆலயக் குரங்குகளைக் கொன்ற விஷயத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இரண்டு குரங்குகளுக்கும் கச்சான் கடலை என்றால் நல்ல விருப்பம். நான் கோயிலுக்குச் செல்லும் தினங்களில் இரண்டிற்கும் கச்சான் கடலை வாங்கிக் கொடுக்காமல் வருவதில்லை. சொல்லப் போனால் அவை இரண்டையும் என்னுடைய பிள்ளைகளாய்த் தான் நான் நினைச்சனான். அதுகளைப் பற்றி பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு கடிதத்திலும் எழுதுறனான். பிள்ளைகள் வந்து அவற்றைப் பார்க்க வேண்டும் என்று எழுதினவை’’ யோகமலரின் குரல் தழுதழுத்தது. தணிகாசலம் அவள் கூறுவதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

கண்களில் ஊறிய கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்த யோக மலர் சொன்னாள்; ‘‘அண்ணை எங்கடை பரம்பரையிலை இப்பிடி யாரும் இல்லை. அப்பு இருபத்தி நான்கு மணி நேரமும் மகா கணபதியை நினைத்துக் கொண்டிருப்பவர். சகோதரங்கள் மாமன் மச்சான் மார் எல்லாரும் தினமும் இவரை நினைத்து வெட்கப்படுவார்கள். இப்பவும் காலம் போகேல்லை. இனியென்றாலும் திருந்தலாம்.

‘‘அக்கா நான் இனிமேல் எந்தப் பிழையும் செய்ய மாட்டன். இப்ப நான் திருந்தி விட்டன்’’ அழுதான் சின்னத்தம்பி.

‘‘யோகம், இப்ப சின்னத்தம்பி தான் செய்த தவறுகளை நினைத்து மனவருத்தப் பர்றான். சுவாமியார் கூட அவனைத் தன்னுடைய சீடனாக ஏற்றுக் கொண்டு விட்டார்’’ என்றார் தணிகாசலம்.

‘‘நான் எல்லாம் கேள்விப்பட்டனான். இவர் திருத்தினால் சந்தோசப் பர்ற முதல் ஆள் நான் தான்’’ என்றார் யோகமலர்.

தணிகாசலமும் சின்னத்தம்பியும் யோகமலரிடமிந்து விடை பெற்றுச் சென்று விட்டனர். யோகமலர் சின்னத்தம்பி திருந்தி விட்டான். என்றும் அவன் நோயாலும் வறுமையாலும் கஷ்டப்படுகிறான் என்றும் அவனுக்குப் பண உதவி செய்யுங்கள் என்றும் தனது பிள்ளைகளுக்குக் கடிதம் எழுதினாள். அவளது கடிதம் கிடைத்த போது அவ்வூரில் வாழும் பரதராஜா என்பவன் தனது சகோதரியின் வீட்டுக்கு வந்திருந்தான். அப்பொழுது யோகமலரின் மூத்த மகன் கௌசல்யன் அங்கு வந்தான். பரதராசா மறுநாள் ஊருக்குச்

செல்லப் போவதாகச் சொன்னதால் அவனிடம் சின்னத்தம்பிக்குக் கொடுக்கும் படி தனது தாயிடம் கொடுக்குமாறு பத்தாயிரம்ரூபா பணம் கொடுத்தான்.

பரதராசா ஊருக்கு வந்து இரண்டு மாதங்கள் கழிந்த போதும் அவன் பணத்தைக் கொண்டு சென்று யோகமலரிடம் கொடுக்கவில்லை. இரண்டு மாதங்களுக்குப் பின்பு கௌசல்யன் தான் பரதராசாவிடம் கொடுத்த பணத்தைப் பற்றிக் கடிதம் எழுதினான். அதன் பின்பு தான் யோக மலருக்கு தனது மகன் பணம் அனுப்பிய விஷயம் தெரிந்தது. அவள் பரதராசாவிடம் சென்று கேட்ட பொழுது தனக்கு அவசர தேவை ஏற்பட்டதால் அப்பணத்தை எடுத்து விட்டதாகக் கூறி கூடிய விரைவில் அதைத் திருப்பித் தருவதாகச் சொன்னான். அதன் பின் ஐந்து மாதங்கள் கழிந்தும் அவன் அப்பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. அதனால் யோகமலர் தணிகாசலத்திடம் சொன்னாள்.

தணிகாசலம் சிரித்தார்; “பரதராசாவிடம் கொடுத்த பணம், யானைக்குக் கொடுத்த விளாம்பழத்தைப் போன்றது. ஊரில் பலர் அவனுக்குக் கொடுத்து விட்டு வாங்க முடியாது திண்டாடுகிறார்கள். அவனுக்கு வெக்கம், ரோசம், மானம் எதுவுமே இல்லை. பிறர் தன்னை இகழக் கூடாது என்று எண்ணுகின்றவன். எந்தப் பொருளையும் யாரிடமிருந்தும் வஞ்சித்து அடைகின்ற நெஞ்சம் இல்லாதவனாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நேர்மையாக வாழ முடியாது” என்றார் தணிகாசலம்.

281. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்துஒன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

பிறர் தன்னை இகழக் கூடாது என்று விரும்புகின்றவன், பிறரிடமிருந்து எத்தன்மையான பொருளையும் வஞ்சித்துப் பெற எண்ணாதபடி தன் நெஞ்சைக் காத்துக் கொள்ளல் வேண்டும்.

## தீமையானது

“இந்தா பிடி கௌசல்யன் கொடுக்கச் சொன்ன பணம் பத்தாயிரம் ரூபா இருக்கு மச்சானிட்டைக் கொண்டு போய்க்குடு. இது என்ரை சங்கிலி உன்னுடைய மூத்தமகள் வித்தியா வயது வந்தும் காதிலும் கழுத்திலும் ஒன்றுமில்லாமல் திரிகிறாள் கொண்டு போய்ப் போடு. இப்ப நீ திருந்தின தென்று நினைத்துத் தான் இதுகளையெல்லாம் தாறன். பழையபடி குடிக்கத் தொடங்கினால் இந்த வீட்டுப் பக்கம் வரக் கூடாது. தணிகாசலம் அண்ணை தான் எல்லாவற்றிற்கும் பொறுப்பு” என்றாள் யோகமலர்.

சின்னத்தம்பி எதுவும் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டிருந்தான்; “எதைச் சொன்னாலும் மறுமொழி சொல்லாமல் தலையைக் குனிந்து

கொண்டு இருப்பர். நாலைந்து நாட்களாலை குடிச்சிட்டு வருவர்'' கோபமாகச் சொன்னாள் யோகமலர்.

''நீ உழைக்காவிட்டாலும் நேர்மையான முறையில் வாழ்வதைத் தான் உற்றார் உறவினர்கள் விரும்புவார்கள். நேர்மையாக வாழ்ந்தால் மக்கள் எல்லாரும் விரும்புவினை. பிறந்தவர்கள் எல்லோரும் இறப்பது நிசம். வாழும் வரை நல்லவனாக வாழ்வது தான், மனிதர்களுக்கு அழகு. நீண்ட காலம் நீ பிரயோசனமில்லாமல் வாழ்ந்து விட்டாய். எஞ்சியிருக்கின்ற காலத்தையாவது நல்ல முறையில் வாழ்ந்து கழி. இல்லாவிட்டால் உனது பிள்ளைகள் உன்னை விடக் கஷ்டப்படும். உனது தொழிலையே அவர்களும் செய்ய வேண்டி வரும். அதனால் சமூகத்தில் கெட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்'' தணிகாசலம் பேசிக் கொண்டிருக்கும் போது சின்னத்தம்பி குறுக்கிட்டான்; ''அண்ணை இனி நான் கடைசி வரையும் தீயவனாக மாறமாட்டன். இதை நீங்கள் நம்பலாம்''.

''சொன்னபடி நடந்தால் சந்தோசம் தான். வாபோவம்'' என்று கூறி விட்டு எழுந்து சென்றார் தணிகாசலம். அவருக்குப் பின்னால் சின்னத்தம்பி வந்தான். பாலசிங்கத்தின் கடைக்கு முன்னால் இருந்த வேப்ப மரநிழலில் தனபாலன் இருந்தான். தணிகாசலத்தைக் கண்டதும் எழுந்து அவரின் அருகில் வந்தான்.

''அண்ணை நான் செய்தவையெல்லாம் பெரும் பிழை. தெரியாத் தனமாகச் செய்திட்டன். இப்ப நான் செய்தவற்றை நினைக்க எனக்குப் பயமாக இருக்கிறது. நீங்கள் சுவாமியாரிட்டை என்னை மன்னிக்கச் சொல்லிச் சொல்லுங்கோ'' என்றான்.

''சுவாமியார் யாருக்கும் தீங்கு செய்ய நினைப்பது கூட இல்லை. கடுந் தவத்தினால் அவர் பல ஆற்றல்களைப் பெற்றிருந்த போதும் பிற உயிர்கள் மீது அன்பும் இரக்கமும் கொண்டு அவர்களின் நன்மைக்காகப் பாடு படுவதையே நோக்காகக் கொண்டுள்ளார். நீ நினைப்பதைப் போல அவர் யாருக்காவது பில்லி சூனியம் செய்வதில்லை. மாறாக உதவி தான் செய்வார். செயல்களின் மூலம் மனதை அடக்கித் தூய்மைப் படுத்தியவர் அவர். நீ வந்து அவருடன் அன்பாகப் பேசிப் பழகலாம்'' என்றார் தணிகாசலம்.

மூவரும் மகா கணபதி ஆலயத்திற்கு வந்த போது சுவாமியார் ஸ்கந்த தேவாவுடன் கதைத்துக் கொண்டிருந்தார். தனபாலன் பலமாகக் குழறி அழுதபடி சுவாமியாரின் பாதங்களைப் பிடித்தான். அவனால் பேசமுடியவில்லை.

''நான் கூடாத நண்பர்களோடு சேர்ந்து அவர்களின் சொற்படி நடந்து விட்டேன். அடுத்தவர்களின் பொருட்களை திருடினேன். கொழுத்த மாடுகளைக் கண்டால் அவற்றைத் திருட வேண்டு மென்று நினைப்பேன். யாருடையதாக இருந்தாலும் நல்ல பொருட்களைக் கண்டவுடன் திருடவேண்டு மென்ற

எண்ணம் எனக்கு ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க வழி சொல்லுங்கள் சுவாமி'' என்று அழுதான் தனபாலன்.

''ஒருவன் பிறருக்குரிய பொருட்களை தவறான வழியில் அடைய வேண்டும் என்று நினைப்பதே பாவம். மாசற்றவனாக நீ வாழ வேண்டும் என்று விரும்பினால் எண்ணங்கள் களங்கமில்லாமல் இருத்தல் வேண்டும். எண்ணங்கள் தான் மனிதனைத் திசை திருப்புகின்றன. ஆசைப்பட வைக்கின்றன. அதனால் தவறான வழியில் வழி நடத்திச் செல்கின்றன. நல்லவற்றை எண்ணுவதால் நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்தவர்களாகிறோம். நல்ல படி வாழ நல்ல எண்ணங்கள் உதவும். நல்ல எண்ணங்கள் எம்முள் உருவாக வேண்டுமானால் நாம் நமது இருதயத்தை இறைவனுக்கு அர்ப்பணித்தல் வேண்டும். இறைவன் எமது இதயத்தில் குடி புகுந்தால் தீய எண்ணங்கள் உருவாக மாட்டாது'' என்றார் சுவாமியார்.

''என்னுள் தீய எண்ணங்கள் உருவாகாமல் காத்துக் கொள்ளுங்கள் சுவாமி'' கெஞ்சினான் தனபாலன்.

''தினமும் கோயிலுக்கு வந்து கடவுளை வணங்கு. தீய எண்ணங்கள் உருவாகும் போது கடவுளை நினை. பிறரால் உனக்குத் தீங்கு ஏற்பட்டால் உனக்குத் துன்பமாக இருக்கும். அதே போல் தான் உனது செயல்களாலும் பிறருக்குத் துன்பங்கள் வருமென்று நினை. ஒவ்வொருவரும் நல்ல முறையில் வாழ்ந்தால் தான் உலகம் நல்ல முறையில் இருக்கும். எனவே நான் நல்ல முறையில் வாழ வேண்டும், பிறருக்கு உதவி செய்தல் வேண்டும் என்று சதா நினைத்துக் கொண்டே இரு. மனதில் தீய எண்ணங்கள் உருவாகாது. இது மிகவும் சிரமமான காரியம்தான். தினமும் பயிற்சி செய்து வர மனம் மாறும்'' என்றார் சுவாமியார்.

282. உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

பிறரின் பொருட்களை தவறான வழிகளில் அடையலாம் என்று தன் உள்ளத்தால் நினைப்பதும் தீதானது.

## அழிவு

மாலை நேரம் தனபாலன் வீட்டின் முற்றத்தில் நின்ற வேப்பமரத்தின் கீழ் இருந்தான். முற்றம் முழுவதும் சடைத்துப் பரந்திருந்த அந்த வேப்ப மரத்தின் நிழலில் இருக்க அவனுக்குச் சுகமாக இருந்தது. அவனின் அருகில் சாரதா இருந்தாள். முன்பென்றால் அவன் நன்றாகக் குடித்து விட்டு அவ் வேம்பின் நிழலில் இருந்தால் அவனுக்கருகில் சின்னத்தம்பியும் கிருஸ்ணனும் புஸ்பநாதனும் இருப்பார்கள். சாரதா அவனுக்குக் கிட்ட வரமாட்டார்.

சின்னத்தம்பி சொன்னான்; ‘‘தனபாலு தில்லை நடராசாவின்ரை நாம்பன் கன்று வயற்கரையில் மேய்ந்து கொண்டிருக்கும் பொழுது பார்த்தேன். நல்ல சதைப்பிடிப்பு. தில்லை நடராசா இரவு எட்டுமணிக்குப் பிறகு வந்து தான் அந்த நாம்பன் கன்றை அவிழ்த்துக் கொண்டு போறவன். அதுக்கு முன்னம் நாங்கள் அவிழ்த்துக் கொண்டு வந்தால் ஐயாயிரம் ரூபாவுக்குப் பங்கு போடலாம்’’.

‘‘நான் அவிட்டாறன். கேசவமூர்த்தி வாத்தியார் மச்சான்மார் வெளிநாட்டிலிருந்து வந்து நிக்கிறதாய்ச் சொன்னவர். அவருக்கு ஆயிரம் ரூபாவுக்குக் கொடுக்கலாம். அதை விட எம்மிடம் வழக்கமாக இறைச்சி வாங்கிற பத்துப் பதினைந்து பேர் இருக்கினை. நான் யாரும் காணாதவாறு அவிழ்தாறன்’’ என்றான் கிருஸ்ணன்.

‘‘அறுத்துப் பங்கு போடுறது என்னைப் பொறுத்தது. நீ இரவைக்கு அவிட்டந்தி யென்றால், விடியப் புறம் இரண்டு மணிக்கு நான் வெட்டிப் பங்கு போட்டுத் தாறன்’’ என்றான் புஸ்பநாதன்.

‘‘என்ன யோசிக்கிறியள். தணிகாசலம் அண்ணையும் சுவாமியாரும் இருக்கேக்கை எமக்குப் பயமில்லை’’ என்றார் சாரதா.

‘‘என்னத்தை யோசிக்கிறது. கூடாத சிநேகிதர்களாலை நான் கெட்டழிந்து போனன். என்னுடைய சிநேகிதர்களிலை ஒருத்த ணெண்டாலும் நல்லதைச் சொல்லேல்லை. எல்லாரும் என்னைக் கெட்ட வழியிலை நடத்திச் சென்று தங்கடை அலுவல்களைப் பார்த்தாங்களே தவிர என்ரை நலனைக் கவனிக்கேல்லை. ஒவ்வொருவனும் தன்னுடைய நலனுக்காகச் சொல்லச் சொல்ல நான் ஆராயாமல் நடந்திட்டன். பல பாதகமான செயல்களுக்கு நான் காரணகர்த்தாவாக இருந்திட்டன்’’ தனபாலன் அழுதான்.

‘‘நடந்ததை எண்ணிக் கவலைப்படாதைங்கோ. எமது உறவினர்கள் நண்பர்கள் நலன் விரும்பிகள் என்று சொல்லப்படுவோரில் பலர் தமது காரியங்களுக்கு எம்மைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். உங்கடன் கூடித்திரிந்தவர்கள் அனைவரும் தத்தமது நலன்களுக்காகவே உங்களுடன் பழகியிருக்கிறார்கள். இவர்களைப் பற்றி முன்பு நான் பல முறை கூறியும் நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சுயநலமுள்ளவர்கள் தமது நலத்திற்காகப் பிறரை ஏமாற்றுகிறார்கள். இதை நீங்கள் இப்பொழுது புரிந்து கொண்டுள்ளீர்கள். இப்பொழுது நீங்கள் அவர்களது விருப்பங்களைப் பூர்த்தி செய்யாததால் அவர்கள் உங்களை விட்டுப் பிரிந்து சென்று விட்டனர். இனியாவது நீங்கள் நேர்மையாக வாழுங்கள்; மனிதனாக வாழுங்கள். இனிமேல் தவறான வழியில் நடக்க மாட்டேன் என்று முடிவெடுங்கள். மனதாற் கூட பிறருக்குத் தீங்கு செய்ய மாட்டேன். என்று முடிவெடுங்கள்’’ என்றாள் சாரதா.

தனபாலன், சாரதாவை அன்புடன் பார்த்தான். அவன் சொல்வதை முன்பே கேட்டிருந்தால் இவ்வளவு பிரச்சினைகளும் வந்திராது என்று நினைத்தான்.

மிகவும் அருமையான புத்திக் கூர்மையுள்ள தனது மனைவியை அலட்சியம் செய்தமைக்காக வருந்தினான்; ‘‘சாரதா, உன்னைப் போல பண்பான ஒரு மனைவி கிடைக்க நான் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். களவெடுப்பதன் மூலம் உண்டாகும் செல்வமானது இன்பத்தை அளவுக்கதிகமாகத் தந்தாலும் காலப் போக்கில் முற்றாக அழிந்து விடும். அத்துடன் எம்மைக் கேவலப்படுத்தி, எமது குடியை அழித்து விடும் என்று தினமும் எனக்குச் சொல்வாய். ஆனால் நான் அதைக் கேட்பதில்லை. கெட்ட நண்பர்களின் சேர்கையாலும் திமிராலும் உன்னைக் கொடுமைப் படுத்தினேன். ஆனால் இன்று நான் கஷ்டப்பட்டுத் தேடிய பொருட்களும் களவெடுத்த பொருட்களுடன் சேர்ந்து அழிந்து விட்டன.’’ அழுதான் தனபாலன்.

‘‘நடந்து முடிந்த சம்பவங்களுக்காக வருத்தப் பட்டால் அவன் மன்னிக்கப்படுவான் என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். செய்தவற்றைத் தவறு என்று ஏற்றுக் கொள்வோர் மன்னிக்கப்படுவார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் முன்பு செய்த பல தீய செயல்களைத் தவறு என்று உணர்ந்து வருத்துவது திருந்தியமைக்குச் சான்றாகும். மற்றவர்களுக்குத் தீங்குகள் பல செய்த நீ இனி மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்; நல்லதைச் செய்யுங்கள். தீமைகளைப் பிறருக்கு நாம் செய்வதன் மூலம் எமக்கு நாமே தீமைகள் செய்தவராவோம் என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. கர்ம விதியின் படி மேலே எறிந்த பொருள் கீழே விழுவதைப் போல, நாம் செய்யும் செயல்கள் திரும்பவும் எம்மையே வந்தடைகின்றன. பெற்றோரிடம் பிள்ளைகள் வருவதைப் போல, நாம் செய்யும் செயல்களும் எம்மையே வந்தடைகின்றன. நன்மை செய்தவன் நன்மையையும், தீமை செய்தவன் தீமையையும் அடைவது இவ்விதிப்படி தான். அதை நீங்கள் உங்கள் செயல்களின் மூலம் உணர்ந்திருக்கிறீர்கள். எனவே இனியாவது பிறருக்குத் துன்பந் தரும் செயல்களில் ஈடுபடாதிருந்தால் நாம் இன்பமாக வாழலாம்’’ என்றாள் சாரதா.

‘‘இனிமேல் நான் உனது சொல்லையே கேட்பேன் முன்பு நீர் சொல்லச் சொல்லக் கேளாமல் நல்லாய்ப் படிக்கக் கூடிய மூத்தமகனை கடையிலை கொண்டு போய் விட்டனான்’’. அழுதான் தனபாலன்.

‘‘அவன் நல்லாய்ப் படிப்பன். இப்பவும் காலம் போகேல்லை. கடையாலை மறிச்சுப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பலாம். தணிகாசலமண்ணையைக் கேட்டால் அதிபரோடை கதைச்சுச் சொல்லுவர்’’ என்றாள் சாரதா.

‘‘நான் நினைச்சதை நீர் சொல்லுறீர். கடவுள் வாத்தியாரிட்டை நான் முந்திப் படித்தனான். அந்த நேரம் நான் பாடசாலைக்கு ஒழுங்காகப் போறேல்லை. வாத்தியார் எத்தனை தரம் வீட்டை வந்திருப்பார். அப்புவும் அந்த நேரம் என்னைக் கொண்டு உழைப்பிக்கிறத்திற்காக கடவுள் வாத்தியாரைப் பேசுவார். அப்புவை மாதிரித்தான் நானும் நடந்திட்டன். அதாலை நாளைக்கு அவனும் என்னைப் போலை வந்திடுவன். அதாலை அவனைப் படிப்பிக்க வேண்டும். கடவுள் வாத்தியாற்ரை மகன் வந்திருக்கிறாராம். எனது பிள்ளையைப் படிப்பிக்கச் சொல்லி இந்திராக்கா

சொன்னவாவாம். சரியென்று சொன்னவராம். நேற்று இந்திராக்கா சொன்னவா'' என்றான் தனபாலன்.

283. களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து
ஆவது போலக் கெடும்.

களவெடுக்கும் பொருள்களால் உண்டாகும் ஆக்கம் பெருகுவது போலத் தோன்றி, இயல்பாக இருந்த ஆக்கத்தையும் அழித்து விடும்.

## துன்பம்

நவநீதன் நாவலடிக் கிராமத்தில் வாழும் ஒரு விவசாயி. நோயாளியான அவன் திருமணம் செய்யாது வாழ்ந்து வந்தான். அவனது தந்தையான யோகேஸ்வரனும் தாயான நகுலாம்பிகையும் அவனைத் தினமும் திருமணம் செய்து கொள்ளும் படி வற்புறுத்தி வந்தனர்.

''மகனே எனக்கு நீ ஒரே ஒரு பிள்ளை. எமது வம்சம் தழைக்க வேண்டும். நீ திருமணம் செய்து பிள்ளைகளைப் பெறாவிட்டால் உன்னுடன் எமது வம்சம் அழிந்து விடும். உனது நிலையைச் சொல்லி ஏற்ற ஓர் இடத்தில் திருமணம் செய்ய நான் முயற்சிக்கிறேன். அதற்கு நீ சம்மதம் தெரிவித்தால் போதும்'' என்றார் யோகேஸ்வரன்.

''அப்பா, நான் ஓர் இருதய நோயாளி. என்னைப் பரிசோதித்த வைத்தியர்கள், என்னைத் திருமணம் செய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்க நான் திருமணம் செய்து ஒரு பெண்ணின் வாழ்வைச் சீரழிக்கலாமா..? உங்களுக்கு ஒரு மகள் இருந்தால் சாகப் போகும் ஒருவனுக்கு மணம் முடித்துக் கொடுப்பீர்களா..?'' என்று கேட்பான் நவநீதன்.

மகனின் வார்த்தைகளில் உள்ள நியாயத்தை யோகேஸ்வரன் புரிந்து கொள்வார். இருந்தாலும் இடைக்கிடை அவனது திருமணப் பேச்சை எடுப்பார். யோகேஸ்வரன் விவசாயம் செய்து ஏராளமான பொருள்களைத் தேடியிருந்தார். அவரது விவசாய நிலங்களில் பலர் கூலி வேலை செய்தனர்.

நவநீதனது தோட்டத்தில் விளையும் விளை பொருட்களை தனபாலனும் அவனது நண்பர்களும் இரவு வேளைகளில் களவாக அறுவடை செய்து விடுவார்கள். அத்துடன் அவனது தோட்டங்களில் உள்ள பட்டிகளில் உள்ள மாடுகளையும் ஆடுகளையும் களவாடிச் சென்று விற்று விடுவார்கள்.

தனபாலனும் அவனது நண்பர்களும் தான் திருடுகிறார்கள் என்பது நவநீதனுக்குத் தெரியும். இருந்த போதும் ஆதாரங்களின்மையால் அவன் தனபாலனின் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஒரு நாள் இரவு நவநீதனின் தோட்டத்திற்குச் சென்ற தனபாலனும் புஸ்பநாதனும் நவநீதனது

எருத்துமாடுகள் இரண்டை அவிழ்த்துச் சென்று விட்டனர். அதன் பெறுமதி இருபதினாயிரம் ரூபா. அந்த எருத்து மாடுகளை நவநீதன் தனது பிள்ளைகளைப் போலப் பராமரித்து வந்தான். அவற்றைக் கொண்டு அவன் தோட்ட வேலைகள் செய்விப்பது குறைவு. அவனின் தோட்ட வேலையாளான செல்லப்பா அவ்விரு எருதுகளையும் உழுவதற்காகக் கலப்பையில் பூட்டினால் நவநீதன் ஏசுவான்; ‘‘அவை இரண்டும் எனது பிள்ளைகள். நீ கூலிக்கு வேறு எருதுகளைக் கொண்டு உழு’’ என்பான். பகல் வேளைகளில் நவநீதன் அவற்றுடன் பேசி மகிழ்வான்.

எருதுகள் இரண்டும் காணாமற் போனதால் நவநீதன் மிகுந்த துன்பமடைந்தான். அவன் தணிகாசலத்திடம் சென்று சொல்லி அழுதான்; ‘‘இந்த ஊரில் பெரிய மனிதர் நீங்கள் தான். எனக்கு உலகில் பற்றே இல்லை. நோயாளியான நான் எனது பெற்றாருக்காகவே உயிர் வாழ்கிறேன். அத்துடன் எனது காளை மாடுகளின் மீது உயிரையே வைத்திருக்கிறேன். அவற்றை தனபாலன் தான் களவாடிச் சென்றுள்ளான். தயவு செய்து அவனிடமிருந்து எனது காளை மாடுகளை மீட்டுத் தாருங்கள். அவற்றிற்கான பெறுமதியை நான் கொடுக்கிறேன்’’ அழுதான் நவநீதன்.

தணிகாசலத்திற்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. களவு எடுத்தவனானாலும் ஆதாரமின்றிக் கேட்க முடியாது என்று நினைத்தார். எனினும் நவநீதனது பரிதாபகரமான நிலையை உணர்ந்து தனபாலனது வீட்டுக்குச் சென்றார்.

:தனபாலு நவநீதனது காளை மாடுகள் இரண்டைக் காணவில்லையாம். அதனால் அவன் பெருந் துன்பப்படுகிறான். யாரோ அவற்றைக் களவாடியுள்ளனர். பாவம் நோயாளியான அவன் அக்காளைகளின் மேலுள்ள பாசத்தினால் இறந்து விடுவான். உனக்குத் தெரிந்தவர்கள் யாராவது களவாடியிருந்தால் அவற்றைக் கொண்டு வந்து தரச் சொல். அக்காளை மாடுகளின் பெறுமதியை விட கூடிய பணத்தைக் கொடுக்க அவன் தயாராக இருக்கிறான். உன்னால் ஒருவருக்கு உதவி செய்ய முடியுமென்றால் அவ் உதவியைச் செய்யாதிருப்பது பெரும் பாவமாகும். ஏழைகளுக்கும் நோயாளர்களுக்கும் செய்யும் உதவி கடவுளுக்குச் செய்யும் தொண்டுக்குச் சமனானது. களவெடுப்பது இன்பத்தைக் கொடுத்தாலும் காலப் போக்கில் மிகுந்த துன்பத்தைத் தரும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். யாராவது களவாக அக்காளைகளை அவிழ்த்ததை நீ அறிந்தால் சொல்’’ என்று கூறி விட்டுச் சென்றார் தணிகாசலம்.

வேப்பமர நிழலில் சாரதாவுடன் இருந்த தனபாலனுக்குத் தணிகாசலம் கூறிய வார்த்தைகள் காதில் ஒலித்தன. அன்று அவர் கூறியது போல களவு எடுக்கும் வேளைகளில் இன்பமாக இருந்தது. அதனால் துன்பங்கள் ஏற்படும் போது கவலையாக இருக்கிறது. என்று நினைத்தான் தனபாலன்.

‘‘இனி யோசித்து எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. களவெடுப்பது மகா பாவம். அப்பாவத்திலிருந்து தப்பிக் கொள்ள முடியாது. எண்ணங்களால் மனதைக் குழப்பினால் மனிதன் நிம்மதியாக வாழ முடியாது. தீங்கு செய்த

மனதில் அமைதி ஏற்படாது. எனினும் இனிமேல் தீங்கு செய்யாமல் வாழ்வேன் என்று நினைத்தால் அமைதி ஏற்படும். கடவுளிடம் இனிமேல் தீங்கு செய்ய மாட்டேன் என்று தினமும் கூறுங்கள் அவர் மன்னிப்பார்'' என்றாள் சாரதா.

284. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
 வீயா விழுமம் தரும்.

களவெடுப்பதில் ஒருவனுக்கு உள்ள மிகுந்த விருப்பம் பயன் விளையும் போது என்றும் தொலையாத துன்பத்தைத் தரும்.

## அருள் இல்லாதவன்

பழைய சம்பவங்களை நினைக்கத் தனபாலனுக்கு விசர் வந்து விடும் போலிருந்தது. நவநீதனது காளை மாடுகளைக் களவாக அவிழ்த்துச் சென்று அயலூரில் உள்ள இறைச்சி வியாபாரிக்கு விற்றதை நினைக்க அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. அந்த மாடுகளை அவிழ்ப்பதற்குப் பதினைந்து தினங்களுக்கு முன்பு சின்னத்தம்பி வந்து சொன்னான்; ''தனபாலண்ணை நவநீதன்ரை காளை மாடுகளை அவிழ்த்தால் இருபதினாயிரம் ரூவாய்கு விற்கலாம். அரசடீலை இருக்கிற இறைச்சி வியாபாரி பாக்கியநாதனுக்கு தீபாவளிக்கு இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான மாடுகள் தேவையாம். இரண்டு மூன்று நாளாய் வீட்டை வந்து கரைச்சல் குடுக்கிறான். ஊருக்கை மாடுகள் வாங்கேலாது. கள்ள மாய்த் தான் அவிழ்க்க வேண்டும். நவநீதன்ரை இரண்டு மாட்டையும் அவிழ்த்தால் குடுக்கலாம். அச்சவாரமாக இரண்டாயிரம் ரூபா தந்தவன். இந்தா பிடி''.

''செல்லப்பன் இரவிலை காவலுக்குப் படுக்கிறவன். அவன் நேர்மையானவன். காசு குடுத்து அவனை விலைக்கு வாங்கேலாது. தொழிலிலையும் நேர்மையானவன். அவன்ரை நாய் மனிசரைக் கடிச்சுக் குதறிப் போடும். வேறை எங்கையாவது பார்க்கேலாதே'' என்றான் தனபாலன்.

''உந்த விலைக்கு வேறை இடங்களிலை பார்க்கிறது கஷ்டம். திட்டம் போட்டால் நவநீதன்ரை மாடுகளை அவிழ்க்கலாம். செவ்வாய், வியாழன், வெள்ளிக் கிழமைகளிலை செல்லப்பா கள்ளுக் குடிக்கிறேல்லை. இந்த நாள்களைத் தவிர்த்து ஒரு நாள்த்தான் அவிழ்க்க வேணும். திட்டம் போடுற விஷயத்தை என்னட்டை விடுங்கோ. அவிழ்க்கிற விஷயத்தை நீங்கள் பொறுப்பேருங்கோ...'' என்றான் சின்னத்தம்பி.

''திட்டம் போடுறதிலை சின்னத்தம்பி வலு கெட்டிக்காரன். இவ்வளவு நாளைக்கை எத்தினை திட்டம் போட்டவன். ஒண்டெண்டாலும் பிசகேல்லை. தனபாலண்ணை நீ யோசியாதை நான் அவிழ்க்கிறன். சின்னத்தம்பியை திட்டமிடச் சொல்'' என்றான் புஸ்பநாதன்.

புஸ்பநாதனின் வார்த்தைகள் சின்னத்தம்பிக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது; ‘‘போன வரிசம் தீபாவளிக்கும் மனிசிக்கும் பிள்ளைகளுக்கும் உடுப்பெடுக்கேல்லை. இந்த முறை கட்டாயம் எடுக்க வேணும். உழைச்சு எப்பிடியடாப்பா எடுக்கிறது. விடிஞ்சதிலை இருந்து கூலி வேலை செய்தாலும் கால் வயிறு, அரை வயிறு கூட நிரம்புறேல்லை. உவங்களெல்லாம் எப்பிடிச் சம்பாதிக்கிறாங்கள் என்று தெரியேல்லை’’ என்றான் சின்னத்தம்பி.

வாரம் ஒன்று கழிந்தது. அன்று சின்னத்தம்பியும் புஸ்பநாதனும் தனபாலனும் குடித்து விட்டு வந்து பாலசிங்கத்தின் கடைக்கு முன்னால் நின்ற வேப்ப மரத்தின் கீழ் இருந்தனர்.

‘‘செல்லப்பா, சீனியனிட்டைத் தான் கள்ளுக் குடிக்கிறவன். அதுகும் இரவிலை தான் குடிக்கிறவன். நான் ஆஸ்பத்திரியிலை வேலை செய்யிற மயில்வாகனத்திட்டை இரண்டு நித்திரைக் குளிசைகள் வாங்கிச் சீனியனிட்டைக் குடுத்திருக்கிறன். அவன் இரவைக்கு கள்ளிலை கலந்து செல்லப்பாக்குக் குடுப்பன். பெரும்பாலும் செல்லப்பா தோட்டத்துக்குப் போகாமல் வீட்டிலை படுத்திடுவன். அவன் போகாட்டில் நாயும் போகாது. இரவு பத்துமணிக்கு முன்னம் அவிழ்க்க வேணும்; என்றான் சின்னத்தம்பி.

‘‘நான் அவிழ்க்கிறன்’’ என்றான் புஸ்பநாதன்.

புதன்கிழமை இரவு செல்லப்பா தோட்டத்திற்குக் காவலுக்குச் செல்லவில்லை. அன்று இரவு புஸ்பநாதன் நவநீதனின் காளை மாடுகளை அவிழ்த்துச் சென்று பாக்கியநாதனிடம் கொடுத்தான். அவன் பத்தாயிரம் ரூபாவைக் கொடுத்தான்.

‘‘காணாது இன்னுமொரு பத்தாயிரம் ரூபா தாங்கோ’’ என்றான் தனபாலன்.

‘‘இதென்ன வளர்ப்பு மாடே விலை பேச கள்ள மாடு, நான் தற்செயலாக அகப்பட்டால் நீங்களே காசு கட்டுறது. இதுக்கு நான் இன்னும் பலருக்கு காசு குடுக்க வேண்டும். காசு காணாதென்றால் வேறு யாருக்காவது குடுங்கோ’’ என்றான் பாக்கியநாதன்.

தனபாலனால் அதற்கு மறுமொழி கூற முடியவில்லை; ‘‘பார்த்துத் தாருங்கோ. நாங்களும் கஷ்டப்பட்டனாங்கள்’’ என்றான்.

‘‘பாக்கியநாதன் மேலும் ஆயிரம்ரூபா கொடுத்து விட்டுச் சொன்னான்; நாளைக்கு வா இறைச்சி தாறன்’’.

தீபாபலி தினத்தன்று நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்குச் சென்று வந்த சாரதா தனபாலனுக்குச் சொன்னாள்; ‘‘பிறரின் பொருளைக் களவாடக் கருதி, தக்க நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவன். அருளைப் பெரிதாக எண்ணி அன்புடையவனாக இருக்க மாட்டான்.

அவனுக்கு நரகத்தில் கூட இடம் கிடைக்காது. தற்செயலாகப் பாவம் செய்வது வேறு. தெரியாமல் பாவம் செய்வது வேறு. ஒருவனின் பொருளைத் திட்டமிட்டுக்களவு செய்வது வேறு. ஒருவனின் பொருளைத் திட்டமிட்டு அவன் அவதானமில்லாத நிலையிலோ, அல்லது திட்டமிட்டு சதி செய்து கவர்வதோ பாரதூரமான செயலாகும். இவர்களுக்கு மன்னிப்பே கிடையாது. இவர்கள் தாம் செய்த செயல்களுக்காக ஒரு காலத்தில் வருந்த வேண்டிய நிலை ஏற்படும். அந்நிலை ஏற்படும் காலத்தில் அவர்களுக்கேற்படும் துன்பத்தை நீக்க எவராலும் முடியாது. என்று சுவாமியார் சொன்னவர்.

அதை நினைக்க தனபாலனுக்குப் பயமாக இருந்தது. அவளது உடல் நடுங்கியது. அதைக் கண்ட சாரதா பயத்துடன் கேட்டாள்; ‘‘உங்களுக்கென்ன எனக்குப் பயமாக இருக்கிறது.

285. அருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

பிறரின் பொருளைக் களவாடக் கருதி, தக்க நேரத்தை எதிர்பார்த்திருப்பவன், அருளை பெரிதாக எண்ணி அன்புடையவனாக இருக்க மாட்டான்.

## வாழமுடியாதவன்

நவநீதனின் மாடுகளுக்கு பாக்கியநாதன் கொடுத்த பணத்தை மூன்றாகப் பங்கிட்ட தனபாலன் தனக்குரிய பணத்தை எடுத்துக் கொண்டான். இரண்டு தினங்களுக்கு முன்பு அருளம்பலத்தின் கடையில் திருடிய பொருட்களைக் கொண்டு சென்று பட்டனத்தில் உள்ள வியாபாரி ஒருவனுக்குக் கொடுத்த பணத்தையும் அன்று போய்ப் பெற்றுக் கொண்டான். தனபாலனிடம் ஏழாயிரம் ரூபாவுக்கு மேல் இருந்தது.

‘‘வாருங்கோ கடைக்குப் போவம்’’ என்ற சின்னத்தம்பியும் புஸ்பநாதனும் அவனுக்குப் பின்னாற் சென்றனர். வழமையாக அவர்கள் கள்ளருந்தும் சீனியனின் வீட்டுக்குச் சென்றனர். அவர்களைக் கண்ட சீனியன் அன்புடன் அவர்களை வரவேற்றான்.

தனபாலன் மடிக்குள் கட்டி வைத்திருந்த பையை எடுத்து அதிலிருந்து ஐந்தாறு ரூபாவை எடுத்து சீனியனுக்குக் கொடுத்தான். சீனியன் மகிழ்வுடன் அதைப் பெற்றுக் கொண்டான்.

‘‘நான் கள்ளுக்குடிச்ச காசு கடனாய் நிக்குது. எவ்வளவு தரவேணும்’’ என்று கேட்டன் சின்னத்தம்பி.

சீனியன் கொப்பியை எடுத்துப் பார்த்து விட்டு; ‘‘நீங்கள் நானூறு ரூபா புஸ்பநாதன் முன்நூற்றைம்பது ரூபா’’ என்றான்.

‘‘இந்தா இதிலை ஐந்நூறு ரூபா இருக்கு’’ என்று சின்னத்தம்பி ஐந்நூறு ரூபாத்தாளை நீட்ட புஸ்பநாதன் ஆயிரம் ரூபாத் தாளை எடுத்துச் சின்னத்தம்பியிடம் கொடுத்து விட்டு ஐந்நூறு ரூபாவை அவனிடமிருந்து வாங்கி விட்டுச் சொன்னான்; ‘‘சில்லறை இல்லை இரண்டு பேற்றையும் சேர்த்தெடு.

‘‘மாற்ற என்னிடம் காசில்லைத் தம்பி’’ என்றான் சீனியன்.

‘‘சரி வைச்சுக் கொள். உன்ரை உதவிகள் இல்லாட்டில் எங்களுக்குக் கஷ்டம்’’ என்றான் புஸ்பநாதன்.

மூவரும் நன்றாகக் கள்ளுக் குடித்து விட்டு அருகில் இருந்த பிடைவைக் கடைக்குச் சென்றனர். முதலாளி அவர்களை அமர்க்களமாக வரவேற்றார்; ‘‘டேய்... ஐயாமார் கேட்கிறத்தைக் குடு.. நல்லாய் கவனியுங்கோ. உவை எங்களிடம் தான் துணிகள் வாங்கிறவை. மலிவாய்க் கொடுங்கோ’’.

‘‘மூன்று பேருக்கும் மூன்று வேட்டி எடு... என்ரை மகளுக்கு இரண்டு சட்டை வேணும்’’ மனிசிக்கும் கனகாலமாய்ச் சேலை எடுக்கவில்லை. ஒரு சேலை தா’’ என்றான் தனபாலன்.

மூவரும் அவர்கள் கூறிய விலைக்கு உடு பிடைவைகளை வாங்கிக் கொண்டு வந்தனர்.

‘‘தனபாலண்ணை தீபாபலிக்குக் கள்ளுக் குடிக்க முடியுமே இரண்டு சாராயப் போத்தல் வாங்குவம்’’ என்றான் சின்னத்தம்பி.

‘‘எனக்கும் இரண்டு வாங்கு; புஸ்பா உனக்கு வேண்டாமே...?’’ தனபாலன் கேட்டான்.

‘‘வாங்கினால் குடிக்கேலாதே. உந்தக் கேள்வி சரியில்லை. நான் சாராயம் குடிக்காத மாதிரியெல்லோகேட்கிறாய். எனக்கும் இரண்டு போத்தல் வாங்கியா’’ என்றான் புஸ்பநாதன்.

‘‘துவிச்சக்கர வண்டிகளை விட்டு விட்டு மோட்டார் வண்டியிலை வந்திருக்கலாம். இவ்வளவு பொருட்களையும் எப்படிக் கொண்டு போறது’’ என்று கேட்டான் தனபாலன்.

துவிச்சக்கர வண்டிகள் மூன்றையும் கொண்டு போய் பாக்கிய நாதன்ரை கடைக்குள்ளை விட்டு விட்டு மோட்டார் வண்டியிலை போவம்’’ என்றான் புஸ்பநாதன்.

‘‘கனநாளைக்குப் பிறகு பட்டணத்திற்கு வந்திருக்கிறம். இப்ப ஒரு மணி. ஒரு சாப்பாட்டுக் கடையிலை சாப்பிட்டுட்டு படம் ஒன்று பார்த்திட்டுப் போவமே’’ என்று கேட்டான் சின்னத்தம்பி.

‘‘உனக்குக் கையிலை காசிருந்தால் அதை முடிக்கு மட்டும் ஓய மாட்டாய். நாளைக்கு என்ன செய்யப் போறாய்’’ என்று கேட்டான் தனபாலன்.

‘‘நாளைக்கும் ஏதோ ஒரு வழி பிறக்கும். இவ்வளவு காலமும் சாப்பிடாமலே இருந்தனாங்கள்’’ என்றான் சின்னத்தம்பி.

மூவரும் சாப்பாட்டுக் கடைக்குள்ச் சென்று சாப்பிட்டு விட்டு திரை அரங்கு ஒன்றிற்குச் சென்று படம் பார்த்தனர். படம் முடிவடைந்ததும் தாம் வாங்கிய சாராயப் போத்தலைத் திறந்து குடித்தனர். பின் மோட்டார் வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்தி வீட்டுக்கு வந்தனர்.

மோட்டார் வண்டியில் வீட்டுக்கு வந்து இறங்கிய தனபாலனைக் கண்ட சாரதாவுக்குக் கவலையாக இருந்தது. மூவரும் பொருட்களுடன் இறங்கினர்.

‘‘அண்ணை என்ரை உடுப்புப் பொதியைக் காணேல்லை..’’ என்றான் சின்னத்தம்பி.

‘‘வடிவாய்ப் பாரடா மோட்டார் வண்டிக்குள்த் தான் கிடக்கும்’’ என்றான் தனபாலன்.

‘‘இல்லை அண்ணை திரையரங்காலை வரேக்கை கொண்டு வந்த ஞாபகம் இருக்கு’’ என்றான் சின்னத்தம்பி.

‘‘மோட்டார் வண்டீலை போய் திரையரங்குக்கை பார்த்தாருங்கோ. புஸ்பா நீயும் கூடப் போட்டுவா’’ என்ற தனபாலன் தான் வாங்கிய பொருட்களுடன் உள்ளே சென்றான்.

‘‘பணத்தைச் செலவு செய்வதற்கும் ஓர் அளவு வேண்டும். ஊதாரி ஒருவன் ஒரு மாதம் உழைக்கும் பணத்தை ஒரு நாளில் செலவு செய்து விடுவான்’’ என்றாள் சாரதா. அதற்கு மேல் எவ்வளவோ கதைக்க வேண்டு மென்று அவளது மனம் துடித்த போதும் அவளால் பேச முடியவில்லை.

‘‘உழைப்பவனுக்குத் தான் பணத்தின் அருமை தெரியும். பிறரின் உழைப்பைச் சுரண்டி வாழ்பவர்கள் பணத்தைச் சம்பாதிக்கும் கஷ்டம் புரியாததால் கண்டபடி வாழ்வார்கள். அவர்களால் பணத்தை வைத்துக் காப்பாற்ற முடியாது. உழைப்பாளி ஒருவன் உழைப்பதிலும் பார்க்க உழைத்த பணத்தை பாதுகாக்கத் தெரிந்திரா விட்டால் அவனது கடும்

உழைப்பால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை'' என்று தணிகாசலம் அன்றொரு நாள்க் கூறியது அவளுக்கு நினைவில் வந்தது.

286. அளவின்கண் நின்றுஒழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

களவெடுத்துப் பிறாரின்பொருளில் இன்பமாக வாழ விரும்புபவர்கள் அளவறிந்து வாழ மாட்டார்கள்.

## அளவறிந்தோர்

'' செல்லப்பா, உன்னிலை எனக்கு நம்பிக்கை இருக்கு. நீ களவு செய்ய மாட்டாய் உன்னை அறியாமல் இரண்டு காளை மாடுகளையும் எப்படி அவிழ்த்தார்கள்'' என்று கேட்டான் நவநீதன்.

''அது தான் தம்பி எனக்கும் புரியேல்லை. வழக்கமாய்க் குடிக்கிற மாதிரி ஒரு போத்தல் கள்ளு சீனியனிட்டை வாங்கிக் குடிச்சிட்டு வீட்டை போய்ச் சாப்பிட்டு விட்டு வருவமென்று நினைத்தனான். ஆனால் வீட்டை போக என்னாலை முடியேல்லை. அதாலை அப்படியே வந்து படுத்திட்டன். மற்றய நாட்களில் கள்ளுக்குடிச்சிட்டு வீட்டை போய்ச் சாப்பிட்டுட்டு நாயையும் கூட்டிக் கொண்டு வாறனான். நாய் வந்திருந்தால் இப்படி நடந்திராது'' என்றான் செல்லப்பா.

''உன்னை அறியாமல் இது நடந்திராது. நீ சொல்லுற தொன்றையும் நான் நம்பமாட்டன்'' என்றார் யோகேஸ்வரன்.

அதைக் கேட்கச் செல்லப்பாவுக்குத் துக்கமாக இருந்தது. அதைத் தாங்கிக் கொண்டு சொன்னான்; ''ஐயா முப்பது வரிசமாய் நான் உங்களது வேலைகளைச் செய்து கொண்டு வாறன். என்னைப் பற்றி நீங்கள் புரிந்து கொண்டது இது தானா...? களவெடுத்துச் சீவிப்பதாக இருந்தால் நான் இரவும் பகலும் வேலை செய்யத் தேவையில்லை. என்னுடைய உழைப்புக் கேற்றவாறு எனது குடும்பத்தின் தேவைகளை குறைத்துத் தான் நான் வாழ்ந்து வருகிறேன். எனது மகள் கா.பொ.த.சாதாரண வகுப்புப் படிக்கிறாள். நேற்று பாடசாலையுடன் சுற்றுலாவுக்குச் செல்லப் போவதாகக் கேட்டாள். நான் அவளைச் செல்ல அனுமதிக்கவில்லை. இலங்கை முழுவதையும் சுற்றிப் பார்க்கப் போகிறார்களாம். சின்னத்தம்பியின் மகளும் புஸ்பநாதனின் மகளும் தனபாலனது மகளும் செல்வதாகச் சொன்னாள். மூவாயிரம் நாலாயிரம் ரூபா என்னால் செலவு செய்ய முடியாமையால் தான் நான் அவளை அனுப்பவில்லை. ஊருக்குள் பெருங் கள்வர் என்று பெயரெடுத்த அந்த மூவரின் பிள்ளைகளும் சுற்றுலாவுக்குச் செல்லும் போது எனது மகள் செல்லாதது எனக்குக் கவலையை அளித்தது. தணிகாசலம் அண்ணை வந்து அனுப்பும் படி சொன்னார். காசும் தான் தருவதாகச் சொன்னார். ஆனால்

நான் அனுப்பேல்லை. பிறரைத் தட்டிச் சுற்றி வாழ விரும்பவில்லாததால் தான் நான் அவளை அனுப்பவில்லை. அடுத்தவரிட்டை கடன் பெறுவதும் களவெடுப்பதைப் போன்றது என்று நான் நினைத்தால் தான் நான் அவரிடம் காசு வாங்க விருப்பமில்லை. முப்பது வருடங்களாய் நேர்மையாக உழைத்த என்னைச் சந்தேகப் படுறியள் என்பதை நினைக்க எனக்குக் கவலையாக உள்ளது'' அழுதான் செல்லப்பா.

''சரி.. நீ சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அன்று நீ ஏன் நாயைக் கூட்டி வரவில்லை'' யோகேஸ்வரன் கேட்டார்.

''அது தான் நான் செய்த பிழை. அறியாமல் எதையும் நான் கதைக்க விரும்பவில்லை. நான் உண்மையானவன் என்பதை நான் வணங்கிற மகா கணபதி உங்களுக்குச் சொல்வார். அப்பிடிச் சொல்லாட்டில் நான் அந்தக் கோயில் வாசலை மிதிக்க மாட்டன்'' என்றான் செல்லப்பா.

''அப்பா, நீங்கள் வீணாக செல்லப்பாவின் மீது குற்றம் சாட்டாதீர்கள். செல்லப்பா நல்லவன்; நேர்மையானவன்; அன்று ஏதோ ஒரு தவறு நடந்து விட்டது. திட்டமிட்டு யாரோ சதி செய்திருக்கிறார்கள்'' என்றான் நவீதன்.

''அப்படித்தான் தம்பி நானும் நினைக்கிறன். ஏதோ இளமையில் பழகிய கூடாத பழக்கத்தாலை தான் இன்றைக்கு எனது நேர்மையான வாழ்வுக்கு இழுக்கேற்பட்டது. சீனியன் அல்லது வேறுயாரோ ஒருவர் கள்ளுக்குள் எதையோ கலந்து விட்டார்கள். அதனால் தான் ஒரு நாளும் இல்லாதவாறு அன்று எனக்கு கட்டுப்பாடில்லாத வெறி ஏற்பட்டது'' என்றான் செல்லப்பா.

''செல்லப்பா குடியால் தானே உனக்கு இன்று அவப் பெயர் ஏற்பட்டது. அதை உணர்ந்து இனிமேலாவது குடியை நிறுத்து'' என்றார் யோகேஸ்வரன். செல்லப்பா எதுவும் பேசாது சென்றான்.

அன்று மாலை செல்லப்பா கற்பூரத்துடனும் தேங்காயுடனும்மகா கணபதியின் ஆலயத்திற்கு வந்தான். கற்பூரத்தைக் கொழுத்தி, தேங்காயை உடைத்து விட்டு மகா கணபதியை வணங்கி, முறையிட்டான். அவனது மனப் பாரம் சற்றுக் குறைவடைந்தது. அரசமரத்தின் கீழ்ச் சுவாமியார் இருந்தார். அவரின் அருகே சென்ற செல்லப்பா அவரின் பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டு விக்கி விக்கி அழுதான். அவனது அழுகை அடங்கும் வரை பேசாதிருந்த சுவாமியார் அவன் அழுகையை நிறுத்தியதும் சொன்னார்; ''மகனே ஒருவனுக்குக் கஷ்ட காலம் வந்தால் செய்யாதவற்றையும் செய்ததாகப் பழி வந்து சூடும். நல்ல கால மாயின் செய்த குற்றங்களும் பிறர் மீது சென்று விடும். கவலைப்படாதே. கடவுளை அன்போடு தொழுபவனது மனத்திலும் தனது வருமானத்தின் அளவு அறிந்து கட்டுப்பாட்டுடன் செலவு செய்பவனது மனத்திலும் பிறரின் பொருளைக் கவர வேண்டு மென்ற வஞ்சனையான எண்ணம் இராது. யாரும் எதையும் சொல்லட்டும். நீ உனது மனதைத் தளர விடாதே. உண்மை ஒரு நாள் எல்லோருக்கும் தெரிய வரும். அப்பொழுது உன்னைக் குறை கூறியவர்கள்

வருத்தப்படுவார்கள். தேவையில்லாத எண்ணங்களால் உடலும் மனமும் பலவீனப்படும். வீணாக எதையும் யோசிக்காதே. நடந்தவை யாவும் மகா கணபதிக்குத் தெரியும். அத்துடன் உன்னைப் புரிந்து கொண்டவர்களுக்கும் தெரியும்''. என்று கூறி விட்டு சுவாமியார் கண்களை மூடினார்.

செல்லப்பாவுக்கு மனதில் உறைந்திருந்த துயரம் சற்று நெகிழ்வதைப் போல இருந்தது. வெகு நேரம் வரை அவன் அங்கு இருந்தான். மனச் சுமை முற்றாகக் குறைந்ததைப் போல இருந்தது.

287. களவுஎன்னும் காரறி வாண்மை அளவுஎன்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

தனது வருமானத்தின் அளவு அறிந்து வாழும் அறிவு படைத்தவர்கள் களவு செய்வதென்ற தீய செயலில் ஒரு போதும் ஈடுபட மாட்டார்கள்.

## அறம் வாழும் இடம்

கடந்த காலங்களில் தான் செய்த களவுகளையும் கொடுமைகளையும் நினைக்கத் தனபாலனுக்குப் பயமாக இருந்தது.

''செல்லப்பா அண்ணை இன்றைக்கு மகா கணபதி ஆலயத்தில் உண்ணா நோன்பு அனுட்டிக்கிறாராம். நவநீதனின் மாடுகள் களவு போய் இரண்டு மாதங்கள் கழிந்த போதும் இன்னும் உண்மை வெளிவரவில்லையாம். தான் குற்றமில்லாதவன். என்பதை நவநீதனின் தந்தை நம்ப மறுக்கிறாராம். தானும் சேர்ந்து தான் மாடுகளைக் களவாடியிருக்க வேணுமென்று நினைக்கிறாராம். அதாலை கவலைப் பட்ட செல்லப்பா அண்ணை கோயிலடீலை உண்ணா நோன்பு அனுட்டிக்கிறாராம்'' என்றாள் சாரதா.

மாடுகளை களவாக அவிழ்த்த பின்பு சீனியனின் வீட்டுக்குக் கள்ளருந்த புஸ்பநாதனும் தனபாலனும் சின்னத்தம்பியும் இரண்டு வாரங்கள் செல்லவில்லை. அன்று சென்ற போது சீனியன் சொன்னான்; ''மாட்டுக்காசு முடிஞ்சாப்பிறகு தான் வாறியள். காசிருக்கேக்கை சாராயம். காசு முடிஞ்சால் கடனாய்க் கள்ளு. அப்படித் தானே''.

அப்பொழுது செல்லப்பா அங்கு வந்தான்; ''சீனி இனிமேல் நான் கள்ளுக் குடிக்கிறேல்லை என்று முடிவெடுத்திட்டன். கள்ளுக் குடிச்சதாலை தான் நேர்மையாக வாழ்ந்த என்னை இன்றைக்குப் பலரும் சந்தேகிக்கின்றார்கள். கள்ளுக் குடிக்கிறவனின்ரை நெஞ்சிலை அறம் வாழாது என்று கேள்விப்பட்டிருக்கிறன். அது உண்மை என்று இப்ப புரிஞ்சிட்டுது. எவ்வளவு தான் உத்தமனாக வாழ்ந்தாலும், ஒரு சிறு குற்றம் செய்தால். அது பெரும் பழியை உண்டாக்கும் என்பதை நான் உணர்ந்திட்டன். இப்ப இதைச் சொல்லிப் போட்டுப் போக நான் வரேல்லை. இருபத்தைந்து முப்பது வரிசமாய் நான் உன்னட்டை வந்து போறனான் என்பதை நீ மறந்திட்டாய்.

அண்டைக்கு நான் குடித்த கள்ளிலே ஏதோ வித்தியாசம் இருந்தது. நீ அதைச் செய்திருந்தால் நீ அனுபவிப்பாய். உனக்குத் தெரியாமல் வேறு யாராவது ஏதாவது செய்திருந்தால் அவர்கள் அனுபவிப்பார்கள். நம்பிக்கை உன்மீது இருந்ததாலை தான் நான் உன்னட்டை வாங்கிக் குடிச்சனான். இப்ப எனக்கு நம்பிக்கை இல்லாததாலை குடிக்க வரமாட்டன். நான் வணங்கிற மகா கணபதி உண்மையானவராக இருந்தால் எனக்கு எல்லாவற்றையும் காட்டுவார். நான் ஏழையே தவிரக் கள்ளன் இல்லை. களவெடுத்து நான் வாழ்க்கையை நடத்தினால் என்ரை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இரவும் பகலும் உழைக்க மாட்டன். நான் பாடுபட்ட உழைக்கிற காசில் ஒவ்வொரு சதத்தையும் தேவையை அறிந்து சிக்கனமாகத் தான் செலவு செய்கிறனான். நான் அறத்தை மறக்கவில்லை. அதனால் நான் நன்றாக வாழ்வன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. களவு, வஞ்சகம், துரோகம் செய்பவனின் நெஞ்சில் அறம் இருக்க மாட்டாது. அதனால் அவனுக்கு நாம் புத்திமதிகள் கூறினால் ஏறாது. ஒரு நாளைக்கு எல்லாவற்றுக்கு மாகச் சேர்த்து அபவிக்கும் பொழுது தான் தெரியும்'' என்று கூறி விட்டுச் சென்றான்.

செல்லப்பா சென்ற பின்பு புஸ்பநாதன் சொன்னான்; ''சீனி உன்னிலை செல்லப்பாவுக்குச் சந்தேகமிருக்கு. குடிச்சுப் போட்டு யாருக்காவது உழறிப் போடாதை''.

''நீதி நியாயம் பேசிப் போட்டுப் போறார். உங்கை நீதி நேர்மையாய் வாழுறவன் யார் நல்லாய் இருக்கிறான். தவறு செய்பவர்களைத் தெய்வம் தண்டிக்கிற தாயிருந்தால் உலகத்திலை ஒருத்தரும் வாழேலாது. ''சிரித்தான் தனபாலன்.

''ஆஸ்பத்திரியிலை வேலை செய்யிற மயில் வாகனத்திற்கு என்ன சொல்லி நித்திரைக் குளிசை வாங்கினனி'' என்று கேட்டான் சின்னத்தம்பி.

''எனக்குப் பத்துப் பதினைந்து நாட்களாய் நித்திரை வரவில்லை என்று சொன்னன். மயில்வாகனம் மற்ற நாள் கள்ளுக் குடிக்க வரேக்கை மூன்று குளிசை கொண்டந்து தந்தது. ஒவ்வொன்றைத் தான் போடச் சொன்னது. நான் மூன்றையும் போட்டுட்டன். என்றான் சீனியன்.

''மயில்வாகனம் ஓர் அலம்பல் பேர் வழி. முந்தி நான் வேறை குளிசை வாங்கினனான். வாசிகசாலையிலை இருந்து கதைக்கேக்கை சொன்னவனாம். அப்பிடி யாருக்காவது சொன்னால் கரைச்சல்'' என்றான் புஸ்பநாதன்.

''எல்லாம் முடிஞ்சுது. இனி யோசித்துப் பிரயோசனமில்லை'' என்று தனபாலன் சொல்லிக் கொண்டிருக்கும் போது மயில்வாகனம் அங்கு வந்தான். சீனியனுக்குப் பயமாக இருந்தது; ''இந்தக் காலத்திலை யாரை நம்புவது. செல்லப்பா தானாம் நவநீதன்ரை மாட்டை அவிழ்த்துக் கொடுத்தது. கேட்டால் தான் வெறீலை நித்திரையாய்ப் போனன் என்றாராம். அப்பிடி நித்திரை வர என்ன நித்திரைக் குளிசை குடிச்சவரே... கள்ளன் ஒரு நாளைக்கு அகப்படுவன். இவங்களைப் போன்றவர்களைச் சமூகத்தில் உலாவ விடக்

கூடாது. யோகேஸ்வரன் கோயிலுக்கு அள்ளிக் குடுக்கிறவர். சுவாமியார் வெகு விரைவில் அவன் பாடாய் விழுவன் என்றவராம்’’.

‘‘வெகு விரைவில் பாடாய் விழுவன்’’ என்ற சொற்கள் தனபாலனின் காதுகளில் பயங்கரமாக ஒலித்தன. பயந்து நடுங்கியவாறு சொன்னான்; ‘‘சாரதா நான் உன்ரை பேச்சைக் கேளாமல் பல தவறுகள் செய்திட்டன். செல்லப்பா குடிச்ச கள்ளுக்கை நாங்கள் தான் நித்திரைக் குளிசையைக் கலந்தனாங்கள். செல்லப்பா இன்றைக்கு உண்ணா நோன்பு அனுட்டிக்கிறத்தை நினைக்க எனக்குப் பயமாக இருக்கு. உள்ளதைச் சுவாமியாருக்குச் சொல்லுவ மென்று நினைக்கிறன்’’.

சாரதா, தனபாலனை அழைத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றாள்.

288. அளவுஅறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவுஅறிந்தார் நெஞ்சில் கரவு.

அளவறிந்து வாழ்கின்றவரின் நெஞ்சில் அறம் நிற்பது போல, களவெடுத்து வாழ்பவனின் நெஞ்சில் வஞ்சம் நிற்கும்.

## அழிபவர்கள்

சாரதாவுடன் வந்த தனபாலனை வழியில் புஸ்பநாதன் கண்டான். நாலைந்து நாட்களாகத் தனபாலனைப் புஸ்பநாதன் சந்திக்கவில்லை. அன்று ஞானபண்டிதனின் வீட்டுக்குச் சென்று வந்த பின் ஸ்ரீனிவாசன் சுவாமியைச் சென்று தரிசித்தான். அதன் பின் வீட்டிலேயே இருந்தான். இரவு எட்டு மணிக்கு மகா கணபதிக்குப் பூசை நடைபெறும். கடந்த நாலைந்து தினங்களாக இரவு எட்டுமணிக்கு நடைபெறும் பூசைக்கு அவனும் சாரதாவும் சென்று வந்தனர்.

தனபாலனை நாலைந்து நாட்களாகக் காணாத புஸ்பநாதனுக்கு வேதனையாக இருந்தது. வீட்டுக்குச் சென்று அவனைச் சந்திக்க புஸ்பநாதன் விரும்பவில்லை. இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு நாள் புஸ்பநாதன் தனபாலனைத் தேடி அவனது வீட்டுக்குச் சென்றான். அப்பொழுது அங்கே தனபாலன் இருக்கவில்லை. தனபாலன் இல்லாமையால் புறப்பட்ட புஸ்பநாதனை சாரதா ‘‘புஸ்பநாதன்’’ என்று முழுப் பெயர் சொல்லி அழைத்தாள்.

அவனை யாரும் அப்படி அழைப்பதில்லை. புஸ்பா, புஸ்பா என்று தான் அழைப்பார்கள். அத்துடன் அவன் பல வருடகாலமாக அங்கு வந்து செல்கிறான். ஒரு நாளென்றாலும் சாரதா அவனை ஏறிட்டுக் கூடப் பார்ப்பதில்லை. அவனுக்குக் குடிப்பதற்கு ஏதாவது கொடுப்பதாக இருந்தாலும் தனபாலன் தான் உள்ளே சென்று எடுத்து வந்து கொடுப்பான்.

முற்றத்தில் நின்ற புஸ்பநாதனுக்கு அருகில் வந்தாள் சாரதா; ‘‘நான் உங்களைக் குறை சொல்லவில்லை. எனது கணவர் கூடாத வழியில் சென்று பாவத்தை மூட்டையாகச் சேர்க்கிறார். அவருக்குத் துணையாக நீங்கள் நாலைந்து பேர் இருக்கிறீர்கள். எனது கணவரைத் திருத்த முடியாது. திருந்தக் கூடிய நிலையிலும் அவர் இல்லை. அவரோடு சேர்ந்து படு பாதகமான செயல்களைச் செய்ய உங்களுக்கு வெட்கமாக இல்லையா. நண்பரான நீங்கள் அவருக்குப் புத்திமதி சொல்லலாம் தானே. பகல் முழுவதும் குடித்து விட்டு இரவில் களவெடுத்து வாழும் எனது கணவரால் எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் பெரும் அவமானம் ஏற்படுகிறது. தெரியாத்தனமாக நான் இவரை விரும்பிக் கல்யாணம் செய்ததால் எனது பெற்றோரும் சகோதரர்களும் அவமானப்படுகிறார்கள். என்னை எனது பெற்றோர் பிள்ளை என்று ஏற்பதில்லை. எப்பொழுதோ என்னைத் தலை முழுகி விட்டார்கள். எமது குடும்பம் இப்போது இருக்கும் கேவலமான நிலைக்கு வர எனது கணவரின் செயல்களே காரணமாகும். ஒழுங்காக வாழ முடியாதவர்கள் தான் வாழ்க்கையில் கஷ்டப்படுகிறார்கள். எனவே இனியாவது ஒழுங்காக வாழுங்கள். ஒழுங்காக வாழ முடியாவிட்டால் எனது கணவரோடு சேராதீர்கள்’’ என்றாள்.

அதன் பின் தனபாலனின் வீட்டுக்குச் செல்ல அவனுக்குப் பயமாக இருந்தது. அதனால் அவன் செல்லவில்லை.

‘‘என்னடாப்பா என்னை மறந்திட்டியே. நாலைந்து நாட்களாக வீட்டுப் பக்கம் காணேல்லை’’. என்றான் தனபாலன்.

உடனடியாக புஸ்பநாதனால் பதில் கூற முடியவில்லை. சாரதா சொன்னதை எப்படிச் சொல்வது என்று யோசித்தவாறு தனபாலனைப் பார்த்தான். அவனது முகம் விகாரமடைந்திருந்தது. கண்கள் தாண்டு முக எலும்புகள் வெளியே தள்ளிக் கொண்டிருந்தன. அரைவாசியாக அவன் மெலிந்திருந்தான்.

‘‘சுகமில்லை அண்ணை, பாலகுமாரனிட்டை மருந்தெடுத்தனான். இப்ப உங்களைப் பார்க்கத்தான் வந்தனான்’’ என்று பொய் சொன்னான்.

வீதியோரமாக நின்ற அரசமரத்தின் கீழ் அமர்ந்த தனபாலன் கவலையோடு சொன்னான்; ‘‘திருடுவதைத் தவிர வேறு நல்ல செயல்களைச் செய்யாத நான், அச் செயல்களுக்காக இப்ப வருத்தப்படுகிறேன். கெட்ட செயல்களில் ஈடுபடுவோர் அழிந்து போவார்கள் என்று அடிக்கடி சாரதா சொல்வாள். அதை நான் கேட்கிறேல்லை. முந்தி நான் செய்த பாவங்களெல்லாம் என்னை இப்ப சூழ்ந்திட்டுது. இனிக் கனகாலம் நான் வாழ மாட்டன்’’ அழுதான் தனபாலன்.

‘‘விசர்கதை கதையாதை. செய்வினை எல்லாம் எடுத்தாயிற்றுது. இனி நல்ல சாப்பாடாய்ச் சாப்பிடு. தேவையில்லாத விஷயங்களை நினைத்து மனதைக் குழப்பதை’’ என்றான் புஸ்பநாதன்.

‘‘புஸ்பா, எனக்குப் பயமாக இருக்கடா. செல்லப்பா நல்ல மனிசன். யோகேஸ்வரன் அவனைச் சந்தேகப் பா்றதாலை அவன் இன்றைக்கு மகா கணபதி ஆலயத்தில் உண்ணாமல் நோன்பிருக்கிறான். மகா கணபதி சக்தி உள்ளவா். கட்டாயம் காட்டிக் கொடுத்து விடுவாா்’’ என்றான் தனபாலன்.

‘‘நீயும் சின்னத்தம்பி மாதிரித் தான் சொல்லப் போறாய் போலை கிடக்குது. அவனும் பயத்திலை எல்லாவற்றையும் சொல்லிப் போட்டான். நீயும் சொல்லப் போறாய் போலை கிடக்கு’’ என்று புஸ்பநாதன் வாா்த்தைகளை முடிக்கு முன் சாரதா சொன்னாள்; ‘‘எனக்கு எவ்வளவு அவமானம் வந்தாலும் பரவாயில்லை. எனது கணவா் திருந்த வேணும். மற்றவா்களைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. வாருங்கோ போவம்’’ என்ற சாரதா குந்தியிருந்த தனபாலனின் கையைப் பிடித்தாள்.

‘‘உடம்பு சரியில்லை கோயிலுக்குப் போறன்’’ என்று கூறி விட்டு நடந்தான் தனபாலன். அவன் செல்வதை யோசனையுடன் பாா்த்துக் கொண்டு நின்றான் புஸ்பநாதன்.

289. அளவுஅல்ல செய்தாங்கே வீவா் களவல்ல
மற்றைய தேற்றா தவா்.

களவெடுப்பதைத் தவிர மற்ற நல்ல செயல்களை அறியாதவா்கள், அளவு கடந்த தீய செயல்களைச் செய்து அவ்வப்போதே அழிவாா்கள்.

## துனையாகா

சாரதாவின் கையைப் பிடித்தபடி மிகவும் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்த தனபாலனைக் கண்டு அதிா்ச்சியடைந்தான் சின்னத்தம்பி; ‘‘எண்ணண்ணை சரியாய் மெலிஞ்சு போனியள். ஏன் சாப்பிா்றேல்லையே..’’ ஒப்புக்குக் கேட்டான் சின்னத்தம்பி.

மகா கணபதி ஆலய முன் வாசலில் நின்ற வேப்பமரத்தின் கீழ் அமா்ந்த தனபாலன் சின்னத்தம்பியைப் பாா்த்தான். நெற்றியில் வீபூதிப் பூச்சு, அதன் மேல் பெரியதொரு சந்தணப் பொட்டு. நெஞ்சிலும் கைகளிலும் வீபூதிக் குறிகள். முன்பென்றால் வாரத்தில் ஒரு முறை குளிக்கும் சின்னத்தம்பி அன்று மிகவும் சுத்தமாக இருந்தான். வேட்டி கிழிந்திருந்தாலும் தூய்மையாக இருந்தது. என்னொடு சோ்ந்து பல பாவங்களைச் செய்த இவனாலை எப்படிச் சந்தோசமாக இருக்க முடியுது. கோயிற் குரங்குகளை அறுத்த பாவம் தான் அவனை விசரனாக்கியது. அதை ஒரு சதமும் செலவு செய்யாது சுவாமியாா் சுகமாக்கி விட்டாா். ஆனால் எனக்குச் செய்வினை எடுத்து ஏகப்பட்ட செலவை உண்டாக்கி விட்டாா்’’ என்று நினைத்தான் தனபாலன்.

“என்ன யோசிக்கிறியள். இந்த வாசலுக்கு வந்திட்டால் கவலை வராது. நானும் முந்தி உன்னைப் போலை தானே வாழ்ந்தனான். என்னுடைய மனைவி என்னை இஞ்சை கூட்டியந்ததாலை எல்லா வருத்தமும் மாறீட்டுது. ஆனால் செய்த பாவங்களை நினைக்கத் தான் துன்பமாக உள்ளது” பெருமூச்சு விட்டான் சின்னத்தம்பி.

“முன்பு செய்த தவறுகளுக்கு மன்னிப்புத் தேவையானால் இனித் தவறுகள் செய்யாதிருத்தல் வேண்டும். திருடி வாழ்பவர்களுக்கு உடம்பு எந்நாளும் ஒத்துளைப்பு வழங்காது. ஒரு நாளைக்கு நோய் வாய்ப்படு மென்று நீங்கள் இரண்டு பேரும் புரிந்து கொண்டுள்ளீர்கள். தயவு செய்து இனியாவது திருந்துங்கள்” என்றாள் சாரதா.

“ஐயோ, இனிமேல் நான் மனதாற் கூட பாவம் செய்ய மாட்டன். உங்களுக்குச் சுவாமியார் செய்வினை செய்து தர நான் அதைக் கொண்டு வந்து நீங்கள் குடிக்கிற கள்ளிலை கலந்து விட்டதாய்ச் சொன்னனீங்களாம்...” சின்னத்தம்பி பேசும் போது தனபாலன் குறுக்கிட்டான்; “அப்பிடி நான் சொல்லேல்லை. ஞானபண்டிதனும் புஸ்பநாதனும் தான் சொன்னவை.

“நான் அதைக் கேள்விப்பட்ட போது, நீ அறியாமையாற் தான் அப்படிச் சொல்கிறாய் என்பதை உணர்ந்து கொண்டேன். மகா கணபதி தான் சுவாமியாராய் இவ்வூர் மக்களுக்கு உதவிகள் செய்ய வேண்டு மென்று நினைத்து இவ்வூரில் பிறந்துள்ளார். அவரின் பெருமைகளை நாவால் சொல்ல முடியாது. நீ உனது பொறுப்புக்களை மகா கணபதியிடம் ஒப்படைத்து விட்டு, சுவாமியாரின் போதனைகளைக் கேள். ஓரிரு வாரத்தில் குணமடைந்து விடுவாய். அதற்கு முன் நீ செய்த பாவங்களை யெல்லாம் எடுத்துச் சொல். அதனால் மனப் பாரம் குறையும்; நிம்மதி உண்டாகும்” என்றான் சின்னத்தம்பி.

“அதுக்காகத் தான் அண்ணை இவரைக் கூட்டியந்தனான். சுவாமியாரைக் காணவில்லை. உள்ளே செல்லப்பா உண்ணா நோன்பிருக்கிறான். அவனிடம் இவரை அழைத்துச் செல்லுங்கள். அவர் உண்மையைக் கூறுவார்” என்றார் சாரதா.

சின்னத்தம்பி, தனபாலனைக் கோயிலின் உள்ளே அழைத்துச் சென்றான். செல்லப்பாவின் அருகில் சுவாமியார் இருந்தார்; “ஒருவனது மனதில் அளவற்ற ஆற்றலும் அறிவும் சக்தியும் குடி கொண்டுள்ளது. அதை நல்ல வழியில் செயற்படுத்துவதன் மூலம் பெரும் சாதனைகளைப் படைக்கலாம். செல்லப்பா உனது மனவலிமையை நான் பாராட்டுகிறேன். தன் நம்பிக்கையும் மனவலிமையும் உள்ள ஒருவனைப் பிறர் வெல்ல முடியாது. நடக்க வேண்டும் என்று நினைப்பதை ஓயாது நினைத்திருந்தால் மனவலிமை உண்டாகும். மனவலிமையை எந்தச் சக்தியாலும் வெல்ல முடியாது. உனது

காரியம் வெற்றியளித்து விட்டது. இனி நோன்பை முடிக்கலாம்'' என்றார் சுவாமியார்.

''எனக்கு ஒன்றும் புரியவில்லை சுவாமி. எனினும் எனக்குத் தன் நம்பிக்கையையும் மனவலிமையையும் தந்தவர் நீங்கள் தான். உங்கள் வார்த்தைகள் ஆராய்வுக்கு அப்பாற் பட்டவை. எனவே நான் எனது விரதத்தை முடித்துக் கொள்கிறேன்'' என்று கூறக் கோயிற் குருக்கள் பிரசாதத்துடன் அவ்விடத்திற்கு வந்தார். செல்லப்பா கைகளை நீட்டக் குருக்கள் பிரசாதத்தைக் கொடுத்தார். செல்லப்பா அதை வாங்கி உண்டான்.

அப்பொழுது தனபாலன் அலறினான்; பெருங்குரலெடுத்து அழுதான். சில நிமிடங்கள் கழித்துச் சொன்னான்; ''சுவாமி தங்களின் சக்தியை அறியாததாற் தான் நான் இன்று இந்நிலைக்குள்ளானேன். அன்று செல்லப்பா குடித்த கள்ளில் நித்திரைக் குளிசைகளைச் சீனியனைக் கொண்டு கலப்பிச்சது நான் தான். செல்லப்பாவுக்கு எதுவும் தெரியாது. அவன் பாவம் என்றான்.

''சுவாமியாருக்கு நான் தான் அத்திட்டத்தை உருவாக்கிக் கொடுத்தேன் என்று எப்போதோ சொல்லி விட்டேன். அவர் அவ்விஷயத்தைத் தனபாலனின் வாயால் கேட்க விரும்பினார். அதனால் தான் தனபாலன் திருந்த வாய்ப்பு ஏற்பட்டது'' என்றான் சின்னத்தம்பி.

அப்பொழுது அங்கே இந்திரா ஆசிரியை வந்தார்; ''தனபாலு உன்னுடைய படிப்புச் செலவு முழுவதையும் தான் ஏற்றுக் கொள்வதாக ஸ்கந்ததேவா சொல்கிறார். ஒவ்வொரு மாதமும் உனக்குக் காசு வரும்''.

''மிகவும் மகிழ்ச்சி அக்கா. நான் கேளாமலே இந்த உதவியை நீங்கள் செய்திருக்கிறியள்'' என்றான் தனபாலன்.

''அவன் நல்ல கெட்டிக்காரன். அவன் படிக்காமல் உழைக்கிறது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் தான் சொன்னேன்'' என்றார் இந்திரா ஆசிரியை.

290. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை; கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

களவெடுத்து வாழ்பவர்களுக்கு உடம்புங் கூட உற்ற துணையாகாது. தவறிப் போகும். களவெடுக்காமல் வாழ்பவர்களுக்கு தேவர் உலகு தவறாது கிடைக்கும்.

## தீமை இல்லாத சொல்

“ நல்ல வாழ்க்கைக்கு வாய்மையே இன்றியமையாத தேவையாகும். இதைக் கருத்திற் கொண்டு தான் நம் முன்னோர் களவெடுத்தாலும் பொய் சொல்லாதே என்று கூறியுள்ளனர். பெருஞ் செல்வங்களைச் சேர்த்துத் தனவானாக வேண்டுமானால் உண்மையைப் பேசி உத்தமனாக வாழ வேண்டும். அடுத்தவனைக் கெடுத்தும் பணம் சம்பாதிப்பது வாழ்க்கையாகாது. மனிதன் இறைவனால் இரட்சிக்கப்படும் மேலானவனே அன்றி தண்டிக்கப்படும் பாவியல்ல. என்பதை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். வாய்மையற்ற வாழ்க்கையால் எந்தப் பிரயோசனமும் இல்லை, வாய்மை எனப்படுவது மற்றவர்களுக்குச் சிறிதும் தீங்கினை உண்டாக்காத சொற்களைப் பேசுவதாகும். மற்றவர்களுக்குத் தீங்கான செயல்களைச் செய்யாதவன், தீங்கான சொற்களைப் பேசமாட்டான். செல்லப்பா மற்றவர்களுக்குத் தீங்குகள் செய்யாதவன். அதனால் தான் மற்றவர்களைப் பற்றி தீங்கான சொற்களை அவனால் பேச முடியவில்லை. அதனால் தான் மகா கணபதியின் கோயிலில் உண்ணாது நோன்பிருந்தான். இந்த வலிமை எல்லோருக்கும் வராது. அடுத்தவர்களைக் குற்றம் காண்பதை விடுத்து தன்னைத் தானே குற்றம் கண்டால் உலகில் எந்தவிதமான பிரச்சினைகளும் வராது. நவநீதனின் மாடுகள் களவு போனமைக்குக் காரணம் தான் கள்ளுக் குடித்தது என்று செல்லப்பா நினைத்ததாற்தான் அவன் நோன்பிருந்து வெற்றி கண்டான். இச் செயலை எல்லோரும் பின்பற்ற வேண்டும்’’ என்றார் சுவாமியார்.

‘‘சுவாமி, தெரியாத்தனமாக நான் பல தவறுகளைச் செய்து விட்டேன். அவை யாவும் தவறு என்று உணரும் போது தான் அதன் தாக்கம் எனக்குப் புரிகிறது. அத் தாக்கங்களைப் புரிந்மையால் இனிமேல் நான் தவறுகள் எவையும் செய்ய மாட்டேன். இது வரை காலமும் நான் செய்த தவறுகள் யாவற்றையும் மன்னித்து என்னைக் காத்தருளல் வேண்டும்’’ என்றான் தனபாலன்.

‘‘சிறையில் அடைப்பது தண்டனையை அனுபவிப்பதற்கல்ல தவறை உணர வைப்பதற்கு உண்மையான தண்டனை. தவறை உணர்ந்தவன் தான் செய்த செயல்களுக்காகத் தினமும் துன்பப்படுவான். அத்துன்பம் தான் அவனுக்குத் தண்டனை. நீ உனது தவறை உணர்ந்துள்ளாய். இனிமேல் மனத்தால் கூட தவறு செய்ய மாட்டாய் என்று எண்ணுகிறேன். எல்லோருடனும் அன்பாகப் பழகுவதும் தீய சொற்கள் பேசாதிருப்பதும் தான் உண்மையான மனிதனுக்கு அழகு’’ என்றார் சுவாமிகள்.

அப்பொழுது அங்கே யோகேஸ்வரன் வந்தார்; ‘‘செல்லப்பா என்னை மன்னித்துக் கொள். முப்பது வருடங்களாக எமது தோட்டத்தில் வேலை செய்து வருகிறாய். இது வரை நீ நாம் சொல்லிய வார்த்தைக்கு மறு வார்த்தை பேசியது கிடையாது. உனது இயலாமையைக் கூடப் பணிவாகத் தான் சொல்வாய். எனது மனைவி நீதான் தனது மூத்த பிள்ளை என்று சொல்வாள். அத்துடன் நான் உன்னைச் சந்தேகித்ததனால் அவள் மூன்று நாட்களாகச் சாப்பிடவில்லை; செல்லப்பா இது நாள் வரையில் நான் சொன்ன சொல்லைத் தட்டியது கிடையாது. அம்மா, அம்மா என்று அவன் அழைக்கும் பொழுது எனது மனம் குளிரும். இருதய நோயாளியான எனது மகனுக்கும் எனக்கும் அவன் செய்யாத பணி விடைகள் எதுவும் இல்லை. அன்பாகப்

பேசுவான். அவன் பேசும் சொற்களில் ஒரு நாள் கூட ஒரு பேசத்தகாத வார்த்தை வந்ததில்லை. அவனைச் சந்தேகப்படும் உங்களை நான் மன்னிக்க மாட்டன். என்றோ ஒரு நாள் உண்மை வெளிப்படும் போது உங்களது நிலை என்ன என்று எண்ணிப் பார்த்தீர்களா..? அவன் குற்ற மற்றவன் என்று நிரூபிக்கப்பட்டால் எப்படி அவனின் முகத்தில் விழிப்பீர்கள். என்று சொல்வாள். அது இப்பொழுது உண்மையாகி விட்டது. என்னை மன்னித்துக் கொள்ளடா..'' என்று கலங்கினார் யோகேஸ்வரன்.

''ஐயா நான் உங்களின் வீட்டில் முப்பது வருடங்களாக வேலை செய்கிறேன். நீங்கள் எனக்கு இது வரை காலமும் எந்தக் குறையையும் வைக்கவில்லை. நீங்கள் என்னைச் சந்தேகப்பட்டதைப் பற்றி நான் ஒரு போதும் கவலை கொள்ளவில்லை. ஏனென்றால் நான் உங்களது மாடுகள் களவு போவதற்குத் துணையாக இருந்துள்ளேன்....'' செல்லப்பா பேசிக் கொண்டிருக்கும் போது தனபாலன் குறுக்கிட்டான்; ''இல்லை செல்லப்பா எனக்கு உதவி செய்யவில்லை''.

''நான் கள்ளுக் குடிப்பதைத் தெரிந்து தானே நீங்கள் கள்ளுக்குள் நித்திரைக் குளிசையைக் கலந்தீர்கள்; ''நித்திரைக் குளிசை கலந்த கள்ளைக் குடித்தமையால் தான் உங்களால் மாடுகளைத் திருட முடிந்தது. பஞ்சமா பாதங்களில் ஒன்றான கள்ளருந்தியமையால் தான் அச்சம்பவம் நடந்தது. அதனால் தான் ஐயா சந்தேகித்தார். ஐயா சந்தேகித்தது மிகவும் சரி நான் தான் முதலாவது குற்றவாளி'' என்றான் செல்லப்பா.

சுவாமியார் சிரித்தார்; ''மகனே நீ சொல்வது முற்றிலும் சரியானது இனிமேல் கள்ளைக் குடியாதே நல்லவர்களின் வார்த்தைகளில் கொடுஞ் சொற்கள் இருக்க மாட்டாது என்பதற்குச் செல்லப்பா இப்பொழுது பேசிய வார்த்தைகள் சான்றாகும்'' என்ற சுவாமியார் தனபாலனின் பக்கம் திரும்பிச் சொன்னார்; ''தவறு செய்வது பாவம்; தவறுகள் செய்ய மாட்டேன் என்று கூறி விட்டுத் தவறுகள் செய்வது மகா பாவம். அதற்கு மன்னிப்பே கிடையாது என்றார்.

''சுவாமி நான் இனிப் பாவம் செய்ய மாட்டேன்'' என்றான் தனபாலன்.

291. வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்
தீமை இலாத சொலல்.

வாய்மை எனப்படுவது என்னவென்றால், மற்றவர்களுக்கு சிறிதளவேனும் துன்பத்தை உண்டாக்காத சொற்களைப் பேசுவது ஆகும்.

## வாய்மைக்கு இணை

அன்று இரவு ஏழுமணிக்குச் செல்லப்பா தணிகாசலத்தைத் தேடிக் கொண்டு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தான். அப்பொழுது மகா கணபதிக்குப் பூசை நடைபெற்றதால் அவன் கோயிலுக்கு உள்ளே சென்று மகா கணபதியை வணங்கினான். பூசை முடிந்ததும் குருக்கள் திருநீறு சந்தணம் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்ட செல்லப்பா திருநீற்றைப் பூசி விட்டுப் பொட்டு வைத்தான். மக்கள் ஒவ்வொருவராக வெளியேறிக் கொண்டிருந்தனர். தணிகாசலம் குருக்களுடன் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார். அதனால் செல்லப்பா வெளியே வந்து, வெளி மண்டபத்தில் இருந்தான். அரை மணித்தியாலத்திற்குப் பின்பு தணிகாசலம் வெளியே வந்தார். வெளி மண்டபத்தில் இருந்த செல்லப்பா, தணிகாசலத்தைக் கண்டதும் எழுந்து அவரின் அருகே வந்தான்.

''என்ன செல்லப்பா...?'' அன்புடன் கேட்டார் தணிகாசலம்.

சில கணங்கள் எதுவும் பேசாமல் நின்ற செல்லப்பா பின் சொன்னான்; ''உங்களோடு ஒரு முக்கிய விஷயம் கதைக்க வேணும்.''

''சொல்லு'' என்று சொல்லி விட்டு வெளி மண்டபத்திற்கு முன்னால் உள்ள மணற்பரப்பில் அமர்ந்தார் தணிகாசலம். அவருக்கு அருகில் வந்து அமர்ந்தான் செல்லப்பா. குருக்கள் வந்து வெளி மண்டபக் கதவைப் பூட்டி விட்டு மின் விளக்குகளை அணைத்தார்.

''எனது மகளுக்கு இருபத்தெட்டு வயதாகிறது. என்னிடம் பொருள் பண்டங்கள் இல்லாமையால் எனது மகளைத் திருமணம் பேசி எவரும் எனது வீட்டுக்கு வருவதில்லை. பெண்ணைப் பெற்றால் உரிய நேரத்தில் திருமணம் செய்து கொடுக்க வேண்டியது பெற்றவர்களின் கடமை. நான் மிகவும் நேர்மையான வழியில் உழைக்கிறன். என்னால் சம்பாதிக்க முடியவில்லை. மகள் உயர்தர வகுப்பு வரை படித்தவள். பல வேலைகளுக்கு மனுச் செய்தும் ஒரு வேலையும் கிடைக்கவில்லை. அத்துடன் மிகவும் நேர்மையாக வாழ்ந்த என்னை யோகேஸ்வரன் ஐயா சந்தேகப் பட்டிட்டார்'' கலங்கினான் செல்லப்பா.

தணிகாசலத்திற்கு எதற்காக அவன் அப்படிக் கூறுகிறான் என்று புரியவில்லை. அவருக்கு அவனை பல வருடங்களாகத் தெரியும். நேர்மையான ஒரு நல்ல மனிதன் என்று யோசித்தவாறு அவன் விபரமாகக் கூறட்டும் எனப் பொறுத்திருந்தார்.

''எனது மகள் கௌசல்யா தினமும் தனக்கு ஒரு வேலை கிடைக்கிறது. தில்லை என்று கவலைப்படுவாள். வேலை கிடைக்காவிட்டாலும் மகா கணபதி அருள் புரிவார். என்று நம்பியிருக்கிறாள். இதுவரை அவர் என்னைக் கண் திறந்து பார்க்கவில்லை. அவளுக் கொரு கல்யாணம் நடந்தாலாவது நான் சந்தோசப்படுவன்.

''எல்லாம் நல்லபடி நடக்கும். கவலைப்படாதை. உன்னை நீ குறைத்து மதிப்பிடக் கூடாது. அப்படி நினைத்தால் முன்னேற முடியாது. எமது

வாழ்க்கை விதியின் படி தான் நடைபெறுகிறது. உன்னைப் போல கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சேனாதிராசாவின் மகளுக்கு மணிவண்ணனின் தம்பியாரை செய்யச் சொல்லி சுவாமியார் சொல்லவில்லையா? அதே போல உனக்கும் ஒரு நாள் நடக்கும்'' என்றார் தணிகாசலம்.

''அந்த நம்பிக்கையில் தான் ஐயா நான் வாழ்கிறன்'' என்றான் செல்லப்பா.

''ஒன்றுக்கும் யோசியாதை. இரண்டொரு நாட்களிலை என்னை வந்து பார்'' என்றார் தணிகாசலம்.

மறு நாள் காலை தணிகாசலம் யோகேஸ்வரனின் வீட்டுக்குச் சென்றார். யோகேஸ்வரன் அவரை அன்புடன் அழைத்து நாற்காலியொன்றில் இருத்தினார்.

''செல்லப்பாவின் மகளுக்குத் திருமணம் பேசி முற்றாக்கி விட்டன். அவனிட்டைச் சீதனமில்லை. உங்களோடு தானே அவன் முப்பது வரிசமாய் இருக்கிறான். பார்த்து கொஞ்சக் காசு குடுங்கோ''

''ஓ.. அவனுக்கில்லாத காசா எனது மகன் திருமணம் செய்ய மறுக்கிறான். அதனால் நான் தேடிய பெரும் சொத்து வீணாகிப் போகிறது. அந்தச் சொத்தைத் தேடித் தந்தவன் செல்லப்பா தான். எவ்வளவு சீதனம் கேட்கினை..''

தணிகாசலம் தடுமாறிப் போனார். புண்ணியத்திற்காக ஒரு பொய் சொன்னதால் தடுமாறினார் அவர்.

''யார் மாப்பிளை? மாப்பிளை என்ன செய்கிறார்? எப்ப கலியாணம்?'' கேள்விகளை அடுக்கிக் கொண்டிருந்தார் யோகேஸ்வரன்.

''அரசடிலை பார்த்ததாகச் சொன்னவன். மாப்பிளை நல்ல குணசாலி யென்றான்'' தணிகாசலம் தடுமாறினார்.

''மடையன் எனக்கேன் சொல்லாமல் விட்டவன். அம்பி.... அம்பி மனைவியை அழைத்தார் யோகேஸ்வரன்.

''என்ன'' என்று கேட்டவாறு வந்தாள் நகுலாம்பிகை.

''செல்லப்பாவின்ரை மகளுக்குத் திருமணம் முற்றாய்ப் போய்ச்சாம். பாரன் அவன் எங்களுக்குச் சொல்லேல்லை. ஏதாவது சீதனம் கொடுக்கச் சொல்லி தணிகாசலம் கேட்குது''.

''எவ்வளவு சீதனம் பேசினவை மாப்பிளை யார்? உத்தியோகத்திற்குத் தகுந்த சீதனம் தானே கொடுக்கிறது என்றாள் நகுலாம்பிகை.

“தணிகாசலம் ஒன்றும் விசாரியாமல் வந்திருக்கு... செல்லப்பா வர நான் கேட்கிறன்” என்றார் யோகேஸ்வரன். அவர்களிடம் விடைபெற்றுச் சென்ற தணிகாசலம் செல்லப்பாவைத் தேடி அலைந்தார். பல இடங்களில் தேடியும் அவன் அகப்படவில்லை. தற்செயலாக செல்லப்பா, யோகேஸ்வரன் வீட்டுக்குச் சென்றால் தான் கூறியவை பிழைத்து விடும் என்பதற்காக காண்போரிட மெல்லாம்; “செல்லப்பாவைக் கண்டால் உடனே என்னை வந்து சந்திக்கச் சொல்லுங்கோ” என்று சொன்னார். பத்துமணி போல் செல்லப்பா அவரிடம் வந்தான்.

“செல்லப்பா நானொரு பொய் சொல்லிப் போட்டன். யோகேஸ்வரனிட்டை உன்னுடைய மகளுக்குத் திருமணம் முற்றாகி விட்டது என்று சொல்லிப் போட்டன். அவர் சீதனமாக எவ்வளவு பணம், நகை வேண்டு மென்று கேட்கிறார். மாப்பிளை யாரென்று கேட்கிறார். இன்று நீ அவரின் வீட்டுக்குச் சென்றால் கேட்பார். மாப்பிளை தோட்டக் காரன் என்று சொல்லு. சீதனத்தைப் பார்த்துத் தரச் சொன்னவை என்று கூறு. காசு தந்தால் வாங்கு” என்றார் தணிகாசலம்.

செல்லப்பா தயங்கினான்; “பொய் சொல்லிப் போட்டு உரிய காலத்தில் திருமணம் செய்யா விட்டால் அவர் கேட்பார். காசு தந்தால் அவர் கணக்குக் கேட்பர். மாப்பிளையைக் கூட்டிவா என்பர்.”

“காசு தருவரோ என்று அறியத்தான் சொன்னனான். நல்ல காரியங்களுக்குப் பொய் சொல்லலாம். நீ ஓமென்று சொல்லு அவர் தரும் பணத்தைப் பார்த்துக் கலியாணம் பேசலாம். இரண்டொரு மாதத்திலை சரிப்படாட்டி மாப்பிளை சீதனத்திற்கு ஆசைப்பட்டு வேறு இடத்தில் திருமணம் செய்து விட்டார் என்று சொல்லலாம்”.

அன்று இரவு தணிகாசலம் கூறியவற்றைச் செல்லப்பா யோகேஸ்வரனுக்குக் கூறினான்; “காசு, நகை, காணி எல்லாம் தாறன் இரண்டொரு கிழமைக்குள்ளை கலியாணத்தை முடி” என்றான் யோகேஸ்வரன்.

இரண்டு மாதம் முடிந்தும் திருமணம் நடைபெறவில்லை. அதனால் யோகேஸ்வரன் செல்லப்பாவைத் தினமும் எப்பொழுது கலியாணம் என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

மூன்று மாதங்கள் கழித்து ஆசிரியர் ஒருவருக்கு கௌசல்யாவைத் திருமணம் செய்து வைத்தார் தணிகாசலம்; “நாள்ச் சென்றாலும் நல்ல இடத்திலை மகளைச் செய்து கொடுத்து விட்டான் செல்லப்பா” என்று தன்னைச் சந்திப்பவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார் யேகேஸ்வரன்.

## 292. பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த

நன்மை பயக்கும் எனின்.

குற்றமில்லாத நன்மையை விளைவிக்குமானால் பொய்யான வார்த்தைகளும் வாய்மையாகும்.

## சுடும்

அன்று இரவு எட்டு மணிப் பூசைக்கு நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தார் ஞானப்பிரகாசம். அவர் மாவட்டச் செயலகத்தில் உயர் அதிகாரி. மிகவும் நேர்மையானவர். தனது கடமைகளை ஒழுங்காகச் செய்பவர். அவருக்குக் கீழ் வேலை செய்த சிவசுந்தரமூர்த்தியின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆழாக்கப்பட்ட போதும் நடுவு நிலையுடன் சேவையாற்றி வருபவர்.

குருக்கள் மகா கணபதிக்குப் பஞ்சாலார்த்தி காட்டிக் கொண்டிருந்தார். வழமையாகப் பூசை நேரத்தில் பஞ்சலார்த்தி காட்டும் போது மனம் உருகி மகா கணபதியின் சிந்தனையில் மூழ்கியிருக்கும் ஞானப்பிரகாசத்தால் அன்று வணங்க முடியவில்லை. அவருக்குக் கீழ் வேலை செய்யும் சதாசிவத்தின் முகம் அவரது மனதில் தோன்றித் தோன்றி மறைந்தது.

சதாசிவம் ஒழுக்கமானவர். கொடுக்கப்பட்ட வேலையை அர்பணிப்புடன் செய்து முடிப்பவர். தொடங்கிய வேலையை எந்நேரமானாலும் செய்து முடித்துத் தான் போவார். அதனால் ஞானப்பிரகாசம் அவரை மதித்து நடந்து வந்தார். அத்துடன் தனது நண்பனாகவும் ஏற்றிருந்தார். அலுவலகத்தில் இரண்டாவது அதிகாரிக்கான பதவி வெற்றிடமாக வந்தது. முறைப்படி அப்பதவி சதாசிவத்திற்கே கொடுக்கப்படல் வேண்டும். ஆனால் அப்பதவிக்கு சிவசுந்தரமூர்த்தியும் விண்ணப்பித்திருந்தார். ஞானப்பிரகாசம் உயர் அதிகாரியாக இருந்தமையால் அவரின் சிபார்சை தலைமைப் பீடம் கோரி இருந்தது.

அன்று தலைமையகத்தில் உயரதிகாரியாக இருக்கும் நடேசபிள்ளை ஞானப்பிரகாசத்தின் அலுவலகத்திற்கு வந்தார். வந்தவரை எழுந்து மரியாதையுடன் வரவேற்றார் ஞானப்பிரகாசம்; ‘‘ஞானம் இரண்டாவது அதிகாரி பதவி வெற்றிடமாக உள்ளது. அதற்குப் பொருத்தமானவர் சிவசுந்தரமூர்த்தி தான். அவரைத்தான் நீங்கள் சிபார்சு செய்தல் வேண்டும். அதற்காகத் தான் நான் இங்கே வந்தேன்’’ என்றார்.

நடேசபிள்ளை நேர்மையானவர் அல்லர். பெருந்தொகையாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு நேர்மையீனமான பல வேலைகளைச் செய்பவர். ஞானப்பிரகாசம் சிவசுந்தரமூர்த்தியைச் சிபார்சு செய்யாவிட்டாலும் தலைமை அதிகாரி என்ற வகையில் நடேசபிள்ளையின் சிபார்சையே மேலிடம் செயற்படுத்தும். அது ஞானப்பிரகாசத்திற்குத் தெரியும். சதாசிவம் தன்னைச் சிபார்சு செய்யும் படி ஞானப்பிரகாசத்திடம் கேட்கவில்லை. ஞானப்பிரகாசத்திற்கு கேட்பது பிடிக்காதென்று சதாசிவத்திற்குத் தெரியும்.

ஆனால் அன்று காலை சதாசிவத்தை அழைத்து ஞானப்பிரகாசம் சொன்னார்; ‘‘சதா நீர் தான் இரண்டாவது அதிகாரிக்குப் பொருத்தமான ஆள். நான் உமது பெயரைச் சிபார்சு செய்து அனுப்பி விட்டேன்’’.

‘‘மிகவும் மகிழ்ச்சி ஐயா இந்தக் காலத்தில் ஒழுங்காக வேலை செய்யும் நல்லவர்களை உயர் அதிகாரிகள் பெரும்பாலும் சிபார்சு செய்வதில்லை. பணத்தைப் பெற்றுக் கொண்டு நேர்மையீனமாக நடப்பவர்களைத் தான் சிபார்சு செய்கிறார்கள். நீங்கள் உத்தமர் உயர்ந்தவர். நீங்கள் இவ் அலுவலகத்திற்கு வந்த பிறகு தான் நல்ல காரியங்கள் பலவும் நேர்மையாக நடக்கிறது’’ என்றார் சதாசிவம்.

‘‘அன்று மாலை நடேசபிள்ளை செல்லும் போது சிவசுந்தரமூர்த்தியின் விண்ணப்பப் படிவத்தைச் சிபார்சு செய்து தன்னிடம் தரும்படி கேட்டார். ஞானப்பிரகாசம் தயங்கினார். அதை உணர்ந்த நடேசபிள்ளை; ‘‘ஞானம் நீ இளவயதினன். இன்னும் பல உயர்ச்சிகள் உனக்காகக் காத்திருக்கு. நீ உயர்ச்சி பெற நான் தான் சிபார்சு செய்ய வேண்டும். எனவே சிவசுந்தரமூர்த்திக்குச் சிபார்சு செய்’’ என்றார். மறுக்க முடியாமையால் சிவசுந்தரமூர்த்திக்குச் சிபார்சு செய்து நடேசபிள்ளையிடம் கொடுத்தார் ஞானப்பிரகாசம்.

அலுவலகம் முடிந்து வரும் போது சதாசிவம் கேட்டார்; ‘‘நடேசபிள்ளை ஐயா இரண்டாவது அதிகாரியின் நியமன விடயமாகத் தான் வந்ததாகக் கதைக்கிறார்கள். நீங்கள் சிபார்சு செய்தீர்களா?’’.

‘‘நான் உங்களைத் தான் சிபார்சு செய்தேன். ஆனால் என்னுடைய சிபார்சை ஏற்றால் உமக்குத் தான் பதவி உயர்வு கிடைக்கும். ஆனால் இப்போது நேர்மைக்கு எங்கே இடமிருக்கு’’ என்றார்.

‘‘அது எனக்குத் தெரியும். நீங்கள் எனக்குத் தான் சிபார்சு செய்திருப்பீர்கள் என்பது தெரியும். உங்களின் நேர்மையை நான் சந்தேகிக்கவில்லை. நீங்கள் கடைசி வரையும் நேர்மையீனமாக நடக்க மாட்டீர்கள். அப்பதவி எனக்குக் கிடைக்கா விட்டாலும் நான் கவலைப்பட மாட்டன். உத்தமமான ஒரு மனிதனின் சிபார்சு எனக்கிருக்கென்று மகிழ்ச்சியடைவன்.

அவ்வார்த்தைகள் ஞானப்பிரகாசத்தின் காதுகளில் ஒலித்தன. மகா கணபதியை வணங்க முடியாததால் அவர் வெளியே வந்தார். பூசை முடிந்ததும் தணிகாசலம் அவரின் அருகே வந்தார்; ‘‘தணி நான் என் நெஞ்சறிய ஒரு பொய் சொல்லி விட்டேன். அதனால் எனது மனம் என்னைச் சித்திரைவதை செய்கிறது’’ என்று கூறி எல்லாவற்றையும் சொன்னார்; ‘‘தணி இக்கட்டான எனது நிலையைச் சதாசிவத்திற்குச் சொல்லியிருக்கலாம். அதை என்னால் சொல்ல முடியாததாலை தான் ஒரு பொய்யைச் சொன்னன். அதை என்னாலை தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கு’’.

தணிகாசலம் எதுவும் சொல்லாததால் ஞானப்பிரகாசம் தொடர்ந்தார்; ‘‘சதாசிவம் மிகவும் நேர்மையான மனிதன். அவன் கேட்காமலே நான் அவனை அழைத்து சிபார்சு செய்து அனுப்பி விட்டதாகக் கூறி விட்டேன். பின்பு நிலைமையைச் சொல்ல என்னால் முடியவில்லை. நான் சொன்ன அந்தப் பொய் நான் இறக்கும் வரை எனது நெஞ்சில் இருந்து என்னை வருத்திக் கொண்டே இருக்கும்’’ அழுதார் ஞானப்பிரகாசம். தணிகாசலத்தால் பேச முடியவில்லை.

293. தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

ஒருவன் தன்நெஞ்சம் அறிந்ததைக் குறித்துப் பொய் சொல்லல் ஆகாது. அவ்வாறு சொன்னால் அவனது நெஞ்சே அவனை வருத்தும்.

## நிலைத்து வாழ்பவன்

சின்னத்தம்பியைச் சந்திப்பதற்காகக் கோயிலுக்குச் சிறிது தூரத்தில் சீனியன் காத்திருந்தான். இரவு எட்டு மணிக்குப் பூசை ஆரம்பித்தால் எட்டரைக்குப் பூசை முடிந்து விடும். எப்படியும் எட்டு நாற்பத்தைந்திற்குச் சின்னத்தம்பி வந்து விடுவான் என நினைத்துக் காவல் இருந்தான் சீனியன்.

சின்னத்தம்பியும் தனபாலனும் தினமும் எட்டுப் போத்தல் கள்ளுக் குடிப்பார்கள். அதை விட காசிருந்தால் வருவோர் போவோர்க்கெல்லாம் வாங்கிக் கொடுப்பார்கள். புஸ்பநாதனுக்கும் கிருஸ்ணனுக்கும் இருவரும் தினமும் ஒரு போத்தல் கள்ளாவது வாங்கிக் கொடுப்பார்கள். அவர்கள் இருவரும் கள்ளுக் குடிக்காது விட்டமையால் புஸ்பநாதனும் கிருஸ்ணனும் வருவதைக் குறைத்துக் கொண்டனர். இதனால் சீனியனுக்கு வருமானம் குறைந்திருந்தது. அதனால் கஷ்டப்பட்ட சீனியன் அன்று ஒரு திட்டம் போட்டான்.

ஒன்பது மணிக்கு சின்னத்தம்பி சீனியன் நின்ற இடத்திற்கு வந்தான். அவனை எதிர் பார்த்துக் காத்திருந்த சீனியன்; ‘‘யார் சின்னத்தம்பியரே... உமக்காகத்தான் நான் காத்திருக்கிறன். இன்றைக்கு என்ரை இளையவன்ரை பிறந்த தினம். பிள்ளை உம்மைக் காணேல்லை என்று சொல்லிக் கவலைப்பட்டவன். அது தான் வந்தனான். உங்கடை வீட்டை வந்தால் கரைச்சல் அது தான் இதிலை வந்தனான்.

‘‘சின்னத்தம்பியிடம் நூறு ரூபா இருந்தது. அதனால் அவன் சீனியனது வீட்டுக்குச் சென்றான். சீனியனின் இளைய மகன் நிசாந்தன் சின்னத்தம்பியைக் கண்டதும் ஓடி வந்தான். அவனைத் தூக்கிய

சின்னத்தம்பி தனது மடியில் இருந்த நூறு ரூபாவை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

‘‘சீனியன் ஒரு போத்தல் கள்ளைக் கொண்டு வந்து வைத்து விட்டுச் சொன்னான்; ‘‘நீங்கள் கள்ளுக் குடிக்கிறேல்லை என்று எனக்குத் தெரியும். இதைத் தவிர வேறு எதை நான் உங்களுக்குத் தாறது. நல்லாய்க் குடிச்சவை ஒரேயடியாய் விட்டாலும் வருத்தங்கள் வந்திடும். இடைக்கிடை குடிக்க வேண்டும்’’.

‘‘சீனியன் சொல்வது நியாயமாகப் பட்ட போதும் கள்ளைக் குடிக்கச் சின்னத்தம்பிக்குப் பயமாக இருந்தது. அதனால் யோசித்தான். நான் என்ன நெடுகக் குடிக்கச் சொல்லிக் கேட்கப் போறனே. நான் ஒருத்தருக்கும் சொல்ல மாட்டன். எடுத்துக் குடியும்’’ என்றான் சீனியன்.

‘‘சுவாமியாருக்குச் சத்தியம் செய்து கொடுத்திட்டன். பயமாயிருக்கு’’.

‘‘நாங்கள் முந்தி களவெடுக்கப் போகேக்கை மகா கணபதிக்குக் கற்பூரம் கொழுத்தி நேர்த்திக்கடன் வைத்திட்டுத் தானே போறனாங்கள். அந்த மாதிரி இன்றைக்கும் மகா கணபதியை வேண்டிக் கொண்டு கள்ளைக் குடியும்’’ என்றான் சீனியன்.

பல நாட்களாகக் கள்ளைக் காணாமல் இருந்த சின்னத்தம்பிக்குக் கள்ளைக் கண்டதும் வாயூறியது. மனதுள் மகா கணபதியை வணங்கி மனனிப்புக் கேட்டு விட்டு கள்ளைக் குடித்தான். அன்று அவன் ஐந்து போத்தல் கள்ளைக் குடித்தான். வீட்டுக்கு வந்த சின்னத்தம்பி குடித்திருப்பதை அறிந்த அவனது மனைவி கோசலை மனம் வருந்தினாள். மறு நாட் காலை அவள் தணிகாசலத்திடஞ் சென்று சின்னத்தம்பி குடித்து விட்டு வந்த விஷயத்தைச் சொன்னாள்.

தணிகாசலம் யோகமலரின் வீட்டுக்குச் சென்று சின்னத்தம்பி குடித்த விஷயத்தைக் கூறி அவனுக்கு இனிமேல் எந்த உதவியும் செய்யக் கூடாது என்று சொல்லி விட்டார். அதன் பின் யோகமலரின் வீட்டுக்குச் சென்ற சின்னத்தம்பியை, யோகமலர்; ‘‘இனித் எனது வீட்டுக்கு வரக் கூடாது’’ என்று ஏசிக் கலைத்து விட்டாள். அதனால் சின்னத்தம்பி தணிகாசலத்திடம் வந்தான்.

‘‘நான் குடிப்பதில்லை என் உங்களுக்குத் தெரியும்...’’ சின்னத்தம்பி கதைக்கும் போது தணிகாசலம் குறுக்கிட்டார்; ‘‘நீ எனக்கு எதுவும் சொல்லத் தேவையில்லை. தனது மனம் அறிந்து பொய் சொல்லாமல் வாழ்பவனுக்கு எல்லாச் செல்வங்களும் கிடைக்கும். அத்துடன் நல்லவர்கள் அவனை மதிப்பார்கள். நீ வாயால் கள்ளருந்தவில்லை என்று சொல்லலாம். சத்தியம் பண்ணலாம். ஆனால் உனது மனதிற்கு யாவும் தெரியும். இன்று குடிக்கும் நீ நாளை முன்பு போலத் திருட மாட்டாய் என்று நான் எப்படி நம்புவது.’’

‘‘நான் குடிக்கேல்லை அண்ணை. யாரோ உங்களுக்குத் தவறாக என்னைப் பற்றிச் சொல்லி விட்டார்கள்’’.

‘‘பொய் பேசுபவனுடன் கதைக்கவே எனக்கு விருப்பமில்லை. எங்கை என்ரை முகத்தைப் பார்த்துச் சொல்லு நீ குடிக்கவில்லை என்று’’.

சின்னத்தம்பி தலையைக் குனிந்தான்; ‘‘உனது மனைவி தான் எனக்கும், யோகமலருக்கும் சொன்னது. அவள் உத்தமி. நல்ல குடியிற் பிறந்தவள். அதனால் தான் குடும்ப நன்மையைக் கூடக் கருதாமல் வந்து உண்மையைச் சொன்னவள். பொய் பேசுவது பாவம். பொய் பேசுபவர்களை நல்லவர்கள் ஒரு போதும் மதிப்பதில்லை. பொய் பேசுவதால் ஒருவனின் வாழ்வில் கஷ்டங்கள் கவலைகள் மட்டும் வருவதில்லை. அவனது உயிருக்கு ஆபத்தும் வரும். அத்துடன் பொய் பேசுபவனுடன் தொடர்பு வைத்திருக்கும் நல்லவர்களுக்கும் ஆபத்து ஏற்படும். அதனால் நீ இனிமேல் என்னுடன் பேசுவதையும் நான் விரும்பவில்லை’’ என்றார் தணிகாசலம்.

294. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் சொல்லாமல் வாழ்வானேயானால், அவன் உலகத்தவரின் உள்ளங்களில் என்றும் நிலைத்திருப்பான்.

## உயர்ந்தவர்கள்

அன்று வெள்ளிக்கிழமை வழமையான நாட்களை விட வெள்ளிக்கிழமைகளில் மக்கள் பலர் மகா கணபதியை வணங்குவதற்காகக் கோயிலுக்கு வருவார்கள். அன்று முழுவதும் இராஜசங்கரக் குருக்களுக்கு வேலை அதிகமாக இருக்கும். பூசைக்கான நைவேத்தியப் பொருட்களைச் செய்தல். பூசைகளை அலங்காரமாகச் செய்தல். பஜனை படிப்போர்க்கும் அடியவர்களுக்கும் பிரசாதம் செய்தலென பல்வேறு வேலைகள் இருக்கும்.

அன்று இரவு விசேட பூசை செய்வார். அதைப்பார்ப்பதற்காக அடியார்கள் பலர் வருவார்கள். ஊரில் உள்ள பிரமுகர்களும் அயலூர்களில் உள்ள மக்களும் பிரமுகர்களும் வெள்ளிக்கிழமைகளில் தவறாது வருவார்கள்.

பூசை முடிந்ததும் சுவாமியாரின் அருளுரை இடம் பெறும். மக்கள் எல்லோரும் சுவாமியாரின் அருளுரையைக் கேட்பார்கள். சிவபாதசுந்தரம் அவ்வூர்க் காவல்துறை அதிகாரி. மிகவும் நேர்மையானவர். அத்துடன் கண்டிப்பானவர். அன்று பூசை தொடங்கு முன்பு சுவாமியாரைச் சந்தித்துச் சொன்னார்; ‘‘சுவாமி இப்பொழுது இவ்வூரில் சிறு சிறு களவுகள் அதிகரித்து வருகிறது. சென்ற வாரம் நாவலடியில் உள்ள கடை ஒன்றை உடைத்து பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கள்வர் திருடிச் சென்று

விட்டனர். கடையின் உரிமையாளரான சரவணபவன் புகாரிட்டிருக்கிறாரே தவிர, சந்தேகத்துக்குரியவர்களின் பெயர்களை எமக்குத் தெரிவிக்கவில்லை. எனக்கு இவ்வூரில் வாழும் தனபாலன், சின்னத்தம்பி, புஸ்பநாதன், கிருஸ்ணன் என்ற நால்வர் மீதும் சந்தேகமிருக்கிறது. அவர்கள் பல திருட்டுக்களைச் செய்த போதும் யாரும் அவர்களைப் பற்றிப் புகாரிடாமையால் என்னால் நடவடிக்கை எடுக்க முடியாதிருக்கிறது. அவர்களின் நடத்தையைப் பற்றி நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டும். உங்களை நான் மிகவும் நேசிக்கிறேன்'' என்றார்.

''மகனே நான் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியின் கோயில் எல்லையை விட்டு வெளியே செல்வது குறைவு. அத்துடன் என்னைச் சந்திக்கும் மக்களுக்கு அறிவுரைகள் கூறுவேன். எல்லோரும் எனக்கருகே பயபக்தியுடன் வருகிறார்கள். தவம் செய்பவனையும் தானம் செய்பவனையும் விட தனது மனமறிய உண்மை பேசுபவன், பெரியவன், உயர்ந்தவன், பலசாலி, இவ்வூரில் வாழும் தணிகாசலம் என்பவன் தன் மனம் அறிய உண்மை பேசி வாழ்பன். அவனிடம் கேள். யாவற்றையும் சொல்வான்'' என்றார் சுவாமியார்.

பூசை முடிந்ததும் சுவாமியார் அருளுரை நிகழ்த்தினார்; ''அன்புள்ளங்களே இவ்வூரில் பல களவுகள் நடை பெறுவதாக இவ்வூர்க் காவல் துறை அதிகாரியான சிவபாதசுந்தரம் அவர்கள் என்னைச் சந்தித்துக் கூறினார்கள். களவெடுப்பதை விட அதை மறைப்பதும் கண்டவற்றைச் சொன்னால் தனக்குத் துன்பங்கள் வந்து விடும். என்று நினைத்து சொல்லாமல் விடுவதும் தான் பாவம். தன் மனமறியப் பொய் சொல்லாமல் வாழ்பவன் தவம் செய்பவனையும் தானம் செய்பவனையும் விட உயர்ந்தவனாவான். பொய் பேசாதிருத்தலே சமயமாகும். சமய வாழ்வின் உட்பொருள் கடவுளை வணங்குவதல்ல. வாழும் முறை தான். தன் மனமறியப் பொய் பேசாது வாழ்பவனைத் தேடிக் கடவுள் வீட்டுக்கு வருவார். பொய் பேசாதிருப்பது; உதவி செய்து வாழ்வது தான் சமய வாழ்வு. மகா கணபதியே என்று மனமுருகி அழைப்பது; தோய்ந்து குளித்து விரதங்களை அனுஸ்டிப்பது, கோயில்களில் தொண்டுகள் செய்வது, புனருத்தான நிர்மான வேலைகள் செய்வது, கிரிகைகள் செய்வது சமயம் இல்லை. தனக்கும் மற்றய உயிர்களுக்கும் பெருந்தீங்கை விளைவிக்கின்ற பொய் பேசுதலை ஒழித்தலே சமயமாகும்'' என்றார்.

மக்கள் கலைந்து சென்றனர். தணிகாசலம் வீட்டுக்குப் புறப்பட்ட போது, சிவபாதசுந்தரம் அவரின் அருகில் வந்தார்; ''தணிகாசலம் அண்ணை நாவலடியில் உள்ள சரவணபவானின் கடையை யாரோ உடைத்துத் திருடி விட்டார்கள். எனக்கு தனபாலனிலும் அவனது நண்பர்களிலும் தான் சந்தேகம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்''.

அவர்கள் திருடர்கள் தான். தனபாலனும் சின்னத்தம்பியும் திருந்தி விட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் அதை நம்ப முடியாது எனினும் சரவணபவனின் கடையை உடைத்து அவர்கள் திருடியிருப்பார்கள் என்று நான் எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு சொல்ல முடியும். நீங்கள்

விசாரித்துப் பாருங்கள். ஆதாரமில்லாது நாம் யாரையும் குற்றம் சொல்ல முடியாது'' என்றார் தணிகாசலம்.

''சுவாமியார் உங்களைப் பற்றிச் சொன்னவர். உங்களைக் கேட்டால் எல்லாம் சொல்வார் என்றவர். மக்களின் பொருட்களைக் கொள்ளை அடித்து இன்பமாக வாழ்பவர்களை நான் ஒரு பொழுதும் விட்டு வைக்க மாட்டேன். விரைவில் அவர்களை ஆதாரத்துடன் கைது செய்வேன்'' என்றார் சிவபாதசுந்தரம்.

295. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை.

ஒருவன் தன் மனம் அறிய உண்மை பேசி வாழ்ந்தானே யானால், அவன் தவத்தோடு தானமும் செய்வாரை விட உயர்ந்தவனாவான்.

## வந்து சேரும்

செல்லப்பா ஒரு கடிதத்துடன் தணிகாசலத்தைத் தேடி வந்தார். நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலய மண்டபத்தில் இருந்தார் தணிகாசலம். அவருடன் மணிவண்ணன் கதைத்துக் கொண்டிருந்தான்.

''உங்களை எத்தனையோ இடங்களிலை தேடிக் கொண்டு வாறன்'' என்றான் செல்லப்பா.

இன்றைக்குத் தோட்டத்திலை வலை இல்லாததாலை கோயிலடிலை வந்திருக்கிறன்'' என்றார் தணிகாசலம்.

''மகளுக்கு ஆசிரியர் வேலை கிடைத்திருக்கு. முதலாம் திகதி தொடக்கம் கணபதி மத்திய மகா வித்தியாலயத்திற்குக் கற்பிக்கச் செல்லச் சொல்லிக் கடிதம் வந்திருக்கு'' என்று சொல்லிக் கடிதத்தை நீட்டினார் செல்லப்பா.

கடிதத்தை வாங்கிப் படித்து விட்டுத் திருப்பிக் கொடுத்த தணிகாசலம்; ''கடிதத்தைக் கொண்டு போய் அதிபரிட்டைக் குடுக்கச் சொல்லு. இனி உனக்கென்ன. நெடுக மகா கணபதி கண் விழிக்கிறார் இல்லை என்று சொல்லிக் கவலைப்பட்டாய். இப்ப மகா கணபதி ஒன்றாய்க் கண்ணைத் திறந்திட்டார். மருமகனும் மகளும் ஆசிரியர்கள். பிறகென்ன என்னைக் கவனித்துக் கொள்'' என்று சிரித்தார் தணிகாசலம்.

''எல்லாம் மகா கணபதீன்ரை அருளும் உங்கடை ஆசீர்வாதமும் தான். நான் மனம் நொந்து வாழ்க்கையில் விரக்தியுற்று இருக்கிற நேரங்களிலை நீங்கள் சொன்ன ஆறுதல் வார்த்தைகள் தான் எனக்கு வாழ வேண்டும் என்ற பிடிப்பை உண்டாக்கியது. நவநீதன்ரை மாடுகள் களவு போனதற்கு நான்

தான் காரணமென்று யோகேஸ்வரன் ஐயா சொன்ன போது எனக்கு வாழ்க்கையே வெறுத்தது. தற்கொலை செய்து கொள்ளலாமா என்று கூட எண்ணினேன். உங்களது ஆறுதல் வார்த்தைகள் தான் என்னை வாழ வைத்தது. நான் ஒரு காலமும் பொய் பேசுவதில்லை; களவெடுப்பதில்லை; பிறரை வஞ்சிப்பதில்லை; என்பதை மகா கணபதி நிரூபித்து என்ரை வாழ்க்கையைச் சிறப்பித்து விட்டார். பொய்பேசாதே; அநீதிகளுக்கு அஞ்சாமல் வாழ்; துன்பங்கள் வந்தால் துணிவுடன் எதிர்த்துப் போராடு; உன்மீது யாராவது குற்றம் சுமத்தினால், நீ அவர்கள் மீது கோபங் கொள்ளாது அவர்கள் கூறியவற்றைப் பிழையென நிரூபி. என்று சொன்னீர்கள். அதன் பிறகு உங்கள் வார்த்தைகளை மந்திரமாக நினைத்துச் செயலாற்றி வருகிறேன்'' என்றான் செல்லப்பா.

''பொய் சொல்லாமல் வாழும் ஒருவன் எந்த ஒரு தீய செயல்களையும் செய்ய மாட்டான். அவனுக்கு எல்லா நன்மைகளும் தானாகவே வந்து சேரும்'' என்றார் தணிகாசலம்.

செல்லப்பா வீட்டுக்குச் சென்ற பொழுது அங்கே அவரது மருமகனின் தந்தையார் தேவகுமாரன் இருந்தார். அவரது மருமகன் பிரசாந்தன் அவரைக் கண்டதும் எழுந்தான்.

''அத்தான் உங்களது மகள் நல்ல இராசிக்காரி. முன்பே சோதிடர் சொன்னவர் கௌசல்யாவின் சாதகம் நல்ல சாதகம் கலியாணம் கட்டினாப் பிறகு பாருங்கோ செல்வம் மழையாகப் பொழியும் என்று. பத்து வருடகாலமாகப் பிள்ளையில்லாதிருந்த எனது மகள் கர்ப்பமாக இருக்கிறாள். ஏழு வருடங்களாக வெளிநாட்டில் தொடர்புகள் இல்லாதிருந்த எனது மகன் பத்து இலட்சம் ரூபா அனுப்பியிருக்கிறான். அந்தக் காசிலை ஐந்து இலட்சத்தை நான் மருமகளுக்குக் கொடுக்கலா மென்று கொண்டு வந்தனான். மருமகளுக்கும் வேலை கிடைத்து விட்டதாம்'' மகிழ்ந்தார் தேவகுமாரன்.

செல்லப்பா பூரித்துப் போனார். ஒரு சில வாரத்துள் எவ்வளவு பெரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளேன். என்பதை நினைக்க அவருக்கு மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை.

''அத்தான் வீட்டைப் பிரித்து பெரிதாகக் கட்டுங்கோ. மகளும் மருமகனும் உழைக்கினை தானே'' என்றார் தேவகுமாரன்.

''நான் நினைக்க அப்பா சொல்லி விட்டார். என்னட்டையும் கொஞ்சக் காசிருக்கு. அண்ணை அனுப்பிய காசும் இருக்கு. பயமில்லாமல் வீட்டு வேலையைத் தொடங்கலாம்'' என்றான் பிரசாந்தன்.

''வீட்டு வேலையைத் தொடங்கலாம்'' என்று மருமகன் சொன்னதைக் கேட்டதும் மகிழ்ச்சியின் உச்சியில் இருந்தார் செல்லப்பா; ''அன்றாடம் உழைத்து இந்த வீட்டை வேய நான் எவ்வளவு கஷ்டப்பட்டனான். இப்ப புதுவீடு கட்ட வசதி வந்திருக்கு. எல்லாம் மகா கணபதியின்

திருவளையாடல் தான்'' என்ற செல்லப்பா சுவாமியார் அன்று அருளுரையில் கூறியதைச் சொன்னார்; ''தன்மனமறியப் பொய் பேசாது வாழ்பவனைத் தேடி கடவுள் வீட்டுக்கு வருவார். பொய் பேசாதிருப்பது தான் சமய வாழ்வு. பொய் பேசாதிருப்பவன் தவம் செய்பவனை விட உயர்ந்தவன். அவனைத் தேடி எல்லாச் செல்வங்களும் வரும் என்றார். இப்பொழுது என்னைத் தேடி எல்லாச் செல்வங்களும் வந்து விட்டன'' என்று மகிழ்ந்தார் செல்லப்பா.

''மாமா நல்ல நாளில் சோதிடரை அழைத்து வாருங்கள். நிலையத்தைப் பார்த்து விட்டு வேலைகளைத் தொடங்குவோம்'' என்றான் பிரசாந்தன். அப்பொழுது கௌசல்யா அனைவருக்கும் தேநீர் கொண்டு வந்தாள்.

''எனது மருமகள் திருமணமாகி வீட்டுக்கு வந்த போது நான் எதுவும் கொடுக்கவில்லை. இப்பொழுது ஒரு தங்கச் சங்கிலி கொண்டு வந்திருக்கிறேன்'' என்றார் தேவகுமாரன்.

கௌசல்யா நன்றிப் பெருக்குடன் மாமனார் கொடுத்த தங்கச் சங்கிலியைப் பெற்றுக் கொண்டார்.

296. பொய்யாமை அன்ன புகழ்இல்லை; எய்யாமை
எல்லா அறமும் தரும்.

ஒருவனுக்குப் பொய் சொல்லாமல் வாழ்வதைப் போன்ற புகழுக்குரியது வேறொன்றுமில்லை. அஃது அவன் அறியாமலே எல்லா அறங்களையும் கொடுக்கும்.

## நன்றானது

''நேர்மைக்காக உயிரையும் கொடுக்கத் தயங்காதீர்கள். நீதியில் இருந்து பிறழாது வாழ்வது மனிதனது கடன். தவிர்க்க முடியாத காரணத்தால் பொய் பேச வேண்டிய நிலையேற்பட்டு அப் பொய்யினால் யாராவது பாதிப்படைய நேர்ந்தால் உங்களது நிலைமையைக் கூறி மன்னிப்புக் கேளுங்கள். அதற்காக வெட்கப்படாதீர்கள். முழுமை பெற்ற மனிதனாக வாழ முயலுங்கள். நேர்மையாக வாழ்பவனுக்குத் துன்பங்கள் அடுத்தடுத்து வரும். அப்பொழுது தைரியமாக இருங்கள். கோழைகள் தான் பொய் பேசித் தீமைகளைச் செய்பவர்கள். ஆண்மையுடையவர்கள் துன்பங்களுக்கு அஞ்சிப் பொய் பேச மாட்டார்கள்'' என்று சுவாமியார் அருளுரையில் கூறியவற்றை நினைத்துத் துக்கப்பட்டார் ஞானப்பிரகாசம். சதாசிவத்திற்கு இரண்டாவது அதிகாரிப் பதவிக்குச் சிபார்சு செய்து விட்டதாகக் கூறிய நாளில் இருந்து பலவற்றையும் நினைத்து அல்லற்பட்டார் ஞானப்பிரகாசம்.

அவரால் அலுவலகத்தில் இருந்து நிம்மதியாக வேலை செய்ய முடியவில்லை. அதனால் ஒரு வாரகாலம் அலுவலகத்திற்கு அவர் செல்லவில்லை.

அன்று சதாசிவத்தை இரண்டாவது அதிகாரியாகப் பதவி உயர்வு செய்ததற்கான கடிதம் வந்தது. அக்கடிதத்தைப் பார்த்ததும் சதாசிவத்தால் மகிழ்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஞானப்பிரகாசம் நேர்மையான ஓர் அதிகாரி. செயற்திறன் மிக்கவர் என்று தலைமைக் காரியாலயத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்பதை சதாசிவம் அறிவார். அப்படியான ஞானப்பிரகாசம் தன்னைச் சிபார்சு செய்தமையால் அப்பதவி தனக்குத் தான் கட்டாயம் கிடைக்கும் என்று சதாசிவம் நம்பியிருந்தார். எனினும் எதிர்பார்த்ததை விட விரைவாக அக்கடிதம் கிடைத்தமையால் இரட்டிப்பு மகிழ்ச்சியில் இருந்தார் சதாசிவம்.

அன்று மாலை அலுவலகம் முடிந்ததும் ஞானப்பிரகாசத்திற்கு அன்று வந்த கடிதங்களையும் எடுத்துக் கொண்டு ஞானப்பிரகாசத்தின் விட்டுக்குச் சென்றார் சதாசிவம். ஒரு வார காலத்தில் ஞானப்பிரகாசம் அரைவாசியாக இளைத்திருந்தார். அவரது கோலத்தைக் கண்ட சதாசிவம் திகைத்துப் போனார்; ‘‘ஐயா மிகவும் மோசமாக மெலிந்துள்ளீர்கள். ஏதாவது வருத்தமா’’ என்று கேட்டார் சதாசிவம்.

விரக்தியாகச் சிரித்த ஞானப்பிரகாசம்; ‘‘மனவருத்தம்’’ என்றார்.

‘‘எனக்கு பதவி உயர்வுக் கடிதம் கிடைத்திருக்கிறது’’ என்று கூறித் தனக்கு வந்த கடிதத்தை நீட்டினார் சதாசிவம். அதை எதிர்பாராததால் திகைப்படைந்த ஞானப்பிரகாசம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு; ‘‘மிகவும் சந்தோசம் என்றார்.

‘‘இதில் சந்தோசப்பட என்ன இருக்கிறது. எதிர்பார்த்தது தானே நீங்கள் சிபார்சு செய்யாவிட்டால் எனக்குக் கிடைத்திராது’’ என்றார் சதாசிவம்.

அவ்வார்த்தைகள் சதாசிவத்தின் மனதைச் சுட்டன. ஏற்கனவே வெந்து கொண்டிருக்கும் மனதை அவ்வார்த்தைகள் மோசமாகத் தாக்கின; ‘‘நான் அன்றே சொல்லியிருக்கலாம்’’ என்று நினைத்தார்.

‘‘சிவசுந்தரமூர்த்தி தான் பாவம். நீங்கள் தன்னைத் தான் சிபார்சு செய்தனீங்கள் என்றும் தனக்குத் தான் அப்பதவி கிடைக்கு மென்றும் சொல்லிக் கொண்டு திரிந்தவர்’’ என்றார் சதாசிவம்.

‘‘சதாசிவம் என்னை மன்னித்துக் கொள். நான் சிவசுந்தரமூர்த்தியைத் தான் சிபார்சு செய்தனான். நடேசபிள்ளை அன்று வந்து சிவசுந்தரமூர்த்தியைச் சிபார்சு செய்து தரும்படி வற்புறுத்தினார். அவர் மிகவும் பொல்லாதவர். பழி வாங்கி விடுவார் எனப் பயந்தேன். கதைக்கும் போது என்னைப் பயமுறுத்தினார். நான் ஏழைப் பெற்றோருக்கு மகனாய்ப்

பிறந்தேன். எனது மாமனின் மகளை சீதனமில்லாது திருமணம் செய்தேன். எனது சகோதரர்களும் ஏழைகள். அதனால் அவர்களுக்கும் உதவி செய்தல் வேண்டும்; ‘‘பொய் சொல்லாமல் இருப்பதென்ற அறச் செயலை ஒருவன் கடைப்பிடிப்பானேயானால் அவன் வேறு அறங்களைச் செய்ய வேண்டியதில்லை’’ என்று பழந் தமிழ் நூல் ஒன்றில் படித்துள்ளேன். அதை என் கொள்கையாக இது நாள் வரையும் கடைப்பிடித்து வந்தேன். எனது வருமானம் தானதர்மம் செய்யப் போதாது. இப்பொழுது பொய் பேசியதன் மூலம் எல்லாத் தர்மங்களையும் இழந்து விட்டேன்’’ ஞானப்பிரகாசம் அழுதார்.

சதாசிவம் அதிர்ச்சியடைந்து போனார் எனினும் அதைக் காட்டிக் கொள்ளாது சொன்னார்; ‘‘மற்றவர்கள் உண்மையைச் சொல்ல மாட்டார்கள். தாம் செய்யாதவற்றையும் செய்ததாகக் கூறுவார்கள். உங்கள் நல்லெண்ணத்தையும், என்னைப் பற்றி மேலிடத்திற்கு நீங்கள் சொன்ன நல்ல வார்த்தைகளையும் வைத்துத் தான் எனக்கு பதவி உயர்வு வழங்கியுள்ளார்கள். உங்களது நிலையில் நான் இருந்தாலும் அதைத் தான் செய்வேன்’’ என்றார் சதாசிவம்.

நீ எதைச் சொன்னாலும் நான் எனது தனித்தன்மையை இழந்து விட்டேன். அதனால் துன்பமும் அடைந்து விட்டேன்’’ என்றார் ஞானப்பிரகாசம்.

சதாசிவம் கொண்டு வந்த கடிதத்தைக் கொடுத்தார். அக்கடிதம் அமைச்சின் செயலாளரால் எழுதப்பட்டிருந்தது. பல மோசடிகளில் ஈடுபட்டு விசாரணைக்குள்ளாகியிருக்கும். சிவசுந்தரமூர்த்தியை எப்படி நீர் சிபார்சு செய்வீர். இரண்டு தினங்களுக்குள் இதற்கான விளக்கத்தை எழுதி அனுப்பவும்’’ ஞானப்பிரகாசம் திகைத்துப் போனார். அவரால் எதையும் நினைக்க முடியவில்லை.

297. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

பொய்யாமை என்ற அறத்தை உண்மையாகக் கைக் கொண்டு வாழ்பவன் மற்றய அறங்களைச் செய்ய வேண்டியதில்லை.

## தூய்மை

எப்படித்தான் நடேசபிள்ளை வற்புறுத்திக் கேட்டிருந்தாலும் தான் சிவசுந்தரமூர்த்திக்குச் சிபார்சு செய்திருக்கக் கூடாது என்று நினைத்தார் ஞானப்பிரகாசம். சுவாமிகள் சொல்வதை மறந்தது தான் தனக்கு ஏற்பட்ட துன்பங்களுக் கெல்லாம் காரணம் என்று நினைத்தார்; ‘‘கடமையைச் செய்யும் போது நேர்மையாக இருங்கள். பிறரின் விருப்பு வெறுப்பைப் பற்றி ஆராயாது தைரியமாகச் செயற்படுங்கள். எந்நாளும் நீதியின் பக்கம் நில்லுங்கள். மிரட்டல்களுக்கும் எச்சரிக்கைகளுக்கும் அஞ்சாது செயற்படுங்கள். நீங்கள் நேர்மையாகச் செயலாற்றும் பொழுது துன்பங்கள் ஏராளமாக வரும்.

அத்துன்பங்கள் சூரிய ஒளியைக் கண்ட பனித்துளியைப் போல உடனே மறைந்து விடும். நேர்மையீனமாகச் செயலாற்றும் போது துன்பம் மலையைப் போல வரும். அத்துன்பத்தை அகற்ற முடியாது. ஒன்றை அகற்ற இன்னொன்று வரும். அதை அகற்ற வேறொன்று வரும். பொய் பேசாதவன் தான் முழுமையான மனிதன். செயலாற்றும் பொழுது பற்றுப் பாசங்கள் சொந்த பந்தங்கள் பலம் மிக்கவர்களின் தலையிடுகள் யாவும் உங்களை வந்து சூழும். அவற்றைச் சட்டை செய்யாதீர்கள்'' என்று சுவாமியார் சொல்லும் வேளைகளில் கேட்டு விட்டுத் தகாத முறையில் நடந்து விட்டேனே'' என ஞானப்பிரகாசம் வருந்தினார்.

சதாசிவம் எவ்வளவோ எடுத்துக் கூறியும் ஞானப்பிரகாசத்தினது மனம் அமைதி கொள்ளவில்லை. அதனால் இரவுப் பூசைக்கு நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தார். பூசை முடிந்து விட்டது. அரசமரத்தின் கீழ் சுவாமியார் இருந்தார். அவருடன் நாலைந்து பேர் இருந்தனர்.

ஞானப்பிரகாசம் சுவாமியாரின் அருகில் சென்றார். செல்லப்பாவும் தனபாலனும் சின்னத்தம்பியும் தணிகாசலமும் சுவாமியாரின் அருகில் இருந்தனர். ஞானப்பிரகாசம் சுவாமியாரின் அருகில் சென்று அவரை வணங்கி விட்டு சுவாமியாரின் அருகில் அமர்ந்தார்.

காவல் துறை அதிகாரியான சிவபாதசுந்தரம், தனபாலனையும் சின்னத்தம்பியையும் புஸ்பநாதனையும் கிருஸ்ணனையும் சரவணபவனின் கடையை உடைத்துத் திருடியதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் கூறி அவர்களை காவல் நிலையத்தில் சரணடையுமாறு கிராம சேவகரிடம் சொல்லியனுப்பியிருந்தார். வந்து சரணடையா விட்டால் கண்ட இடத்தில் கைது செய்வதாகக் கூறியிருந்தார்.

''சுவாமி நான் சிறை செல்லத் தயாராக இருக்கிறேன். நான் பல திருட்டுக்களைச் செய்தனான் தான். ஆனால் சரவணபவனின் கடையை உடைத்துத் திருடவில்லை'' அழுதான் தனபாலன்.

''ஒவ்வொருவனும் தனது தனித்தன்மையை இழந்தால் துன்பத்தைத் தாமே வலிய அழைத்துக் கொள்வான். மனிதனது துன்பங்களுக் கெல்லாம் காரணம் இதுவே. எந்த மனிதனும் துன்பப்பட வேண்டியதில்லை. ஒரு முறை தவறு செய்தவன் மறு முறை தவறு செய்யாவிட்டாலும் தவறு செய்தவனாகவே கருதப்படுவான். இது உலக நியதி. அத்துடன் ஒரு செயலில் பழக்கப்பட்டவன் தான் திருந்தி விட்டேன் என்று கூறிக் கொண்டும் தவறுகள் செய்வான். உடல் அழுக்கடைந்தால் நீரினால் கழுவிச் சுத்தப் படுத்தலாம். உள்ளத்து அழுக்கை வாய்மையாலேயே சுத்தப்படுத்த முடியும். ஒருவன் வாய்மையானவன் என்று கண்டு கொள்வது கடினமானது. தன்னைத் தானே சுத்தப்படுத்திக் கொள்ளல் வேண்டும்''

''நான் சரவணபவனின் கடையில் திருடவில்லைச் சுவாமி. என்னை நம்புங்கள்'' என்றான் சின்னத்தம்பி.

“நீ குடிப்பதில்லை என்று சொன்னாய். இப்போது குடிக்கிறாயா....?”

“தெரியாத் தனமாகக் குடித்து விட்டேன் சுவாமி”

“அதே போலத் தெரியாத் தனமாகத் திருடியிருக்கலாம் தானே. காவல்துறை அதிகாரி நேர்மையானவர். சென்று சரணடையுங்கள்” என்றார் சுவாமியார். தனபாலனும் சின்னத்தம்பியும் துக்கத்துடன் எழுந்து சென்றனர்.

ஞானப்பிரகாசம் சுவாமியாரின் அருகே வந்து மௌனமாக நின்றார்; “மகனே அதிகாரி என்பவன் துணிவுடனும் தைரியத்துடனும் செயலாற்றுதல் வேண்டும். பயந்தவன் பதவியை ஏற்கக் கூடாது. ஒழுங்காகச் செயலாற்ற முடியா விட்டால் பெருந் துன்பங்களைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். மனத்திடத்துடன் வாய்மை தவறி நடந்தாலும் ஏதோ ஒரு காலத்தில் வருந்த வேண்டிய நிலை உண்டாகும். எம்மைச் சுற்றி வாழ்பவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்து பார். பல வருடங்களுக்கு முன்பு தவறுகள் செய்தவர்கள் துன்பங்களைச் சந்தித்துக் கொண்டேயிருக்கிறார்கள். முடிந்தவற்றை எண்ணிக் கவலைப்படுவதால் எந்த நன்மையும் வராது. இனிமேல் வாய்மை தவறாது நடந்து கொள்வேன் எனத்திட சங்கர்ப்பம் செய்து கொள். வாய்மையால் தான் மனதைச் சுத்தம் செய்யலாம். மனம் சுத்தமில்லாவிட்டால் உடலை நோயும் பிணியும் தாக்கும். இதயத்தில் குடியிருக்கும் கடவுள் வெளியேறி விடுவார். அதனால் துன்பங்கள் தான் மிஞ்சும்” என்றார் சுவாமியார்.

298. புறம்தூய்மை நீரான் அமையும்; அகம்தூய்மை
வாய்மையால் காணப்படும்.

புறத்தூய்மை நீரினால் ஏற்படும். அது போல, அகத் தூய்மை வாய்மையால் உண்டாகும்.

## விளக்கு

தனபாலனும் சின்னத்தம்பியும் புஸ்பநாதனும் கிருஸ்ணனும் கிராமசேவகருடன் சென்று காவல் நிலையத்தில் சரணடைந்தனர். சிவபாதசுந்தரம் அவர்களை மிரட்டினார். காவல் துறைச் சேவகர்கள் நால்வரையும் மிருகத்தனமாகத் தாக்கினர். அதனால் அவர்கள் தாம் திருடிய இடங்களை யெல்லாம் விபரமாகச் சொன்னனர். காவற்துறை அதிகாரி அவற்றை யெல்லாம் எழுதி அவர்களிடம் கையொப்பம் வாங்கினார்.

“காவல் நிலையத்தில் பொருட்களைத் திருடியதாக சரவணபவனைத் தவிர வேறு யாரும் முறைப்பாடு செய்யவில்லை. களவு கொடுத்தவர்களை அழைத்து விசாரித்த பின்பு தான் வழக்குப் பதிவு செய்து உங்களை நீதி மன்றத்திற்கு அனுப்புவேன். அது வரை நீங்கள் வீட்டில் சென்றிருக்க விரும்பினால் தகுதியான ஒருவர் உங்களைப் பிணையில் எடுத்தல் வேண்டும்.

வீட்டில் இருந்து யாராவது வந்தால் சொல்லியனுப்புங்கள்'' என்றார் சிவபாதசுந்தரம்.

சாரதாவும் கோசலையும் அன்று பகல் உணவு கொண்டு வந்தார்கள். நால்வரும் தமக்கு சிவபாதசுந்தரம் சொன்னவற்றைச் சொல்லித் தம்மைப் பிணை எடுக்குமாறு கூறினர்.

கோசலையும் சாரதாவும் தமது உறவினர்களிடம் சென்று விஷயத்தைக் கூறினர். இனத்தவர்கள் எவரும் அவர்களைப் பிணை எடுக்க முன்வரவில்லை. புஸ்பநாதனினதும் கிருஸ்ணனதும் மனைவி மார் காவல் நிலையத்திற்கு வரவில்லை. இனத்தவர்கள் தனபாலனையும் சின்னத்தம்பியையும் பிணை எடுக்க மறுத்ததால் கோசலையும் சராதாவும் தணிகாசலத்திடம் வந்து விஷயத்தைச் சொன்னார்கள்.

''உங்களின் உற்றார் உறவினர்கள் அவர்களைப் பிணையில் எடுக்க மறுத்ததையிட்டு மனம் வருந்திப் பிரயோசனமில்லை. கெட்டவர்களை நல்லவர்கள் விரும்ப மாட்டார்கள். கெட்டவர்களுடன் உறவாடினால் நல்லவர்கள் அவர்களை மதிக்க மாட்டார்கள். நேர்மையாக வாழும் பலர் காவல் துறைக்குச் செல்வதை அவமானமாகக் கருதுவார்கள். நீதிமன்றமும் காவல் துறை அலுவலகங்களும் கெட்டவர்களை அச்சுறுத்தவும் தண்டனை கொடுக்கவுமே அமைக்கப்பட்டன. அந்த இடங்களுக்கு நல்லவர்கள் செல்வது அவமானமாகும். எனினும் உதவியில்லாத உங்களின் நிலையைப் பார்த்து இரங்கி நான் காவல் துறை அலுவலகத்திற்குச் சென்று அவர்களைப் பிணை எடுக்கிறேன். இன்னொரு முறை அவர்கள் தவறு செய்து அகப்பட்டால் என்னிடத்தில் வராதீர்கள்'' என்றார் தணிகாசலம்.

அன்று நால்வரையும் தணிகாசலம் பிணை எடுத்தார். அன்று மாலைப் பூசைக்கு வந்த தனபாலனும் சின்னத்தம்பியும் புஸ்பநாதனும் கிருஸ்ணனும் வந்தனர். தணிகாசலத்தின் காலைத் தொட்டு வணங்கினர். அதனால் தணிகாசலத்திற்குக் கோபம் வநதது; ''உண்மையான விசுவாசம் மனதில் இருத்தல் வேண்டும். வெளிப்பகட்டுக்கு மரியாதை உள்ளவர்களைப் போல் நடிப்பது எனக்குப் பிடிக்காது உண்மையாக நீங்கள் என்னை மதிப்பதாக இருந்தால் இனிமேல் குற்றச் செயல்களில் இனிமேல் ஈடுபடாதிருங்கள். உங்களின் வெளிவேசத்தை நம்ப நான் தயாராக இல்லை. தீயவர்கள் காலங் காலமாகத் தீயவர்களாக இருக்கக் கூடாது. திருந்தச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் உங்களைப் பிணையில் எடுத்தேனே தவிர உங்களின் மேலுள்ள அன்பினாலோ அல்லது அக்கறையினாலோ அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்ளல் வேண்டும். இனிக் குற்றம் செய்தீர்களானால் நானே பிடித்துச் சென்று காவல் துறை அலுவலகத்தில் ஒப்படைப்பேன்'' என்றார்.

இரவுப் பூசை முடிந்ததும் சுவாமியார் அருளுரை வழங்கினார்; ''எப்பொழுதும் மனிதனுக்குத் தேவைப்படுவது ஒழுக்கம் தான். இன்று உண்மை பேசுபவர்களே தேவைப்படுகிறார்கள். பொய் பேசுபவர்கள் கோயிலுக்கு வரவேண்டாம். பொய் பேசுபவர்களின் உள்ளம் என்றும்

இருண்டிருக்கும். இருட்டில் பேய் பிசாசுகளும் அசுரர்களும் தான் வசிப்பார்கள். அதனால் தான் பொய் பேசுபவர்கள் அரக்கக் குணமுடையவர்களாக இருக்கிறார்கள். இருட்டான உள்ளம் கொண்டோரின் உள்ளத்தில் ஒளி மயமான இறைவன் குடிபுக மாட்டான். அதனால் பொய் பேசுபவர்கள் கோயில்களுக்குச் செல்லத் தேவையில்லை. இருண்ட உள்ளங்களை ஒளி மயமாக்கும் விளக்கு வாய்மை. யாகும் உண்மை பேசும் சான்றோனின் உள்ளம் பகலைப் போல ஒளியுள்ளதாக இருக்கும். வெளி இருளை நீக்குகின்ற விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல. பொய்மை என்னும் உள்ளத்தில் இருக்கின்ற இருளை அகற்றும் வாய்மை என்னும் விளக்கே விளக்காகும். இதை உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற பேதமின்றி அனைவரும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்'' என்றார் சுவாமியார்.

ஞானப்பிரகாசத்தின் உள்ளம் துவண்டது. கண்கள் கலங்கின. சின்னத்தம்பியும் தனபாலனும் துயரத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

299. எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

புறத்தில் உள்ள இருளை நீக்குகின்ற விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல. சான்றோர்க்கு உள்ளத்தில் உள்ள இருளை விலக்கும் பொய்யாமை ஆகிய விளக்கே விளக்காகும்.

## மிகச் சிறந்த பொருள்

சிவபாதசுந்தரம் அழைத்ததனால் சரவணபவன் காவல் துறை அலுவலகத்திற்கு வந்தான். அவன் வந்த போது சிவபாதசுந்தரம் வெளியே சென்றிருந்தமையால் சரவணபவன் வருபவர்கள் அமர்வதற்கென வைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தான். அவன் வந்த வெகு நேரத்தின் பின்பே சிவபாதசுந்தரம் வந்தார்.

சரவணபவன் உள்ளே சென்று சிவபாதசுந்தரத்தின் முன்னால் இருந்த ஆசனத்தில் அவர் அமரச் சொன்ன பின்பு அமர்ந்தான்.

''சரவணபவன் உமது கடை உடைக்கப்பட்டு ஏராளமான பொருட்கள் களவாடப் பட்டுள்ளதாகப் புகாரிட்டுள்ளீர்கள். அதன் பெறுமதியைச் சரியாகக் கூற முடியுமா?''

''ஆம் ஐயா பொருட்களின் விபரங்களும் அதன் பெறுமதியையும் எழுதிக் கொண்டு வந்துள்ளேன்'' என்று கூறி ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

“ஐம்பதினாயிரத்து இருநூற்றிப்பத்து ரூபா தொண்ணூறு சதம் பெறுமதியான பொருட்கள் களவாடப் பட்டுள்ளன. உமக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கா?”

“எனக்கு யார் மீதும் சந்தேகமில்லை”.

“நன்றாக யோசித்துப் பாரும்”

“நான் பல நாட்களாக யோசித்துப் பார்த்தேன். எனினும் எனக்கு எவரின் மீதும் சந்தேக மேற்படவில்லை. சரியாக அறிந்து கொள்ளாமல் ஒருவர் மீது குற்றம் சுமத்துவதை நான் விரும்பவில்லை. அதுபாவம்” என்றான் சரவணபவன்.

“நாங்கள் சந்தேகத்தின் பேரில் நால்வரைக் கைது செய்துள்ளோம். அவர்கள் பல திருட்டுக்களைத் தாம் செய்ததாக ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் உமது கடையைத் தாம் உடைத்துத் திருடவில்லை. என்று கூறுகிறார்கள். அவர்கள் தான் உமது கடையையும் உடைத்துத் திருடியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். நீர் அவர்கள் மேல் சந்தேகமிருப்பதாக எழுதித் தந்தால் நான் அவர்களின் மீது நடவடிக்கை எடுப்பேன்” என்றார் சிவபாதசுந்தரம்.

அதைக் கேட்டுப் பதறினான் சரவணபவன்; “ஐயையோ அந்தப் பாதகமான செயலை நான் செய்ய மாட்டேன். எனது பொருட்கள் தொலைந்தால் அதைத் தேடிக் கொள்ள என்னால் முடியும். ஆனால் அறியாத தொன்றை அறிந்ததாகக் கூறி அதனால் ஏற்படும் பழியை நீக்க என்னால் முடியாது. உலகில் உண்மையாகக் கண்ட பொருட்களுள் வாய்மை தான் மிகச் சிறந்த பொருள் என்று எனது தந்தையார் அடிக்கடி சொல்வார். அதை மீற என்னால் முடியாது” என்றான் சரவணபவன்.

“நீங்கள் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் கூறுவதன் மூலம் குற்றவாளிகள் தப்பித்து விடுவார்கள்” என்றார் சிவபாதசுந்தரம்.

“நான் அறியாததைச் சொல்வதன் மூலம் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. காவல் துறை அதிகாரியான நீங்கள் உங்கள் திறமையால் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். நாம் எமக்குத் தெரிந்த தகவல்களை மட்டுமே உங்களுக்கு வழங்குதல் வேண்டும். ஒரு மனிதன் நன்றாகப் படித்தாலும் வாய்மையை மறந்தானானால் அவன் கற்ற கல்வியால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை” என்றான் சரவணபவன்.

சிவபாதசுந்தரத்திற்கு அவர் சொல்வது நியாய மாகப் பட்டமையால் அவரைச் செல்லுமாறு பணித்தார். பின்பு அவர் வருமாறு அழைத்த

நவநீதனை அழைத்தார். நவநீதன் வந்து அவரின் முன் நின்றான்; ‘‘உமது மாடுகளைக் களவாக அவிழ்த்தது யார்?’’

‘‘எனக்குத் தெரியாது ஐயா’’

உமது மாடுகளைத் தனபாலனும் சின்னத்தம்பியும் கிருஸ்ணனும் புஸ்பநாதனும் திருடி வெட்டிப் பங்கு போட்டு விற்றதாக ஒப்புக் கொண்டுள்ளனர்.’’

‘‘அப்படியாயின் நடவடிக்கை எடுங்கள்’’ என்றான் நவநீதன்.

‘‘அதற்கு நீர் தனபாலனும் சின்னத்தம்பியும் புஸ்பநாதனும் கிருஸ்ணனும் தான் உமது மாட்டைத் திருடியதாகப் புகாரிட வேண்டும்’’.

‘‘அவர்கள் ஒப்புக் கொண்டால் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது உங்களது கடமை. வேண்டுமானால் நான் எனது மாடுகளை யாரோ திருடி விட்டார்கள் என்று புகாரிடுகிறேன். பின் நான் நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் என்னால் பொய் பேச முடியாது. ஒரு பொய் கூறுவதன் மூலம் பல பொய்களைக் கூற வேண்டிய நிலை எனக்கு ஏற்படும்’’ என்றான் சரவணபவன்.

‘‘நீர் பொய் சொல்வதாக ஏன் நினைக்கிறீர். அவர்கள் ஒத்துக் கொண்டுள்ளார்கள்’’ என்றார் சிவபாதசுந்தரம்.

‘‘ஐயா நான் சொல்வதையிட்டு நீங்கள் கோபப்படக் கூடாது. நீங்கள் அவர்களை அடித்து மிரட்டி ஒப்புதல் வாக்கு மூலம் பெற்றிருப்பீர்கள். அவர்கள் அதை நீதிமன்றத்தில் வந்து மறுக்கலாம். அத்துடன் பொருள் களவு போவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அதற்காக அறியாதவற்றை அறிந்ததாகப் பொய் சொல்வதை நான் விரும்பவில்லை. பொய் தான் எல்லாப் பாவங்களுக்கும் வித்து என்று எனது பாட்டனார் சொல்வார். எனவே தயவு செய்து என்னை வற்புறுத்தாதீர்கள்’’ என்றான் நவநீதன்.

300. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

யாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள், வாய்மையை விட உயர்ந்த பொருள் வேறு எதுவும் இல்லை.